2825

T.N.L.A. Debates

OFFICIAL REPORT

VOL: III NO: 1 and 2

March 19th and 20

1985

C

D

V211,31 N85

N85.3.1&2

136371

22/85

வெளியீடு 8-11-1985

Issued 8—11—1985

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 19, 1985 - தொகுதி III எண் 1

Tuesday the 19th March 1985 - Volume III No. 1

**சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009**

**Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009**

**விலை/ ரூ. 3-50 காசுகள்/**

**Price Rs. 3-50 paia**

136371
சென்னை-600 008

## உள்ளடக்கம்

**19—3—1985**

| | | |
|---|---|---|
| | | பக்கங்கள் |
| i) | தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் | i—iii |
| ii) | Personal of the Government of Tamil Nadu | v—vii |
| iii) | தமிழ்நாடு சட்டமன்ற பேரவையின் முக்கிய அலுவலர்கள் | ix—x |
| iv) | தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி (தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல் | xi—xx |

1. வினாக்கள்-விடைகள்—
   உடுக்குறியிட்ட வினாக்கள் — 1—22
2. தகவல் கோரல்—
   உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தவர் வேறு ஒருவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப் பெற்றபின், உள்ளாட்சி சட்ட முன்வடிவுகளை மொழிதல் .. .. 22—26
3. கவன ஈர்ப்புகள்—
   (அ) ஆண்டிப்பட்டி தொகுதியில் மர்ம நோயால் ஆடுகள் பாதிக்கப்பெறுவது .. .. 27—33
   (ஆ) தேனீ தொகுதி உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகும் விலையில் பருத்தியைக் கொள்முதல் செய்தல் .. .. 33—36
4. அரசினர் சட்ட முன்வடிவுகள்
   (அ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 .. 36, 37
   (ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்த சட்ட முன்வடிவு 1985 38, 39

(இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 .. 40—82

(ஈ) பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு 1985 .. .. .. 83—139

(உ) தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1985 .. .. 83—139

(ஊ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985 .. .. 139—140

அரசினர் தீர்மானம்—

நிகழ்ச்சி நிரலில் மாற்றம் .. .. 82

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 141—142

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

தமிழ்நாடு ஆளுநர் :

திரு. சுந்தர்லால் குரானா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்ட துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாணபுமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (நிதி அமைச்சர்) : நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள், புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (மின்துறை அமைச்சர்) : மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுது பொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி (தொழிலாளர் நலத்துறை அமைச்சர்) : தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலையத் துறை அமைச்சர்): செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழில்துறை அமைச்சர்). பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல் அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உள்ளாட்சித் துறை அமைச்சர்) : நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி கிராமப்புறக் கடன் சம்மந்தப்பட்டவை.

8. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்): கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து (வேளாண்மைத் துறை அமைச்சர்): வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல், வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (சட்ட அமைச்சர்): சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட).

11. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்): மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி (போக்குவரத்துத் துறை அமைச்சர்): போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு (உணவு அமைச்சர்): உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் (கைத்தறி துறை அமைச்சர்): கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் (சத்துணவு அமைச்சர்): சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி (வணிக வரித்துறை அமைச்சர்): வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுசாமி (வீட்டு வசதித்துறை அமைச்சர்): வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் (ஊரகத் தொழில் அமைச்சர்): கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்): வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளி நாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.



20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம் (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்): ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்): பிற்பட்டோர் நலம் மற்றும் மீன் வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் (சமூக நலத்துறை அமைச்சர்): மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூக நலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விஜயலட்சுமி பழனிச்சாமி (கதர்த்துறை அமைச்சர்): கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் (பொதுப் பணித்துறை அமைச்சர்): பொதுப்பணித் துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (கூட்டுறவுத் துறை அமைச்சர்): கூட்டுறவு.

---

* 3—3—1985 அன்று பதவியேற்றனர்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

### GOVERNOR OF TAMIL NADU:

Thiru SUNDAR LAL KHURANA.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. The Hon. Dr. M. G. RAMACHANDRAN (Chief Minister): Public, General Administration, Indian Administrative Service and other All-India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaelogy, Prohibition excluding grant of Liquor Permits, Excise and Passports.

2. The Hon. Dr. V. R. NEDUNCHEZHIAN (Minister for Finance): Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. The Hon. Thiru S. RAMACHANDRAN (Minister for Electricity): Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The Hon. Thiru K. A. KRISHNASAMY (Minister for Labour): Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The Hon. Thiru R. M. VEERAPPAN (Minister for Information and Religious Endowments): Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

*6. The Hon. Thiru K. RAJARAM (Minister for Industries): Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The Hon. Thiru P. U. SHANMUGAM (Minister For Local Administration): Municipal Administration Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The Hon. Thiru C. ARANGANAYAGAM (Minister for Education): Education, Official Language, Tamil Development and Culture.

9. The Hon. Dr. K. KALIMUTHU (Minister for Agriculture): Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water-Supply and Drainage Board.

10. The Hon. Thiru C. PONNAIYAN (Minister for Law): Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The Hon. Dr. H. V. HANDE (Minister for Health): Health and Environmental Pollution Control.

12. The Hon. Thiru S. MUTHUSAMY (Minister for Transport): Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports and Highways.

13. The Hon. Thiru S. THIRUNAVUKKARASU (Minister for Food): Food, Price Control and Census.

14. The Hon. Thiru V. V. SWAMINATHAN (Minister for Handlooms): Handlooms and Textiles.

15. The Hon. Thiru R. SOUNDARARAJAN (Minister for (Nutritious Meals): Nutritious Meals.

* 16. The Hon. Thiru T. VEERASAMY (Minister for Commercial Taxes): Commercial Taxes.

* 17. The Hon. Thiru N. NALLUSAMY (Minister for Housing): Housing and Slum Clearance Board, Town-Planning and Accommodation Control.

* 18. The Hon. Thiru ANOOR P. G. JAGADEESAN (Minister for Rural Industries): Rural Industries including Village, Cottage and Small Industries.

* 19. The Hon. Thiru T. RAMASAMY (Minister for Rehabilitation and Employment): Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees.



* 20. The Hon. Thiru A. ARUNACHALAM (Minister for Adi-Dravidar Welfare): Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The Hon. Thiru M. R. GOVENDAN (Minister for Backward Classes): Backward Classes and Fisheries.

22. The Hon. Thirumahti GOMATHI SRINIVASAN (Minister for Social Welfare): Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanges and Correctional Administration.

23. The Hon. Thirumathi VIJAYALAKSHMI PALANISAMY (Minister for Khadi): Khadi, Bhoodan and Gramdhan.

24. The Hon. Thiru Y. S. M. YUSUF (Minister for Public Works): Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The Hon. Thiru K. K. S. S. R. RAMACHANDRAN (Minister for Co-operation): Co-operation.

---

* Sworn-in on 3rd March 1985.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

---

### †பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்.

### †பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்ரமணியன்.

### ††மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. மா. சின்னராசு.
திரு. செ. செம்மலை.
திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்.
திரு. மு. இராமநாதன்.
திரு. வே. இரா. ஜெயராமன்.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ.,பி.எல்.

### துணை செயலாளர்கள்.

திரு. இரா. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி.ஏ., பி.ஜி.எல்.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்கள்.

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்சி.
திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

### சார்புச் செயலாளர்கள்.

திரு. வி. சீதாராமன், பி.காம்., பி.ஜி.எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.
திரு. வ. சா. ஜான், பி.ஏ.
திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.

### எஸ்டேட் அலுவலர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.
திரு. கேசவராம், பி.ஏ.

### பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்.

திரு. பி. கோதண்டராமன்.

### துணை செயலாளர் (பதிப்பாளர்).

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், பி.லிட்.

### தலைமை நிருபர்.

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

† 27—2—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.
†† 11—3—85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 1. அப்துல் சமத், திரு. ஆ. கா. அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத், திரு. எச். | வாணியம்பாடி |
| 3. அரங்கநாயகம், திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார், திரு. இரா. | பெரணமல்லூர் |
| 5. அருணாசலம், திரு. இரா. | நாமக்கல் (செ.வ.) |
| 6. அருணாசலம், திரு. எ. | வரகூர் (செ.வ.) |
| 7. அன்பழகன், திரு. க. | பார்க் டவுன் |
| 8. அன்பழகன், திரு. கே. | ஓமலூர் |
| 9. அன்பழகன், திரு. தி. | நாட்றாம்பள்ளி |
| 10. அன்பழகன், திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம், திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம், திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம், திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம், திரு. ஆர். எஸ். | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 17. ஆறுமுகம், திரு. ஏ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம், திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம், திரு. சேலம் மூ. | சேலம்-2. |
| 20. ஆனந்த கிருஷ்ணா, திரு. ஜீ. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன், திரு. மூ. | உளுந்தூர்பேட்டை |
| 22. இரகுபதி, திரு. கோ. | காட்பாடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 23. இரகுமான்கான், திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம், திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு, திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம், திரு. ஆர். | அரூர் (செ.வ.) |
| 27. இராசமாணிக்கம், திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம், திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி, திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம், திரு. மு. | திருவிடைமருதூர் |
| 31. இராசாம்பாள், திருமதி த. | தலைவாசல் (செ.வ.) |
| 32. இராசாராம், திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. இராசாராமன், திரு. எஸ். | பாபநாசம் |
| 34. இராசு, திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ.) |
| 35. இராசேந்திரன், திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36. இராமச்சந்திரன், டாக்டர் எம். ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. இராமச்சந்திரன், திரு. கே. எஸ். எம். | போடிநாயக்கனூர் |
| 38. இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர் |
| 39. இராமச்சந்திரன், திரு. ச. | பண்ருட்டி |
| 40. இராமச்சந்திரன், திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. இராமச்சந்திரன், திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. இராமசாமி, திரு. எஸ். என். | சாத்தான்குளம் |
| 43. இராமசாமி, திரு. த. | இராமநாதபுரம் |
| 44. இராமநாதன், திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. இராமலிங்கம், டாக்டர் கே. பி. | ராசிபுரம் |
| 46. இளங்கோவன், திரு. ஈ. வே. கி. ச. | சத்தியமங்கலம் |
| 47. ஈஸ்வரன், திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 48. உச்சி, திரு. கே. | கடலூர் |
| 49. உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. எத்திராசன், திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 51. கணபதி, திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. கதிர்வேலு, திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. கந்தசாமி, திரு. பெ. | பொங்கலூர் |
| 55. கல்லன், திரு. கே. | உதகமண்டலம் |
| 56. கலிதீர்த்தான், திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. காளிமுத்து, டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58. கிருஷ்ணசாமி, திரு. கே. வீ. | ஆயிரம் விளக்கு |
| 59. கிருஷ்ணசாமி, திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. கிருஷ்ணமூர்த்தி, திரு. கி. | கும்பகோணம் |
| 61. கிருஷ்ணராஜ், திரு. ஜி | சேலம்-1 |
| 62. குப்புசாமி, திரு. கு. | ஓட்டன்சத்திரம் |
| 63. குமர குருபர ராமநாதன், திரு. ச | விளாத்திகுளம் |
| 64. குமரி அனந்தன், திரு. | ராதாபுரம் |
| 65. குமாரதாஸ், டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66. குருசாமி என்கிற அண்ணாதாசன், திரு. எம். | திருவரம்பூர் |
| 67. கோமதி சீனிவாசன், திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. கோவிந்தசாமி, திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. கோவிந்தசாமி, திரு. ச. | எடப்பாடி |
| 70. கோவேந்தன், திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71. சங்காலிங்கம், திரு. ச. | சங்கரநாயனார் கோவில் (செ. வ.) |
| 72. சண்முகம், திரு. இரா. | திருத்தணி |
| 73. சண்முகம், திரு. என். | சோளிங்கர் |
| 74. சண்முகம், திரு. ப. உ. | மேல் மலையனூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 75. சண்முகையா பாண்டியன், திரு. | ஆலங்குளம் |
| 76. சந்திரசேகரன், திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. சந்திரசேகர், திரு. மு. | முகையூர் |
| 78. சம்சுல் ஆலம், திரு. வி. எஸ். டி. | பாளையங்கோட்டை |
| 79. சமரசம், டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. சரோஜா, திருமதி இரா. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 81. சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82. சித்தன், திரு. என். எஸ். வி. | திருமங்கலம் |
| 83. சிந்தன், திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. சிவக்குமார், திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. சிவக்குமார், திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86. சிவஞானம், திரு. என். | திருவோணம் |
| 87. சிவப்பிரகாசம், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. சிவராமன், திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. சிவராஜ், திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. சின்னக்குழந்தை, திரு. மு. | ஆரணி |
| 91. சின்னச்சாமி, திரு. ரா. | தர்மபுரி |
| 92. சின்னசாமி, திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. சின்னராசு, திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. சின்னராசு, திரு. மா. | மேட்டுப்பாளையம் |
| 95. சுந்தரதாஸ், திரு. மா. | விளவன்கோடு |
| 96. சுப்புராயர், திரு. சி. | கம்பம் |
| 97. சுப்பராயன், திரு. கு. | திருப்பூர் |
| 98. சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99. சுப்பிரமணியன், திரு. உ. | சிவகங்கை |
| 100. சுப்பிரமணியன், திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 101. சுவாமிநாதன், திரு. வி. வி. | புவனகிரி |
| 102. செங்காளியப்பன், திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப்பாளையம் |
| 104. செங்கோட்டையன், திரு. பெ. | கபிலர்மலை |
| 105. செம்மலை, திரு. செ. | தாரமங்கலம் |
| 106. செல்லமுத்து, திரு. மொ. | திருவாரூர் (செ.வ.) |
| 107. செல்லப்பா, திரு. வி. கோ. | கடலூர் |
| 108. செல்வராசன், திரு. அ. | துறைமுகம் |
| 109. சேகர் என்கிற குலசேகரன், திரு. கே. பி. | பொன்னேரி (செ.வ.) |
| 110. சொர்ணலிங்கம், திரு. கா. | திருவாடனை |
| 111. சோலைராசு, திரு. க. | மருங்காபுரி |
| 112. சைதை துரைசாமி, திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. சௌந்திரராசன், திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. சௌரிராஜன், டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115. ஞானசுந்தரம், திரு. சா. | மன்னார்குடி |
| 116. டேனியல்ராஜ், திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம் |
| 117. தங்கமணி, திரு. மு. | மாயூரம் |
| 118. தங்கமணி, திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. தங்கராசு, திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. தங்கராசு, திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 121. தங்கவேல்ராஜ், திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 122. தங்கவேலு, திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123. தமிழ்மணி, திரு. | திருப்போரூர் (செ.வ.) |
| 124. தமிழரசன், திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.) |
| 126. தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 127. தியாகராசன், திரு. ர. | விருத்தாசலம் |
| 128. திருஞானம், திரு. பி. ஆர். | எற்காடு (ஆ.வா.) |
| 129. திருநாவுக்கரசு, திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130. திருமலைசாமிக் கவுண்டர், திரு. சு. | உடுமலைப்பேட்டை |
| 131. தீர்த்தகிரி கவுண்டர், திரு. டி. | மொரப்பூர் |
| 132. தீர்த்தராமன், திரு. ப. | பாலக்கோடு |
| 133. துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம், திரு. | நெல்லிக்குப்பம் |
| 134. துரை கிருஷ்ணமூர்த்தி, திரு. | தஞ்சாவூர் |
| 135. துரை கோவிந்தராசன், திரு. | திருவையாறு |
| 136. துரைராசு, திரு. எஸ். பி. | காரைக்குடி |
| 137. துரை ராமசாமி, திரு. | வெள்ளக்கோவில் |
| 138. தெய்வநாயகம், திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. தேவராஜ், திரு. வி. எம். | வேலூர் |
| 140. நடராசன், திரு. ஆ. | பேரூர் |
| 141. நரசிம்ம பல்லவன், திரு. க. | உத்திரமேரூர் |
| 142. நரசிம்மன், திரு. பூ. மூ. | பள்ளிப்பட்டு |
| 143. நல்லமுத்து, டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. நல்லுசாமி, திரு. என். | திருச்சிராப்பள்ளி-2. |
| 145. நாச்சிமுத்து, திரு. கே. பி. | மேட்டூர் |
| 146. நாராயணன், திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. நாராயணன், திரு. பு. கோ. | பவானி |
| 148. நெடுஞ்செழியன், டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர் |
| 150. பரமசிவம், திரு. பா. த. | பல்லடம் |
| 151. பரிதி இளம்வழுதி, திரு. | பெரம்பூர் |
| 152. பழனி, திரு. த. | ஆற்காடு |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 153. பழனிச்சாமி, திரு. கா. செ. | காங்கேயம் |
| 154. பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர் |
| 155. பாண்டியன், திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. பாண்டுரங்கன், திரு. மு. | கலசபாக்கம் |
| 157. பாப்பா சுப்பிரமணியன், திரு. | குத்தாலம் |
| 158. பாரதி, திரு. ஜி. கே. ஜெ. | திருவொற்றியூர் |
| 159. பாரமலை, திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160. பாலகிருஷ்ணன், திரு. ச. | மொடக்குறிச்சி |
| 161. பாலகிருஷ்ணன், திரு. வ. | சிவகாசி |
| 162. பாலச்சந்திரன், திரு. வை. | பத்மநாபபுரம் |
| 163. பாலசுப்பிரமணியன், திரு. அ. | சீர்காழி (செ.வ.) |
| 164. பாலசுப்பிரமணியன், திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. பாலசுப்பிரமணியன், திரு. வி. பி. | வேடசந்தூர் |
| 166. பாலன், திரு. சு. | எழும்பூர் |
| 167. பாலாஜி, திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. பாலுச்சாமி, திரு. ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169. பாலுசாமி, திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170 பிச்சை, திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171 பிரணவநாதன், திரு. அ. | கடலாடி |
| 172 பிரேம்குமார், திரு. ஆ. | திண்டுக்கல் |
| 173. புருசோத்தமன், திரு. எஸ். | அரியலூர் |
| 174. புஷ்பராசு, திரு. த. | திருமயம் |
| 175. பெரியசாமி, திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176. பெரியசாமி, திரு. ரா. | தொட்டியம் |
| 177. பெருமாள், திரு. செ. | கடையநல்லூர் |
| 178. பெருமாள் பிள்ளை, திரு. கோ. | கன்னியாகுமரி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 179. பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180. பொன்னுசாமி, டாக்டர் அ. | பெருந்துறை |
| 181. பொன்னுரங்கம், திரு. ப. | ராயபுரம் |
| 182. பொன்னையன், திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. மணவாளன், திரு. | திருப்பத்தூர் |
| 184. மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185. மலர்மன்னன், திரு. அ. | திருச்சிராப்பள்ளி-1 |
| 186. மனோகரன், திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. மனோகரன், திரு. தி. நா. கோ. அ. | திருநாவலூர் |
| 188. மாசிலாமணி, டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189. மாதவன், திரு. செ. | திருப்பத்தூர். |
| 190. மாதையன், திரு. யு. பி. | அந்தியூர் (செ.வ.) |
| 191. மாரிமுத்து, திரு. த. | குளத்தூர் (செ.வ.) |
| 192. மாரிமுத்து, திரு. மு. | திருப்பரங்குன்றம் |
| 193. மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம் |
| 194. முகம்மது கனி, திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. முகம்மது சலீம், டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. முசிறிபுத்தன், திரு. பி. | குளித்தலை |
| 197. முத்துசாமி, திரு. சு. | ஈரோடு |
| 198. முத்துராமலிங்கம், திரு. பி. கே. எம். | உசிலம்பட்டி |
| 199. முத்துராமலிங்கம், திரு. பொன் | மதுரை மேற்கு |
| 200. முத்துவேல், திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201. முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. முருகன், திரு. கி. | செய்யாறு |
| 203. முருகானந்தம், திரு. டி. என். | செஞ்சி |
| 204. முனிரத்தினம், திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. யசோதா, திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 19, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 6, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு 2016.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்"

தம்மை வருத்துவோர்க்கும் தீய செயல்களைச் செய்யாமல் இருத்தலை, அறிவு எல்லாவற்றிலும் தலையான அறிவு என்று கூறுவார்கள்.

### 1. வினாக்கள்-விடைகள்.

#### உடுக்குறியிட்ட வினாக்கள்.

#### சென்னை தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்.

6. (*வினா எண். 601)—திரு. சா. துரைசாமி :
திரு. செ. செம்மலை :

மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 10—3—1985-லிருந்து சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் தமிழ் நிகழ்ச்சி நேரமாகிய இரவு 8.30 மணியிலிருந்து 9.00 மணி வரையுள்ள 30 நிமிட நேரத்தை "தேசிய ஒளிபரப்புக்காக" ஒதுக்கப்பட்டிருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

[1985 மார்ச் 19

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) ஆம்.

(ஆ) "10—3—1985-லிருந்து தமிழ் ஒளிபரப்பு நிகழ்ச்சி நடைபெற்று வந்த இரவு 8.30 மணி முதல் 9.00 மணி வரையுள்ள நேரத்தை தேசிய ஒளிபரப்புக்காக மாற்றியமைப்பது தொலைக்காட்சி பார்ப்போருக்கு இடையூறும் இடைஞ்சலும் ஏற்படுத்துவதுடன், முக்கியமான நேரத்தில் தமிழ் ஒளிபரப்பைப் பார்க்கின்ற வாய்ப்பை இழக்க வேண்டியுள்ளது என்கின்ற நிலைமையை தெரிவித்து முன்போலவே, தமிழ் ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை, மாலை 6.00 மணியிலிருந்து இரவு 9.20 வரை தொடர்ந்து நடத்த, தொலைக்காட்சி நிறுவனத்தினரை அறிவுறுத்துமாறு கேட்டு, 11—3—1985 அன்று இந்திய அரசின் செய்தி ஒளிபரப்புத் துறை அமைச்சருக்கு ஒரு தந்தி அனுப்பப்பட்டுள்ளது. தொடர்ந்து ஓர் கடிதமும் அனுப்பப் பட்டுள்ளது.

**திரு. சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியில் இதற்கு முன்பு இதேபோல் ஒருமுறை செயல்பட்டு இருக்கிறார்கள். அந்த நேரத்தில் தமிழக அரசு தன்னுடைய கண்டனத்தை தெரிவித்த பிறகு அந்த முறையை மாற்றினார்கள். இப்போது கடிதம் எழுதியும் இன்னும் நடைமுறைபடுத்தாமல் 8.30 மணி முதல் தேசிய ஒளிபரப்பாக மாற்றி ஒளிபரப்புகிறார்கள். எனவே மத்திய அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில் இந்த மாமன்றமே பழையபடி நிகழ்ச்சியை மாற்றியமைக்க தீர்மானம் நிறைவேற்றுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே கண்டனத்தை தெரிவிப்பது என்கின்ற பிரச்சினை எழவில்லை. முன்பு 15—8—1982 முதல் தான் இந்த தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சி தொடங்கப் பெற்றது. இந்த தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சி தொடங்கப்பட்ட அந்த சூழ்நிலையில் தமிழகத்திலே சென்னையினுடைய தொலைக்காட்சி நிலையத்தினுடைய நிகழ்ச்சிகள் மாற்றி அமைக்கப்பட்டன. ஆனால் எழுந்த பிரச்சினைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு



1985 மார்ச் 19]

செய்தி ஒலிபரப்பு துறைக்கு அமைச்சராக இருந்த திரு. சாத்தே அவர்களுக்கு இந்த மாற்றத்தை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் 9.30 மணிக்கு மேல் தான் தேசிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும் என்றும் அதற்கு இடையிலே தமிழகத்தினுடைய அல்லது மற்ற மாநில நிகழ்ச்சிகளை ஒளிபரப்புகின்ற நேரத்தை மாற்றினால் அந்த அந்த மாநில மக்களுக்கு இடையூறு ஏற்படும் என்றும் சுட்டிக்காட்டினார்கள். அதை அவர்கள் ஏற்றுக் கொண்டு அன்றைக்கு ஆசிய விளையாட்டு நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு அதை கவனிக்கிறோம் என்று அவர்கள் தெரிவித்து அதன்படி அந்த நிகழ்ச்சிகளை பிறகு மாற்றி அமைத்தார்கள். இப்போது மத்திய செய்தி ஒலிபரப்பு துறை அமைச்சருக்கு நம்முடைய அரசின் கருத்தை தெரிவித்து இருக்கிறோம். அவர்கள் மாற்றி அமைப்பார்கள் என்று நிச்சயமாக நம்புகிறோம். அப்படி மாற்றி அமைப்பதற்கு தாமதம் ஏற்படுமானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலம் இந்திய பிரதம அமைச்சரின் கவனத்திற்கு தமிழக அரசு கொண்டு செல்லும் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு கண்டனம் தெரிவிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது, அவசியமும் இல்லை என்று நான் கருதுகிறேன்.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு அளித்த பதில் டெல்லியினுடைய காதுக்கு எட்டி நிச்சயமாக இந்தப் பிரச்சினையில் அவர்கள் மறுபரிசீலனை செய்வார்கள் என்று நம்புகிறோம். காரணம் மக்கள் விரும்பாத ஒன்றை, அந்த காரியத்தில் அவர்கள் நிச்சயமாக பிடிவாதமாக இருக்க மாட்டார்கள். எனவே அந்த நம்பிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக நான் தெரிந்து கொள்ள விரும்புவது இந்த தொலைக்காட்சி ஒளிபரப்பில் நிகழ்ச்சிகள் தயாரிக்கிற அந்த பணிகளில் தொலைக்காட்சி நிலையத்தார் நம்முடைய செய்தித் துறையைச் சேர்ந்த, தகவல் துறையை சேர்ந்த அதிகாரிகளை கலந்து கொண்டு நிகழ்ச்சிகள் தயாரிக்கிறார்களா? அப்படி இல்லை என்றால் நம்முடைய அதிகாரிகளை கலந்து தான் நம்முடைய தமிழ் பண்பாடு,

கலாச்சாரம் ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சிகளை தயாரிக்க வேண்டும் என்ற அந்த ஒரு முறையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் வற்புறுத்துவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, அகில இந்திய வானொலி அல்லது தொலைக்காட்சி நிலையங்களில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது என்பதும், அதை ஒளிபரப்புவது அல்லது ஒலிபரப்புவது என்பதும் அந்தந்த நிர்வாகிகளின்—அதிகாரிகளின் பொறுப்பிலே தான் நடைபெற்று வருகிறது. அவர்கள் இந்திய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டவர்கள்; மாநில அரசுக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல. ஆனால் அவர்களுடைய ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் மாநில மக்களுக்காகத்தான் நடத்தப்படுகின்றன. ஆகவே, இந்த நிகழ்ச்சிகள் மாநில மக்களுடைய பண்பாட்டையும், கலாச்சாரத்தையும், அவர்களுடைய சமுதாய உணர்வுகளையும் பிரதிபலிக்கின்ற வகையில் அமைய வேண்டுமென்பது நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய, அந்த அதிகாரிகளுக்கு நினைவிலே இருக்கக் கூடிய ஒரு சிறந்த பொறுப்பு மிக்க கடமையாகும். நாம், இந்திய அரசுக்குப் பல நேரங்களில் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கிறோம். இப்படிப்பட்ட டெலிவிஷன் அல்லது ரேடியோ நிகழ்ச்சிகளை அமைக்கின்ற அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அந்தக் குழுக்களில் மாநில அரசுக்கும் தக்க பங்கு அளிக்க வேண்டுமென்று நாம் கேட்டிருக்கிறோம். ஆனால், அவர்கள் ஏதோ அவ்வப்பொழுது ஆலோசனைக் குழு என்ற வகையில், ஒருங்கிணைப்புக் குழு என்ற வகையில் கூட்டம் கூட்டுகிறார்களே தவிர, நிரந்தரமான வாய்ப்பை மாநில அரசின் பிரதிநிதிகளுக்கு இதுவரையில் அளிக்கவில்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் தெரிவித்த கருத்து, மத்திய அரசு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய கருத்து என்பது மட்டுமல்ல; ஏற்றுக்கொள்ள வேண்டிய கருத்துமாகும். அப்படி மாநில அரசுகளின் பிரதிநிதிகள் அங்கே இருந்தால், இங்கே இப்படிப்பட்ட இந்த மாநிலத்து மக்களுக்கு விரோதமாக, மாநில மக்களின்



பண்பாட்டிற்கு, கலாச்சாரத்திற்கு விரோதமாக இந்தத் தொலைக்காட்சி நிலையங்களிலோ அல்லது வானொலிகளிலோ நடைபெறுகின்ற அந்த நிகழ்ச்சிகள் தவிர்க்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். மீண்டும் இதை மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் குறிப்பிட்ட ‘கண்டனம்’ என்பதற்குப் பதிலாக, அதை ‘கவனத்தை ஈர்க்கின்ற வகையில்’ என்று மாற்றிக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, தொலைக்காட்சி நிலையம் தமிழ் நிகழ்ச்சியின் நேரத்தை இங்கே மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளின்படி எடுத்துக் கொண்டதைப் போலவே, இந்தி அல்லாத மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மற்ற மாநிலங்களும் இதேமாதிரி நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்களா? அல்லது இருமொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற நமது மாநிலத்தில் மட்டும்தான் இப்படிச் சொல்லப்படுகிறதா? மற்ற மாநிலங்களிலும் அப்படிச் சொல்லப்படுமானால், அந்த மாநிலங்களையும் ஒருங்கிணைத்துக் கொண்டு, ஒரு திட்டமாக ஆக்கி, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, அந்தந்த மாநிலங்களின் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் நல்ல முறையில் மக்களுக்குப் பிரதிபலிக்கின்ற வகையில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்வதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தி பேசாத மற்ற மாநிலங்களிலேயிருந்து இதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்று நமக்குத் தெரியவில்லை. ஆனால், மற்ற மாநிலங்கள் எதிர்க்கின்றனவா அல்லது ஆதரிக்கின்றனவா என்பது பிரச்னை இல்லை. நம் மாநிலத்திற்கு—தமிழ் மாநிலத்திற்கு—அது உகந்த சூழ்நிலை அல்ல என்று நமக்குத் தெரிகின்ற காரணத்தால் நாம் நம்முடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறோம். இப்பொழுது நாம் விவாதிக்கின்ற இந்தக் கருத்து, பத்திரிகைகளிலே வந்து மற்ற

[1985 மார்ச் 19

இந்தி பேசாத மாநிலங்களும் இந்தக் கருத்தைத் தெரிவிக்க முற்படலாம் அல்லது மத்திய அரசு கூட்டுகின்ற செய்தி ஒலிபரப்புத் துறை அமைச்சர்களின் மாநாட்டில் இந்தக் கருத்து எடுத்து வைக்கப்படலாம். அப்படி வருகின்றபொழுது இந்தி பேசாத மற்ற மாநிலங்களினுடைய கருத்துக்களின் ஆதரவோடு தமிழகம் எடுத்துச் சொல்லும். அதேபோன்று, அவ்வப்பொழுது வானொலி, டெலிவிஷன் மூலம், மத்திய அரசினுடைய அதிகாரிகள், மத்திய அரசுக்கோ அல்லது இந்தியப் பிரதம அமைச்சருக்கோ தெரிந்தோ தெரியாமலேயோ ஒலிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சிகள் அல்லது ஒளிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சிகள் மத்திய அரசுக்கு மகிழ்ச்சி தருகின்ற வகையில் அமைய வேண்டுமானால், அது இந்தியிலேதான் இருக்க வேண்டுமென்ற ஒரு தவறான எண்ணத்தை அவர்கள் கொண்டிருக்கக்கூடும். அப்படி அந்த எண்ணத்தைக் கொண்டிருந்தால் அது மத்திய அரசுக்கும் விரோதமானது, இந்திய ஒற்றுமைக்கும் விரோதமானது என்பதை மற்ற இந்தி பேசாத மாநிலங்களினுடைய ஆதரவோடு தமிழகத்தின் ஒட்டு மொத்தமான கருத்தாக மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லும்.

(முற்பகல் 9-10)

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தில் புரியாத பிற மொழிகளில் தான் நிகழ்ச்சிகள் அதிகமாக வருகின்றன. இதனால் பொதுமக்கள் தமிழ் நிகழ்ச்சிகளைத் தவிர மற்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதே கிடையாது. ஆகவே, தேசிய நிகழ்ச்சியைக் குறைப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா? தமிழ்ச் செய்திகள் வரும்போது, இன்னும் அரசு சாதனைகள் வரும்போது அமைச்சர்களுடைய படங்கள் காட்ட ஏற்பாடு செய்யப்படுமா? இதே சட்டசபையில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதைத் தொலைக்காட்சியில் காட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசிய நிகழ்ச்சிகள் என்கிற வகையிலே ஒளிபரப்பப்படுகிற அந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்



1985 மார்ச் 19]

அந்தந்த மாநில மொழிகளிலே இல்லாமல் அது பெரும்பாலும் இந்தி மொழியாக அமைகின்ற வகையிலேதான் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால், திரு. சேத்தி அவர்கள் செய்தி-ஒலிபரப்புத் துறை அமைச்சராக இருந்தபொழுது இந்தத் திட்டம் தொடங்கப்பட்ட நேரத்தில் இந்தியாவினுடைய செய்தி அமைச்சர்கள் மாநாட்டிலே இந்தக் கருத்தைத் தெரிவித்தபொழுது இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை நாங்கள் அறிவிக்க இருக்கிறோம். அதன் மூலம் ஒரு மாநிலத்தினுடைய நிகழ்ச்சிகளை, வெவ்வேறு கலாச்சாரத்தை, கலையை, மற்ற மாநில மக்கள் தெரிந்துகொள்வதற்கும் இந்தியாவிலே உள்ள பல்வேறு மாநில மக்கள், மொழி பேசுகிற மக்கள், வெவ்வேறு கலாச்சாரத்தை வைத்துக் கொண்டிருக்கிற மக்கள், ஒரு கலாச்சாரத்தை, இன்னொரு கலாச்சார மக்கள் உணர்ந்து கொள்ளவும், புரிந்துகொள்ளவும், மதிக்கவும் அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை, இந்தத் தேசிய நிகழ்ச்சிகளின் மூலம் ஏற்படுத்த முடியும். அதன் மூலம் தேசிய ஒற்றுமைக்கு வழிகோல முடியும், மொழிகளைப் புரிந்துகொள்ள முடியும் என்றுதான் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால், இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டு வருகிற நடைமுறையைக் கவனிக்கிறபொழுது இந்தத் தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சி என்பது இந்தியை மற்ற மாநிலங்களிலே, இந்திப் பேசாத மக்களிடத்திலே பரப்புவதற்கு அல்லது திணிப்பதற்கு இது ஒரு சாதனம் என்று பயன்படுகிறதோ என்று இந்தி பேசாத மக்கள் அச்சப்படுகிற விதத்திலேதான் நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அதனாலேதான் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் தேசியக் கொடி ஏற்றிய அந்த நிகழ்ச்சியிலே எச்சரிக்கையோடும் கண்டிப்பான உணர்வோடும் இந்தியப் பிரதம அமைச்சருக்கு அந்தக் கருத்தை எடுத்துத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து பிரதம அமைச்சராலே ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால், கொஞ்ச நாள் கழிந்ததற்குப் பிறகு அந்த அதிகாரிகள் மத்திய அரசுக்கு, அமைச்சர்களுக்கு, தெரிந்தோ, தெரியாமலோ மீண்டும் அந்த முறையை இன்றைக்குப் பின்பற்றிக் கொண்டு வருகிறார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களைப் பொறுத்தவரை தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நேரத்திலே அதைப் பார்ப்பதை

விட நிறுத்திவிடுவது சிறந்தது என்று நிறுத்துகின்ற காரியங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படி நடைபெறுமே யானால் தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் அமைவதிலோ அல்லது இந்த ஒளிபரப்புகின்ற டெலிவிஷன் வசதியைப் பெருக்குவதிலோ பலனற்றுப் போய்விடும். நாம் இந்திய ஒற்றுமையை வேண்டுமென்று எதிர்பார்க்கின்ற அந்தச் சூழ்நிலைக்கு மாறாக இந்திய ஒற்றுமையைப் பற்றி கவலையே படாத ஒரு சூழ்நிலையை இந்தி பேசாத மக்களிடத்திலே உருவாக்குகின்ற அந்தச் சூழ்நிலைக்கு இந்த அதிகாரிகள் துணைபுரிந்து கொண்டு வருகிறார்கள். ஆகவே, மத்திய அரசு, அங்கே இருக்கிற அமைச்சர்கள், குறிப்பாக மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்பது நம்முடைய முதல்வருடைய வேண்டுகோள். இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல சட்டமன்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்பது தெரியாது. சமீபத்திலே வந்த ஒரு செய்தி, கேரள சட்டசபை நிகழ்ச்சிகளை அந்த ஒளிபரப்புகின்ற நிலையம் ஒளிபரப்ப இருக்கிறது என்று அறிவித்து இருக்கிறார்கள். அது மத்திய அரசு எடுக்க வேண்டிய முடிவு. அமைச்சர்களுடைய படங்களைப் போட வேண்டுமென்ற அவசியம் இல்லை. இந்த நாட்டு மக்களுக்கு, மாநில மக்களுக்குத் தேவையான செய்திகளை, தெரிந்த மொழியிலே ஒளிபரப்பினாலே போதும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய இந்தக் கோரிக்கையை மைய அரசு பரிவுடன் கவனிக்கும் என நாம் எதிர்பார்க்கலாம்: ஆனால், அதே நேரத்திலே இந்தத் தொலைக்காட்சி தேசிய நிகழ்ச்சிகள் 8½ மணிக்கு முன்னாலே தள்ளப்பட்டிருப்பதாலே, தமிழ் நிகழ்ச்சிகள் எதுவும் ஒளிபரப்பிலே பாதிக்கப்படவில்லையென்பது உண்மையா 6.00 மணிக்குத் தொடங்குகின்ற தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் 5½ மணிக்கே தொடங்கப்படுகின்றன என்றும் பல நேரங்களிலே தமிழிலே சென்னை நிகழ்ச்சிகளை விட தேசிய நிகழ்ச்சிகள் வரவேற்கத்தக்க நிகழ்ச்சிகளாக இருக்கின்றன என்பதும் இங்கே



வடநாட்டு நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, இந்தியாவிலே இருக்கிற பல்வேறு மாநிலங்களிலே இருந்து வருகிற நிகழ்ச்சிகளாக இருக்கிற காரணத்தாலே அவர்களுக்கு வரவேற்பு இருக்கிறது என்ற ஒரு கருத்து சொல்லப்படுகிறதே, அது உண்மையா?

அதேநேரத்தில் 9 மணியிலிருந்து 9¼ மணி வரையில் ஒளிபரப்பப்பட்டு வந்த தமிழ்ச் செய்தியில் எந்தவிதமான மாறுதலும் இல்லை. அது தொடர்ந்து ஒளிபரப்பப்படுகின்றது என்பது உண்மையா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு விரிவான பதிலைச் சொல்லியாக வேண்டும். காரணம் இந்த தேசிய ஒளிபரப்பு நிகழ்ச்சி என்பது தொடங்கப் பட்ட காலத்திலேயிருந்தே தமிழ் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மிகுந்த எச்சரிக்கையோடு விழித்திருந்து கண் கொட்டாமல் அதைக் கவனித்துக் கொண்டு வருகிறோம். கொஞ்சம் அயர்ந்தால் கூட நமக்குப் பாதகம் ஏற்படுகின்ற சூழ்நிலைதான் இருந்து கொண்டிருக்கின்றது. அதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் 3 மத்திய அமைச்சர்களிடமும் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் தொடர்ந்து அவ்வாறு நடத்த வேண்டிய அவசியத்தை இப்போது இருக்கின்ற மத்திய அமைச்சர் அவர்கள் இந்த நிகழ்ச்சி மாற்றத்தின் மூலம் ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று தெரிகின்றது.

நம்முடைய நேரத்தை அவர்கள் குறைக்கவில்லை. 5½ மணிக்கு முன்னாலே வைத்திருக்கிறார்கள் என்று சொல்வது வாதத்திற்குப் பொருந்துமே தவிர, கணக்கிற்குப் பொருந்துமே தவிர மக்கள் எல்லாம் தங்களது வேலைகளை முடித்துவிட்டு மாலை நேரத்தில் வந்து உட்கார்ந்து பார்க்கின்ற நேரத்தில் வேறு நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவோம் என்றும், யாரும் பார்க்காத நேரத்தில் பணிகளில் ஈடுபட்டிருக்கின்ற நேரத்தில் மாநில மொழியிலே ஒளிபரப்புவோம் என்றும் சொல்வது அவ்வளவு பொருத்தமாக இராது. தேசிய நிகழ்ச்சிகள் என்று அகில இந்தியாவிற்கும் ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளை மக்கள் விரும்பிப் பார்க்கிறார்களே என்கிற வாதத்தைப் பொறுத்த

[1985 மார்ச் 19

வரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சில நேரங்களில் நாள் முழுவதும் உட்கார்ந்து கொண்டு ஆஸ்திரேலியாவில், மெல்போர்ன் நகரத்திலே நடக்கின்ற கிரிக்கெட் நிகழ்ச்சியினைப் பார்ப்பார்கள். அதுபோல வேறு பல வெளிநாட்டு நிகழ்ச்சிகளையும் பார்ப்பார்கள். சில நேரங்களில் கலை நிகழ்ச்சிகளையும் பார்ப்பார்கள். ஆனால் ஒன்றுமே புரியாமல் என்ன பேசுகிறார்கள் என்பதும் புரியாமல் என்ன விவாதிக்கிறார்கள் என்பதும் புரியாமல் நாலு பேர் உட்கார்ந்து கொண்டு மிகத் தேவையான முக்கியமான ஒரு பிரச்சினையை விவாதிக்கிறார்கள் என்றால், நாட்டு மக்களுக்குத் தெரிய வேண்டிய பிரச்சினையை விவாதிக்கிறார்கள் என்றால் அது இந்தியிலே நடைபெறுகின்றது என்றால் அதுபற்றி புரியாமல் இருக்கின்ற நிலைமை ஏற்படுகின்றது. ஆங்கிலத்திலே நடைபெற்றாலும் அதே பிரச்சினைதான். ஆகவே தான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னாலேயே இதற்கு ஒரு மாற்றினைத் தெரிவித்திருக்கிறார்கள். நீங்கள் புரியாத மொழியிலே அங்கே விவாதத்தை வைக்காதீர்கள்; அப்படி வைக்க வேண்டிய அவசியம் வந்தால் அதன் மொழிபெயர்ப்புக்கும் ஏற்பாடு செய்துவிடுங்கள்; அந்தந்த மாநில மக்கள் தெரிந்துகொள்ள வழிவகை செய்யுங்கள்; இல்லை என்றால் இந்த தேசிய ஒளிபரப்பின் பலன் இல்லாமல் போய்விடும், விரும்பிய பலன் கிடைக்காமல் போய்விடும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே விரும்பிப் பார்க்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல. விரும்பி மக்கள் எதையெல்லாம் பார்ப்பார்களோ அதையெல்லாம் ஒளிபரப்பவும் முடியாது; எதற்கு அதிகமான விருப்பம் இருக்கும் என்பதும் தெரியும். எனவே மக்கள் விரும்புகிறார்கள் என்பது ஒரு பகுதி. மக்களுக்குத் தேவையானவற்றை நாம் ஒளிபரப்புகிறோமா என்பது இன்னொரு பகுதி. இந்த இரண்டிற்கும் பொதுவாக நாட்டின் வளர்ச்சிக்கு, சமுதாய வளர்ச்சிக்கு இந்த தொலைக்காட்சி நிலையங்கள் பயன்பட வேண்டும். அப்படி பயன்பட வேண்டுமென்றால் அது மாநில மொழியிலேயே நடத்தப்பட்டாக வேண்டும்.



1985 மார்ச் 19]

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் தனி நிலையமாக எப்போது செயல்படும்? அதனை சக்தி உயர்ந்த நிலையமாகச் செயல்பட வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும் வெளிநாடுகளில் நடைபெறுவதைப்போல பகலிலும் தொலைக் காட்சி நிலையத்தின் மூலம் ஒளிபரப்பப்படுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, கடன் வாங்கியும் பட்டினி என்பது பழமொழி. அதுபோல் கொடைக்கானலில் 10 கிலோவாட் ஒளிபரப்பும் சக்தி கொண்ட சாதனத்தை அமைத்ததற்குப் பிறகும் ஆஸ்திரேலியாவிலும், அமெரிக்காவிலும் நடைபெறுகின்ற விளையாட்டுக்களைப் பார்க்கின்ற மக்களுக்கு சென்னை நகரத்திலிருந்து, தமிழ் நாட்டின் தலைநகரத்திலிருந்து ஒளிபரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியவில்லை. இதுதான் துரதிஷ்ட வசமான நிலைமை. அதற்கு ஒரு முக்கியமான காரணம் இன்சாட் மூலமாக ஒளிபரப்பப்படுகின்ற அந்த வசதியை தேசிய ஒளிபரப்புக்காக வைத்திருக்கிறார்கள். அது இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே 10 கிலோ வாட் சக்தி கொண்ட கருவியை அங்கே அமைத்தும் கூட ஒரு கிலோ வாட் அளவுக்குத்தான் அங்கே ஒளிபரப்பப்படுகின்றது. எனவே நீண்ட தொலை தூரத்தில் இருக்கின்ற மக்களால் அந்த வசதியைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலை இருக்கின்றது. இதுபற்றி இரண்டாண்டுகளுக்கு முன்பே தமிழக அரசின் சார்பில் நாங்கள் எடுத்துச் சொன்னோம். இந்த 10 கிலோ வாட் சக்தியும் மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்றால் தென் மாவட்ட மக்கள் அனைவருக்கும் பயன்பட வேண்டும் என்றால் உடனடியாக அதற்கு வேண்டிய சாதனங்களைப் பொருத்த வேண்டும்.

[1985 மார்ச் 19

(முற்பகல் 9-20)

இரண்டாவதாக இத்தகைய ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை மட்டும் அவர்கள் பரப்புவதிலே பலன் இல்லை. அநேகமாக இந்தியாக அல்லது ஆங்கிலமாக இருக்கிறது. அதனால் இந்த மாநில மக்கள் தெரிந்துகொள்ள வேண்டிய கருத்தைத் தெரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் நாட்டு தலைநகரிலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளையும் மற்ற பகுதிகளிலுள்ள மக்கள் பார்க்க வேண்டுமானால் 'மைக்ரோ வேவ்' தொடர்பு வேண்டுமென்று நாம் கேட்டோம். நாம் தெரிவித்த பிறகுதான் மத்திய அரசு அதுபற்றி ஆராய முற்பட்டது; இப்போது ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான கருவிகளைச் செய்ய ஆணை பிறப்பித்திருக்கிறோம், என்று தெரிவித்திருக்கிறார்கள். 1986 ஆம் ஆண்டு நிறைவு பெறும் என்றும் உறுதியளித்திருக்கிறார்கள். இப்படி மைக்ரோ வேவ் இணைப்பு கொடுப்பார்களானால் கொடைக்கானல் நிலையம் மட்டுமல்ல, தமிழ் நாட்டில் ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளை 100 வாட்ஸ் நிலையங்கள் எல்லாம் ஒளிபரப்ப முடியும். ஆக, மைக்ரோ வேவ் இணைப்புக் கொடுத்தால்தான் நம்முடைய சென்னையிலிருந்து ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளை 100 வாட்ஸ் நிலையங்கள் எல்லாம் ஒளிபரப்ப முடியும் என்று தெரிவித்திருக்கிறோம். அது சாத்தியமானால் தான் இந்த நாட்டு மக்கள் மாநில அரசு நிகழ்ச்சிகளை, அரசு திட்டங்களானாலும், கருத்துக்களானாலும், கலாச்சார நிகழ்ச்சிகளானாலும், பண்பாட்டை வளர்க்கும் நிகழ்ச்சி களானாலும் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும். 1986 ஆம் ஆண்டிற்குள் அதை நிறைவேற்றிவிடுவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று, விரைவுபடுத்த வேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தொலைக்காட்சியில் தேசிய நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப அரை மணி நேரம் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல பெண்களுக்கு 15 நிமிடம் ஒதுக்க அரசு பரிந்துரை செய்யுமா?



1985 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, இப்போது பெண்களுக்கு அதிகமாக நேரம் ஒதுக்கிக்கொண் டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அதுவும் போதவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்பினால், தேவைப் பட்டால், பெண்களுக்கு உரிமை வழங்கும் நிகழ்ச்சிகளை இன்னும் கூடுதலாக ஒளிபரப்பலாம் என்று மத்திய அரசைச் சேர்ந்த அந்த இலாகாவுக்கு தமிழக அரசு பரிந்துரை செய்வதில் கஷ்டம் ஒன்றும் இல்லை.

**திரு. மா. சின்னராசு:** தலைவரவர்களே, சிறுபான்மை தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுகின்ற இலங்கையில் கூட தமிழ் நிகழ்ச்சிகளை பல மணி நேரம் விரும்பி கேட்கின்ற வண்ணம் வானொலி நிகழ்ச்சிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப் போன்று தேசிய நிகழ்ச்சிகள் மட்டுமல்லாமல் மற்ற நிகழ்ச்சி களையும் தமிழக அரசே தேர்வு செய்து வானொலியில் ஒலிபரப்பும் உரிமை வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுப் பெற மாநில அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, இலங்கை அரசுக்கு தமிழ் மக்களிடத்திலே ஒரு பற்றையும் பாசத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்து இருக்கிறது. அதனால் தமிழ் நிகழ்ச்சிகளை அதிகமாக ஒலிபரப்புகிறார்கள் அல்லது ஒளிபரப்புகிறார்கள் என்று தெரிகிறது. அதைப் போன்று மத்திய அரசுக்கும் தமிழ் மக்களுடைய ஆதரவைப் பெற வேண்டுமென்ற எண்ணம் ஏற்பட வேண்டும். அவர்கள் ஒளிபரப்புகின்ற தேசிய நிகழ்ச்சிகளை தமிழ் மக்கள் விரும்பிப் பார்க்கும் வண்ணம் அல்லது கேட்கும் வண்ணம் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒன்று தான் நமக்கு 'ஓ.பி. வேன்" அதாவது கலர் ஒளிபரப்புக் கருவி வேண்டுமென்று 3, 4 ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கி றோம். மூன்று பகுதிகளுக்கு அத்தகைய கலர் ஒளிபரப்புக் கருவி கொடுத்துவிட்டார்கள். நான்காவதாக நமக்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். எப்போதும் தென்னகம் புறக்கணிக் கப்படுகிறது என்ற வாதத்தை நான் சொல்லவில்லை, எப்படியோ நமக்கு இன்னும் தராமல் இருக்கிறார்கள். கலர் ஒளிப்பரப்புக் கருவியை நமக்குத் தரவில்லை என்றால் தென்னாட்டு மக்கள்,

குறிப்பாக தென் மாவட்ட மக்கள் முழு நேரமும் இலங்கை நிகழ்ச்சிகளைக் கேட்கும் சூழ்நிலை ஏற்படும். இப்போதே அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இலங்கை ஒளிபரப்பும் நிகழ்ச்சிகளை அதிகமாகப் பார்க்கின்ற காரணத்தால், அவர்களுடைய கருத்துக்கும் உணர்வுக்கும் நம்முடைய மக்கள் அடிமைபட்டுவிடுவார்களோ என்று நமக்கு இருக்கின்ற அச்சத்தையும் நாம் மத்திய அரசுக்குத் தெரிவித்திருக்கிறோம். தமிழக மக்கள் விரும்பி கேட்கின்ற, பார்க்கின்ற நிகழ்ச்சிகளை மாநில அரசே தயாரித்து ஒளிபரப்புவது, ஒலிபரப்புவது என்பது இப்போது தேவையில்லை. இங்கே நிகழ்ச்சிகளைத் தயாரிப்பவர்கள் மாநில அரசின் ஒத்துழைப்போடு, உதவியோடு மாநில அரசின் கருத்தையும் சேர்த்து தயாரித்தால் இந்த மாநில மக்களுக்கு அது பயனுள்ள வகையில் அமையும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போன்று இலங்கையினுடைய ரூபவாகினி ஒளிபரப்பு காரணமாக தென் மாநில மக்களிடையே ஒரு இன்டாக்ட்ரினேஷன்' என்று சொல்கிற அளவில் இந்திய எதிர்ப்புப் பிரசாரமும் தமிழ்நாடு பண்பாடுகளுக்கு விரோதமான பிரசாரமும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே தென் மாநில மக்கள் கொடைக்கானலில் ஒளிபரப்புவது சரியாக இல்லை என்று கருதுவதால் குற்றாலத்தில் ஒரு ஒளிபரப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்ற கருத்து தென் மாநிலங்களில் மிகுந்த வலுப்பெற்றிருக்கிற காரணத்தினால் அதை இந்த அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இந்த தேசிய ஒளிபரப்பை அவர்கள் அதிகப்படுத்துவதற்காக ஒரு திட்டம் வகுத்தபோது தமிழ்நாட்டுக்கு பத்து ஒளிபரப்பு நிலையங்களை நாம் கேட்டோம். அவர்கள் ஆறு அமைத்திருக்கிறார்கள். அந்த மீதி நான்கையும் அவர்கள் ஒப்புக் கொண்டால் குற்றாலத்தில் வைப்பதற்கு அது தெளிவாகவும் இருக்கும், அது மிகுந்த பயன் உள்ளதாகவும் இருக்கும். காரணம் இலங்கையையொட்டிய பகுதிகள் இப்போது இலங்கையிலிருந்து ஒளிபரப்பப்படுகிற அந்த நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுகிறது. தவறான பிரசாரத்திற்கும் நம் மக்கள் ஆட்படுத்தப்



படுகிறார்கள். அந்த உணர்வுகளை எண்ணியாவது எந்தக் காரணத்தையொட்டி மத்திய அரசு வெஸ்டேர்ன் ரீஜனுக்கும், ஈஸ்ட்டேர்ன் ரீஜனுக்கும், நார்த் ஈஸ்ட்டேர்ன் ரீஜனுக்கும் கலர் ஒளிபரப்புக் கருவிகள் வழங்கியிருக்கிறார்களோ அந்தக் காரணங்களுக்கு கொஞ்சமும் குறையாமல் நம் தமிழகத்திற்கும், பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற எல்லையோரத்தில் இருக்கிற நம்முடைய தோழமை நாடுகள் என்ற பெயரால் நமக்கு எதிரான பிரசாரத்தை அவர்கள் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்காவது மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடராமணன் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிற வகையில் காங்கிரஸ் ஆட்சி புரிகிற மத்திய அரசு இதைப் பரிவோடு பரிசீலித்து இன்னும் நான்கு ஒளிபரப்பு நிலையங்களைத் தருவார்கள் என்று நம்புகிறேன். அப்படித் தருகிறபோது அதில் ஒன்றை குற்றாலத்தில் வைக்கலாம்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, என்னுடைய மொரப்பூர் தொகுதியில் தொலைக்காட்சி நிலையம் ஆறு, ஏழு பஞ்சாயத்துக்களில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அது சரியாக இயங்கவில்லை என்று அந்தக் கிராமத்தவர்கள் சொல்கிறார்கள். அண்மையிலே ஏற்காட்டிலே தொலைக்காட்சி நிலையம் ஏற்பட்டிருக்கிறது. அது என் தொகுதிக்கு சமீபமாக அமைக்கப்பட்டிருந்தும் அதன் பலன் கிராம மக்களுக்குக் கிடைக்கவில்லை. அது சரியாகக் கிடைப்பதற்கு வழிவகை காணப்படுமா? இன்னும் எஞ்சியுள்ள கிராமங்களுக்கும் பஞ்சாயத்துக்களுக்கும் அந்த தொலைக்காட்சி அமைப்பை அமைப்பதற்கு அரசிடம் ஏதாவது நடவடிக்கைகள் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இப்போது ஏற்காடு, வேலூர் போன்ற இடங்களில் அமைக்கப் பட்டுள்ள அந்த ஒளிபரப்பு நிலையங்கள் 100 வாட்ஸ் சக்தி படைத்தது தான். அதனுடைய கப்பாஸிட்டி, அவர்கள் கொடுக்கிற கணக்கின்படி இருபது அல்லது இருபத்தைந்து மைல்கள் ஒளிபரப்புகிற சக்தியை வைத்திருக்கிறது. ஆனால் ஏற்காட்டைப் பொறுத்தவரையில், நாம் மிக உயர்ந்த மலைப் பாங்கான இடத்தைத் தேர்ந்தெடுத்து கட்டடத்தையும் கட்டிக் கொடுத்து அங்கே வைத்த காரணத்தினால் கொஞ்சம் அதிக தூரம் கருவி ஒளிபரப்புகிற சக்தியைப் பெற்றிருக்கிறது.

அதனால் அந்த மக்கள் அதைப் பார்ப்பதற்கு இன்று வசதி பெற்றிருக்கிறார்கள். நீங்கள் சொல்கிற மொரப்பூர், தர்மபுரி இன்னும் எட்டத்திற்கு, தூரத்திற்குப் போய் விட்டது. இதைத் தான் நாம் மத்திய அரசுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுகிறபோது, அவர்கள் இன்று பர்ஸ்ட் பேஸ்ட் ப்ரோக்ராம் என்று சொன்னார்கள். அதில் பத்து கேட்டோம், ஆறு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் கிராமப்புறப் பகுதிகளில் படிப்பறிவும் எழுத்தறிவும் இல்லாத மக்கள் வாழ்கிற கிராமப் பகுதிகளில் இந்தத் தொலைக்காட்சி நிலையங்கள் மூலம் ஒளிபரப்பப்படுகிற நிகழ்ச்சிகள் மிகுந்த பயன் உள்ளதாக அமையும். ஆகவே அதை இன்னும் விரிவுபடுத்த வேண்டும். ஐம்பது மைல் தொலைவுக்குள்ளே ஒவ்வொரு ஒளிபரப்புகிற அந்தக் கருவிகள் அமைக்கப்பட்டாக வேண்டும். அதற்கேற்ற வகையில் சக்தி மிக்க சாதனங்களை அமைத்தாக வேண்டும் என்று தமிழக அரசு தெரிவித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு திட்டம் நிறைவேற்றப்படுகிற நேரத்தில் தர்மபுரி மாவட்டமும் அந்தப் பலனைப் பெறும்.

(முற்பகல் 9·30)

திரு. செ. தங்கராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி நிலையத்தினர் சென்னையில் உள்ள சபாக்களில், அரங்குகளில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை அதிகமாக ஒலிபரப்புகிறார்கள். அதேபோல் கிராமங்களில் நடக்கும் திருவிழாக்கள், புரட்சித் தலைவர் அரசு கிராமங்களிலே செயல்படுத்துகின்ற திட்டங்களைக் காட்டுவதற்கு நமது அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, சென்னையிலே இருக்கிற சென்னை நகர மக்களுக்காக தான் நிகழ்ச்சிகளைத் தொகுக்கிறோம் என்ற எண்ணம் தொலைக்காட்சி நிலையத்தினருக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு இன்னொரு காரணம், அவர்கள் ஒளிபரப்புகின்ற நிகழ்ச்சிகள், சென்னை நகரத்தை விட்டு வெளியே 10 மைல்களுக்கு மேல் போகவில்லை என்ற எண்ணமும் இருக்கக்கூடும் என்று எண்ணுகிறேன். தமிழ்நாடு முழுவதற்கும் கொடைக்கானலிலே செயல்படுகின்ற அந்த நிலையத்தைப் பயன்





படுத்துகின்ற சூழ்நிலை வந்தால்தான், கிராம பகுதி மக்களுக்கு, கிராம நிகழ்ச்சிகளை நாம் ஒளிபரப்ப வேண்டுமென்ற எண்ணம் சென்னை தொலைக்காட்சி நிலையத்தினருக்கு ஏற்படக்கூடும். அதனால் சென்னையிலே நடைபெறுகின்ற நாடகங்களை மேடைகளிலும் பார்க்கிறார்கள்; மேடைகளிலே பார்க்கின்ற அந்த உணர்வு போதாது என்று தொலைக்காட்சியிலும் பார்க்க வைக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்த உணர்வு, கருத்து சென்னை தொலைக்காட்சி நிலையத்தினருக்கு தெரிவிக்கப்படும். அவர்களும் புரிந்துகொண்டு, இந்த கிராமப்புற பகுதி மக்களுக்கு, படிக்காத சாதாரண மக்களுக்கு பயன்படுகின்ற வகையிலும் இந்த நிகழ்ச்சிகளை அமைப்பார்கள் என்று நம்புகிறேன்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தொலைக்காட்சி நிலையங்கள் தமிழகத்தில் எந்தெந்த மாவட்டங்களில் தெரியும் முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன? அப்படி தெரியாத வகையில் எந்தெந்த மாவட்டங்கள் உள்ளன? எனவே, மேற்கொண்டு வர இருக்கின்ற நான்கு நிலையங்களை தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் தெரிகின்ற முறையில் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மேற்கொண்டு வர இருக்கின்ற என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். மேற்கொண்டு வர இருக்கின்ற என்று சொல்ல முடியாது. நாம் நான்கு நிலையங்களைக் கேட்டிருக்கிறோம். அவர்கள் அதற்கு உறுதியான பதிலைத் தரவில்லை. இப்போது சென்னை தொலைக்காட்சி நிலைய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்கு, கொடைக்கானலில் 10 கிலோ வாட் சக்திவாய்ந்த சாதனம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதை இன்னும் முழுமையாக பயன்படுத்த முடியவில்லை. இதைத்

[1985 மார்ச் 19

தவிர, தேசிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவதற்காக தமிழகத்திலே ஆறு இடங்களிலே இந்த 100 வாட் சக்தியுள்ள, 15 அல்லது 20 மைல்கள் தூரத்திற்கு ஒலிபரப்புகின்ற சக்திவாய்ந்த அளவில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதிலே ஒன்று இன்னும் சரியாக இயங்கவில்லை. நெய்வேலி; கும்பகோணம், திருச்சி, வேலூர், ஏற்காடு, கோவை ஆகிய ஐந்து இடங்களில் இப்போது 15 அல்லது 20 மைல் தொலைவுக்குள் தேசிய நிகழ்ச்சிகள் ஒலிபரப்பும் சாதனங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. நெய்வேலியில் விரைவிலே அது நிறுவப்படும்.

**திரு. க. நரசிம்மபல்லவன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சி சம்பந்தப்பட்ட நிகழ்ச்சி என்பதால், ஒவ்வொரு கிராமந்தோறும் தொலைக்காட்சி பெட்டிகளை ஊராட்சி மன்றங்கள் மூலமாக வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, அனைத்து கிராமங்களிலும் கிடைக்காத சூழ்நிலையிலே ஒருசில கிராமங்களுக்கு மட்டும் கிடைப்பது என்பது சரியல்ல. அனைத்து கிராமங்களுக்கும் கிடைக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தர முடியுமா என்று கேட்டுக்கொள்ள விழைகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழக அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டதை அடுத்து, சுமார் 5,000 என்று கருதுகிறேன்; அது தவறாக இருந்தால் திருத்திக் கொள்ளவேண்டும்; இப்போது சரியான எண் நினைவில் இல்லை. 5,000 தொலைக்காட்சி பெட்டிகளை கிராமங்களுக்கு இப்போது வழங்குவதற்கு ஆணை பிறப்பித்து, அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல், தொலைக் காட்சிப் பெட்டிகளை மாத்திரம் கொடுப்பதினால் பயனில்லை. அந்த தொலைக்காட்சி பெட்டிகள் மூலம் நிகழ்ச்சிகள் தெரிய வேண்டும். அங்கே ஒலிபரப்புகின்ற கருவிகளை வைக்க வேண்டும். அதற்காகத் தான் இவ்வளவு நேரமும் விவரமாக பதிலளித்துக் கொண்டிருக்கிறேன்.



1985 மார்ச் 19]

## கோட்டூர்புரத்தில் குடிசை மாற்று வாரிய வீடுகள்.

7—(*வினா எண். 380) **திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோட்டூர்புரத்தில் தீப்பிடிக்காத வீடுகளுக்குப் பதிலாக குடிசை மாற்று வாரியம் மூலம் மாடி வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இப்பணி எப்பொழுது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** (அ) கோட்டூர்புரத்தில் தீப்பிடிக்காத வீடுகளுக்குப் பதிலாக குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக மாடி வீடுகள் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே பேரறிஞர் அண்ணா அவர்களால் தீப்பிடிக்காத வீடுகள் கட்டப் பட்டன. தற்போது அந்தப் பகுதிகள் எல்லாம் பாழடைந்து, சேதாரம் அடைந்து, மக்கள் வாழ்வதற்கு தகுதியில்லாது இருக்கும்போது, அவைகளை மாற்றி, மாடி வீடுகள் கட்டவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்பி, 2, 3 வருடங்களுக்கு முன்பே கோரிக்கை தரப்பட்டது. அந்த அடிப்படையிலே சமீபத்திலே கூட ஆயிரம் விளக்குப் பகுதியில் மாடி வீடுகள் கட்டுவதற்காக அடிக்கல் நாட்டு விழா கூட நடைபெற்றது. அந்த அடிப்படையிலே, இந்தப் பகுதியையும் எடுத்துக் கொண்டு மாடி வீடுகள் கட்ட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர்புரத்தைப் பொறுத்தவரையிலும். 1976 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின் காரணமாக ஒரு உயர்மட்டக் குழுவை அமைத்து, இனி மாடி வீடுகளைக் கட்டக் கூடாது என்ற அந்த ஆய்வை—அந்தப் பகுதியைப் பொறுத்த வரை அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களைப் பொறுத்தவரையிலே இடம், பொருளையும் அனுசரித்து, மாடி வீடுகள் கட்டுகின்ற திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும்.

[1985 மார்ச் 19

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர் மட்டக் குழு, அந்த இடத்தில் வெள்ள அபாயம் ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த இடத்திலே கட்டவேண்டாம் என்று கருத்து சொல்லி இருக்கிறது. கடுமையான வெள்ளம் ஏற்பட்ட நேரத்தில் அந்த முடிவு எடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்கள் வெள்ள அபாயத்தால் பாதிக்கப்படாமல் இருக்க மிகப் பெரிய அளவிலே அங்கே பாதுகாப்புச் சுவர் கட்டச் செய்து, வெள்ள அபாயத்திலேயிருந்து காப்பாற்றியிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் வெள்ள அபாயமே இல்லை என்று பொதுப்பணித் துறையாலும், மற்ற துறைகளாலும் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகு, அங்கே மாடி வீடுகளைக் கட்டுவதிலே என்ன தடை என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டிலே கூட ஏற்பட்ட பயங்கர புயலின் காரணமாக அந்தப் பகுதியிலே உள்ள வீடுகளும் மற்ற வசதிகளும் சீர்படுத்தப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக 1977 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அந்தக் குழுவினுடைய தலைவராக முன்னாள் பொறியாளர் நம்பியார் அவர்கள் தலைமையில் 3 குறிப்புகள் தரப்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியைப் பொறுத்தவரையிலும், நீர் மட்டத்தைவிட் தாழ்ந்து இருப்பதாலும், மண்ணின் தன்மை வலிவற்று இருப்பதாலும், கட்டுமான செலவு அதிகமாக அமையும் என்ற முடிவு ஒரு தீர்க்கப்பட்ட முடிவாக எடுக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் உள்ள குடிசைகளுக்குப் பதிலாக எரியாத வீடுகளைக் கட்டிக் கொடுப்பதைப் போல, மற்ற மாவட்டங்களில் தலைநகரங்களிலும் குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக அங்கே எரியாத வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்குக் காரணம் எங்களுடைய ஊரிலே பிறந்த எங்களுடைய இதயத்திலே தெய்வமாக வாழ்ந்து கொண்டிருக்கிற பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத்



1985 மார்ச் 19]

திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆகவே அதற்கு முன்னு தாரணமாக காஞ்சிபுரத்திலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1983—84 ஆம் ஆண்டிலேயிருந்து, சென்னை மட்டுமல்லாது மற்ற இடங்களுக்கும் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்துகின்ற முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே பட்ஜெட் நிலையைப் பொறுத்து, காஞ்சிபுரத்திலே எடுக்கப்படுமா என்ற முடிவு பின்னாலே எடுக்கப்படும்.

**திரு. சு. பாலன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1966 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே அரசு ஆரம்பித்த காலத்திலே சமூக விரோதிகளால் குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டது. அப்போது ஏராளமான வீடுகள் எரிந்த காரணத்தால் அண்ணா அவர்கள் உடனடியாக இப்படிப்பட்ட தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தந்தார்கள். அப்போது அவர்களுக்கு எந்தவிதமான அடிப்படை வசதியும் இல்லாமல் கட்டப்பட்ட வீடுகள் தற்போது எல்லாப் பகுதியிலும் ஏராளமாக இருந்து வருகின்றது. தற்போது அந்த மக்கள் வசதியற்ற இடங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே எல்லா வசதிகளையும் செய்து தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் அவர்கள் வெள்ளக் காலங்களில் பாதிக்கப்படுகிறபோது, எந்தவிதமான நிவாரணத்தையும் அவர்களுக்குத் தர மறுக்கிறார்கள். ஆகவே நிவாரணம் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. என். நல்லுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் சொன்ன பதில், ஆங்காங்கு இருக்கிற இடத்தினுடைய சூழ்நிலையை அனுசரித்து முடிவுகள் எடுக்கப்படும்.

[1985 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

**உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தவர், வேறு ஒருவர் உள்ளாட்சித்துறை அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பெற்றபின், உள்ளாட்சி சட்ட முன்வடிவுகளை மொழிதல்.**

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். தங்கள் அனுமதியுடன் நான் ஒரு தகவலைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நமது அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சராக நேற்றையதினம் மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் அவர்கள் 10 மணிக்கு ஆளுநர் முன்னிலையில் பதவி ஏற்றுள்ளார்கள். அதிலிருந்து அவர் உள்ளாட்சித் துறை அமைச்சராக ஆகிவிடுகிறார். அப்படி இருக்க உள்ளாட்சித் துறையின் மசோதாக்கள்.,. (மணியடிக்கப் பெற்றது.) சொல்லிவிடுகிறேன். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் வராது. நேற்றே எழுப்பப்பட்டது. நான் தீர்ப்பும் கொடுத்திருக்கிறேன். உட்காருங்கள்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** இது வேறு விஷயம். சொல்லி விடுகிறேன். பிறகு தப்பு என்றால் நீக்கிவிடுங்கள். தயவுசெய்து அனுமதியுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசிவிட்டு, அது தப்பு என்றால் அவைக் குறிப்பிலேயிருந்து எடுக்கச் சொல்ல வேண்டாமே என்று சொன்னேன்.



1985 மார்ச் 19]

**திரு. ப. பொன்னுரங்கம்:** சரி இருக்கட்டும். என்னை சொல்ல அனுமதியுங்கள். நேற்று காலையில் ஆளுநர் அவர்கள் மாளிகையில் ஆளுநர் அவர்கள் முன்னால் திரு. ப. உ. சண்முகம் அவர்கள் பதவி ஏற்றவுடன் உள்ளாட்சித் துறை அமைச்சராக ஆகிவிடுகிறார். அதே நேரத்தில் இங்கே உள்ள திரு. சௌந்திரராஜன் அவர்கள் கூட்டுப் பொறுப்பின் மூலமாக அமைச்சர் என்ற முறையில் பில்லை வைத்துப் பாஸ் செய்வதை தவறு என்று சொல்லவில்லை. ஆனால் உள்ளாட்சித் துறை அமைச்சர் என்ற முறையில் சட்டங்கள் டிஸ்கஷனுக்கு வைத்துப் பாஸாகியிருக்கின்றது. 7, 8 சட்டங்கள் பாஸாகியிருக்கின்றன. யாராவது கோர்ட்டுக்குச் சென்றால். . . .

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கையைப் பற்றி யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாது. ஒரு அமைச்சருக்காக இன்னொரு அமைச்சர் கூட்டுப் பொறுப்பில் விவாதத்தில் கலந்துக் கொள்ளலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பாஸான சட்டத்தைப் பற்றி கொஸ்டின் பண்ணலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கையைப் பற்றி யாரும் கோர்ட்டுக்குப் போக முடியாது. நேற்று 9-40-க்கே இந்தப் பிரச்னை இங்கே எழுப்பப்பட்டது. பத்து மணிக்குத் தான் அவர்கள் பதவி ஏற்றார்கள். அந்தச் செய்தி கூட பத்திரிகையில் வந்திருக்கிறது.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டதை எதிர்த்து சுப்ரீம் கோர்ட் வரை போயிருக்கிறார்கள். அந்த பில்லும் இந்த அவையில் பாஸாகியது தான். . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் சொல்கிறேன், இங்கே நடக்கும் ப்ரொசீஜரை யாரும் குவஸ்டின் பண்ண முடியாது. "Nobody can question the procedure of our Assembly".

**திரு. ப. பொன்னுரங்கம்:** அப்பொழுது எப்படி போனார்கள். தேசியமயமாக்கப்பட்ட சட்டத்தை எதிர்த்து. . . . .

[1985 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டத்தை எதிர்த்துப் போயிருக்கலாம். இங்கே நடக்கும் புரொசீஜுரை வைத்து அல்ல.

**திரு அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த பொன்னுரங்கம் அவர்கள் எழுப்பிய பிரச்னை ஏற்கெனவே எழுப்பப்பட்டிருந்தாலும், உங்களிடமிருந்து விவரம் பெற வேண்டும் என்று விரும்புகிறேன். நேற்று முழுவதும் திரு. சௌந்திரராஜன் அவர்கள்தான் இங்கே உள்ளாட்சித் துறை அமைச்சர் என்ற முறையில் இருந்திருக்கிறார். 9-45-க்கு காலையில் துவங்கி எல்லா பில்களையும் பாஸாகிற வரையில் அவர் தான் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்திருக்கிறார். அவருடைய பெயரிலே இந்த மசோதாக்கள் சட்டமாக பாஸாகிற வரைக்கும் அவர்தான் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கவர்னர் மாளிகையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக வேறு ஒருவருக்கு ஃபோர்ட் போலியோ கொடுக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்தான் இவைகளை பாஸ் செய்ய வேண்டுமே தவிர, பெயர் மாறாட்டம் செய்து, வேறு பெயரில் பில்களை பாஸ் செய்வது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெயர் மாறாட்டம் என்று சொல்வது தப்பு.

**திரு. அ. ரகுமான்கான்:** சரி, அதை மாறுதலாக என்று திருத்திக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் திரு. ப. உ. ச. அவர்களுக்கு பதவிப் பிரமாணத்தை 10 மணிக்கு நடத்தி வைத்தார். இங்கே 9-50-க்கு கேள்வி எழுப்பப்பட்டபோது, ஏற்கெனவே இந்த சட்ட முன்வடிவுகள் அவையில் அறிமுகப்படுத்தப்பட்டபோது மாண்புமிகு சௌந்திரராஜன் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தார்கள். விவாதத்திற்கு எடுக்கும்போது எந்த அமைச்சர் பெயரிலே ஒரு சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறதோ அவரே தான் பாஸ் செய்ய வேண்டும் என்பது இல்லை. எந்த அமைச்சரும் விவாதத்



1985 மார்ச் 19] (டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

திலே கலந்துக் கொள்ளலாம், விவாதத்திற்கு பதிலும் சொல்லலாம். நானே உள்ளாட்சித் துறை அமைச்சரின் ஒரு சட்டத்திற்கு இங்கே பதில் சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குப் பதிலாக மற்றொரு அமைச்சரும் சொல்லலாம். கேபினேட் ரெஸ்பான்ஸிபிளிட்டி இருக்கிறது. யாரும் பதில் சொல்லலாம். அங்கே அவர் உள்ளாட்சித் துறை அமைச்சரான உடனேயே, இவர் சத்துணவு திட்ட அமைச்சராகத்தான் இங்கே இருக்கிறார்களே தவிர உள்ளாட்சித் துறை அமைச்சர் என்று அல்ல. ஆகவே 2 உள்ளாட்சித் துறை அமைச்சர்கள் இருக்கிறார்கள் என்று சொல்வதற்கில்லை. எந்த ஒரு கட்டத்திலேயும் உள்ளாட்சித் துறை அமைச்சராகத்தான் பேசியிருக்கிறார்கள் என்று எந்த ஒரு குறிப்பும் இருக்கவில்லை. சட்ட மீறலோ குறிப்பிலே மீறலோ எதுவும் இல்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் விதியைப் படிக்கிறேன். அசெம்பிளி ரூல்ஸிலே.

In page 2 of the Assembly Rules—

(n) "Member in-charge of a Bill" means—

(i) in the case of a Government Bill, any Minister"

என்று இருக்கிறது. ஆகவே எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பதில் சொல்லலாம். இது பெரிய பிரச்னையும் அல்ல. (குறுக்கீடுகள்) சட்டப் பிரச்னையும் அல்ல. இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டரே இல்லை.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நம்முடைய சட்டமன்ற விதிகளைப் பார்த்து குறிப்பு வழங்கி விட்டீர்கள். கலெக்டிவ் ரெஸ்பான்சிபிலிடி இருக்கிறது. நான் ஒத்துக்கொள்கிறேன். பேரவையிலே நம்முடைய முதலமைச்சர் மசோதா வருகின்றபோது முன்னவர் அவர்கள் இங்கே முன்மொழிந்து பேசியிருக்கிறார். சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எந்த அமைச்சர் வேண்டுமானாலும் சட்ட முன்வடிவு வரும்போது அறிமுகப்படுத்தலாம், பேசலாம். இதில் எங்களுக்கு கருத்து வேறுபாடு கிடையாது. நான் கேட்டுக் கொள்வதெல்லாம், கூட்டுப் பொறுப்பு இருந்தாலும் கூட, ஒருவர்,

சம்பந்தப்பட்ட துறையினுடைய அமைச்சராக பதவி ஏற்றுக் கொண்டிருக்கின்றபோது சபைக்கு ஒரு அறிவிப்பாக தெரிவித்து, இந்த துறைக்கு இந்த அமைச்சர் என்று பெயரை மாற்றுவதற்கான தகுந்த ஏற்பாடுகள் உண்டு. அதனை ஒரு நோட்டீஸ் மூலமாக கொடுத்து இந்தத் துறைக்கு இவர் மாற்றப்பட்டிருக்கிறார் என்ற விளக்கத்தை கொடுத்ததற்கு பிறகு அந்தக் காரியத்தை செய்திருக்கலாம் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஸ்வேரிங் முடிந்த பிறகு தான் நோட்டிபிகேஷன் வரவேண்டும். இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் கிடையாது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை தோன்றியதிலிருந்து யார் யார் எந்தந்த பொறுப்பு ஏற்கிறார்கள், எப்போது பதவிப் பிரமாணம் செய்கிறார்கள் என்ற அறிவிப்பை, அறிவிப்பாக வைப்பதே இல்லை. திடீரென்று பதவிப் பிரமாணம் எடுத்துவிட்டு ஒரு அமைச்சர் வந்து உட்கார்ந்தாலும் கூட சாதாரணமாக எப்படி உட்கார்ந்தார், ஏன் உட்கார்ந்தார் என்று கேட்பதில்லை. அறிவிப்பாக வைப்பதும் இல்லை. தொடர்ந்து இது இந்த அவை தோன்றிய காலத்திலிருந்து நடைபெற்று வருகிறது. எந்த அமைச்சரும் விவாதத்தில் கலந்து கொண்டு பதில் கூறலாம் என்ற அடிப்படையில்தான். நேற்று நடந்ததே தவிர சட்ட மீறலோ, உரிமை மீறலோ எதுவும் இல்லை என்பதை குறிப்பிட விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பொன்னுரங்கம் உட்கார வேண்டும். நான் இன்னொரு விளக்கத்தையும் சொல்லி விடுகிறேன். ஆளுநர் முன்னால் அவர் அமைச்சராகத்தான் பதவி ஏற்கிறார். ஆனால் போர்ட் ஃபோலியோ வந்த பிறகு தான் எந்தத் துறை அமைச்சர் என்று தெரியும்.





## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) ஆண்டிப்பட்டி தொகுதியில் மர்ம நோயால் ஆடுகள் பாதிக்கப்பெறுவது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆண்டிப்பட்டி தொகுதியில் மர்ம நோய் தாக்கிப் பல ஆடுகள் இறந்ததினால் ஆடு வளர்ப்போர் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

#### அறிக்கை.

மதுரை ஆண்டிப்பட்டி தொகுதியில் உள்ள செம்மறி ஆடு
களுக்கு நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டதாக தகவல் கிடைக்கப்
பெற்றதும், அம்மண்டல கால்நடை பராமரிப்புத்துறை வல்லுநர்,
உதவி கால்நடை பராமரிப்பு இயக்குநர் ஆகியோர் அப்பகுதிக்கு
சென்று, 6—3—1985 அன்று பார்வையிட்டனர். சுமார் 87 ஆடுகள்
"வெக்கை" நோயினால் பாதிக்கப்பட்டதாகவும், அதில்
69 ஆடுகள் இறந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதுவரை
சுமார் 1,556 ஆடுகளுக்கு வெக்கை நோய் தடுப்பூசிகள் போடப்
பட்டுள்ளன என்றும், பாதிக்கப்பட்ட ஆடுகளிலிருந்து மாதிரிகள்
பரிசோதனைக்கு சேகரிக்கப்பட்டு இராணிப்பேட்டை, கால்நடை
நோய் தடுப்பு மருந்து நிலையத்திற்கு புலனாய்வுக்காக அனுப்பப்
பட்டுள்ளதாகவும் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்
கூறியுள்ளார். மேலும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்
திற்காக வெளி மாவட்டங்களிலிருந்து வாங்கப்பட்ட ஆடுகள்
தான் நோயினால் பாதிக்கப்பட்டன என்றும் கூறியுள்ளார்.

[1985 மார்ச் 19

ஆண்டிப்பட்டி தொகுதி நோய்க்கிளர்ச்சி சம்பந்தமாக தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

அறிக்கை பெற்ற தேதி — 28—2—1985.

மாவட்டத்தின் பெயர்—மதுரை மாவட்டம்.

கிராமத்தின் பெயர்—மேகிழார்பட்டி ஏத்தாகோயில் (ஆண்டிப்பட்டி பஞ்சாயத்து யூனியன்).

வட்டத்தின் பெயர்—திருமங்கலம்.

நோயின் பெயர்—வெக்கைநோய்.

நோய் தாக்கிய தேதி — 26—2—1985.

கடைசியாக நோய் தாக்கியது — 6—3—1985.

நோயினால் பாதிக்கப்பட்ட எண்ணிக்கை—87.

முதல் இறப்பு ஏற்பட்டது — 28—2—1985.

கடைசியாக இறப்பு ஏற்பட்டது — 7—3—1985.

மொத்தம் இறந்த எண்ணிக்கை—69.

நோய் கிளர்ச்சி பார்வையிடப்பட்ட தேதிகள் — 28—2—1985, 6—3—1985, 7—3—1985.

நோயுள்ள கால்நடைகள் எண்ணிக்கை—18.

பாதிக்கப்பட்ட இனம்—செம்மறி ஆடுகள்.

தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை—1,556.

**வெக்கை நோய் :**

வெக்கை நோய் கால்நடைகளை தாக்கும் ஒரு கொடிய தொற்று நோயாகும். இந்நோய் கால்நடைகளை வெகுவாகத் தாக்கி கால்நடைகளின் இறப்பிற்கு காரணமாக உள்ளது. உலகின் பல பாகங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு இந்நோய் வருகிறது. முக்கியமாக மாட்டினம், ஆட்டினம், பன்றியினங்களில் இந்நோய் காணப்படுகிறது.



1985 மார்ச் 19]

**நோயின் அறிகுறிகள் :**

1. உடல் வெப்பம் அதிகமாகக் காணப்படும்.

2. நோய் கண்ட மாடுகள் தினமும் உட்கொள்ளும் தீவனம் உட்கொள்ளாது. கறக்கும் பாலின் அளவு குறைந்துவிடும்.

3. கண்களிலிருந்து நீர் வடியும்.

4. கண்களிலிருந்து வடியும் நீர் முதலில் மிகவும் அதிகமாகிப் பின்னர் சீழ் வடிவத்தில் காணப்பட்டு, கண்களின் ஓரத்தில் இருக்கும் தசைகள் மிகவும் புண்ணாகிவிடும்.

5. வாய் மற்றும் நாசித் துவாரங்களில் புண் ஏற்படும்.

6. வாயிலிருந்து எச்சில் முதலில் அதிகமாகிப் பின் இரத்தம் கலந்து பின்னர் சீழ் வடிவத்தில் காணப்படும்.

7. வாயில் கீழ்தாடைகளில் புண் ஏற்பட்டு அப்புண்கள் அதிகமாகி வாயின் கீழ்த்தாடைகளில் உள்ள திசுக்கள் மிகவும் அழுகிய நிலையில் இருக்கும். வாயில் ஓரங்களில் இவ்வறிகுறிகள் காணப்படும்.

8. இப்புண்கள் நாக்குகளின் மேற்பகுதியிலும் காணப்படும்.

9. இப்புண்களில் அரிசி தவிடை தாடையில் அப்பியதுபோல் காணப்படும்.

நோய்க் கிளர்ச்சியின் எந்த தொற்று நோய் என்று புலனாய்வு செய்யும்வரை அதனை மர்ம நோய் என்று பொதுமக்கள் கூறுவார்கள். மர்ம நோய் என்று ஒரு நோய் கிடையாது. எல்லா இடங்களிலும் தடுப்பு நடவடிக்கை வெக்கை நோய்த் தடுப்புக் குழுக்களாலும், விழிப்புக் குழுக்களாலும், எடுக்கப்படுகிறது. 1984-85 (சனவரி முடிய) 31,11,032 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

வெக்கை நோய் முக்கியமாக உலகின் கீழ்க்கண்ட பகுதிகளில் அதிகமாக காணப்படுகிறது :—

1. மத்திய வடகிழக்கு ஆப்ரிக்கா மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் இந்நோய் காணப்படுகிறது.

2. கிழக்கு ஐரோப்பாவிலும் இந்நோய் அதிகமாக காணப்படுகிறது.

[1985 மார்ச் 19

பரவும் முறை :

1. நோய் கண்ட கால்நடைகளிலிருந்து சுவாசம் மூலமாக இந்நோய் நல்ல கால்நடைகளுக்கு பரவுகிறது.

2. இந்நுண் கிருமிகளால் அசுத்தப்படுத்தப்பட்ட தீவனங்களை மற்ற கால்நடைகள் உட்கொள்ளும்பொழுது இந்நோய் கால்நடைகளுக்கு பரவுகிறது.

சிகிச்சை :

நோய் கண்ட கால்நடைகளின் இறப்பு விகிதம் அநேகமாக 100 சதவீதம் சிகிச்சையளிப்பது பயன்தராது.

தடுக்கும்முறை :

நோய் கண்ட கால்நடைகளின் இறப்பு விகிதம் 100 சதவீதமாக இருப்பதாலும், சிகிச்சையளிப்பதும், பயன்தராமல் இருப்பதாலும், இந்நோய் வருவதற்கு மூன் கால்நடைகளுக்கு உரிய தடுப்பு நடவடிக்கை எடுப்பதன் மூலம் மட்டும்தான் இந்நோயை கட்டுப்படுத்தலாம்.

தடுப்பூசி மருந்து நமது மாநிலத்திலேயே தயார் செய்யப்படுவதால் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் எளிதாகக் கிடைப்பதாலும் தடுப்பூசி மருந்து, கால்நடைகளுக்கு உரிய காலங்களில் போட்டு வியாதி வராமல் தடுக்கலாம்.

வெக்கை நோய் ஒரு கொடிய தொற்று நோயாய் இருப்பதாலும், நோய் கண்ட கால்நடைகளின் இறப்பு விகிதம் அநேகமாக 100 சதவீதம் இருப்பதாலும் இந்நோயைத் தடுப்பூசி போட்டுக் கொள்வதின் மூலமாகத்தான் ஒழிக்க முடியும். இதைக் கருத்தில் கொண்டுதான் தேசிய அளவில் ஒவ்வொரு மாநிலத்திலும் மாவட்ட வாரியாகத் தடுப்பூசி குழுக்களும் மாநில எல்லைகளில் விழிப்பு சோதனைக் குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



1985 மார்ச் 19]

இம்மாநிலத்தில் 18 வெக்கை நோய் தடுப்புக் குழுக்களும், 10 விழிப்புப் பணிக் குழுக்களும், 14 வெக்கை நோய் தடுப்புச் சாவடிகளும் வெக்கைநோய் தடுப்புப் பணியில் தீவிரமாக செயல்பட்டு வருகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் வெக்கை நோய் பரவிய விவரங்கள்—

| வருடம். | மாடுகள். | ஆடுகள். |
|---|---|---|
| 1980-81 | 21 | 2 |
| 1981-82 | 29 | 2 |
| 1982-83 | 4 | — |
| 1983-84 | 16 | 7 |
| 1984-85 (பிப்ரவரி முடிய) | 2 | 2 |

தமிழ்நாட்டில் வெக்கை நோய் தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகளைப் பற்றிய விவரங்கள் :

| வருடம். | வெக்கை நோய் தடுப்புக்குழு. | கால்நடைகள். விழிப்புக் குழு. | சோதனைச் சாவடிகள். |
|---|---|---|---|
| | | (இலட்சங்களில்) | |
| 1980-81 | 26.24 | 22.12 | 3.90 |
| 1981-82 | 33.52 | 28.11 | 4.26 |
| 1982-83 | 29.66 | 21.62 | 4.81 |
| 1983-84 | 27.52 | 19.17 | 5.05 |
| 1984-85 | 16.90 | 10.28 | 3.95 |

1984-85 (பிப்ரவரி 1985 முடிய) தமிழ்நாட்டில் மொத்த நோய் கிளர்ச்சி, மாட்டினத்தில் செப்டம்பர் 1984-ல் இரண்டும், ஒன்று தர்மபுரி மாவட்டத்திலும், மற்றொன்று நெல்லை மாவட்டத்திலும் ஏற்பட்டுள்ளது. ஆட்டினத்தில் இரண்டு கிளர்ச்சிகள் ஏப்ரல் மாதத்தில் வடாற்காடு மாவட்டத்தில் ஒன்றும், மற்றொன்று மே மாதத்தில் மதுரை மாவட்டத்திலும் ஏற்பட்டது. இதற்குப் பின் இப்பொழுதுதான் ஆண்டிப்பட்டி வட்டாரத்தில் வெக்கை நோய் கிளர்ச்சி ஏற்பட்டுள்ளது. வெளி மாவட்டங்களிலிருந்து வாங்கப்பட்ட ஆடுகளுக்குத்தான் இந்நோய் கண்டுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை இந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்குத் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

[1985 மார்ச் 19

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு அதிகாரிகள் கொடுத்த குறிப்பில் மத்திய வடகிழக்கு ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவின் பல பகுதிகளிலும் 'வெக்கை' நோய் காணப் படுகிறது. கிழக்கு ஐரோப்பாவிலும் இந்நோய் அதிகமாக காணப்படுவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு வறட்சிக் காலமாக இருப்பதால் ஆடுகளும், மாடுகளும் வெக்கை நோயினால் பாதிக்கப்படுவது இயற்கை. ஆனால் அதிகாரிகள் தக்க நேரத்தில் தடுப்பு ஊசி போடாததினால் ஆண்டிப்பட்டி தொகுதியில் 69 ஆடுகள் இறந்திருக்கின்றன. 87 ஆடுகளுக்கு வெக்கை நோய் கண்டிருக்கிறது. இவர்கள் இந்த ஆடு கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதால் அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்பதையும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தக்க காலத்தில் தடுப்பு நடவடிக்கை எடுக்காததினால் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன கருத்துக்களின் மீது பரி சீலனை செய்யப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியில் அதிக அளவில் கால்நடை மருத்துவ மனை இல்லாததினால் இவ்வளவு ஆடுகள் இறந்திருக்கின்றன. ஆதலால் அங்கே கால்நடை மருத்துவ மனையை நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்க முன்வருமா? மேலும் வெக்கை நோய் கண்ட ஆடுகளை மனிதன் சாப்பிட்டால் வியாதி வரும் என்று அதிகாரிகள் அந்த பக்கம் ஒரு பிரச்சாரம் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகவல் எதுவும் அரசுக்கு வரவில்லை.



1985 மார்ச் 19]

## (ஆ) தேனி தொகுதி உற்பத்தியாளர்களுக்கு கட்டுபடியாகும் விலையில் பருத்தியைக் கொள்முதல் செய்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் வே. இரா. ஜெயராமன், குமரி அனந்தன், எஸ். என். இராமசாமி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத் துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

(முற்பகல் 9-50)

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், தேனி தொகுதியில் பருத்தி உற்பத்தியாளர்களிடம் தேங்கிக் கிடக்கும் பருத்தியினை உடனடி யாகக் கொள்முதல் செய்வது மற்றும் கட்டுப்படியாகின்ற விலை யினைக் கொடுப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி பகுதியில் பிப்ரவரி மாத பிற்பாதியில் வியாழன் மற்றும் ஞாயிறு ஆகிய சந்தை நாட்களில் சுமார் 35,000 பருத்தி தாட்டுகள் (ஒரு தாட்டு என்பது சுமார் 85 கிலோ கொண்டதாகும்) விற்பனைக்கு வந்தன. பருத்தியில் அதிக அளவு ஈரம் இருந்தமையால் அவற்றின் விற்பனை மட்டுப்பட்டு இருந்தது. மேலும், குஜராத், பஞ்சாப் மற்றும் பிற மாநிலங் களில் பெருவாரியான அளவு பருத்தி உற்பத்தியாகி இருப்பதால், மார்க்கெட் நிலவரம் இந்தக் காலக் கட்டத்தில் மந்தமாகவே இருந்தது. பின்பு மத்திய அரசு, நீண்ட இழைப்பருத்தியை ஏற்றுமதி செய்ய அனுமதித்ததையொட்டி மார்க்கெட் நிலவரம் ஓரளவு சீரடைந்தது. இதன் விளைவாக முன்பு எம்.சி.யு. 5 பருத்தியின் விலை குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 450 முதல் ரூ. 500 ஆகவும், எல்.ஆர்.ஏ. பருத்தி ரூ. 400 முதல் ரூ. 450 ஆகவும் இருந்த நிலை மாறி, பிற்பாடு எம்.சி.யு. 5 ரூ. 500 முதல் ரூ. 579 ஆகவும் எல். ஆர். ஏ. ரூ. 450 முதல் ரூ. 530 ஆகவும் கூடியது. தற்போது சந்தை நாட்களில் சராசரியாக 10,000 தாட்டுகள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகின்றன. இந்தியப் பருத்திக்

கழகம் தங்களுடைய கொள்முதல் மையங்களில் இக்கழகத்தின் விதிமுறைகளையொட்டி, பருத்தியை வாங்க உத்தரவிட்டுள்ளது. எனவே, தேனீ பகுதியில் விற்பனை ஆகாமல் அதிகமான அளவு பருத்தி தேங்கிக் கிடப்பதாகத் தெரியவில்லை.

எனினும், வேளாண்மை விற்பனை இயக்குநர் இதுகுறித்து சென்னையிலுள்ள இந்தியப் பருத்திக் கழகத்தின் கிளை அலுவலகத்துடன் மேலும் தொடர்பு கொண்டு ஆவன செய்து வருகிறார்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** பேரன்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பருத்திக் கொள்முதல் விஷயமாக தமிழக அரசே ஒரு விற்பனைக் கொள்முதல் நிலையத்தை ஏற்படுத்தி அரசே கொள்முதல் செய்யவேண்டுமென்று நீண்ட நெடு நாட்களாக அந்தப் பருத்தி விற்பனை உற்பத்தியாளர்கள் விரும்பி வேண்டி கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேயல்லாமல், இந்தியப் பேரரசினுடைய புதிய டெக்ஸ்டைல் பாலிசியிலே இந்த உற்பத்தியாளர்களுக்கு கட்டுப்படியாகின்ற விலையை ஏற்படுத்தித் தருவதற்கு பருத்தி விவசாயிகளை உள்ளடக்கிய ஒரு உயர்மட்டக் கமிட்டியை அமைக்கின்ற யோசனை பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் சார்பாக ஒரு பருத்திக் கழகம் அமைக்க வேண்டுமென்ற வகையிலே நாம் திட்டமிட்டோம். ஆனால் அதற்குரிய சாத்தியக்கூறுகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்ததில், அது இயலாது போயிற்று. இருப்பினும், இந்தியப் பருத்திக் கழகத்தின் மூலமாக உரிய விலையை நிர்ணயிக்க தமிழக அரசு உரிய முயற்சியை எடுத்துக் கொள்ளும்.

**திரு. குமரி அனந்தன்:** தலைவர் அவர்களே, இந்திய பருத்திக் கழகம் மகாராஷ்டிரத்தில் இருக்கின்ற உற்பத்தியை வைத்தும், விலையை வைத்தும் தான் மொத்தத்திற்கே விலையை நிர்ணயிக்





கிறது என்றும், பருத்தியினுடைய கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இப்போது கட்டுப்படியாகின்ற விலை வேண்டுமென்பது அமைச்சர் அவர்களுடைய கவனத்தில் கொண்டுவரப்படுகின்ற காரணத்தினாலே, அரிசிக்கும், கோதுமைக்கும் கட்டுப்படியான விலை என்று சொல்கின்ற ஒரு நியதியைக் கொண்டுவருவது போலவே, பருத்திக்கும் கொண்டுவரும்போது, ஒவ்வோரிடத்திலேயும் ஒவ்வொரு வித்தியாசமான உற்பத்திச் செலவு ஏற்படுகின்ற காரணத்தாலே தமிழகத்தில் இருக்கின்ற அந்தப் பருத்தி உற்பத்தியாளர்களையும் உள்ளடக்கிய ஒரு குழுவை நியமித்து, அவர்களுடைய சிபாரிசுப்படி, கட்டுப்படியாகின்ற விலை நிர்ணயிக்கப்படுமா? தமிழ் நாட்டில் உற்பத்தியாகின்ற பருத்தி, நம்முடைய நூல் தேவைக்குப் போதுமானதாக இல்லை. 40 சதவீதம்தான் உற்பத்தியாகிறது என்று சொல்கிறார்கள். இவ்வளவு குறைந்த அளவிற்கு உற்பத்தி செய்து தேங்கிக் கிடைக்கிறது என்று சொன்னால், விவசாயிகள் இதில் ஊக்கம் காட்ட மாட்டார்கள். எனவே ஊக்கம் காட்டுகின்ற வகையிலே அதிக அளவு பருத்தி உற்பத்தி செய்கின்ற வகையிலே விவசாயிகளை உற்சாகப்படுத்தப்படுவார்களா என்று அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, நெல்லுக்கு விலையைக் கூட நிர்ணயம் செய்வது நாம் அல்ல, மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கிற விலை நிர்ணயக் குழுதான் விலை நிர்ணயம் செய்கிறது. என்றாலும் விவசாயப் பெருமக்களுடைய நிலைமையைக் கருத்தில் கொண்டு அரசு உதவி செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. பருத்தியை கொள்முதல் செய்வதைப் பொறுத்த அளவிலே பருத்திக் கழகம் மாராட்டிய மாநிலத்திலே உள்ள விலையை வைத்து கொள்முதல் செய்வதாக இருந்தாலும்கூட நாம் நம்முடைய உற்பத்தி விலையைக் காரணமாகக் காட்டிதான் விவசாயப் பெருமக்களுக்கு உரிய விலையைத் தருகிற வகையிலே வற்புறுத்தி வருகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களின்மீது அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

* திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 7 ஆண்டுகளுக்கு மேலாக அந்த கமிட்டிகளை சூப்பர்சீட் பண்ணி தேர்தல் இல்லாமலேயே காலம் போய்விட்டது. இன்னும் தொடர்ந்து தேர்தல்கள் இல்லாமல் இந்தக் கமிட்டிகளை நியமனக் கமிட்டிகளாகவே வைத்துக்கொண்டிருக்கிற தன்மையில் ஆர்டினன்ஸ்லை ரீப்பிளேஸ் பண்ணிக் கொண்டு, நிரந்தரச் சட்டத்தை விரைவிலே கொண்டு வராமல் இருக்கிற நிலைமை தொடர்ந்து இருக்கிறது. இங்கே சொல்லப்பட்டிருக்கிற காரணம் உறுப்பினர்கள் திறமையாக வேலை செய்யாமல் இருந்ததால்தான் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது என்று சொல்லி அதற்கு வேண்டிய சில புரவிஷன்ஸ் கொண்டுவருவதற்கு முயற்சி செய்கிறார்கள். இந்தத் துறையிலே உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மார்க்கட்டிங் கமிட்டி அமைக்க வேண்டுமென்ற ஒரு நல்ல அம்சத்தில் அதற்கு நேர் எதிராக தேர்தல் இல்லாமல் மறுபடியும் 7 ஆண்டுக்குப் பிறகும் இப்படி நியமனக் கமிட்டிகளை அமைக்கவேண்டுமென்ற சட்டம் ஆக இது இருக்கிறது. இது ஒரு தவறான முன்உதாரணம், சரியல்ல, ஆகவே அமைச்சர் அவர்கள் இதை வற்புறுத்தாது இந்த சட்டத்தை வாபஸ் பெறவேண்டுமென்று நான் இன்ட்ரடொக்ஷன் நிலையிலேயே கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)



மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: துணைத் தலைவர் அவர்களே, வேளாண் விளைபொருள் அங்காடிகளைப் பொறுத்த வரையில் விரிவான சில திருத்தங்களைச் செய்யக்கூடிய முறையில் ஒரு சட்டம் புதிதாக இயற்றப்பட வேண்டுமென்ற முறையிலே அதற்கான ஆய்வை அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது. புதிதாக மாற்றம் செய்ய வேண்டுமென்ற கருத்துக்கள் சட்டத் துறையால் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இந்த இடைக் காலத்திலேதான் இந்தச் சட்ட முன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்தச் சட்டம் வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று உருவாக்க முடியும். அதுவரையிலும் இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

**(ஆ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) திருத்த சட்ட முன்வடிவு 1985.**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) திருத்த சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட சம்பந்தமாக நான் கருத்தைச் சொல்வதற்கு என்ன காரணம் என்றால் பஞ்சாயத்துத் தேர்தலை, நகராட்சித் தேர்தலை தள்ளிவைப்பதற்கு ரிசர்வேஷன் சம்பந்தமாக நீதிமன்றத்திலே கேஸ் இருக்கிறது என்றும், போட்டோ ஏற்பாடுகள் செய்யவேண்டியதிருக்கின்றன என்றும் காரணங்கள் நேற்றைய தினம் கொண்டு வரப்பட்ட மசோதாவிலே பேசும் போது சொல்லப்பட்டது. ஆனால் இங்கே மசோதாவைப் பொறுத்தவரையில் அமைச்சர் என்ன சொல்கிறார் என்றால் அது சம்பந்தமாக சில சட்டங்கள் இயற்றுவதற்கு சட்டத் துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்றும் அதனால் கால தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால்

(முற்பகல் 10-00)

1981 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இப்படிப்பட்ட மசோதாக்களை இங்கே கொண்டு வந்து நிறைவேற்றி வருகிறார்கள் அமைச்சர் அவர்கள். இது அவர்களுக்கு நன்கு தெரியும். ஆகவே இப்படிப்பட்ட அக்ரிகல்சரல் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கு சட்ட துறைக்கு இவ்வளவு காலதாமதம் ஏற்பட்டு இருக்கிறது. அதற்கு காரணம் என்ன?

இப்படிப்பட்ட நிலையை பார்க்கக்கூடிய நேரத்தில் தேர்தல் இன்று நடத்தப்படாத காரணத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்கள் இல்லாத காரணத்தால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட





விரும்புகிறேன். அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருட்களுக்கு இன்றைக்கு நியாயமான விலை கிடைக்காத நிலை இருக்கிறது. அதை மார்க்கெட் செய்வதற்கு வாங்கி சேகரித்து ஒரு நியாயமான விலை கொடுத்து விவசாயிகளை காப்பாற்றக்கூடிய முறையில் பலயிடங்களில் இப்போது மார்க்கெட் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற நிலைமை நாம் பார்க்கிறோம். இப்படிப்பட்ட தேர்தலை நடத்தி அந்த குழுக்களை அமைப்பதற்கு எடுத்துக் கொள்ளக்கூடிய கால தாமதம் 4, 5 ஆண்டு காலம். அதாவது சட்டம் உருவாக்கப்படுகிறது என்ற காரணத்தை சொல்லி இந்த தேர்தல் தள்ளி வைத்துக் கொண்டு செல்லுவது சரியல்ல. இப்போது ஒரு வருட காலம் அவகாசம் கேட்கப்பட்டு இருக்கிறது. இந்த அவகாசக் காலத்தை குறைத்து எவ்வளவு விரைவில் தேர்தல் நடத்த முடியுமோ இப்படிப்பட்ட குழுக்கள் அமைக்க முடியுமோ அதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளுவது சரியாக இருக்கும்.

ஆகவே இப்படிப்பட்ட சட்டத்தை வாபஸ் பெற்று தேர்தல் நடத்துவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அந்த முறையில் இந்த சட்டத்தை அறிமுகம் செய்யும் நிலையிலேயே நான் ஆட்சேபிக்கிறேன், எதிர்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1985 மார்ச் 19

## (இ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. எம். தங்கமணி மற்றும் சி. பழனிமுத்து ஆகியோர் தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் இத்தீர்மானத்தை மொழிவார்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"ஆளுநர் அவர்களால் 17—11—1984 ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) மூன்றாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1984) இப்பேரவை நிராகரிக்கிறது".

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1985) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானமும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

---

@ 1985 ஆம் ஆண்டு மார்ச் 13 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1985 மார்ச் 19]

*** திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. பொன்னுரங்கம் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிந்து இந்த 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர் நியமன திருத்தச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் வைப்பதிலே இந்த அரசுக்கு என்ன தயக்கம் என்பது எனக்கு தெரியவில்லை. இதற்கு முன்னால் நேற்றையதினம் நடந்த விவாதங்களிலே உள்ளாட்சி துறைகளுக்கு எப்படி நீண்ட காலமாக தேர்தலை தள்ளி வைத்துக்கொண்டே போகிறார்களோ அதேபோல் கூட்டுறவு சங்கங்களில் இப்படி தனி அலுவலர்கள் நியமனம் நீண்ட காலமாகவே நீட்டித்துக் கொண்டு போகிற காரணம் என்ன என்று தெரியவில்லை. அதிலேயும் உங்களுக்கு தேர்தல் நடத்துவதிலே ஏதாவது சங்கடம் இருக்கிறதா என்பதை நீங்கள் இந்த நேரத்தில் ஆராய வேண்டும். இயக்குநர்கள், தலைவர்கள் தேர்தல் இல்லாத பல கூட்டுறவு சங்கங்கள் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மிகவும் சீர்கேடாகவும், ஊழல் நலிந்த ஒரு ஸ்தாபனமாகிக்கொண்டு இருக்கிறது என்பது அரசுக்கு தெரியாமல் இருப்பதற்கு நியாயம் இல்லை.

அந்த வகையில் இந்த கூட்டுறவு சங்கங்களுடைய தனி அலுவலர்கள் நியமனம் இல்லாததால் இந்த அரசுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் எவ்வளவு நஷ்டம் ஏற்படுகிறது, மக்களுக்கு எவ்வளவு தொல்லைகள் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நாங்கள் எல்லாம் சுட்டிக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறோம். குறிப்பாக என்னுடைய தொகுதியான வேதாரண்யத்தை எடுத்துக் கொண்டால் அங்கே இருக்கின்ற சில கூட்டுறவு சங்கங்கள் சரியான முறையில் இயங்கவில்லை. அதே மாதிரி நான் தலைவராக இருந்த புகையிலை மார்க்கெட்டிங் கமிட்டி என்று ஆரம்பித்து அதிலே கிட்டத்தட்ட 40, 45 ஆயிரம் ரூபாயை 2 ஆண்டு காலத்தில் மிச்சமாக வைத்து இருந்தேன். அவசர காலத்தில் போர்டை கலைத்து விட்டார்கள். ஆனால் அந்தப் புகையிலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை தாலுக்காக் கூட்டுறவு விற்பனைச் சங்கமாக மாற்றி இன்றைக்குப் பெருத்த நஷ்டத்தில்

(திரு. மா. மீனாட்சிசுந்தரம்) [1985 மார்ச் 19

இருக்கிறது. கூட்டுறவு தனி அலுவலரை நியமித்ததால், அங்கே பல ஊழல்கள் நடைபெற்று, அதிலே தனி அலுவலர் அக்கறை இல்லாமல் இருக்கின்றார். வருகின்ற அதிகாரிகளெல்லாம் அவர்களுக்குப் படியெழுதிக்கொண்டு பிரயாணம் செய்வதிலேதான் கவனமாக இருக்கிறார்களே தவிர, அந்தப் பகுதியிலே உள்ள கூட்டுறவுச் சங்கத்தை நல்லமுறையில் இயக்குவதற்கு முன் யோசனையோடு செயல்படாமல், அக்கறையின்மையோடு இருப்பது தெளிவாகத் தெரிகிறது. அரசு இரண்டு இலட்சம் ரூபாயைக் கடனாக அனுமதித்திருந்தும்கூட, அந்தப் பணத்தை எடுத்து வியாபாரத்தை அபிவிருத்தி செய்வதற்குச் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள். அதில் பணியாற்றுகின்ற தனி அலுவலர் அவ்வளவு பொறுப்பானவராக இல்லை. உள்ளூரைச் சார்ந்தவர் என்பதால், அவர் சரியான முறையில் அந்த இரண்டு இலட்சம் ரூபாய்களைச் செலவழித்து கூட்டுறவு விற்பனைச் சங்கத்தை நல்லமுறையில் அபிவிருத்தி செய்து பெரிய அளவில் நடத்தினால் அதில் உயர்ந்த கிரேடில் உள்ளவர்களை, சி. எஸ். ஆர். கிரேடு அளவில் உள்ள அதிகாரிகளைப் போட்டுவிடுவார்கள் என்ற காரணத்தினால் அந்தப் பணத்தைப் பயன்படுத்தாமல் இருப்பதாகத் தெரிகிறது. அதிலே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கும்கூட வித்தியாசமான சம்பளம் கொடுக்கப்படுகிறது. அதைத் தன்னுடைய சொந்த வியாபாரம் போல நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த வகையிலே இப்பொழுது அது நஷ்டத்திற்குள்ளாகி இருக்கிறது. பங்குத் தொகை செலுத்திய மக்களெல்லாம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அந்தப் பங்கைக் கேட்டு விண்ணப்பம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், கூட்டுறவுச் சங்கங்களில் பணியாற்றும் பல ஊழியர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக ஆக்குகின்ற நிலைமையையும் இந்த அரசு எடுப்பதாகத் தெரியவில்லை.

அதேமாதிரி, கூட்டுறவுச் சங்கத்தில் செயல்படுகின்றபொழுது ஒரு இயக்குநர் பதவி இழந்துவிட்டால் அந்த இடம் அப்படியே காலியாக இருக்கிறது. இடையிலே உள்ள தனி அலுவலர்



1935 மார்ச் 19] (திரு. மா. மீனாட்சிசுந்தரம்)

நியமனம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு அதைச் செயல்படுத்தாமல் ஜனநாயகத்திற்கு விரோதமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

வேதாரண்யம் கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஒன்று உள்ளது. அதில் தலைவராக இருப்பவர் 40,000 ரூபாய்க்கு மேலே தற்காலிகமாக அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, கையிருப்புத் தொகையைக் கட்டாமல், சொந்த முறையிலே பயன்படுத்தியிருக்கிறார்கள். 65-வது விதியின்படி விசாரணை செய்து என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பது தெரியவில்லை. அதிலே உள்ள இயக்குநர்கள் எல்லோருக்கும் நோட்டீஸ் கொடுத்து, இயக்குநர்களை அழைத்து, அந்தப் பணத்தைக் கட்டும்படி சொல்லக்கூடிய நிலைமையில், இயக்குநர்களுக்குத் தொல்லை கொடுக்கின்ற வகையில் அதிகாரிகள் நடந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்குத் தலைவராக இருப்பவர் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் என்று நினைக்கிறேன். அதையும் இந்த அரசு கவனித்து அப்படிப்பட்ட ஊழல்கள் நடக்காமல் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிக்க பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கூட்டுறவுச் சங்கக் கடன் வசூலைப் பொறுத்தவரையில், நிலவள வங்கிகளில் கடன் வாங்கியிருந்தால், 31 ஆம் தேதிக்குள் கட்டிவிட்டால் வட்டி தள்ளுபடி என்று அரசு அறிவித்திருக்கிறது. ஆனால், கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் கடன் வாங்கியிருந்தால் வட்டி தள்ளுபடி இல்லை. இப்படி வித்தியாசமான கொள்கை இருப்பதை அமைச்சரவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து, இதற்கு ஏதாவது நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் நகை ஈட்டின்பேரில் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்பொழுது நகையீட்டுக் கடன் பெறச் சென்றால், கூட்டுறவுச் சங்கங்களில் போதிய கையிருப்பு இல்லாத காரணத்தால் கடன் அதிகமாகக் கிடைக்கவில்லை. இதனால் கிராம மக்கள் மிகவும் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தலை நடத்தி, நல்லமுறையில், ஜனநாயக ரீதியில்

(திரு. மா. மீனாட்சிசுந்தரம்) [1985 மார்ச் 19

இயங்கினால் மக்களுக்கு அன்றாடம் தேவையான உரம், பூச்சிக் கொல்லி மருந்து போன்றவைகள் தாராளமாகக் கிடைக்கும். அதனால் இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் மக்களுக்கு அதிகமாகப் பயன் கிடைக்கும்.

கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில், இந்தியாவிலேயே நமது மாநிலம்தான் முன்னோடியாக நல்லமுறையில் இயங்கியது என்பது உங்களுக்குத் தெரியும். கடந்த ஒன்பது பத்து ஆண்டுகளுக்கு முன்னால், கும்பகோணம் மத்திய கூட்டுறவுச் சங்கத்தில் எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர் தலைவராக இருந்தபொழுது, இந்தியாவிலேயே நல்ல முறையில் கடன்களை அதிகமாகக் கொடுத்து வசூல் செய்ததற்காக முதல் பரிசை வாங்கியது கும்பகோணம் கூட்டுறவு வங்கி, அதிலே

(முற்பகல் 10-10)

எங்களுடைய தலைவராக இருந்த திரு. கோ. சு. மணி அவர்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். அதேமாதிரி இரண்டாவது இடத்தைப் பெற்று பரிசு வாங்கியது தஞ்சாவூர் கூட்டுறவு வங்கியாகும். அப்படி நல்ல முறையில் இயங்கிக் கொண்டிருந்த கூட்டுறவு இயக்கம் இன்றையதினம் மிகச் சீர்கேடு அடைந்திருக்கின்றது. எனவே அந்த இயக்கம் நல்ல முறையில் நடக்க இந்த அரசு உறுதுணையாக இல்லை என்பதைத் தெரிவித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டத்தை வாபஸ் வாங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் இந்தச் சட்டத்தால் மக்களுக்குப் பல சிரமங்கள் உருவாகும். இதற்கு தேர்தலை நடத்துவதால் அரசுக்கு எந்தவிதமான சிரமமும் ஏற்படப் போவதில்லை. மேலும் பணச் செலவு எதுவும் இல்லாமல் தேர்தலை நடத்த முடியும். உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தலை நடத்த வேண்டும் என்றால், அடையாள அட்டை வழங்க வேண்டும்; மற்றும் பிற காரியங்களைச் செய்யவேண்டும்; இப்படி பல்விதமான செல்வுகள் அரசுக்கு ஏற்படுகின்றன, என்றெல்லாம் காரணங்களைச் சொல்லலாம்.



1985 மார்ச 19] (திரு. மா. சுந்தரதாஸ்)

ஆனால் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் எந்தவிதமான சிரமமும் இல்லை. கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தவரையில் தேர்தல் நடத்தப்படாததன் காரணத்தால் மக்கள்தான் சிரமப்படுகிறார்கள். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே எல்லா வகையான கடன்களும் கூட்டுறவு சொசைட்டி மூலமாகத்தான் கொடுக்கிறார்கள். ப்ரைமரி சொசைட்டிகளைப் பொறுத்தவரையில் 7 வருஷம், 8 வருஷம், 10 வருஷங்களுக்கு முன்னாலே தேர்தல் நடத்தப்பட்டது. அப்போது 200, 300 உறுப்பினர்கள் இருந்தபோது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் தான் இன்றைக்கு 2,000 உறுப்பினர்கள் இருந்தாலும் அதனை நிர்வகிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். எனவே அவர்கள் சர்வாதிகாரமான முறையில் சென்று கொண்டிருக்கிறார்கள். அத்தியாவசியமான பண்டங்கள் சரியாகக் கொடுக்கப்படுவதில்லை. காலையில் அரிசி கொடுத்தால் மாலையில் பாமாயில் தருவேன் என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது. எனவே மக்களின் சிரமங்களைப் போக்குகின்ற வகையில் கூட்டுறவு அமைப்புக்கள் ஒழுங்காகச் செயல்பட தேர்தலை உடனடியாக நடத்தியாக வேண்டும். மேலும் தேர்தலை நடத்துவதன் காரணத்தால், அரசாங்கத்திற்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லாத காரணத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கோவாப்பரேட்டிவ் சென்ட்ரல் பாங்கைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் உண்மையிலேயே ஏழை எளிய மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் சரியான முறையிலே லோன்களைக் கொடுக்க இல்லை. என்னுடைய தொகுதியிலே இடைக்கூர் ஆயில் சொசைட்டியில் 85 ஆயிரம் ரூபாய் ஓவர் ட்யூ இருந்து, அதைக் கட்டியதற்குப் பிறகும் பணம் கேட்டால் நாளைக்கு வா, பிறகு வா பணம் தருகிறேன் என்று சொல்கிறார்கள். எனவே கடன் கொடுப்பது எல்லாம் ஸ்பெஷல் ஆபீசர்களின் தயவிலே நடக்கின்ற ஒரு நிலைமையில் இருக்கின்றது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால் நிச்சயமாக அவ்வாறு ஓவர் ட்யூ செட்டில் பண்ணியதற்குப் பிறகு பணம் கொடுத்திருப்பார்கள். எனவே உரிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

அடுத்து, எல். டீ. பேங்குகளைப் பொறுத்தவரையில் அவையெல்லாம் கோவாப்பரேட்டிவ் மூவ்மென்டின் அடிப்படைத் தன்மையை இழந்து நிற்கின்றன. அதற்குக் காரணம் தலைவர் இல்லாததுதான். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக் மைனர் இரிகேஷன் என்ற வகையில் லோன் கொடுக்கிறார்கள். நெல்லை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் கடலிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரம் சென்றால்தான் ஸ்வீட் வாட்டர் என்று சொல்லப்படுகின்ற நல்ல தண்ணீர் கிடைக்கும். ஆகவே அங்கெல்லாம் 10 கிலோ மீட்டருக்குட்பட்டு அந்தப் பகுதி விவசாயத்திற்கு பயன்படாது என்ற வகையில் லோன் கொடுக்கப்படுவதில்லை. ஆனால் குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்றவுடன் நல்ல ஸ்வீட் வாட்டர் கிடைக்கும். எனவே இந்த மைனர் இரிகேஷன் திட்டத்தின் மூலம் அந்தப் பகுதிகளுக்கு லோன் கொடுத்தால். நிச்சயமாக விவசாயத் துறையில் அது சிறந்து விளங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அரசுக்கு எந்தவிதமான செலவையும் ஏற்படுத்தாத கூட்டுறவு சொசைட்டிகளுக்கான தேர்தல்களைத் தள்ளி வைத்துக்கொண்டிருப்பது நிச்சயமாக மக்களுக்கு ஏமாற்றத்தை அளிக்கின்றது. ஆனால் இன்னும் ஓராண்டுகளுக்குள்ளாகத் தேர்தலை நடத்திவிடுவோம் என்று நீங்கள் சொல்லியிருந்தாலும் கூட, இப்போது உடனடியாக இந்தச் சட்டத்தினை நீங்கள் நிறைவேற்றினாலும் ஒரு வருஷத்திற்குள்ளாக நிச்சயமாகத் தேர்தலை நடத்தி மக்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்று என் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவினை வரவேற்று என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை இங்கே எடுத்து வைக்க நான் முன் வருகின்றேன். இந்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரை விவாதமே தேவையில்லையென்ற நிலை இருந்



தாலும் மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினரும், மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினரும் இதை ஒரு விவாதத்திற்குரிய பொருளாக, அல்லது விவகாரத்திற்குரிய பொருளாக மாற்றிவிட்ட காரணத்தினாலே நானும் ஒருசில கருத்துக்களை இங்கே சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவினுடைய காரண நோக்க விளக்கத்தைப் பார்த்தாலே முந்தைய சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம் நிறைவேற்றப்பட முடியாத சூழ்நிலையில் சட்டமன்றம் கலைக்கப்பட்டதாலே இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது தெரியும்.

இன்னொன்று, ஆளுநர் உரையிலும் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1983-வது ஆண்டு புதிய கூட்டுறவுச் சட்டம் உருவாக்கப்பட்டு அதற்கு விதிமுறைகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன. அப்படி விதிமுறைகள் தயாரிக்கப்பட்ட பிறகு கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு இயக்கத்திற்குத் தேர்தல் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறது என்றுதான் புரட்சித் தலைவர் அரசாங்கம் ஏற்கனவே சொல்லியிருக்கிறது, இப்பொழுதும் சொல்லிக் கொண்டிருக்கிறது. எனவே, தேர்தலை நடத்துவதிலேயும் அல்லது கூட்டுறவு இயக்கங்களுக்கு ஜனநாயக அமைப்புகளைக் கொண்டு வருவதிலேயும் இந்த அரசாங்கத்திற்கு எந்தவித சங்கடமும் இல்லை. இந்த விதிமுறைகள் வகுக்கப்பட்டதால்தான் தேர்தல் நடத்த முடியும் என்று இருக்கிற நிலையில் விதிமுறைகள் அறிவிக்கப்படுகிற வரையில் இந்தச் சட்ட முன்வடிவு முக்கியமாகத் தேவைப்படுகிறது. எங்களைப் பொறுத்தவரையில், புரட்சித் தலைவர் அரசைப் பொறுத்தவரையில், வீடு கட்டிய பிறகு குடி போகலாம் என்று சொல்கிறோம். ஆனால், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் வீடு கட்டி முடிக்கப்படாவிட்டாலும், பரவாயில்லை, குடி போகலாம் என்று சொல்கிறார்கள். அப்படிப் போனாலும் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். பிறகு வீடு ஒழுகுகிறது என்று சொல்வார்கள். எனவே செய்தாலும் குற்றம்; செய்யாவிட்டா

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 19

னும் குற்றம் என்று குற்றம் கண்டு பிடிக்கிற அந்தக் குற்ற நோக்
கோடு அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவைத் தயவுசெய்து பார்க்
கக் கூடாது. அப்படியே தேர்தல் நடத்தினாலும் நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கானுடைய பாஷையிலே
சொல்லப் போனால், அவசரக் கோலத்திலே அள்ளித் தெளித்து
விட்டார்கள்; இப்பொழுது என்ன அவசரம்? நிதானமாக
அதைச் செய்யக் கூடாதா என்று ஆலோசனை கூட வழங்கு
வார்கள். எனவே, விதிமுறைகள் தயாரிக்கப்பட்டு, அறிவிக்கப்
பட்டபிறகு இந்தத் தேர்தலை நடத்துவதன் மூலம் ஜனநாயக
அமைப்பு முறைக்கு இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல இடம்
கொடுக்கும் என்று அரசாங்கம் நம்புகிறது என்பதை இந்த
நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள்
இங்கே ஒரு நிராகரிப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்
கிறார் என்றால் அர்த்தம் இருக்கிறது. காரணம் அவர் எப்
போதுமே குற்றத்தைக் கண்டு பிடிக்கக்கூடியவர். ஆனால்,
நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள்,
மாண்புமிகு தங்கமணி, பழனிமுத்து போன்றவர்கள் ஏன் இந்த
நிராகரிப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று
எனக்குப் புரியவில்லை. அவர்கள் கவனத்திற்கு ஒன்றை நான்
கொண்டு வர விரும்புகிறேன். 1976 ஆம் ஆண்டு நெருக்கடி
காலத்தில்தான் தனி அதிகாரிகளை நியமிக்கிற சட்டம் வந்தது
என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். எனவே, கூட்டுறவு
சட்டம், 1961 ஆம் ஆண்டு சட்டம், 1963 ஆம் ஆண்டு
நடைமுறைக்கு வந்தது. பிறகு 20, 25 ஆண்டுக்காலத்தில் அந்தச்
சட்டத்தைப் பயன்படுத்தி, அதிலிருக்கிற சந்து, பொந்து
களை எல்லாம் பயன்படுத்தி, கூட்டுறவு இயக்கத்தினுடைய
நோக்கத்தையே நசுக்கக்கூடிய சூழ்நிலையில், சில தனிமனிதர்கள்
ஆதிக்கம் செலுத்தி வந்தபோது அந்தச் சட்டத்திலே சில திருத்
தங்கள் செய்யவேண்டுமென்று இந்த அரசாங்கம் விரும்பியது.
எனவே, அந்த அடிப்படையில்தான் கூட்டுறவு இயக்கம் சரியான
முறையில், செம்மையான முறையில் இருக்க வேண்டுமென்று
விரும்புகிறோம். காரணம், இந்த நாட்டிற்கு, வளர்ந்து வருகிற



1985 மார்ச் 19] (திரு. செ. செமமலை)

நம்முடைய நாட்டிற்கு, ஜனநாயகத்தில் பெரிய நாட்டிற்கு,
இந்தக் கூட்டுறவு அமைப்புகளைவிட்டால் வேறு வழியில்லை
யென்ற நிலைமையில், இதைச் சீர்படுத்தி, செம்மைப் படுத்தி,
பிறகு அப்படிப்பட்ட ஜனநாயகவாதிகளுடைய கையிலே ஒப்
படைக்க வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்தோடுதான்
புரட்சித் தலைவர் 1983 ஆம் ஆண்டு புதிய சட்டம் கொண்டு
வந்து, அதற்கேற்ப இன்றைக்கு இந்தச் சட்ட முன்வடிவை
அறிமுகப்படுத்தி ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்
பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் இந்தச் சந்தர்ப்
பத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று. ஏதோ ஜனநாயகம் செத்துவிட்டது, அல்லது
ஜனநாயகத்தை மதிக்கவில்லை யென்ற நிலைமையிலே உறுப்
பினர்கள் பேசினார்கள். ஜனநாயகத்திற்கு மதிப்பளிக்க
வேண்டும்; ஜனநாயகத்திலே மற்றவர்களுடைய கருத்துக்களுக்கு
மதிப்பளிக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையில் 1983 ஆம்
ஆண்டு கூட்டுறவுப் புதிய சட்டம் உருவாகிறபொழுது நம்முடைய
புரட்சித் தலைவர் அவர்கள் அந்தச் சட்டத்தை செலக்ட்
கமிட்டிக்கு அனுப்பி, எல்லா மக்களுடைய கருத்துக்களையும்
தெரிந்து, அவர்களுடைய கருத்துக்கும் மதிப்பளித்து இந்தப்
புதிய சட்டத்தை உருவாக்கி இருக்கிறார்கள் என்பதை நான்
இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்துகிற நேரத்
தில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருடைய மேலான
கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது அமால்கமேஷன்
என்ற அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவற்றை வைய
பிலிட்டி இல்லை என்ற அந்த அடிப்படையிலும் சில தலைவர்கள்
செய்த தவறுகளினால் லிக்குவிடேஷன் ஆன அந்த சொசைட்டி
களையும் மற்ற பகுதியிலே இருக்கிற சங்கங்களோடு இணைக்
கின்ற அப்படிப்பட்ட புதிய முறையை இப்பொழுது கொண்டு
வருகிறார்கள். அமால்கமேஷன் என்ற அந்த முறை நிர்வாக

(முற்பகல் 10-20)

வசதிக்கு வேண்டுமானால் சரியாக இருக்குமே தவிர விவசாயி
களை அந்த முறை வெகுவாக பாதிக்கும். காரணம் ஏரியா ஆப்
ஆபரேஷன் என்று சொல்லுகிறபோது 5 கிலோ மீட்டர், 6 கிலோ

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 19

மீட்டர் என்ற பரப்பளவிற்கு ஒரு சொசைட்டியாக அமைப்பது விவசாயிகளுக்கு மிகுந்த சங்கடத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதெல்லாம் சட்டத்திற்கு விதிமுறைகள் வகுக்கப்பட்ட பிறகு தேர்தல் உடனே நடந்தால் குறிப்பிட்ட சில சங்கங்களுக்குத் தான் தேர்தல் நடக்கும். ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் என்ற அடிப்படையில் இருந்த சங்கங்களுக்கு இன்றைக்கு லிக்குடேஷன் ஆகி அல்லது வயபிலிட்டி இல்லையென்ற முறையில் மற்ற சங்கங்களோடு சேர்க்கப்பட்ட நிலையில் அதற்கெல்லாம் தேர்தல் நடக்க முடியாது.

நான் இந்த நேரத்தில் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம், ஏற்கனவே லிக்குடேஷன் ஆகியிருந்தாலும் சரி அல்லது வயபிலிட்டி இல்லையென்று பக்கத்து சொசைட்டியோடு அமால்கமேட் பண்ணியிருந்தாலும் சரி அந்தச் சங்கங்களை புதுப்பித்து தேர்தல் நடத்த வேண்டும். அப்படிப்பட்ட ஏற்பாட்டை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் விவசாயிகளுக்கு நாம் எதிர்பார்க்கிற பலனை உதவியை செய்ய முடியும். இல்லையென்றால் இப்போது இருக்கிற அமைப்பின்படி நடத்துவோமானால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் புதிய சொசைட்டி உருவாவதை விரும்ப மாட்டார்கள். ஏரியா ஆப் ஆபரேஷனை நீக்க விட மாட்டார்கள். இப்படிப்பட்ட தன்மையிலே செய்தால் பின்னால் சங்கடம் நிச்சயமாக வரும். எனவே நான் வற்புறுத்துவதெல்லாம் குறைந்தபட்சம் ஒரு ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு சங்கம் என்ற முறையில் இருக்க வேண்டும். ஏற்கனவே லிக்குடேஷன் ஆன சொசைட்டியாக இருந்தாலும் மீண்டும் புதுப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரையில் கூட ஒரு வாசகத்தை அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். கடன் வசூல் அளவு வரவர குறைந்து கொண்டே போகிறது என்று சொன்னார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், நசிந்து போவதற்கு அல்லது நடைபெற இல்லாமல் போவதற்கு காரணம் கடன்கள் வசூலாகாத சூழ்நிலை தான்



1985 மார்ச் 19] (திரு. செ. செம்மலை)

முக்கியமாக இருக்கிறது. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசுகிற போது கூட ஒன்றை எல்லோரும் சொன்னார்கள். இந்த அரசாங்கம் ஜப்தி நடவடிக்கை எடுக்கிறது; இந்த அரசாங்கத்திற்கு ஏழை விவசாயிகள் மீது அக்கறை இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். எதிர்க்கட்சியினர் ஜப்தி நடைபெறுவதை குறிப்பிடுகிறார்களே தவிர, எனக்குத் தெரிந்தவரையில் கடன் வாங்கியவர்களை கட்டுங்கள் என்று சொன்னதாகத் தெரியவில்லை. கடன் வசூல் அளவு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. நான்-வயபிலிட்டி என்று சொல்லி இந்தச் சங்கங்கள் நசிந்து போய் விடுகின்றன. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கூட சென்ற கூட்டத் தொடரில் மானியக் கோரிக்கையில் ஒரு கருத்தைப் பேசினார்கள். இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்கு பயிர்க்கடன் கொடுக்கிறோம். பயிர்க் கடன் கொடுக்கிறபோது கடனை கொடுத்தவுடன் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் பணி முடிந்து விட்டதாகத் தான் நாம் கருதுகிறோம். அந்தக் கடனைப் பெற்ற விவசாயி பயிரை நட்டானா? அந்தப் பயிர் பாதுகாக்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் நாம் பார்ப்பதில்லை. அதைக் கண்காணிக்கிற ஒரு அமைப்பு நம்முடைய கூட்டுறவுச் சங்க அமைப்பிலே இல்லை. வேளாண்மைத் துறை தனித் துறை என்றாலும், இரண்டு துறைகளுக்கும், அந்தத் துறைகளின் அதிகாரிகளுக்கும் ஒரு கோ-ஆர்டினேஷன் இல்லாமல் இருக்கிறது. ஆகவே கூட்டுறவுத் துறையிலே வேளாண்மைத் துறை அதிகாரிகளைச் சம்பந்தப்படுத்த வேண்டும். விதிகள், சட்டங்கள் ஆகியவற்றை மாற்றியாவது அல்லது டெபுடேஷனில் அந்த அதிகாரிகளை இங்கு கொண்டு வந்தாவது இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். விவசாயிகள் பயிர் செய்து பலனைப் பெறுகிற வரையில் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வேளாண்மைத் துறை அதிகாரிகள் மூலம் செய்து கொடுக்க வேண்டும். அப்போது தான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் பெறுகிற விவசாயிகள் கடனை நல்லமுறையில் பயன்படுத்தி, பலனைப் பெற்று, கடனை விரைவாக திருப்பிச் செலுத்துகிற சூழ்நிலை ஏற்படும்.

(திரு. செ. செம்மலை) [1985 மார்ச் 19

இப்போது இருக்கிற கூட்டுறவு அமைப்பு 3—டயர் சிஸ்டம் என்று அதிகாரிகள் சொன்னாலும் அப்படிப்பட்ட சிஸ்டம் அதில் இல்லை. மாவட்ட அளவில் சென்ட்ரல் பேங்க் என்று இருக்கிறது. இந்த சென்ட்ரல் பேங்க் பொறுத்தவரையில் அது பேங்கிங் சிஸ்டத்தின்படி தான் நடைபெறுகிறது. இப்போது பால்வளத் துறையை எடுத்துக்கொண்டால் மாவட்ட அளவில் மில்க் புரடியூசர்ஸ் யூனியன் என்று இருக்கிறது. அதைப் போன்று மாவட்ட அளவில் யூனியன் போன்ற ஒரு அமைப்பு முறை இருந்தால் அந்த பிரைமரி சொசைட்டிகளுக்கு இன்னும் பயனுள்ளதாக இருக்கும். இதற்கு சென்ட்ரல் பாங்க் பணிகளை மாற்றினாலும் சரி, அல்லது அந்த சென்ட்ரல் பாங்க் பணிகளை அதிகப்படுத்தினாலும் சரி, பிரைமரி சொசைட்டிகள், கிரடிட் சொசைட்டிகள் போன்றவற்றை நேரடியாக கண்காணிக்கிற அளவிலே செய்தாலும் சரி, மாவட்ட அளவிலே ஒரு மாற்று முறையை நிச்சயமாக கண்டாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது இருக்கிற மார்க்கெட்டிங் சொசைட்டிகள் தனித் துறையைச் சேர்ந்திருந்தாலும் அவை இலாபகரமாக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால் கிரடிட் சங்கங்கள் என்பவை நஷ்டத்திலே நடந்துகொண்டிருக்கின்றன. எனவே மாவட்ட அளவிலே பிரைமரி சொசைட்டிகள், கிரடிட் சொசைட்டிகள் போன்றவற்றை பாதுகாக்கிற ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது விவசாயிகளுக்குத் தேவையான 'அக்ரிகல்சுரல் இன்புட்ஸ்' எல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது. அப்படி அவர்கள் இடுபொருள்களை வழங்கும்போது அவற்றை நல்ல முறையில் கொடுப்பதில்லை என்ற புகார் வருகிறது. இப்போது யூனியன் அளவிலே வேளாண்மைத் துறையைச் சேர்ந்தவர்கள் விவசாயிகளுக்கு விதைகள், உரம், மற்ற இடுபொருள்களை எல்லாம் கொடுத்தாலும் அவை எல்லாம் இந்த கிரடிட் சொசைட்டி மூலம் வழங்கப்பட்டால் பயனுடையதாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. வழங்கும்போது புகார் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இப்படி விவசாயிகளுக்குத் தேவையான எல்லா இடுபொருள்களையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம், தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின் மூலம் கொடுப்பது ஒரு நல்ல பலனைத் தரும் என்ற என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1985 மார்ச் 19] (திரு. செ. செம்மலை)

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்திலே இருக்கிற சங்கடங்கள் எல்லாம் நன்றாகத் தெரியும். ஏனென்றால் அவர்கள் கிராமப் பகுதியிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் நடைமுறைச் சிக்கல்களை நன்றாக அறிந்திருக்கிறார்கள். எனவே நல்ல மாற்றங்களைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன். அந்த மாற்றங்களைக் கொண்டுவர சிறிது கால அவகாசம் தேவை. எனவே இந்தச் சட்ட முன்வடிவை நான் வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற நேரத்தில் புதிய விதிமுறைகளை உருவாக்கும்போது நான் சொன்ன கருத்துக்களை ஏற்றுக்கொண்டு ஆக்கப் பூர்வமான நல்ல விதிகளை வகுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, குறைசொல்ல வேண்டும் என்பதற்காக இந்த பில்லை நாங்கள் எதிர்க்கவில்லை. இருக்கின்ற நிலைமைகள் காரணமாகத்தான் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்குள்ள ஆலோசனைகளை நாங்கள் எதிர்க்கிறோம்.

இன்றைக்கு அருமை நண்பர் செம்மலை அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 1983 ஆம் வருஷம் நவம்பர் மாதம்—என்னுடைய ஞாபகம் சரியாக இருந்தால்—இந்தச் சட்டம் கெஜட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் சில மாதங்களுக்கு முன்னால், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் இந்தச் சட்டம் இங்கே விவாதத்திற்கு வந்தது. அன்றையதினம் துணைத் தலைவராக இருந்தவர்கூட அந்த விவாதத்திலே கலந்து கொண்டிருக்கிறார்கள் என்பது என்னுடைய ஞாபகம். அன்றைக்கு அந்த விவாதத்தை முடிக்கும்போது, அந்த விவாதத்தில் கலந்துகொண்ட ஒருவன் என்ற முறையில், இந்தச் சட்டத்திலே உள்ள ஒருசில குறைபாடுகளைச் சொன்னபோது அன்றைக்கு இந்தத் துறையின் பொறுப்பிலே இருந்த அமைச்சர் திரு. பொன்னையன் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத்தார்கள் இந்த அவையிலே. அது இந்த அவை ரிக்கார்டில் இருக்கிறது.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 19

செலக்ட் கமிட்டியை கலந்து, ஒரு மாத காலத்திற்குள் இதற்கான விதிகளைத் தயாரித்து, அமுல்படுத்தி, தேர்தலை நடத்த ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார்கள். 1983-லே நிறைவேற்றப்பட்ட அந்தச் சட்டத்திற்கு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதி அடிப்படையில் ஒரு மாத காலத்திற்குள் விதிகளை தயாரித்துக்கொள்ள முடியவில்லை என்றால் ஓரளவு புரிந்துகொள்ளலாம். ஆனால் ஒரு வருஷத்திற்கு மேலான பிறகும் விதிகளை உருவாக்க முடியவில்லை என்பது மட்டுமல்ல; இன்றைய அமைச்சர் அவர்கள் மேலும் ஒரு வருஷத்திற்கு அவகாசம் தேவை என்று கேட்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

கூட்டுறவுத் துறை என்பது இன்றைக்கு மக்களுடைய வாழ்க்கையோடு ஒட்டி, இணைந்திருக்கக்கூடிய ஒரு இயக்கம் என்ற முறையில் பெருமையோடு சொல்கிறேன். சோஷலிச நாடுகளில் இந்தக் கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் நடந்து கொண்டிருக்கிறது. அதேமாதிரி, இங்கேயும் நல்லமுறையில் நடைபெற சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்த அரசு 1978-லே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது, அதனுடைய வரலாறு எல்லாம் நமக்குத் தெரியும். 1983-ல் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

நான் பொதுவாகச் சொல்லக்கூடியது என்னவென்றால், சட்டத்தை உருவாக்கும்போது விரைவிலே அந்தச் சட்டத்தை அமுல்படுத்த விதிகளையும் உருவாக்குவதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். பல சட்டங்கள், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை எளிய மக்களைப் பொறுத்தவரையில், நன்மை கிடைக்க கொண்டுவரக் கூடிய சட்டங்கள் விதிமுறைகள் இயற்றப்படுவதில் ஒரு வருஷம், இரண்டு வருஷம் கால தாமதம் ஏற்படுவதால், மக்களுக்கு நன்மை கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதை தவிர்க்கக்கூடிய முறையிலே அன்றையதினம் அதற்கான விதிகள் உடனடியாக உருவாக்கப் படும் என்று இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். இந்த நேரத்திலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், பஞ்சாயத்து தேர்தல் அல்லது



1985 மார்ச் 19] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

நகராட்சி தேர்தலை நடத்துவதற்கு சொல்லக்கூடிய முறையிலே, கோர்ட் தடையோ அல்லது போட்டோ பிரச்சனையோ இதிலே ஒன்றும் இல்லை. இதிலே விதிகளை உருவாக்கக்கூடிய பிரச்சனைகள்தான் உண்டு. அதுவும் செலக்ட் கமிட்டியிலே ஏறத்தாழ 2 வருட காலம் விவாதித்து, முடிக்கப்பட்ட சட்டம். அதனுடைய விதிகள் பற்றி அன்றைக்குப் பேசப்பட்டிருக்கிறது. ஆகவே இன்று, இப்படிப்பட்ட ஒரு தேர்தல் நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் உள்ள கூட்டுறவு இயக்கம் இல்லாததன் காரணமாக மக்களுக்கு என்னென்ன சிரமங்கள் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நான் ஒரு சில உதாரணங்களைச் சொல்லி விளக்க விரும்புகிறேன். இந்தக் கூட்டுறவுத் துறைக்கு நல்ல அனுபவமும் திறமையும் உள்ள அமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். அந்த முறையிலே இந்தப் பிரச்சனையை அவர்களாலே புரிந்துகொள்ள முடியும்.

(முற்பகல் 10-30)

நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே அநேகமாக பதிவு செய்யக்கூடிய பிரமாணங்கள் ஸ்டாம்ப்டியூட்டி கம்மியாக இருப்பதன் காரணமாக, எல்லையில் உள்ள கேரள மாநிலத்தில் உள்ள சப்-ரிஜிஸ்ட்ரார் ஆபீசிற்குச் சென்று பதிவு செய்கிறார்கள். ஆனால் இன்று கூட்டுறவுத் துறையினுடைய அதிகாரிகள் எப்படி எல்லாம் அவர்களுடைய விருப்பப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டு சொல்ல விரும்புகிறேன். கேரள மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட பிரமாணங்களுக்கு கடன் கொடுப்பதற்கு நாகர்கோவிலில் உள்ள நிலவள வங்கியும், தக்கலையில் உள்ள வங்கியும் மறுக்கிறது. அதனுடைய சட்ட ஆலோசகர் அந்தப் பிரமாணங்களுக்கு கடன் கொடுக்கலாம் என்று சிபாரிசு செய்தும் கூட கேரள மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட பிரமாணங்களுக்கு லோன் கொடுக்க முடியாது என்று பிடிவாதமான நிலையை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் பல ஏழை மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்தப் பிரமாணங்கள் பதிவு செய்யப்பட்ட லீகல் டாக்குமெண்ட்டுகள். இதைப் பற்றி சென்ற சட்டமன்றக் கூட்டத்திலேகூட நான் இந்தப் பிரச்சனையைப் பற்றிச் சொன்னேன். மாண்புமிகு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 19

அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்படி அந்த மாநிலத்திற்குப் போய் பதிவு செய்யப்பட்டதன் காரணமாக பல பிரச்சனைகள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால் சட்டபூர்வமாக அங்கே பதிவு செய்ய தடையில்லை. அப்படியிருக்கும்போது சில அதிகாரிகள் இதற்கு தடைவிதித்து, அவர்களுடைய விருப்பு வெறுப்புக்குத் தகுந்தமாதிரி இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்குகிறார்கள். எப்படி கூட்டுறவு இயக்கத்திலே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு இல்லாததன் காரணமாக மக்களுக்குப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

அடுத்து, ரப்பர் சாகுபடி செய்வதற்கு ரப்பர் போர்டிலே 3,100 ரூபாய் கடன் கொடுக்கப்பட்டு வந்தது. சமீபத்திலே ரப்பர் போர்டு அதை 8,500 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. ஆனால் இப்போது கூட்டுறவு நிலவள வங்கி அதிகாரிகள், மற்றும் கூட்டுறவுச் சங்கத்தினுடைய பொறுப்பிலே இருக்கிற அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால், ரப்பர் போர்டு ஏற்கனவே இருந்த தொகையை உயர்த்தி, ஏற்கனவே கொடுத்த 3,100 போக மீதியைக் கொடுக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள், ஆனால் கூட்டுறவு வங்கியினுடைய அதிகாரிகள் அதைக் கொடுக்கக் கூடாது என்ற நிலையை எற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு ரெக்கமன்ட் செய்வதற்கு தடையாக இருக்கிறார்கள்.

இன்னொன்று, இந்த ரப்பர் போர்டு கடன் கொடுக்கும் திட்டத்திலே அவர்கள் இன்றைக்கு காம்பவுண்டிங் இன்ட்டரஸ்ட் வசூலிக்கக்கூடிய நிலை ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. மற்ற கூட்டுறவு வங்கிகளில் அப்படிப்பட்ட நிலையில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. ரப்பர் தயாரிக்கக்கூடிய விவசாயிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் அதிகமாக இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாவட்டத்தில் அதிகாரிகள் இன்றைக்கு காம்பவுண்டிங் இன்ட்டரஸ்ட் வசூலிக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுத்திருப்பது எப்படி மக்களுடைய நன்மைக்கு எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு.



1985 மார்ச் 19] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

அடுத்து வர்த்தக வங்கிகளில் உள்ள 10 ஆயிரம் ரூபாய் வரை கடன்களுக்கு வில்லங்க கட்டணம் இல்லை. ஆனால் இங்கே என்ன நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்றால், பதிவுக் கட்டணம் 50 சதவீதம் சலுகை நிலவள வங்கிகளில் இல்லை என்று சொல்கிறார்கள். லேண்ட் மார்ட்கேஜ் பேங்க்குகளுக்கு

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

மட்டும் ஏன் இப்படிப்பட்ட ஒரு சட்டம். அங்கே உள்ள அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் முடிவு பண்ணுவது இல்லை, சென்னையிலே இருக்கக்கூடிய அதிகாரிகள் முடிவு செய்கிறார்கள், அதற்கு நாங்கள் என்ன செய்வது என்று சொல்கிறார்கள்.

இன்னொரு விஷயத்தையும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நிலவள வங்கிகளுக்கு பத்திரம் பதிய பதிவு கட்டணத்திலேயிருந்து சலுகை இன்றைக்குக் கொடுப்பதற்கு முடியாது என்று சொல்லுகிறார்கள். ஆனால் மற்ற வங்கிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகிறது. இப்படி ஒரு நிலை இருந்தால் 1 ஏக்கர் 1½ ஏக்கர் நிலம் வைத்திருக்கக் கூடிய ஒரு சாதாரண விவசாயி அதை அடகு வைத்து பணம் கடனாக வாங்குவதற்குச் சென்றால், சில அதிகாரிகள் எடுத்திருக்கக் கூடிய சில முடிவுகளின் காரணமாக இப்படிப்பட்ட சிரமங்கள் ஏற்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட குழு இருக்குமேயானால் நிச்சயமாக இப்படிப்பட்ட பிரச்னைகளுக்கு இடம் இருக்காது.

அது மாத்திரம் அல்ல, பெரிய ரப்பர் தோட்டங்களை வைத்திருக்கக் கூடிய முதலாளிகளுக்கு, 10 ஏக்கர்களுக்கு மேலே வைத்திருக்கக் கூடிய நபர்களுக்குத்தான் கடன் கொடுக்க முடியும் என்றுகூட சில இடங்களில் சொல்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் தனக்குச் சொந்தமான 1 ஏக்கர் 1½ ஏக்கர் நிலத்தை வைத்த உண்மையாக தேவை இருக்கிற ஒரு தொழிலாளிக்கு கடன் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தினுடைய மிக முக்கிய அஸ்திவாரமே அது ஏழைகளுக்குப் பயன்பட வேண்டும் என்பதுதான். ஆனால் இங்கே அந்த அஸ்திவாரமே ஆட்டம் கொள்கிறது

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சில இடங்களில் அதிகாரிகள் அவர்களுக்கு அதிகாரத்தை அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1985 மார்ச் 19

என்பதற்கு உதாரணமாகச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியான திருவட்டாறில் மக்களுக்கு குடிதண்ணீர் கொடுப்பதற்கு தன்னிறைவுத் திட்டத்திலே ஒரு ஸ்கீம் உருவாக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வந்து இன்ஸ்பெக்ட் பண்ணி, திருவட்டாறு கூட்டுறவுச் சங்கத்தினுடைய இடத்திலே இரண்டு சென்ட் நிலத்தை வாங்கி, அங்கே இப்படிப்பட்ட டாங்க் கட்டுவதற்கு, ஏற்பாடு செய்ய, அதற்கான தீர்மானங்கள் எல்லாம் அந்த சொசைட்டி மூலமாக நிறைவேற்றப்பட்டு, மேலே அனுப்பப்பட்டன.

ஒரு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தொகுதியாக இருப்பதன் காரணமாக, அந்த தொட்டியைக் கட்டக் கூடாது என்று அங்கேயிருக்கக் கூடிய டெபுட்டி ரெஜிஸ்ட்டிராரோ, ஜாயின்ட் ரெஜிஸ்ட்டிராரோ யாரோ அந்தத் தீர்மானத்திற்கு அனுமதி வழங்காமல் முட்டுக்கட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூட அந்த இடத்திலே தொட்டி கட்டுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று டூவார்ட் போர்ட் அதிகாரிகளிடத்திலே போய் நீங்கள் கட்டுங்கள் நான் உங்களுக்கு அனுமதி வாங்கித் தருகிறேன் என்று சொன்னதற்குப் பிறகும் கூட, அங்கேயுள்ள டெப்யூட்டி ரெஜிஸ்டிராரோ ஜாயின்ட் ரெஜிஸ்டிராரோ அனுமதி தராமல், இவர்களையெல்லாம் ஏறுவதற்கு விட்டுவிடக் கூடாது என்று சொல்லி, அந்த இடத்தை இன்ஸ்பெக்ட் பண்ண டூவார்ட் போர்டினுடைய எக்ஸிகியூட்டிவ் என்ஜினீயர் வந்தபோது தடை செய்திருக்கிறார்கள். எதற்காகச் சொல்கிறேன் என்றால் எப்படி பொலிடிக்கல் டிஸ்கிரிமினேஷனோடு அதிகாரிகள் செயல்படுகிறார்கள் என்பதை விளக்குவதற்காகத்தான் சொன்னேன்.

அவர்கள் முதலாளிகளுக்கு சாதகமாகத்தான் அங்கே நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறார்கள். நாகம்மாள் மில்லிலே தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கம் அந்த மில்லினுடைய காம்பவுண்டிலேயே நடைபெற்று வந்தது. பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது அந்த முதலாளி அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு



1985 மார்ச் 19] (திரு. ஜே. ஹேமச்சந்திரன்)

ஒரு நிபந்தனை விதிக்கிறார். அந்தச் சங்கம் இருக்கும் கட்டிடத்திற்கு 100 ரூபாய் வாடகை தந்தால்தான் தொடர்ந்து அங்கேயே நடத்த முடியும் என்று. அதற்கு சிபாரிசு செய்கிறார்கள் அங்கே இருக்கிற ஜாயின்ட் ரெஜிஸ்திரார். சிபாரிசு செய்ததோடு மாத்திரம் அல்ல கட்டாயமாக அந்த 100 ரூபாய் வாடகையை அந்தச் சங்கம் கொடுக்க வேண்டிய நிலைமைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள் அவர்கள்.

இன்னொரு விஷயத்தையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சிங்கை கோவாப்பரேட்டிவ் சொசைட்டியில்—தொழிலாளர்கள் நடத்துவது—தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு இருந்தது. அந்தப் போர்டைக் கலைத்துவிட்டு, தனி அதிகாரியைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, அந்தச் சங்கம் உயர் நீதிமன்றத்திற்குப் போய் தடை வாங்கியிருக்கிறது. இப்பொழுது நாம் உள்ளாட்சித் தேர்தல்களை நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் எல்லா இடங்களிலும் வர வேண்டும் என்று முயற்சி செய்கிறோம். ஆனால் அதிகாரிகள் அதே நேரத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுக்களைக் கூட கலைத்துவிட்டு, அவர்களுடைய சர்வாதிகாரத்தை நிலைநாட்ட முயற்சிக்கிறார்கள்.

வீடு கட்டுவதற்கு கடன் கொடுக்கிற சொசைட்டியிலே ஏழைகளுக்கு உதவும்படி கடன் கொடுப்பது கிடையாது. சிமெண்ட் கிடைக்கக்கூடிய நேரத்திலே அவர்கள் பணம் கொடுக்கமாட்டார்கள். சிமெண்ட் இல்லாத நேரத்தில் பணம் கொடுக்கிறார்கள். அதனால் வீடுகளை காலாகாலத்தில் கட்டி முடிக்க முடியாத நிலை அவர்களுக்கு ஏற்படுகிறது. இவைகள் எல்லாம் ஏனென்றால், தனி அதிகாரிகளுடைய சர்வாதிகாரம் ஏற்பட்டதன் விளைவாக ஏற்பட்ட நிலை. இதை தவிர்க்க உடனடியாக தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

திருவண்ணாமலையில் ஒரு லேபர் கான்ட்ராக்ட் சொசைட்டி இருக்கிறது. அங்கே லேபரும் இல்லை, ஒழுங்காகச் செயல்படக் கூடிய சங்கமும் இல்லை. அவர்கள் கான்ட்ராக்ட் எடுத்து,

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [1985 மார்ச் 19

சப்-கான்ட்ராக்ட்காரர்களுக்கு கொடுப்பதன் விளைவாக ரோடுகள் மற்றும் பொது வேலைகள் நல்லமுறையிலே நடைபெறுவதில்லை என்பது மட்டுமல்ல சில வேலைகள் விஜிலென்ஸ் ஆட்களால் பிடிக்கப்பட்டு இன்று அந்த ரோடு வேலைகள் முடிவு பெறாமல் இருக்கின்றன. கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் காலாகாலத்தில் பரிசீலனை செய்தால் இப்படிப் பட்ட நிலைமையைத் தவிர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி அந்த லேபர் கான்ட்ராக்ட் சொசைட்டி எங்களுக்குத்தான் இந்த வேலைகளை கொடுக்க வேண்டும் என்று கேட்டு வாங்குகிறார்கள். அவர்களுக்கு லேபரும் கிடையாது, சொசைட்டியும் கிடையாது. சப்-கான்ட்ராக்ட் வேலைகள் கடுமையாக பாதிக்கப்பட்ட நிலை. இதற்கு காரணம் என்ன? அதிகாரிகளுக்கும் இவர்களுக்கும் இருக்கக்கூடிய சில ஏற்பாடுகள் தான் காரணம். இன்றைக்கு கரப்ஷன் என்பது அப்படி. இந்த அரசாங்கத்திலே மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. இதை ஒரு முறைக்காக சொல்லவில்லை. விவரங்களைக் கூட சொல்லுவேன். பல இடங்களில், சில அதிகாரிகள் ஆளும் கட்சியினைச் சார்ந்த சில ஆட்கள் சொல்வதைத்தான் கேட்பது என்ற நிலை இருக்கிறது. நிச்சயமாக கூட்டுறவுத் துறையிலே இப்படிப்பட்ட நிலை வளர்வதற்கு அமைச்சர் அவர்கள் அனுமதிக்கக் கூடாது. பொலிட்டிகல் டிஸ்கிரிமினேஷன் இல்லாமல் ஏழைகளுக்கு இதனுடைய நலன்கள் கிடைக்கக்கூடிய அளவிற்கு இந்த இயக்கத்தை உருவாக்க தேர்ந்தெடுக்கப்பட்ட சொசைட்டிதான் தேவை. அதற்கு தகுந்த அளவிலே விரைவிலே, தேர்தலை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதை எதிர்க்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூன்றாவது முறையாக மேலும் ஓராண்டு காலத்திற்கு தனி அலுவலரை நியமிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் எதிர்க்கிறேன். காரணம் இன்றைக்கு சட்டத்துறை அமைச்சராக இருக்கக்கூடியவர்கள் ஆரம்பத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருக்கின்றபோது, இப்படி தனி அதிகாரிகளுடைய



1985 மார்ச் 19] [திரு. பொ. உத்திராபதி]

பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு வருகின்றபோது ஒரு உதாரணத்தை சொல்லி வந்தார்கள். செலக்ட் கமிட்டிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது முடிவு செய்துவிட்டால் ஒரு மாத காலத்தில் தேர்தல் நடத்த முடியும் என்ற வகையில் தெரிவித்தார்கள். அவர் இருக்கின்றபோதே செலக்ட் கமிட்டி முடிவு செய்து தங்களுடைய தீர்மானத்தை கொடுத்து விட்டார்கள். அதற்கு பிறகும் கூட்டுறவுத் துறை அமைச்சர் காலத்தை நீட்டித்துக் கொண்டார். இப்போது கூட்டுறவுத் துறை அமைச்சராக வந்திருக்கின்றவர்களும் காலத்தை நீட்டிக்க கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், எந்த தீர்மானங்களையும் ஒரு அமைச்சரே ஆரம்பத்திலிருந்தே கடைசி வரைக்கும் நிறைவேற்றிக் கொடுப்பது என்பது நமது ஆட்சியில் மிகக் குறைவு. அந்த அடிப்படையில்தான் செலக்ட் கமிட்டி கொடுத்ததற்கு பிறகும் இப்படி காலத்தை நீட்டித்துக் கொண்டிருக்கிறார்கள். அது சரியல்ல என்று நான் அதை எதிர்க்க கடமைப்பட்டிருக்கிறேன்.

கூட்டுறவுத் துறை என்பது உண்மையிலேயே ஒரு நாட்டிற்கு மிக முக்கியமான துறை. பொதுத் துறை, கூட்டுறவுத் துறை என்பதெல்லாம் ஒரு நாடு அல்லது ஒரு மாநில விவசாயிகளுக்கு, அவர்களுடைய உற்பத்திக்கு உதவிகரமாக இருக்கக்கூடிய துறைகள்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் சொல்கின்றபோது இந்த கூட்டுறவுச் சங்கங்கள் கொடுக்கக் கூடிய கடன் எல்லாம் திருப்பிக் கட்டுவதற்குகூட எதிர் கட்சிக்காரர்கள் பரிந்துரைத்து சொல்ல மாட்டேன் என்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இன்று கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சீர்குலைந்து ஒரு தேக்க நிலைக்கு ஆளாக்கப்பட்டதற்கு யார் காரணம்? விவசாயிகளும் அல்ல. கூட்டுறவுத் துறையில் உள்ள அதிகாரிகளும் அல்ல. அந்த இலாக்காவில் இருக்கக் கூடிய அமைச்சரும் அல்ல. விவசாயிகள் இன்றைக்கு வாங்கின கடனை திருப்பி கொடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டதற்கு காரணம் இயற்கைதான். 1977-ல் புயல். தமிழகம் முழுவதும் 1981-82-ல் கடுமையான வறட்சி. 1983 டிசம்பரில் தமிழகத்தில் பெய்த மழை. அதனால் வெள்ளங்கள். அதனால் விவசாயம்

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 19

அடியோடு அழிந்துவிட்டது. அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு 15 தினங்கள் தண்ணீர் வடியாமல் அதனால் ஏற்பட்ட சேதங்களையும் முதலமைச்சர் அவர்களும் பெரும்பாலான அமைச்சர்களும் நேரில் வந்து பார்த்தார்கள். அதைப் பார்ப்பதற்கு விவசாய உயர்மட்டக் குழு, அதனுடைய தலைவருடன் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தார்கள். குறிப்பாக என்னுடைய தொகுதிக்கு, நாளே கோட்டூர், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி பகுதிகளுக்கு அழைத்துச் சென்றேன். வயலிலே இறங்கி, அந்தத் தாளையும், கதிரையும் கட்டுக் கட்டாகக் கொண்டு வந்தார்கள். இப்படி தொடர்ச்சியாக விவசாயிகள் இயற்கையின் சீற்றத்திலும்கூட, உற்பத்தியை தலைவருடன் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தார்கள். குறிப்பாக இல்லாமல் கட்டுப்படியான விலை இல்லாமல், விவசாயிகள் மேலும் மேலும் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். இதனால் கடனை திரும்பக் கட்ட முடியாத ஒரு நிலை ஏற்படுகிறது. விவசாயிகளுக்கு எப்போதும் கடன் வாங்கிவிட்டால் கட்டக் கூடாது என்ற எண்ணம் வராது. ஏனென்றால் சாமிமீது பக்தி உள்ளவர்கள், அவர்கள். ஏமாற்றுகின்ற எண்ணம் அவர்களுக்கு வராது.

ஒரேயொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். மருதவாணம் கூட்டுறவு சொசைட்டி திருத்துறைப்பூண்டி தாலுக்காவில் இருக்கிறது. அங்கே ஒருவர் மாரி என்பவர் குறுகிய காலக் கடன் வாங்கியிருந்தார். அசல் ரூ. 3,780, அதற்கு வட்டி ரூ. 3,827, போய்விட்டு வந்த அதிகாரிகளுக்குச் செலவு ரூ. 30 ஆக ரூ. 7,637. கெடு மாற்றுக் கடன் அசல் ரூ. 8,104, வட்டி ரூ. 7,320, செலவு ரூ. 5 ஆக அவன் வாங்கிய கடன் ரூ. 11,974, இந்தப் பணத்தை திரும்பக் கட்ட வேண்டுமானால், போன மாதக் கணக்குப்படி 11,147, செலவு ரூ. 35, கூடுதல் ரூ. 23,156, அந்த விவசாயி எப்படி கட்ட முடியும்? ஆளுங் கட்சியும் சொல்ல வேண்டும். அமைச்சர்களும் சிந்திக்க வேண்டும். எதிர்காலத்தில் அவர்களுக்கு நாம் எப்படி நிவாரணம் அளிக்கப் போகிறோம்? ஆக, விவசாயிகள் கட்டவில்லை, கட்டவில்லை என்று சொல்லி, தேர்தல் முடிந்தவுடன், விவசாயிகள் கெடுபிடி வசூல் பண்ணுவதற்கு, எங்கே பார்த்தாலும், கொடி ஏற்றினார்கள். சிவப்பு வெள்ளை



1985 மார்ச் 19] [திரு. பொ. உத்திராபதி]

என்ற நிறக் கொடிகள். அறுவடையை ஜப்தி செய்தார்கள் கூட்டுறவுக் கடனுக்காக. எங்கே பார்த்தாலும், வாடகைக் கார் எடுத்துக் கொண்டு போகிறார்கள். வசூல் செய்வதற்கு தயவுசெய்து நான் கேட்கிறேன். அரசு ஜீப் கொடுக்கிறார்கள். பெட்ரோல் போடுவதற்கு செலவுக் கணக்கை எழுதுகிறார்கள், அதிகாரிகள். ஒவ்வொரு சொசைட்டியிலும் ஒரு வாடகைக் கார் எடுத்துக் கொள்கிறார்கள். வாடகைக் காருக்கு ஒரு நாளைக்கு வாடகை ரூ. 400 பெட்ரோல் செலவு ரூ. 250 என்று எழுதுகிறார்கள். ஆக ஒரு நாளைக்கு ஒவ்வொரு சொசைட்டியிலும் ரூ. 650-ஐ வாடகைச் செலவாக கணக்கு எழுதினால், இந்தச் செலவு முழுவதும் யார் தலையில் விழுகிறது? உதாரணமாக, சங்கத்திலே 500 பேர்கள் இருக்கிறார்கள் என்றால் செலவு அப்படியே பிரிக்கப்பட்டு, அந்த விவசாயிகள் தலையில் எழுதப்படுகிறது. இப்படி விவசாயிகளுக்கு கடந்த 10 ஆண்டு காலமாக தாங்க முடியாத அளவிற்கு கடன் ஏறியிருக்கிறது. அதனால்தான் விவசாயிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, ஏக்கருக்கு ரூ. 2,000 நஷ்டம் கொடுங்கள் என்று கேட்டார்கள்.

நம்முடைய உயர்மட்டக் குழுவின் தலைவர், முன்னால் இங்கு சபாநாயகராக இருந்தவர்கள், தஞ்சை மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்துவிட்டு, ரூ. 500-ஐ நஷ்ட ஈடாக குறைந்த பட்ச அளவிற்குக் கொடுக்கலாம் என்று சர்க்காருக்கு சிபாரிசு செய்தார்கள். இது நம்முடைய அமைச்சருக்கு தெரியுமா, தெரியாதா என்பது எனக்குத் தெரியாது. நான் கேட்கிறேன், விவசாயிகள் இந்த நாட்டினுடைய முதுகெலும்பு என்று சொல்லித்தான் வாக்கு கேட்கிறோம். விவசாயிகள்தான் இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கிறார்கள் என்று சொல்கிறோம். அப்பேர்ப்பட்ட விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, சொல்ல முடியாத அளவிற்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

இன்றைய நிலையில் அந்த விவசாயிகள் எப்படியாவது கடனை வாங்குவதற்கு துணிந்துவிடுகிறார்கள். அப்பேர்ப்பட்ட நிலையில், கடனை, வட்டியைக் கட்ட வேண்டுமென்றால், தஞ்சை மாவட்டத்திலுள்ள விவசாயிகள், நிலத்தை எல்லாம்

(திரு. பொ. உத்திராபதி) [1985 மார்ச் 19

விற்றுவிட்டு, ஏதோ பரதேசம் போகக் கூடிய ஒரு நிலை வருமே தவிர, விவசாயிகள் அந்தக் கடனிலிருந்து மீளுவதற்கு எக்காரணத்தைக் கொண்டும் முடியாது. எனவே அந்த

(முற்பகல் 10.50).

வட்டியை முழுமையாகத் தள்ள வேண்டும். 5 ஏக்கர் என்று சொல்வதற்குப் பதிலாக 5 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று அறிவிக்கப்பட்டு அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய வேண்டும். பாக்கிக் கடன்களை நீண்டகாலத் தவணையாகக் கொடுத்து திரும்பப் பெறுவதற்கு முயற்சி செய்தால்தான் கூட்டுறவுத் துறை வலுவுள்ள துறையாக நல்லமுறையிலே தமிழகத்திலே செயல்பட முடியும்.

கூட்டுறவுச் சங்கங்களிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். 480 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று அரசு சட்டமே இருக்கிறது. ஆனால் இன்றைக்கு எத்தனையோ கூட்டுறவு சங்கங்களிலே வேலை செய்யக்கூடியவர்கள் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். ஒரு சங்கத்திலே வேலை செய்கிறவர் 400 ரூபாய் சம்பளமும் இன்னொரு சங்கத்திலே வேலை செய்கிறவர் 300 ரூபாய் சம்பளமும் பெறக் கூடிய நிலைமை இருந்தால் அவர்கள் எப்படி வேலை பார்க்க முடியும்? சர்க்கார் ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவைகளை அவர்களுக்கும் அளிக்க வேண்டும். சம்பளத்தைப் பொறுத்த வரையில் எல்லா இடங்களிலேயும் ஒரேமாதிரியான சம்பளத்தைக் கொடுக்க வேண்டும். வருமானம் வருகிற சொசைடி, வருமானம் இல்லாத சொசைடி என்று பார்க்காமல் அவர்களையெல்லாம் சர்க்கார் ஊழியர்களாக ஏற்றுக் கொண்டு நிரந்தரப்படுத்த வேண்டும்.

அடுத்து கூட்டுறவுத் தேர்தல் என்பது மிக முக்கியம். கலைக்கப்பட்டவைகளுக்கு எல்லாம் தனி அதிகாரிகள், கலைக்கப்படாத சங்கத்திற்கு தலைவராக இருக்கிறவர் எப்போது அவர் வந்தாரோ அதிலிருந்து இன்றுவரை அவர்தான்



1985 மார்ச் 19] [திரு. பொ. உத்திராபதி]

தலைவர், நாம் தான் தலைவர் என்று அவருக்கே தெரியாது. இப்படி இரண்டும் கெட்டானாக அந்த சங்கங்கள் இருக்கின்றன. சில அதிகாரிகள் தாங்களே பதவியில் தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்பதால் அமைச்சர்கள் வருகிற நிலையில் நிறைய விளம்பரத்தைச் செய்வதில் பணத்தைச் செலவழிக்கிறார்கள். அதைத் தடுக்க வேண்டும். அங்கே கடன் கொடுத்து வட்டி வாங்குகிற வருமானம் தானே தவிர வேறு வருமானம் கிடையாது. அமைச்சர்கள் வந்தால் எப்படிச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யட்டும். ஆனால் அந்தப் பணத்தை இதற்காகச் செலவழிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி அதை விவசாயிகள் தலையில் கட்டுவது என்பது சரியல்ல.

அடுத்து கூட்டுறவு சங்கங்கள் இருக்கிற இடங்கள்—உதாரணமாக சித்தொங்கூர், ஆண்டான், ஆழிவலம், திருவழிஞ்சலூர், குரும்பலூர் ஆகிய 5 பஞ்சாயத்துக்களில் இருக்கிறவர்கள் 10 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற இடத்திற்குச் சென்று பெற வேண்டியிருக்கிறது. அவர்கள் செல்வதற்கு ரோடு வசதி கிடையாது. வண்டியோட்டிச் செல்ல முடியாது. 10 கிலோமீட்டர் தூரம் போய் விவசாயிகள் மண்ணெண்ணெய், உரம் போன்ற பொருள்களை வாங்க முடியவில்லை. அந்த விவசாயிகள் பொருள்களை வாங்கக் கூடிய வசதியை ஏற்படுத்திக் கொடுக்கிற முறையில் 1, 2 பஞ்சாயத்துக்களை சேர்த்து நெருக்கமாக அதை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறை மூலமாக யூரியா வழங்கப்படுகிறது. பொதுவாக வெளியிலே விற்கும் விலையை விட இந்தத் துறை மூலமாகக் குறைத்துக் கொடுப்பார்கள் என்ற நிலைமைதான் இருக்க வேண்டும். கூட்டுறவுத் துறையில் யூரியா 115 ரூபாய்க்குக் கொடுக்கிறார்கள். ஆனால் வெளியே 102 ரூபாய், 105 ரூபாய் என்ற அளவுக்குத்தான் விற்கிறார்கள். இப்படி ஒரு மூடைக்கு 13 ரூபாய் அதிகமாக கூட்டுறவுத் துறையில் விற்கப்படுகிறது. காம்ப்ளக்ஸ் உரம் 133, 134 ரூபாய் வெளியே விற்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையிலே 147 ரூபாய் என்று விற்கிறார்கள். இப்படி ஒரு மூடைக்கு 10, 12 ரூபாய் அதிகமாக சர்க்கார்

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 19

விவசாயிகளுக்குக் கொடுக்கிற நிலை கூடாது, சர்க்கார் குறைத்துக் கொடுக்க வேண்டும். சர்க்கார் இவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறபோது என்ன ஆகும்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் இந்த குறிப்பிட்ட சட்ட முன்வடிவின் மீதுதான் பேச வேண்டும். கூட்டுறவுத் துறை பற்றி தமிழ் நாட்டிலே உள்ள நிலைமைகளையெல்லாம் பேசக்கூடாது.

**திரு. பொ. உத்திராபதி:** கூட்டுறவு அமைப்புக்களிலே இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை, அமைச்சர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவோடு நிறுத்திக் கொண்டு விரைவிலே அந்த அமைப்புகளுக்கு எல்லாம் தேர்தலை நடத்தி இந்த இயக்கத்தை வலுவுள்ள இயக்கமாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

***திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தனி அலுவலர் நியமன நீட்டிப்பு சட்டத்தை ஆதரித்து ஆளுகின்ற இயக்கத்தின் சார்பில் சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்திய துணைக் கண்டத்திலே 75 முதல் 80 விழுக்காடு வரை வாழுகிற மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இம்மக்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் வறுமைக் கோட்டில் வாடிக்கொண்டு இருக்கிறார்கள். இப்படி வாடிக் கொண்டு இருக்கும் மக்களைப் பற்றி அன்றையதினம் திருவள்ளுவர் அவர்கள் சொல்லுகிற நேரத்தில்,

> "இரவார், இரப்பார்க்கொன்று ஈவர், கரவாது
> கைசெய்தூண் மாலை யவர்"

விவசாயத்தை நம்பிக் கொண்டிருக்கிற அந்த மக்கள் இல்லை என்று வந்தவர்களுக்கு இல்லை என்று வாரிக் கொடுத்தார்கள். அவர்கள் என்றைக்கும் இல்லை என்று யாரிடமும் கை



1985 மார்ச் 19] [திரு. க. சோலைராசு]

ஏந்தவில்லை என்று சொல்லி அன்றைய விவசாய மக்களைப் பற்றி சொன்னார் வள்ளுவர். ஆனால் இன்றைக்கு விவசாய பெருங்குடி மக்கள் எல்லாம்,

> "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்
> தொழுது உண்டு பின்செல் பவர்"

என்ற குறளை மாற்றுகின்ற வகையில் உழுதுண்டு வாழ்கிற மக்கள் எல்லாம் இன்றைக்கு வட்டிகடைக்காரர்களுக்கு பின்னால் தொழுது கொண்டு அலைகிறார்கள். அப்படி தொழுது கொண்டு அலைந்தாலும் கூட அந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எல்லாம் இன்றைக்கு தனிப்பட்ட நபர்கள் யாரும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள், கடன் கொடுப்பதும் கிடையாது. அப்படி அநாதைகளாய் அலைகிற அந்த பராரைகளாய் இருக்கிற அந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு எல்லாம் இன்றைக்கு நேசக்கரம் நீட்டி அவர்களுடைய வாழ்க்கைக்கு வசந்தத்தை அளித்துக் கொண்டிருப்பது கூட்டுறவு சங்கங்கள் என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன். அப்படி இந்த ஏழை எளிய பாட்டாளி விவசாய பெருங்குடி மக்களுக்கு உதவிக் கொண்டு இருக்கிற கூட்டுறவு சங்கங்கள் தழைக்க வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக சில கருத்துக்களை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச் சந்திரன் அவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மக்களோடு இணைந்து பணியாற்றுகிறது என்றாலும் கூட சோசிலிச நாடுகளைப் போல சிறப்பாக இல்லை என்று சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்றை நினைவுப்படுத்த விரும்புகிறேன், என்னுடைய நினைவில் எந்த சோசிலிச நாடுகளிலும் வாங்கிய கடனை கட்டாதே என்று கோஷம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இந்த தமிழ் நாட்டினுடைய தலைவிதியோ, தரித்திரமோ தெரியவில்லை. இங்கேதான் கொடுத்த கடனை திருப்பிக் கட்ட மாட்டோம், வாங்கிய கடனை கேட்காதே, அதற்கு நடவடிக்கை எடுக்காதே, என்று கோஷமும் ஒலித்துக்கொண்டு இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். இந்த விவசாய பெருங்குடி மக்களுக்கு உதவிக் கொண்டு இருக்கிற அந்த

(திரு. க. சோலைராசு) [1985 மார்ச் 19

கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் முடமாக்கப்பட்டு விட்டால் இந்தியாவின் முதுகெலும்பு என்று சொல்லப்படுகிற அந்த விவசாயிகளின் முதுகெலும்பை நாமே, அரசியல்வாதிகளே, ஒடித்து விடுவதற்கு உடந்தையாக ஆகிவிடுகின்ற அச்சத்தின் விளைவாக ஒரு சிறிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் சொன்னார்கள், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், அவர்களுக்கு உதவ வேண்டும் என்று சொன்னார். அதனுடைய அடிப்படையில் கிராமத்தில் இருக்கிற கூட்டுறவு விவசாய சங்கங்களுக்கு ஒரு சாகத்திற்கு ஒரு விவசாய தேர்வு பெற்று இருக்கிற டிகிரி. அக்ரி நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நியமித்தோம் என்று சொன்னால் விவசாயத்திற்கு கொடுக்கிற கடன் சரியான முறையில் பயன் படுத்தப்படுகிறதா என்று கண்காணிக்க முடியும். அப்படி கண்காணிக்கிற நேரத்தில் விவசாயம் செய்கின்றவர்கள் உண்மையில் பாதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னால் அவர் களுக்கு நாம் யோசனை சொல்ல முடியும். பூச்சி பட்டுவிட்டால் இந்த மருந்தை அடி என்று சொல்லலாம். அப்படி யோசனை சொல்வதற்கு அந்த அதிகாரிகளை நாம் நியமிக்கலாம். 5 ஆயிரம் ரூபாய் கடன் கொடுத்தவர்களுக்கு அந்த பூச்சி மருந்து வாங்குவதற்காக 500 ரூபாய் கூட கடனாக மீண்டும் இரண்டாவது தவணையாக கொடுக்கிற ஒரு நல்ல திட்டத்தைக்கூட பரிசீலிக்கலாம்.

115.

அப்படி அவர்களுக்கு அந்த 500 ரூபாய் கொடுக்கும்போது அவர்கள் அந்த 5,000 ரூபாயைத் திருப்ப கட்டுகிற தகுதியைப் பெற்று விடுகிறார்கள். எனவே இந்த திட்டத்தை பரிசீலிக்குமாறு கேட்டுக்கொண்டு அதே மாதிரி பாதிக்கப்பட்ட சிறு விவசாயி களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று சொல்வதில் எனக்கு உடன்பாடு என்றாலும்கூட கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றுக்கொண்டு ஊர்களில் திரை அரங்கம், வட்டி கடைகளை அமைத்தல், டிராக்டர், மோட்டார், கார்கள் இவைகளை சொந்தமாக வைத்துக்கொண்டு இருக்கிற பெரிய விவசாயிகள் மீது கடுமையான நடவடிக்கை அரசு எடுக்க வேண்டும் என்பதை என்னுடைய தனிப்பட்ட கருத்தாக இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1985 மார்ச் 19] [திரு. க. சோலைராசு]

கூட்டுறவுச் சங்கத்தில் கடனைப் பெறுகிறபோது விவசாயத்திற்கு பெறுகிறோம என்று சொல்லிக் கொண்டு இருப்பவர்கள் எல்லாம் இன்றைக்கு 5,000, 10,000 என்று கடனை வாங்குகிறவர்கள் கிராமத்தில் 20 ஆயிரம் 50 ஆயிரம் பெருமான அளவுக்கு சொந்த கார்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். 50 ஆயிரம், அல்லது ஒரு லட்சம் என்ற பங்கு மூலதனம் போட்டு அங்கே வட்டி கடைகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அந்த பெரிய விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலிக்க வேண்டும் என்று என்னுடைய கருத்தாக இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

மத்திய வங்கியில் பணி புரிகிற செயலாளர்களை அங்கே நிரந்தரமாக இருப்பதால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. எனவே, அவர்களை மாற்றுதலுக்கு உரியவாறு வேறு ஊர்களுக்கு மாற்றுவதற்கு ஒரு ஆலோசனையாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் வேண்டுகிறேன். இந்த சர்வ கட்சி குழு அமைக்க அரசு பரிசீலனைச் செய்ய வேண்டும். இங்கே உள்ளவர்கள்கூடக் கேட்கலாம், பணக்கார விவசாயி என்றும், சிறிய விவசாயி என்றும் எப்படிப் பிரிப்பது என்று. எனவே, சர்வ கட்சியினரையும் கொண்டு ஒரு குழுவை அமைத்தால், அவர்களின் பரிந்துரையோடு, அரசினுடைய பணத்தில் உலாவுந்த முதலாளிகளின் முகத்திரையைக் கிழிக்க முடியும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

புரட்சித் தலைவரின் ஆட்சியில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தேடித் தரும் வண்ணம் பல்வேறு சிறப்பான நன்மைகளைச் செய்து கொண் டிருக்கின்றன. மேலும் அந்தச் சங்கங்கள் சிறப்பாக நடைபெற வேண்டும். வட்டி, அபராத வட்டி போன்றவைகளைத் தள்ளுபடி செய்வது சம்பந்தமான அந்த நல்ல முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். விவசாயிகளுக்கு நல்ல முறையில் உதவி செய்ய வேண்டுமென்றால் கூட்டுறவுச் சங்கத்தைத் தவிர உதவக் கூடிய வேறு சங்கம் இல்லை என்பதால், இந்தச் சங்கம் சிறப்போடு நடைபெறுவதற்கு நான் சொன்ன இந்தச் சீரிய கருத்துக்களைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன்.

[1985 மார்ச் 19

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீடிப்பதைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவுத் துறையானது பல வகைகளிலே சீர்கேடு அடைந்திருக்கிறது.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், அமைச்சர் பெருமக்கள் தங்கள் பகுதிகளுக்கு வருகின்றபொழுது ஒவ்வொரு கூட்டுறவு சொசைட்டியும் 5 பக்கங்கள், 6 பக்கங்கள் என்று விளம்பரம் செய்வதற்காகச் செலவழிக்கின்றது. அந்த மாவட்டத்தில் இருக்கின்ற சங்கங்கள் இவை இவை என்று அறிவிப்பது போல் இது இருக்கிறது. அந்த அளவிற்கு விளம்பரம் செய்கிறார்கள். இதன் காரணமாக, உறுப்பினர்களாக இருக்கின்ற அந்த ஏழை மக்களுடைய டிவிடென்ட் குறைகிறது; இலாபம் சரிவாக் கணக்கிட்டுக் கொடுக்கப்படுவதில்லை. அவைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் இருந்தால் முறையாக அந்தச் செயல் பாடுகள் நடைபெறும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்பு கிறேன்.

சிலயிடங்களிலே கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களைப் பொறுத்தவரையில் 120 பேர்கள் இருக்க வேண்டுமென்று கருது கிறேன். 80 பேர் உள்ள நகரத்திலேகூட, அதிலே உள்ள உறுப்பினரின் மனைவி, மகன் பேர்களையெல்லாம் சேர்த்து புதிய கூட்டுறவு சொசைட்டியிலே சேர்ப்பதற்கு ஆளுங்கட்சி முயற்சி எடுத்துக் கொள்கிறது என்று சொல்வதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இப்படிப் பல பிரச்னைகள் இருக்கின்றன.

உணவுப் பொருள்கள் விநியோகத்தைப் பொறுத்தவரையில் டெப்போக்களில் 75 சதவீதம்தான் கிடைக்கிறது; 100 சதவீதம் தேவையையும் முதலிலேயே கொடுத்தால் மக்களுக்கு வசதியாக இருக்கும். 500 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு டெப்போ என்று செய்தால் கூட்டம் குறைவாக இருக்கும். ஏழை மக்கள் வேலைக்குச் சென்றுவிட்டு ரேஷன் கடைகளில் சென்று கியூவில் நின்று கஷ்டப் படுகிறார்கள்,



1985 மார்ச் 19] [திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்]

எனவே, கூட்டுறவுச் சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்கள் இல்லாத காரணத்தால்தான் இப்படிப்பட்ட கிரமங்கள் ஏற்படுகின்றன என்று சொல்லி, இந்தச் சட்ட முன்வடிவை நிராகரிக்க வேண்டுமென்று நான் ஜனதாக் கட்சியின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்ற அந்த நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதிலே, 9—9—1984 வரைக்கும் இருக்கின்ற சட்டத்திற்கு 6—9—1984-இல் ஆளுநர் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தது தவறு என்னும் பொருளில் அன்றையதினம் அவர்கள் பேசினார்கள். அதற்கு ஒரு சிறிய விளக்கத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒவ்வொரு சட்டமும் அது கொண்டு வரப்படுகின்ற நேரத்தில் அதிலே சரியான தேதியைச் சொல்வதில்லை. அந்தச் சட்டத்தின் முன் பகுதியிலே ஆரம்பித்து அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு, 8 வருஷம் 3 மாதமாக உள்ளதை 9 வருஷம் 3 மாதமாக நீட்டிக்க வேண்டுமென்று நான் சட்டம் வருகிறதே தவிர, அது 9 ஆம் தேதியா அல்லது 6 ஆம் தேதியா என்ற கேள்வி எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதற்கு முன் உதாரணமாகச் சிலவற்றைச் சொல்ல விரும்பு கிறேன். 6—12—1980 இல் இதுபோன்ற ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்; ஆனால் 9—12—1980 இல்தான் முடிவடைகிறது. ஆனால் அன்றைக்கு 6—12—1980 இல் அதேபோலக் கொண்டு வந்திருக்கிறோம். அதேபோல் 9-6-1981-ல் முடிவதாக இருந்த சட்டத்திற்கு ஆளுநர் அவர்கள் 4-6-1981-லே அதேபோன்ற சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோன்று, 9—6—1982-இலே முடிவடைவதாக இருந்த சட்டத்திற்கு 3—6—1982-இலே ஆளுநர் அவர்கள் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோன்று, 1983 ஆம் வருஷத்தி

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1985 மார்ச் 19

லேயும் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே க்ளியராகச் சொல்லியிருக்கிறீர்கள், one year beyond 9th September 1984 அப்படி என்றால் 9 ஆம் தேதிக்குப் பின்னர்தான் சட்டம் வரவேண்டும். அதாவது செப்டம்பர் 10 ஆம் தேதி என்று போட்டால் ப்ராப்பராக இருக்கும். ஒரு தப்பைப் பண்ணினார்கள் என்பதற்காக அந்தத் தப்பை நான்கைந்து தடவை செய்தால் நியாயம் ஆகுமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு முறையும் சட்டம் வருகின்ற நேரத்தில் இரண்டு தினங்களுக்கு முன்போ அல்லது மூன்று தினங்களுக்கு முன்போ கொண்டுவர வேண்டும் என்று கொண்டு வரப்படுகின்ற இந்த சட்டத்தினுடைய காலநிலையை உடனடியாக அமலுக்குக் கொண்டுவரவேண்டும் என்று சொல்வதும் அப்படிக் கொண்டு வரப்படுகின்ற நேரத்தில் 8 வருடம் 3 மாதம் என்றிருப்பதை அல்லது 7 வருடம் 3 மாதம் என்று இருப்பதை ஒரு வருடமாகக் கொடுக்கிறோம் என்று சொல்கிற அந்தப் பாங்குதான் இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எங்களுடைய புரட்சித் தலைவர் அவர்களின் அரசுக்கு ஜனநாயக உரிமைகளைப் பறிக்க வேண்டும் என்ற உணர்வு இல்லை என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். இன்றைக்குத் தமிழகத்தில் மொத்தம் கூட்டுறவுத் துறையின் சார்பாக ஏறத்தாழ 25 ஆயிரம் கூட்டுறவுச் சங்கங்கள் வரை தமிழகத்தில் இருக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப் பட்டிருக்கிறேன். அவற்றிலே தனி அதிகாரிகளின் பொறுப்பிலே இருந்து வருகின்ற, அவசர காலத்திலே கலைக்கப்பட்ட சங்கங்கள் 450 தான் என்பதையும், பிறகு நடைபெற்ற தவறுகளுக்காகக் கலைக்கப்பட்ட சங்கங்கள் ஏறத்தாழ 218 தான் என்பதையும்



1985 மார்ச் 19] (திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நீதி இருக்கின்ற அத்தனை சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களும், அதற்குப் பிறகு அமைக்கப்பட்ட சங்கங்களிலும் தலைவர்கள் இன்றைக்கு இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நான் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புறேன். இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் இந்த அரசைப் பொறுத்த வரையில் அத்தனை சங்கங்களிலும் அதிகாரிகளை நியமிக்க வேண்டும்; ஜனநாயக உணர்வே அற்றுப் போகவேண்டும் என்ற உணர்வு இல்லை என்பதை இந்த உதாரணத்தோடு சொல்ல விரும்புகிறேன்.

மேலும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது ஒவ்வொரு அமைச்சராக காலவரம்பை நீட்டித்துக்கொண்டு வருகிறார்கள் என்ற பொருளில் பேசினார்கள். இனிமேல் அப்படிப்பட்ட சூழ்நிலை வரக்கூடாது என்பதற்காகத்தான் இந்தச் சட்டத்தின் வாயிலாக புதிதாகத் தனி அதிகாரிகளைப் போடுகின்ற நேரத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் இரண்டாண்டுகளுக்குமேல் நீட்டிக்கக்கூடாது என்ற வகையில் அந்தக் காலவரையறையைத் தளர்த்தக் கூடாது என்ற வகையில் அரசுக்குத் தடை விதித்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் களுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்த வரையில் ஜனநாயக உணர்வுகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்ற உணர்வு இருக்கின்றது. கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற பல்வேறு சீர்கேடுகளை நிவர்த்தி செய்து வருங்காலத்தில் கூட்டுறவுத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டும் என்பதற்காகத்தான் இதனை நீட்டித்துக்கொண்டு வருகிறோம் என்பதை நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எங்களுடைய முதலமைச்சர் அவர்களைப் பொறுத்த வரையில் உங்களுக்கு என்ன உணர்வுகள் இருக்கின்றனவோ, அதே உணர்வுகளை அவர்களும் பெற்றிருக்கிறார்கள். வெகு விரைவாகத் தேர்தலை நடத்தவேண்டும்; அவ்வாறு தேர்தலை நடத்தி தகுதியான நபர்கள் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக

வருகின்ற நேரத்தில் இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை எல்லாம் புரிந்துக் கொண்டு எங்களைத் துரிதப்படுத்திக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைக்குப் புதிதாக நாங்கள் சட்டத்தை அறிமுகம் செய்திருக்கிறோம் என்றால் இதற்குப் பிறகு விதிகளை வகுத்து அதையும் வெளியிட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம் என்பதை உங்கள் மத்தியில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஒரு சட்டம் இயற்றப்பட்டதற்குப் பிறகு புதிய சட்டம் மற்றும் விதிகளின் கீழ் பல்வேறு சட்டங்களிலுள்ள அறிக்கைகள், ஆணைகள் ஆகியவற்றை பதிவாளர்களிடமிருந்து பெற்றுப் பரிசீலனை செய்து வெளியிட வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். இவ்வாறு ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டாலும் அதற்கான விதிகளை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டிய நிலைமை இருப்பதாலும் பதிவாளர்களுடைய அதிகாரங்களைப் பதிவாளரின் கீழ் பணியாற்றும் ஏனைய அதிகாரிகளுக்கு வழங்குவதற்காகவும் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டாக வேண்டும். இன்றைக்கு ஒட்டுமொத்தமாக இருக்கின்ற பதிவாளர்களுடைய அதிகாரங்களை தேர்தல் நடத்துவதற்கு முன்பாக கீழே இருக்கின்ற அதிகாரிகளுக்குப் பிரித்துக் கொடுப்பதற்கு வேண்டிய அரசாணைகளைப் பிறப்பிக்க வேண்டிய கால கட்டத்திலே இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-10)

புதிய சட்டத்தை அறிமுகம் செய்கிறோம் என்றால் பல்வேறு வகையான கூட்டுறவுச் சங்கங்களுக்கும் ஏற்றாற்போல் அந்தந்தச் சங்கங்களின் உணர்வுகளுக்கேற்றாற்போல புதிய விதிகளை உண்டாக்கி வெளியிட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதையும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் ஒவ்வொரு மாதிரி விதிகளை உருவாக்க வேண்டியிருக்கின்ற காலகட்டத்தில் இருப்பதன் காரணத்தால்தான் உரிய நடைமுறைகளை ஏற்படுத்த வேண்டிய காரணத்தால்தான் இன்றைக்கு ஓரளவுக்கு நாம் காலத்தைத் தள்ளித் தேர்தலைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் இல்லாத காரணத்தால் தவறுகள் பல நடக்கின்றன என்று இங்கே பேசிய





மாண்புமிகு உறுப்பினர்கள் பலவற்றை எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நான் தவறுகள் நடக்கவில்லை என்று வாதிடத் தயாராக இல்லை. 25,000, 26,000 சங்கங்கள் இருக்கிற இடத்தில் ஏதோ ஓரிடத்தில் தவறுகள் நடக்கத்தான் செய்யும். அதையும் மாண்புமிகு உறுப்பினர்கள் இப்படிப்பட்ட நேரங்களில் சொல்கின்ற நேரத்தில் நிச்சயமாக நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்பதையும், அதிகாரிகள், இந்த அரசாங்கம், முதல் அமைச்சர் அவர்கள், இன்றைக்குத் தவறுகள் நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று எச்சரிக்கை செய்து இருக்கிறார்கள் என்பதையும் இங்கே இருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பணிவன்போடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் பேசிய நேரத்தில் அதைக் கோடிட்டு காட்டினார்கள்; தேர்தல் நடத்துவதிலே சங்கடம் இருக்கிறதா என்று கேட்டார்கள். நான் ஏற்கனவே சொல்லியபடி, ஒவ்வொரு சங்கத்திற்கு ஒவ்வொரு விதமாக விதிமுறைகள் அறிமுகப்படுத்த வேண்டிய சூழ்நிலையிருப்பதால், அரசு அதனை வெளியிட வேண்டிய கால கட்டத்தில் இருப்பதால்தான் தேர்தலை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டு வருகிறது என்பதையும் இங்கே உங்கள் மத்தியிலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே போன்று நகைக் கடன் சரியாக கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். அது சரியாகக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும் என்பதையும், அதற்கு முன்பாக பவுனுக்கு ரூ. 800 கொடுத்ததை, இன்றைக்கு ரூ. 1,000 ஆக்கியிருக்கிறோம் என்பதையும் நான் உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு ஒரு உறுப்பினர் பேசும்பொழுது, திராவிட முன்னேற்றக் கழகம் ஆண்ட நேரத்தில், எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்த மத்திய வங்கி, அன்றைக்குச் சரியாக வசூல் செய்து, அதற்குப் பரிசு கொடுத்திருக்கிறோம் என்று சொன்னார். அவர்கள் ஆளுகிற நேரத்தில் இப்படி யாரும்

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்) [1985 மார்ச் 19

கடன் கொடுக்க வேண்டாம் என்று சொல்லி, இந்தப் பிரச்னையை எழுப்பவில்லை என்பதை மாண்புமிகு உருப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுக்கு இருக்கிற மிகப் பெரிய பிரச்னை எல்லாம், இன்றைக்கு ரிசர்வ் வங்கி நமக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கிறது. நீங்கள் கொடுத்த கடனை திருப்பி வாங்கவில்லையென்றால், தமிழ்நாட்டில் இருக்கிற அத்தனை மத்திய வங்கிகளும் கடன் வாங்குகின்ற தகுதியினை இழந்து விடும் என்று ரிசர்வ் வங்கியும் நபார்ட்டும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கின்றன, என்பதை நான் பணிவன்போடு உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். விவசாயிகளுடைய பிரச்னைகளைத் தீர்க்க வேண்டுமென்று பரிவோடு அரசாங்கம் பரிசீலித்தாலும், அதன் மூலமாகப் பின்னாலே வருகின்ற விளைவுகளை நமது முதலமைச்சர் புரட்சித் தலைவர் எண்ணிப் பார்க்கிறார் என்பதை நான் மிகக் கவனத்தோடு உங்கள் மத்தியிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு உங்களுக்கு இருக்கிற உணர்ச்சி, விவசாயிகளுக்கு இருக்கிற அந்த உணர்ச்சி, இந்த அரசாங்கத்திற்கு இருக்கிறது என்பதை நான் சொல்கின்ற அதே நேரத்தில், இந்த அரசாங்கத்திற்கு இருக்கிற தலையாய பொறுப்பு, இன்றைக்கு அரசாங்கம் நபார்ட்டிலிருந்து பணம் வாங்கி, விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட, அந்த நபார்ட் நிறுவனம், நீங்கள் கொடுத்த கடனைத் திருப்பி வாங்கவில்லை என்றால், நாங்கள் உங்களுக்குக் கடன் கொடுப்பதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற அளவுக்கு எச்சரிக்கை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆகவே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த அரசோடு ஒத்துப் போகிற காலத்தில், நிச்சயமாகக் கூட்டுறவுச் சங்கங்களை நல்லபடியாக நடத்த முடியும் என்பதை நான் பணிவன்போடு சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.



1985 மார்ச் 19] (திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள் பேசிய நேரத்தில், குமரி மாவட்டத்திலுள்ள கடற்கரையிலிருந்து 1 கிலோமீட்டர் தூரத்திற்கு இருக்கும் இடங்களுக்கு லோன் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதனுடைய சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நிச்சயமாக இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் இங்கே பணிவன்போடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் பேசிய நேரத்தில், சங்கங்களை இணைப்பதைப்பற்றி சொன்னார்கள். ஒவ்வொரு சிறிய சங்கமும் தகுதி உடையதாக இருக்க வேண்டுமென்று நபார்ட்டும் ரிசர்வ் வங்கியும் சொல்கின்றன. தகுதி இல்லாத சங்கங்களை ஒன்றோடொன்று இணைப்பதன் மூலமாக அந்தச் சங்கங்களுக்குத் தகுதி வரவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இப்படி இணைகின்ற நேரத்தில், வருகின்ற அந்த இடையூறுகளை, இரண்டு சங்கங்களை ஒன்றாக இணைப்பதன் மூலமாக இருக்கிற இடையூறுகளை, விவசாயிகள் சொல்வதை எல்லாம் கேட்டு, தெரிந்து கொண்டு, இப்பொழுது பொதுவாக அதை நாங்கள் நிறுத்தி வைத்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்கு நான் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கின்றேன். நாங்கள் நிறுத்தி வைத்திருந்தால் கூட, நபார்ட் ஒவ்வொரு சங்கமும் தானாகச் செயல்படுகின்ற அளவுக்கு வலிவும், அங்கு பணி புரிவோருக்குச் சம்பளம் கொடுக்கக்கூடிய அளவுக்காவது தகுதியும், அந்தச் சங்கங்கள் பெற வேண்டுமென்றும் அறிவுறுத்திக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்றையும் சொன்னார்கள். மத்திய வங்கியாக இருந்தாலும் அல்லது எந்த வங்கியாக இருந்தாலும் கடன் கொடுத்த பணம் விவசாயத்திற்கு பயன்பட்டதா என்பதை சரி பார்ப்பதற்கு அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே இருக்கிற சாதக பாதகங்களை அரசு ஆராய்ந்து நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

(திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்) [1985 மார்ச் 19

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பு கேட்பது சரியில்லை என்று சொன்னார்கள். சட்டத்தை நாங்கள் ஒரு வருடத்திற்கு நீடிப்பு கேட்டாலும் இந்தச் சட்டத்தின் காலாவதி நாள் இன்னும் ஆறு மாதங்கள்தான் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் வேகமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்ற உணர்வை பெற்றிருக்கிற காரணத்தால் தான் அவ்வளவு நீடிப்பு கேட்காமல் இருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல கேரளாவிலே பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு எல். டி. பாங்க் லோன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதை ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும். அதேபோல ரப்பர் போர்டு கொடுக்கிற அளவிற்கு ரூ. 3,500 அளவிற்கு லோன் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதையும் ஆராய்ந்து அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் பேசுகிறபோது தஞ்சை மத்திய வங்கியைப் பற்றி சொன்னார்கள். அவர்களின் கவனத்திற்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ் நாட்டிலேயே அத்தனை மத்திய வங்கிகளிலும் கொடுத்த பணம் அதிகப்படியாக திருப்பி வராத மத்திய வங்கியாக இருப்பது தஞ்சை மத்திய வங்கிதான். எங்களைப் போன்ற வறட்சியான மாவட்டங்களில் இருக்கிறவர்கள் கொடுக்கிற அளவிற்கு கூட அங்கே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் என்ன காரணத்தினாலோ கொடுக்காமல் இருக்கிறார்கள். நீங்கள் விளைச்சல் இல்லையென்று சொன்னால் எங்களைப் போன்ற இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் இருப்பவர்கள் எதைச் சொல்ல முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இருக்கிற பிரச்னையை நான் ஒப்புக் கொள்கிறேன். எல்லோருமாக சேர்ந்து ஒரு முடிவிற்கு வருவதின் தான் சரியாக இருக்கும். இவை ஆறும் தஞ்சையில் மட்டும்



1985 மார்ச் 19] (திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்)

சொந்தமாக இருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. அனைத்து மக்களுக்கும் சொந்தமான கூட்டுறவுச் சங்கங்கள் என்ற முறையிலேதான் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இந்தப் பிரச்னையில் ஒரு நிரந்தரமான முடிவை நாங்கள் எடுப்பதற்கு நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனைபேரும் உதவியாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போல வாடகை கார் எடுக்கவேண்டாம் என்று சொன்னார்கள். அப்படி எடுக்கவேண்டாம் என்பது நியாயமாக இருந்தாலும்கூட ஜீப், கார் முதலியவற்றை மத்திய வங்கிக்கு மட்டும்தான் கொடுத்திருக்கிறோம். கீழே இருக்கிற சங்கங்களுக்கு கார் வாங்குகிற வசதி இல்லை. இருப்பினும் விவசாயிகளுக்கு பளு வராமல் பார்த்துக்கொள்கிற நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல அதிகப்படியான வட்டி பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒரு சமயம் விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மத்தியில் பேசுகிறபோது ஒருவர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இப்படி அதிகப்படியான வட்டி வந்திருக்கிறதே என்பதைக் குறிப்பிட்டு, அதற்கு முன்னால் இருந்த அரசாங்கத்தையும் சேர்த்துத்தான் குறை சொன்னார்கள். எங்களை மட்டும் அவர்கள் சொல்லவில்லை. அவர்கள் சொல்லும்போது, நாங்களா கட்டவில்லை என்று கேட்டு, ஒவ்வொரு தடவை நீங்கள் நீடித்து நீடித்து கொடுத்து இந்தப் பணத்தை ஏற்றிவிட்டீர்கள் என்று சொல்லி எல்லோரையும் குறை சொன்னார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். ஆகவே இருக்கிற நிலைமையை நாம் எல்லோரும் புரிந்து கொண்டு அதற்கு நிரந்தர நிவாரணம் தேட வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சொசைட்டிகளில் வேலை செய்கிறவர்களை நிரந்தரம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நிறைய சொசைட்டிகளில் அங்கே இருக்கிறவர்களுக்கு சம்பளமே கொடுக்க முடியவில்லை. நாம் கொடுக்கிற பணத்தை அவர்கள் சம்பளத்திற்கு எடுத்துக் கொள்கிறார்கள் என்று அதிலே ஒரு தகராறு நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே இருக்கிற பிரச்னையை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கை இந்த அரசாங்கம் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு சோலைராசு அவர்கள் பேசுகிறபோது விவசாயத்திற்கு கொடுக்கப்படும் பணம் சரியாக செலவழிக்கப் படுகிறதா என்பதை கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்களும் இதே கருத்தை வலியுறுத்தினார்கள். அதனை அரசாங்கம் ஆராய்ந்து நல்ல முடிவை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல பெரிய விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். இன்றைக்கு விவசாயிகள் என்ற போர்வையில் மிகப் பெரிய விவசாயிகள் ஒளிந்து கொண்டு நம்மையெல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு ஊரில் 2 லட்சம் ரூபாய் கடன் கொடுத்திருப்போம் என்றால் மிகப் பெரிய விவசாயிகள் 4, 5 பேர்களே அதிக அளவில் பணத்தை வாங்கி இருக்கிறார்கள். அவர்களும் விவசாயிகள் என்ற போர்வையில் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப் பட்ட சூழ்நிலையில் உறுப்பினர்களுடைய கருத்துக்களை இந்த அரசாங்கம் பரிசீலிக்கும். அப்படி பரிசீலிக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் பெரிய விவசாயிகள் மத்தியில் நடவடிக்கை எடுப்பதில் உதவியாக இருக்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னாலே யாரும் கொடுக்காத அளவிற்கு சலுகைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் தேர்தல் நேரத்தில் சொன்னோம். அதற்கு பின்னாலே இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து எவ்வளவு சலுகைகளைக் கொடுக்க





முடியுமோ அவைகளை கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ல்.டி. பேங்க் பொறுத்தவரையில் 30—12—1984 வரைக்கும் கொடுக்கப்பட்டிருந்த சலுகையை இப்போது மூன்றாவது மாதம் வரையில் நீடித்து இருக்கிறோம்.

(முற்பகல் 11-20)

விவசாயிகளுக்கு இருக்கிற பளுவைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லி, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் உங்களுடைய நல்ல யோசனைகளை ஏற்று விரைவிலே தேர்தலை நடத்த ஏற்பாடு செய்கிறோம்.

இப்போது இருக்கிற 25,000 சங்கங்களையும் அரசாங்கம் நேரடியாகப் பார்க்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் அதிலே பொறுப்பு இருக்கிற காரணத்தால் நீங்கள் சொல்லியிருக்கிற நல்ல கருத்துக்களை, ஆலோசனைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு நிச்சயமாக ஏற்றுக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் மிக வேகமாக தேர்தலை நடத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை ஒரு வருடத்திற்கு நீட்டித்தாலும் எவ்வளவு விரைவில் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவில் தேர்தலை நடத்துவோம் என்ற உறுதியை நான் இங்கே அளிக்கிறேன். நிச்சயமாக உங்களுடைய ஒத்துழைப்போடு விரைவிலே தேர்தலை நடத்தவிருப்பதால் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய எதிர்ப்பை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

திரு. ப. பொன்னுரங்கம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### 5. அரசினர் தீர்மானம்

### நிகழ்ச்சி நிரலில் மாற்றம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 30 (3)-ன் கீழ் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 3—'1985 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு' என்று உள்ளதை, இனம் 4—'1985 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு' என்பதற்குப் பின் எடுத்துக்கொள்ள வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



### 4. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (ஈ) பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

### (உ) தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1985) * ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1985) £ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழக சட்டத் திருத்தத்திற்கு திருத்தங்களைக் கொடுத்திருக்கிறேன். நான் கொடுத்து இருக்கும் திருத்தங்களும், இதற்கு பொருத்தம் உடையதாக இருப்பதால் இதையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

I have given amendments to Bharathiar and Bharathidasan University Bill. Since they are also applicable to the Tamil University Bill, the same amendments may please be treated as applicable to both these Bills.

---

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 11 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

£ 1985 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் பிரிவுகளுக்குத்தான் திருத்தங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பிரிவு வாரியாக ஆய்வு செய்யும்போது உங்கள் திருத்தத்தை முன்மொழியலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** சட்ட முன்வடிவுகளைப் பொறுத்தவரை, விவாதங்களை ஒன்றாக வைத்துக் கொள்கிறோம். ஆனால் தனித்தனியாகத்தான் நிறைவேற்றப் போகிறோம்.

***திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகச் சட்டத் திருத்தங்களில் 8 பிரிவுகளைச் சீர்திருத்த வேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொண்டு வந்திருக்கிறேன். இந்த 8 திருத்தங்களில், 2, 5, 6, 16, 19, 20 ஆகியவைகள் ஒத்த கருத்து உடைய விஷயங்களாக இருப்பதால், அவற்றை முதலிலேயும், அடுத்தபடியாக திருத்தங்கள் 3, 17 ஆகியவை ஒத்த கருத்து உடையதாக இருப்பதால் அவற்றை இரண்டாவதாகவும் நான் எடுத்துக் கொண்டு, என்னுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று நான் இருக்கிறேன். முதலிலே பிரிவுகள் 2, 5, 6, 16, 19, 20 ஆகியவற்றைப் பற்றி என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே வைக்க விரும்புகிறேன்.

இந்தத் திருத்தத்திலே முதலிலே இந்தச் சட்டத்திலே சொல்லப்பட்ட விவரங்களை இந்த மன்றத்திற்கு எடுத்து வைத்து, அதிலே அரசு கொண்டு வந்திருக்கின்ற திருத்தங்களையும், அதிலே நான் கொண்டு வருகின்ற மாற்றுத் திருத்தங்களையும் சொல்லி, அதை நான் விளக்க விரும்புகிறேன். ஏற்கனவே சட்டத்தில் உள்ள விதிகளின்படி, பாரதியார் மற்றும் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் உள்ள மேலாண்மைக் கழகங்களிலே ஒருவர் 2 தடவைகள்தான் உறுப்பினராக இருக்க முடியும். அதிலே கூட இன்றைக்கு உள்ள சட்டங்களின் நோக்கைப் பார்க்கிறபோது, ஒருவர் ஒருநாள் பதவியில் இருந்தாலும் கூட, அதை 3 ஆண்டுகள் காலம் பதவி வகித்ததாகக் கொள்ள வேண்டும் என்று இந்தச் சட்டத்திலே



இருக்கிறது. ஆகவே 2 தடவைகள் பதவியிலே இருக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட ஒருவர் ஒருநாள் பதவியிலே இருந்தாலும், அதை ஒரு டெர்மாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கிற சட்டத்தை, இன்று அரசு ஒரு வருடம் அல்லது அதற்கு மேலாக இருந்தவர்கள், அதாவது ஒரு புல் டெர்மாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் கொண்டு வந்திருக்கிற மாற்றுத் திருத்தம், ஒருவர் ஏற்கனவே 6 வருடங்கள் இருக்க முடியும் என்று இருக்கிற நிலைமையிலே நீங்கள் ஒரு வருடம் என்று கொண்டு வந்திருப்பது நல்ல திருத்தம் தான். ஆனாலும்கூட 3 வருடம் பதவி வகிக்கக் கூடிய ஒரு நபரை நீங்கள் ஒரு வருடம் அல்லது ஒரு வருடத்திற்கு மேல் என்று சொல்கிறபோது, ஒரு வருடம் ஒரு மாதமோ அல்லது ஒரு வருடத்திலிருந்து 2 வருடத்திற்குள்ளாக எவ்வளவு நாட்கள் இருந்தாலும் கூட அவர் அந்த சபையிலே தன்னுடைய முழுமையான பொறுப்புகளை, முழுமையான கால அளவிலே இருந்து செய்ய முடியாது என்பதாலே, அதை நீங்கள் 2 வருடம் அல்லது 2 வருடத்திற்கு மேலாக இருந்தவர்கள் என்று நீங்கள் திருத்துவது சாலச் சிறந்ததாக இருக்கும். அது இந்த மேலாண்மைக் கழகத்தினுடைய கன்டினியூடியை நிலை நிறுத்துவதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். நான் சார்ந்துள்ள திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி வழக்கு என்று நான் சார்ந்துள்ள பகுதியைக் குறித்துச் சொல்வார்கள். அது டிஸ்ட்டிரிக்ட் கெசட்டிலே கூட இருக்கிறது. 3 வருடம் பதவியை ஒருவர் வகிக்கின்றபோது, அது அவருடைய முழு வருடத்திற்கு ஒரு கேசுவல் அப்பாயின்ட்மென்ட் என்று சொன்னால், அதனால் அரசுக்கும் வேலைப் பளு அதிகமாகிறது. ஒரு வருடம் இருந்துவிட்டால், அவர் அடுத்தபடியாக அந்தப் பதவியை விட்டு விலகுகிறபோது, வேறு ஒரு நபரைப் போட வேண்டும். ஒரு வருடம் என்பது ஏற்கனவே குறுகிய காலமாக இருப்பதால், உங்களுடைய மொத்த காலமும், 3 வருடமாக இருப்பதால் அந்தக் கால அளவை இந்த அரசு பரிவோடு கவனிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. டி. ஆர். வேங்கடரமணன்) [1985 மார்ச் 19

ஏற்கனவே நீங்கள் அதனுடைய கஷ்டங்களை உணர்ந்துதான் அதை 1 வருடம் என்று கொண்டு வருகிறீர்கள். அந்த 1 வருடம் என்று இருப்பதை 2 வருடம் அல்லது 2 வருடத்திற்கு மேலாக இருந்தால் அது ஒரு முழு டெர்மாக இருக்கும், அதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.

அடுத்தபடியாக இங்கே கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம் பிரிவு 3 மற்றும் பிரிவு 17-ஐப் பொறுத்த விஷயங்கள்.

(முற்பகல் 11.30.)

இதிலே இந்த அரசு கொண்டு வந்துள்ள சட்டத்திற்கும் எனக்கும் ஒரு கருத்து வேறுபாடு இருக்கிறது என்பதை முதலிலே சொல்லிக் கொள்ள விழைகிறேன். பல்கலைக் கழகங்கள் என்பது அரசுக்கு உட்பட்டு இருந்தாலும் கூட, தனியாக இயங்குகிற அதிகாரம் பெற்று அட்டானமஸ்ஸாக இயங்க வேண்டும் என்பதிலே யாருக்குமே கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஏற்கனவே இந்திய அரசியல் நிர்ணயச் சட்டமானது முதன் முதலிலே அமலுக்கு வந்தபோது, சென்னை உயர்நீதி மன்றத்திலே நடந்த வழக்கின் ஒரு தீர்ப்பிலே ரிட் ஜூரிஸ்டிக்ஷன் கூட யூனிவர்சிட்டிக்குக் கிடையாது என்று வழங்கப்பட்டது. பின்னாலே வந்த தீர்ப்புகளிலே, அந்த உயர்நீதி மன்றத் தீர்ப்பு உச்சநீதி மன்றத்தில் மறுக்கப்பட்டு யூனிவர்சிட்டி என்று சொல்லப்படுகிற பல்கலைக் கழகங்கள் கூட ரிட் ஜூரிஸ்ட்டிக்ஷனுக்குள்ளே கொண்டு வரப்பட்டது.

ஆனாலும் கூட பல்கலைக் கழகங்கள் என்பது அரசினுடைய ஒரு அங்கமாக இருந்தாலும் சில காரணங்களினால், கல்வியினுடைய வளர்ச்சியையும் நன்மைகளையும் கருத்தில் கொண்டு தன்னிச்சையாக, சுயேச்சையாக இயங்க வேண்டிய அவசியம் உண்டு என்பதை இம்மாமன்றத்தில் உள்ள அனைவரும் ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இன்றைக்குக் கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய இந்தச் சட்டத்



1985 மார்ச் 19] (திரு. டி. ஆர். வேங்கடரமணன்)

திருத்தத்தின் மூலமாக பினான்ஷியல் ஆபிசர் என்று ஒரு கணக்காயரை நியமனம் செய்து, அந்தச் சட்டத்திலே அந்தப் பகுதியைப் படிக்கிறேன்—

"Section 15. The Finance Officer—(1) The Finance Officer shall be a whole-time salaried officer of the University appointed by the Syndicate for such period as may be specified by the Syndicate in this behalf and the terms and conditions of service of the Finance Officer shall be such as may be specified in the first statutes."

என்று இருக்கிறது. அதிலே எனக்கு எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை. பினான்ஷியல் ஆபிசர் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால் அதற்கு இரண்டாவது பிரிவாக

"(2) Every appointment of the Finance Officer shall be made by the Syndicate from out of a panel of three names recommended by the Government"

என்று உள்ளது. அப்படி நாம் செய்வோமானால் இந்த அரசிலிருந்து செல்கிற ஒரு நபர் தான், பல்கலைக் கழகத்தினுடைய கணக்காயராக இருப்பதன் மூலமாக, இந்த அரசு அந்தக் கணக்காயர் மூலமாக அந்தப் பல்கலைக் கழகத்தை தன்னுடைய பிடிக்குள் வைத்திருக்கக் கூடிய வாய்ப்பு இருப்பதன் காரணமாக, அந்தப் பல்கலைக் கழகம் சுயேச்சையாகவும், தன்னிச்சையாகவும் இயங்கக் கூடிய வாய்ப்புக்கள் குறையும்.

அது மட்டும் அல்லாமல் முதல் பாராவில்,

"he shall be a whole-time salaried officer"

என்று சொல்லியதன் காரணமாக; அந்தக் கணக்காயருக்காக அமைக்கக்கூடிய அந்தப் பதவி தனிப் பதவியாக இருக்க வேண்டுமென்ற காரணத்தாலே—இன்றைக்கு இந்தியாவிலே காஸ்ட் அக்கவுண்டென்டுகள் அதிகமாகியிருக்கிற நிலைமையிலே, அவர்களிடத்திலேயும் அதிகமாக வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற காரணத்தாலே, கம்பியூட்டர்கள் எல்லாம் பள்ளிக் கூடங்களுக்கு வந்து பாடப் புத்தகங்களாகிவிட்ட வளர்ந்து வரக் கூடிய நிலைமையிலே, புதிய அணுகு முறைகள் பல்கலைக் கழகத்திலே புகுத்த வேண்டிய நிலைமையில், யூனிவர்சிட்டி என்று சொல்லக் கூடிய பல்கலைக் கழகத்தினுடைய அமைப்புகள்

(திரு. டி. ஆர். வேங்கடரமணன்) [1985 மார்ச் 19

சீர்படுத்தப்பட வேண்டிய நிலைமையில், நம்முடைய அரசிலேயிருந்து அண்டர் செக்ரட்டரியோ, சூப்பிரண்டெண்டென்ட் என்ற முறையிலோ 3 பேர்களை அனுப்புவீர்களேயானால்—

They will be permanent employees of the University, but they will continue to be full-time employees of the Government and they will always be at the mercy of the Government.

என்று இருக்கும்.

அதை விட்டு நீங்கள் அனுப்புகிற அந்த நபர், அந்தப் பல்கலைக் கழகத்திலேயிருந்து நியமிக்கப்படுகிற நபராக, அந்தப் பல்கலைக் கழகத்திலே உறுப்பினராக, அங்கம் வகிப்பவராக இருக்க வேண்டும் என்ற காரணத்தாலே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை கொடுத்து இருக்கிறேன் :—

"The Finance Officer so appointed shall be a Cost Accountant within the meaning of the Cost and Works Accountant Act, 1959 (Central Act 23 of 1959).

என்று நான் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். அதனால் அரசுக்கு எந்தவிதமான பொருள் இழப்பும் ஏற்படப் போவதில்லை. ஏனென்றால்,

he shall be a full time employee of the University

என்று முதலிலேயே சொல்லப்பட்டிருக்கிறது.

காஸ்ட் அன்ட் வொர்க்ஸ் அக்கவுண்டன்ட் என்ற முறையிலே படித்து வந்த ஒரு நபர், அந்தக் காஸ்ட் அக்கவுண்ட் சட்டத்தின் கீழே தன் பொறுப்புகளை ஏற்று கடமையாற்றுகிறார். அந்தச் சட்டத்தின் டிசிப்ளின் ரூல்ஸ் மற்றும் அந்தச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டு அவர் நடக்க வேண்டிய காரணத்தினாலேயும், பல்கலைக் கழகங்கள் சீர்திருத்தப்பட வேண்டும் என்ற காரணத்தாலேயும், அதனுடைய அட்டானமஸ் ஸ்டேட்டஸ்ஸுக்கு எந்தவிதமான இடைஞ்சல்களோ, எந்தவிதமான இடையூறுகளோ ஏற்படக் கூடாது என்ற ஒரு கருத்தை நாம் கொண்டிருக்கிற காரணத்தினாலேயும், கல்லூரிகள் எல்லாம் கூட அட்டானமஸ் ஆட்சி பெற்று தன்னாட்சி பெற்று செயல்பட வந்துவிட்டக் காரணத்தாலேயும், பல்கலைக் கழகத்தை தன்னுடைய பிடிக்குள் அதிகமாக வைத்துக் கொண்டு, அவைகள் தன்னிச்சையாக இயக்குவதை தடுப்பதற்கு இந்த செக்ஷன் 15 (2), ஒரு காரணமாக அமைந்து விடக் கூடாது என்ற அச்சத்தின் காரணமாக இந்த பினான்ஷியல்



1985 மார்ச் 19] (திரு. டி. ஆர். வேங்கடரமணன்)

ஆபிசர் என்ற பதவி, இந்தப் பல்கலைக் கழகத்தின் முழு நேர அதிகாரியாக இருக்க வேண்டுமே தவிர, அரசிலிருந்து சிபாரிசு செய்கிற ஒரு அதிகாரியாக இருக்கக் கூடாது என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் கொண்டு வந்த இந்த இரண்டு கருத்துக்களுமே பல்கலைக் கழகத்தினுடைய நடவடிக்கைகளை சிறப்பாகவும் செம்மையாகவும் நல்லபடியாகவும் இருப்பதற்கு வாய்ப்புகளை பெருக்கித் தருகிற காரணத்தாலே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இதனை ஏற்றுக் கொண்டு, இந்த மன்றத்தின் மூலமாக இந்தத் திருத்தங்களை ஆமோதிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் பல்கலைக் கழகம், பாரதியார், பாரதிதாசன் பல்கலைக் கழகங்களுக்கு திருத்தச் சட்டம் ஏற்கனவே இந்த அவையிலே அறிவிக்கப்பெற்று, அவை சட்டமன்றம் கலைக்கப்பட்ட காரணத்தினாலே முழு வடிவம் பெறாத காரணத்தினாலே மீண்டும் அந்த சட்டங்கள் இங்கே கொண்டுவரப்படுகின்றன. வேறு பாணியிலே சொல்வதானால் இந்த சட்டத் திருத்தங்கள் 'பழைய பாடம், ஆனால் புதிய காப்பி' என்ற முறையில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதில், ஏற்கனவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக விவாதத்திலே கலந்து கொண்டு எங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மீண்டும் அதே சட்டம் கொண்டுவரப்பட்டு இருப்பதினால், அதே ஷரத்துக்கள் கொண்டுவரப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலும், அவைகள் எப்படி தவறானவைகள், எப்படி பல்கலைக் கழகத்திற்கு சரியாக ஒத்துவராதவைகள் என்பனவற்றை எடுத்துச் சொல்வது எதிர்க் கட்சி அணியில் இருக்கக்கூடிய எங்களுடைய கடமை ஆகும்.

அந்த அடிப்படையில் இங்கு தமிழ் பல்கலைக் கழகம் என்று சொல்கின்றபோது நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே—ஏதோ கொடுக்கப்பட்டிருக்கக்கூடிய சட்ட ஷரத்துக்களுக்கு அப்பாலே போய் பேசுவதாக கருதக்கூடாது. அந்த சட்ட ஷரத்துக்களை திரும்ப இதிலே சொல்லியிருக்கிறேன் —

உங்கள் மூலமாக அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புவது, பாரதியார் பெயரில் பல்கலைக் கழகத்தை பயன்படுத்துகிறோம், பாரதிதாசன் பெயரில் பல்கலைக் கழகத்தை பயன்படுத்துகிறோம். தமிழ் பல்கலைக் கழகம் வைத்திருக்கிறோம். மகிழ்ச்சிக்குரிய செய்திகள் தான். ஆனால் அதே நேரத்தில், 'எப்பக்க வரும் இந்த இந்தி, எத்தனை பட்டாளம் கூட்டி வரும்' என்று பாடியவர் பாரதிதாசன். அந்த இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து சிறை சென்ற தியாகிகள் இன்றைக்கு பலபேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசாங்கம் நிதி உதவி செய்யவேண்டும், மானிய உதவி செய்ய வேண்டும் என்று தெரிவித்து கழக ஆட்சியிலே உத்திரவு போடப் பட்டது. ஆனால் உச்ச நீதி மன்றத்திற்கு சென்ற காரணத் தினால் அந்த உத்தரவு அமுலுக்கு வரவில்லை. மீண்டும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி ஏற்பட்டது. ஆக வேறு விதத்திலே, அவர்களுக்கு உதவுகின்ற விதத்திலே ஒரு சட்டம் கூட நிறைவேற்றப்பட்டது. இந்தி ஆதிக்க எதிர்ப்பு வீரர்களுக்கு, சிறை சென்ற தியாகிகளுக்கு ரூ. 150 வழங்குவோம் என்ற ஒரு சட்டம் கூட அந்த நேரத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

உங்கள் மூலம் நான் கேட்க விரும்புவது, தமிழ் பல்கலைக் கழகம் என்று சொல்லிவிட்டு, பாரதியார் பெயராலும், பாரதி தாசன் பெயராலும் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு இருக் கிறோம் என்று சொல்லிவிட்டு, அந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு வீரர்களுக்கு, தமிழ் தாயை காப்பதற்கு களம் சென்ற அந்த நபர் களுக்கு, தியாகச் சுடர்களுக்கு, நம்முடைய அரசாங்கம் நிதி உதவி மற்றும் மானியம் வழங்குகின்ற காரியத்தை செய்யாதது எந்தவிதத்திலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

இங்கே ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டது என்று கருது கிறேன். அந்தச் சட்டத்திற்கு ஏதாவது மரியாதை இருக்கிறதா என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அது வெறும் காகித மாக, கனவாக, கற்பனையாக போய், ஒரு நாள் பத்திரிகை செய்த விளம்பரமாக இருப்பது இந்த அரசாங்கத்திற்கு எந்தவிதத்தி லும் கண்ணியமாக இருக்காது என்பதை நினைவுபடுத்த விரும்பு





கிறேன். முதலில் இந்த இந்தி ஆதிக்க எதிர்ப்பு வீரர்களுக்கு, சிறை சென்ற தியாகிகளுக்கு, அமைச்சர் மானியம் கொடுக்கக் கூடிய அந்த காரியத்தை உடனடியாக அமுல் நடத்தினால்தான், நீங்கள் தமிழ் பல்கலைக் கழகம் என்று சொல்வதற்கு ஒரு அர்த்தம் இருக்க முடியும் என்பதை இந்த நேரத்திலே, இந்த சட்ட தொடர்பிலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இரண்டாவதாக, இங்கே ஏற்கனவே சொல்லப்பட்ட கருத்து தான். பல்கலைக் கழகத்திலே ஆட்சிக் குழு என்ற சிண்டிகேட், ஒரு ஆலோசனை குழு என்ற செனேட், ஒரு கல்வி விவரங்கள் குறித்து ஆலோசனை சொல்லுகின்ற ஸ்டேண்டிங் கமிட்டி— நிலைக்குழு 'ஸ்டேண்டிங் கமிட்டி ஆன் அக்கடமிக் அஃபயர்ஸ்' என்று சொல்லக்கூடிய கமிட்டியும் இருக்கிறது. இவைகள் தான் பல்கலைக் கழகத்தை நிர்வாகம் செய்கின்றன. ஆனால், இந்த அரசு இங்கே ஒரு விஸ்தீரணமான சட்டத்தை கொண்டு வந்திருக் கிறது. அதை கடந்த ஏழாண்டுகாலமாக தொடர்ந்து புதுப்பித் துக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கே எனக்கு முன்னதாக பேசிய இந்திய காங்கிரஸ் சட்ட மன்ற உறுப்பினர் அவர்கள் கோடிட்டு காட்டியதைப் போல், சிண்டிகேட்டாக இருந்தாலும், செனேட்டாக இருந்தாலும், ஸ்டேண்டிங் கமிட்டி ஆன் அக்கடமிக் அஃபேர்ஸ்—ஆக இருந்தா லும், இந்த நிர்வாக பொறுப்பை பார்ப்பவர்கள், ஆறு ஆண்டு காலத்திற்கு மேலாக பதவி வகிக்கக்கூடாது என்று இந்த சட்டத் திலே சொல்லியிருப்பது எந்தவிதத்திலே நியாயம் என்று தெரிய வில்லை. 1978 ஆம் ஆண்டு இந்த ஆட்சி வந்தபோது முதன் முதலாக இந்தச் சட்டம், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்

(முற்பகல் 11-40)

திலே கொண்டுவரப்பட்டது. அப்போது எங்கள் கட்சியி னுடைய சிண்டிகேட் உறுப்பினராக பழனிவேல்ராஜன் இருந் தார்கள். அந்த நேரத்திலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போது, நான் இங்கே எதிர்ப்பு தெரிவித்தேன். நான் அமைச்சர் அவர்களுக்கு நினைவுபடுத்தவிரும்புகிறேன், இது பல்கலைக் கழக மசோதாவா? அல்லது பழனிவேல் ராஜனின் பதவி வகிப்பிற் காகக் கொண்டுவரப்பட்ட மசோதாவா என்று நான் பேசியதாக எனக்கு ஞாபகம்.

ஆக காமராஜ் பல்கலைக் கழகத்திலே முதன்முறையாக இந்த சிண்டிகேட், செனட் என்று இருப்பது போல, ஸ்டேண்டிங் கமிட்டி ஆன் அகாடமிக் அஃபேயர்ஸ் என்ற இந்தக் கமிட்டியிலே ஆறு ஆண்டுகளுக்கு மேல் பதவி வகிக்கக் கூடாது என்ற சட்டத் திருத்தம் ஆரம்பத்திலே கொண்டுவரப்பட்டது. அப்போதே நான் எழுந்து கேட்டேன். அப்படியானால் அந்த அமைப்புகளிலே பதவிப் பொறுப்பில் இருக்கிறவர்கள் 6 ஆண்டுகளுக்கு மேல் இருக்கக் கூடாது என்று சொன்னால், காமராஜ் பல்கலைக்கழகத்திற்கு மட்டும் தான் இது கொண்டுவரப்பட்டதா? அப்படியானால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செனட் உறுப்பினராக, ஆயுள் மெம்பராக இருக்கிறார்களே, அதற்கு இந்த ஆறு ஆண்டுகாலம் வாராதா என்று நான் கேட்டேன். அப்போது அமைச்சரவர்கள் அதை ஒப்புக்கொண்டு, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு இது கொண்டுவரப்படும், சென்னைப் பல்கலைக் கழகத்திற்கும் இந்தச் சட்டம் கொண்டுவரப்படும் என்று உறுதியளித்தார்கள். ஆகையால் மதுரையிலே ஆரம்பித்த இந்தக் காரியம் அதோடு நின்றுவிடக் கூடாது என்பதற்கு, அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக இருந்தாலும், சென்னைப் பல்கலைக்கழகமாக இருந்தாலும், இன்றைக்கு உங்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட பல்கலைக்கழகங்களில் எல்லாம், இந்த மாதிரியான ஒரு சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

ஆனால் ஒன்றை நான் கேட்க விரும்புகிறேன். இப்படி நீங்கள் தொடர்ந்து பதவி வகித்து வருவதால், என்ன குடிமுழுகிப் போய்விடும் என்று நான் கேட்க விரும்புகிறேன்? நீங்கள் சொல்வதன் காரணம், ஒருவர் ஆறு ஆண்டுகளுக்கு மேல் அவர் பதவியில் இருப்பாரேயானால், அவர் கரை படிந்த கரங்களுக்குச் சொந்தமாகிவிடுவார். லஞ்சப் பேர் வழியாக மாறிவிடுவார், ஆக வெஸ்டட் இன்ட்டரெஸ்ட் அதிலே வந்துவிடும் என்று சட்டத்திலே நீங்களே சொல்லியிருக்கக் கூடிய காரணம்: இதிலே வெஸ்டட் இன்ட்டரெஸ்ட், விருப்புவெறுப்பு ஏற்பட்டுவிடும், பொது நோக்கம் வராது என்பதனால், ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஒருவர் இந்தப் பொறுப்புகளுடைய பதவிகளில் இருக்கக் கூடாது என்று நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய 'ஆப்ஜெக்ட் அண்டு ரீசன்ஸ்-லே' தெளிவாகச் சொல்லியிருக்கிறீர்கள்.





நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து தப்பாகக் கருதக் கூடாது. உங்கள் மேல் எனக்கு மரியாதை உண்டு. அமைச்சர் பொறுப்பிலே இருக்கக் கூடிய நீங்கள் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாமா? வெஸ்டட் இன்ட்டரெஸ்ட் வரும் என்ற வாதம் என்னவாயிற்று? லஞ்சம் வாங்குகின்ற வாய்ப்பு ஏற்படும் என்ற வாதம் என்னவாயிற்று? ஆனால் உங்கள் தூய்மையை நான் சந்தேகிக்கவில்லை. நான் கேட்கிறேன், அமைச்சர் பொறுப்பிலே இருப்பவர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம், அதே போல நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாம். அதை விட்டுவிடுங்கள். நம்முடைய பல்கலைக் கழகங்களுக்கு வருவோம். எக்ஸ்-அஃபிசியோ மெம்பர்ஸ். அதிலே யார் பதவி வகித்து வருகிறார்கள்? டைரக்டர் ஆப் மெடிகல் எஜுகேஷன் அவர்கள் பதவி வகிக்கிறார்கள். அவர்கள் மட்டும் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கலாமா? அவர் என்ன புனித மனிதரா அல்லது தேவரா அல்லது பூலோகத்திலிருந்து வந்த தேவதையா, தேவரா? அவர் தவறே செய்ய மாட்டார்களா? உதாரணத்திற்காகச் சொல்கிறேன்; எக்ஸ்-அஃபிசியோவிற்கு இந்தச் சட்டத்தை நீங்கள் வைத்திருக்கிறீர்களா என்றால் இல்லை. கவர்னர் யாரை வேண்டுமானாலும் நியமிக்கலாம் அந்தப் பொறுப்புக்கு. அவர் எவ்வளவு ஆண்டுகாலமானாலும் இருக்கலாம். நான் உங்களைக் கேட்க விரும்புகிறேன். இந்தப் பொறுப்புகளை வகிப்பதற்காக வருபவர்கள், தகுதியானவர்கள், திறமையானவர்கள், தேர்தலில் நின்றுதான் செனட், சிண்டிகேட்டிற்கு வருகிறார்கள். அந்தப் பதவிக்காலத்தை எவ்வளவு என்று கட்டுப்படுத்துவது அவ்வளவு சரியானதல்ல.

இன்னும் மற்ற மாநிலங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் இதுபோன்ற சட்டம் இருக்கிறதா என்று எனக்குத் தெரியவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன்; ஆறு ஆண்டுகளுக்கு மேல் இந்தப் பொறுப்புகளில் பதவி வகிக்கக் கூடாது என்று அமைச்சர் சற்று முன் சொன்னார்கள். ஆனால் இதிலே என்ன வேடிக்கை என்றால், இப்போது ஆறு ஆண்டுகளையும் மீறி, இன்னும் பல பேர் பதவி வகித்துக் கொண்டிருக்கிறார்கள். பாலகிருஷ்ணன்

பதவி வகிக்கிறார், ஷண்முகநாதன், பச்சையப்பன் கல்லூரி முன்னாள் முதல்வர், கவர்னரால் சிண்டிகேட் மெம்பராக நியமிக்கப்பட்ட ஒருவர் இன்னும் பதவி வகிக்கிறார். ஆறு ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்கக் கூடாது என்றால், முன்னாள் பச்சையப்பன் கல்லூரி முதல்வர், மரியாதைக்குரிய சண்முகநாதன் 15 ஆண்டுக்காலமாக சிண்டிகேட் உறுப்பினராக இருக்கிறார்கள். உங்களுடைய சட்டம் அவர்களை என்ன செய்தது? உங்களுடைய சட்டம் அவர்கள் மேல் பாயமுடிந்ததா?

இன்னும் சொல்லப்போனால், பாலகிருஷ்ணன் ஆறு ஆண்டுகளுக்கு மேல் இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொல்வார்கள், பாலகிருஷ்ணன் மட்டுமா இருக்கிறார்கள், சண்முகநாதன் மட்டுமா இருக்கிறார்கள், இன்னும் என்னிடம் அது பற்றி ஒரு பட்டியலே இருக்கிறது, அதைத் தருகிறேன் என்று அமைச்சர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்வார்கள். அந்தப் பட்டியல் பற்றி எனக்குத் தெரியும். ஆக நான் கேட்கிறேன், நீங்கள் போட்ட சட்டத்திற்கே, இன்றைக்கு விரோதமாக கவர்னர் அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேல் பதவியில் இருக்கலாம் என்று அதை நீட்டிக்கக் கூடிய நிலையில் ஷண்முகநாதன், பாலகிருஷ்ணன் பதவியில் இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆக பதவிகளில் ஆறு ஆண்டுகாலத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்று நீங்கள் போடக் கூடிய சட்டமே, கவர்னரால் மதிக்கப்படவில்லை. நம்முடைய கவர்னரைப் பற்றி பேசுவது தவறு. 'கவர்னர் இஸ் அன் எக்சிகியூடிவ்'. அரசாங்கத்தினுடைய நிர்வாகத்தில் ஒரு தலைவர். நான் கேட்கிறேன், நீங்கள் போட்ட சட்டத்திற்கு மரியாதை இல்லாத நிலைமை ஏற்பட்டிருப்பது வருத்தத்திற்குரியது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.





நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டம் நீதிமன்றத்தில் மிகக் கடுமையாக, இந்தச் சட்டத்தின் ஷரத்துக்கள் மிகக் கடுமையாக விமர்சிக்கப்படுகின்றன. அல்லாடி போன்ற சட்ட மேதைகள் எல்லாம் இருந்தார்கள். தொடர்ந்து சட்டமன்ற பேரவை மேலவை உறுப்பினர்களாக இல்லாதவர்கள் கூட சிண்டிகேட் செனட் ஆகியவற்றில் தொடர்ந்து இருக்கிறார்கள், அப்படி அவர்கள் நியமிக்கப்படுகிற வாய்ப்பைக் கூட உங்களுடைய சட்டத்திலே கொடுத்திருக்கிறீர்கள் என்று சொன்னால் உங்களுடைய சட்டத்திலே குறைபாடு இருக்கிறது. உங்களுடைய சட்டத்திற்கு அர்த்தமே தெளிவாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய சிரிப்பின் அர்த்தம் எனக்கு விளங்குகிறது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. துரைமுருகன் இன்னும் சிண்டிகேட் உறுப்பினராக இருக்கிறார். நீதிமன்றம் அவர்களுக்கு தடையுத்தரவு மூலம் அவர்கள் நீடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறது. 6 ஆண்டுக் காலம் வரை இருக்கலாம் என்பதை நீதிமன்றத்திலே விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆறு ஆண்டுக் காலம் என்பதை இதற்கு மட்டும் கட்டுப்படுத்துவது சரியல்ல.

நம்முடைய பல்கலைக் கழக மானியக் கமிஷன் கருத்துக்களின் அடிப்படையில் தான் இந்தத் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன என்று சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. துணைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் அனுமதியோடு மதிப்பிற்குரிய பல்கலைக் கழகத் தலைவர் டாக்டர் மாதுரி ஆர். ஷா அவர்கள் பேசிய பத்திரிகை குறிப்பு—அது டைம்ஸ் ஆப் இண்டியா பத்திரிகையிலே பிரசுரம் ஆகியிருக்கிறது—வெளியாகியிருக்கிறது, நம்முடைய அமைச்சர் அவர்களைப் பற்றிய குறிப்பு இருக்கிறது, கோயம்புத்தூரில் பேசிய பேச்சு அது, அதை நீங்களும் படித்திருக்கக் கூடும், அந்த மானியக் குழுத் தலைவர் சொல்கிறார்,

"The U.G.C. would be able to release grants to these Universities only if the amendment was made. She stated that the Acts of the two Universities gave wide powers to the Pro-Chancellor which the U.G.C. felt, would erode the autonomy of the Universities. . . . . ."

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 19

என்று. இதற்கு என்ன பொருள் என்று கேட்டால் பல்கலைக் கழகங்களுக்குத் திருத்தச் சட்டங்கள் கொண்டுவந்தால்தான் மானியக் குழு நிதி வழங்கும் என்று சொல்லிவிட்டு கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டங்கள் எப்படி இருக்கின்றன என்று கேட்டால் புரோசான்சலர்க்கு அதிகமான அதிகாரங்களைக் கொடுக்கிற வகையில் அமைந்திருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி என்றால் புரோசான்சலர் மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் தான். அவருடைய கைகளிலே அதிகமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டை அந்தப் பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் குறிப்பிட்டு இருக்கிறார்.

இன்னொரு முக்கியமான விஷயம், திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய செயலாளரோ அல்லது நாங்களோ சொல்லியிருந்தால் நீங்கள் கோபித்துக் கொள்வீர்கள். ஆனால் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

".. .. .. She said that while she had nothing against the present Education Minister who is Ex-officio Pro-Chancellor for the two Universities .. .. .."

என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது இருக்கிற கல்வியமைச்சர்தான் இணைவேந்தர். அவருக்கு விரோதமாக சொல்வதாகக் கருதக் கூடாது என்ற முன்னுரையோடு சொல்லி விட்டு மேலும் அவர்கள் சொல்கிறார்கள்.

" . . . . . she felt that the provision giving wide powers to the Pro-Chancellor to fill up Syndicate and Senate Bodies would be misused to convert the Universities into subordinate Government departments."

என்று தெளிவாகச் சொல்கிறார்கள். கல்வியமைச்சருக்குப் பல்கலைக் கழகங்களிலே அதிக அதிகாரங்கள் கொடுக்கக் கூடிய முறையிலே பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக் கழகம் ஆகியவற்றுள் சட்டத் திருத்தங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லிவிட்டு உண்மையான தன்னாட்சி, பல்கலைக் கழகங்களுக்கு இருக்கிறதா என்றால் அரசாங்கத்தினுடைய சாதாரண [illegible] டிபார்ட்மெண்ட்களாகத்தான் இரண்டு பல்கலைக் கழகங்களும்



1985 மார்ச் 19] [திரு. அ. ரகுமான்கான்]

மாற்றப்படக் கூடிய அபாயம் இருக்கிறது என்று பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் டாக்டர் மாதுரி ஆர். ஷா அவர்கள் மார்ச் 7 ஆம் தேதி என்று கருதுகிறேன், குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக எதற்கு கோடிட்டுக் காட்டுகிறேன் என்று

(முற்பகல் 11-50)

சொன்னால் இன்றைக்கு ஒருபுறத்தில் பல்கலைக் கழகத்தினுடைய தன்னாட்சி இல்லாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஒருபுறத்தில் இவர்கள் சொல்லுவதுபோல் புரோசான்சிலருக்கு அதிகாரங்கள், ஒருபுறத்தில் அரசாங்கத்தின் தலையீடு இருக்கிறது. இன்னொரு புறத்தில் வேடிக்கை என்ன என்று கேட்டால் இவர்களிடத்தில் இருக்கக்கூடிய அதிகாரத்தை கவர்னர் பறிக்கின்ற விதத்தில் அங்கே இருக்கின்றது. இதிலே இரண்டு அம்சங்களை நாம் பார்க்க வேண்டும்.

இதிலே நான் சொல்ல விரும்புவது, பல்கலைக் கழகத்தினுடைய இந்த அமைப்புகள் பல்கலைக் கழகத்தை நிர்வகிக்கக் கூடிய இந்த அமைப்புகள் ஜனநாயகப்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர் பிரதிநிதிகள் அடங்கிய சபையாக அது இருக்க வேண்டும். அதற்கு மாறாக நியமனம் செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகப்படுத்தப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது நிர்வாக பொறுப்பில். உதாரணமாக சொன்னால் சிண்டிகேட் நிர்வாகத்தை நிர்வகிக்கக் கூடிய அமைப்பு பல்கலைக் கழகத்தில் மொத்தம் 18 பேர் உறுப்பினர்கள். இதில் 7 பேர் அரசாங்கத்தால் நியமிக்கப்படுகிறார்கள், நாமினேஷன் முறையில். நான் கேட்கிறேன். அமைச்சரின் விருப்பு, வெறுப்புக்கு தகுந்தபடி அரசியல் உணர்வுகளுக்கு தகுந்தபடி அரசியல் வெட்ப தட்ப சூழ்நிலைக்கு ஏற்ப பிறகு ஏழு பேரை நியமிக்கக் கூடிய ஒரு காரியம் இருந்தால் அதிகார வாடை அங்கே வீசுமே தவிர, அதிகார பற்று அற்ற, அரசியல் பற்று அற்ற தூய்மையான கல்வி உணர்வை வெளிப்படுத்துவதற்கான பங்கை நிச்சயமாக குறைப்பதற்கு நீங்கள் வழி செய்கிறீர்கள் என்று நான் குற்றம் சுமத்த விரும்புகிறேன். அதை போலவே, எக்ஸ் அபிஷியோ மெம்பர்ஸ் அரசாங்கத்தால் தான் நியமனம் செய்யப்படுகிறார்கள். அதுபோலவே "Experts in academic field" அந்த

துறையில் வல்லுநர்கள் யாரால் நியமிக்கப்படுகிறார்கள் என்றால் கவர்னர் அவர்களாலும் உங்களாலும் நியமிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது என்று சொல்லுகிறார்கள்.

அதுபோலவே பிளானிங் போர்ட்ஸ் என்று வருகிறது. இது மால்கம் ஆதிசேசய்யா அவர்கள் துணை வேந்தராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட அற்புதமான திட்டம். இதை மறுப்பதற்கு இல்லை. வரவேற்கிறோம். இதில் 8 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இந்த 8 பேரையும் நியமிக்கக் கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கிறது? கவர்னருக்கு தான் இருக்கிறது. இன்னும் தெளிவாகச் சொன்னால், நிதித் துறை கண்காணிப்பாளரை நியமிக்க ஒரு பேனலை அரசு அனுப்புகிறது. 3 பேர் கொண்ட ஒரு பட்டியலை அனுப்புகிறது. அதிலிருந்து தான் சிண்டிகேட் அந்த பைனான்ஸ் ஆபிஸரை நியமிக்க வேண்டும். ஆக இதில் மிக தெளிவாக தெரிவது என்ன என்று கேட்டால் ஒருபுறத்தில் புரோசான்சிலர் துணை வேந்தராகிய உங்களுடைய அதிகாரத்தில் பல்கலைக் கழகத்தின் தன்னாட்சி பாதிக்கப்படுகிறது. இன்னொரு புறத்தில் கவர்னர் அந்த அதிகாரங்களை எடுத்துக் கொள்ளுவதால் பல்கலைக் கழகத்தின் சுயாட்சி பாதிக்கப்படுகிறது. இது மட்டும் அல்ல, இதிலே தெளிவாக சொல்லியிருக்கிறார்கள் கவர்னர் பல்கலைக் கழகத்தினுடைய எந்த நடவடிக்கைகளிலும் தலையிடலாம். என் என்றால் அவர்தான் வேந்தர். அவர்தான் சான்சிலர். சிண்டிகேட் கூட்டம், செனட் கூட்டம் நடக்க வேண்டுமானால் இன்னும் சொன்னால் கவர்னர் அப்புருவல் இல்லாமல் இந்த கூட்டங்களை நடத்துகிற முழு அதிகாரம் நிர்வாக பொறுப்பில் இருப்பவர்களுக்கு கிடையாது.

ஒரு உறுப்பினருடைய டிஸ்குவாலிபிகேஷன், தகுதி அற்றவர் என்பதை தீர்மானிக்கின்ற அதிகாரம் பல்கலைக் கழகத்தினுடைய குழுவுக்கு மட்டும் அல்ல, துணை வேந்தருக்கு மட்டும் அல்ல, துணை வேந்தர் என்ற முறையில் நீங்கள் செய்தாலும் அதை உடனே கவர்னருக்கு துணை வேந்தர் ரெப்பர் செய்ய வேண்டும். ஆக நான் கேட்கிறேன், அதிலே கவர்னருடைய இறுதி தீர்ப்பு தான் முடிவு ஆகும் என்று சொல்லப்படுகிறது.





ஆகவே ஒருபுறத்தில் நீங்கள் அதிகாரத்தை பெற முயற்சி செய்கிறீர்கள். இன்னொரு புறத்தில் கவர்னருக்கு அந்த அதிகாரம் மாற்றம் செய்யப்படுகிறது. ஆக மாநில பல்கலைக் கழகத்தினுடைய தன்னாட்சி, சுயாட்சி ஜனநாயக போக்கு பறிக்கப்பட்டு இன்றைக்கு ஒருபுறத்தில் அரசாங்கத்தை சேர்ந்த உங்களாலும், இன்னொரு புறத்தில் அரசாங்கத்தினுடைய நிர்வாக துறையில் கவர்னராலும் தடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இருப்பது மிகவும் மோசமானது. இன்னும் தெளிவாகச் சொன்னால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுநர் பதவி தேவை இல்லை என்று தெளிவாக நாங்கள் கருதுகிறோம். அவர் மத்திய அரசு ஏஜென்சி என்று கருதுகிறோம். அதேநேரத்தில் ஜாதி ஒழிக்கப்படுகின்ற வரைக்கும் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் சொல்லியது போல் கவர்னர் பதவி ஒழிக்கப்படுகின்ற வரைக்கும் அந்த நடைமுறை அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டு இருக்கிற முறைகளை அனுமதித்து தான் தீர வேண்டும்.

ஆனால் அதற்காக இந்த அரசு அதிகாரத்தில் ஒரு பகுதியை தாங்கள் வைத்துக் கொண்டும், அங்கு இருக்கக்கூடிய பிரதிநிதிகளுக்கு கொடுக்காமல் ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் தராமல், பல்கலைக் கழகத்தை ஜனநாயகப்படுத்தாமல் ஒருபுறத்தில் அதிகாரத்தை நீங்கள் கபளிகரம் செய்வதும், இன்னொரு புறத்தில் அதிகாரத்தை கவர்னருக்கு கொடுத்து விடுவதன் மூலம் மத்திய அரசின் ஆதிக்கத்திற்கு பல்கலைக் கழகத்தினுடைய கதவு திறந்துவிடக் கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்பதை மெத்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால், கவர்னருக்கு இந்த அதிகாரங்கள் அதிகமாகத் தரப்படுமே யானால், அதிலே மிகப் பெரிய ஆபத்து, நாளைக்குப் பல்கலைக் கழகங்களிலே மத்திய சர்க்காராலே இந்தி கூட பாட மொழியாக, பயிற்சி மொழியாக, எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதைப் போல, எங்கும் இந்தி, எதிலும் இந்தி என்ற நிலை உருவாகாது என்பதைப் பற்றி என்ன நிலைமை இருக்கிறது?

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 19

ஆகவே, கவர்னருக்கு அதிகாரத்தைக் குவிப்பதும், இன்னொரு புறத்திலே பல்கலைக் கழகத்தை ஒரு ஆளுங்கட்சியினுடைய கிளைக் கழகமாக மாற்றுகின்ற கொடுமையும் நிகழாமல் இருக்க வேண்டுமேயானால், உங்களுடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்; கவர்னருடைய அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதை இந்த நோக்கிலே, இந்தத் திருத்த மசோதாவிலே தெளிவாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு அமைச்சரவர்கள் போன தடவை சட்டசபைக் கூட்டத் தொடரிலே நான் எழுப்பிய கேள்விக்கு அவர்கள் பதில் சொல்லவில்லை. நான் மீண்டும் அந்தக் கேள்வியை நினைவுபடுத்த விரும்புகிறேன். இன்றைக்கு, டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் அவர்கள் எக்ஸ்-அஃபிஷியோ மெம்பராக இருக்கிறார். உதவி சபாநாயகர் அவர்கள், நான் உங்கள் மூலமாக நம்முடைய அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு பாலிடெக்னிக்குகள், ஃபார்மசிகள், என்ஜினியரிங் கல்லூரிகள், செல்ஃப்-ஃபைனான்சிங்—சுய நிதி வாய்ப்புத் திட்டத்தின் கீழே துவக்குகிறோம் என்று சொல்லிக் கொண்டு கொள்ளையடிக்கின்ற, அற்புதமாக இலாபம் சம்பாதித்து வருகின்ற நிலையங்களாக நடந்து கொண்டிருக்கின்றன. இதிலே அவர்கள் முறைகேடாக நடந்து கொள்வதற்கு நீங்கள் அங்கீகாரம் வழங்குவதைப்போல அரசாங்கம் பர்மிஷன் கொடுத்திருக்கிறது. என்ஜினியரிங் கல்லூரி, பாலிடெக்னிக்குகள் துவக்கப்படுவதற்கு என்பதைப் பற்றி நான் ஆதாரத்தோடு சொல்லி அது இந்தச் சபையிலே பதிவாகியிருக்கிறது.

ஒரு நபர், எந்தச் சொத்தும் கிடையாது, எந்த வசதியும் கிடையாது, ஆனால் அந்த நபர் சுயா-தா எஜுகேஷன் டிரஸ்ட் என்ற ஒரு டிரஸ்டை ஏற்படுத்தி, உங்களுடைய படத்தைப் பத்திரிகையிலே போட்டு, முதலமைச்சரின் படத்தைப் போட்டு கோடி வணக்கங்கள் தெரிவித்து, அந்த மூன்று பாலிடெக்னிக்குகளை மூன்று இடத்திலே துவக்கியிருக்கிறார் தென்கரையிலே தங்கமுத்து பாலிடெக்னிக், பெரிய



1985 மார்ச் 19] [திரு. அ. ரகுமான்கான்]

குளம். மானாமதுரையிலே செங்களத்தூர் காமாட்சியம்மாள் பாலிடெக்னிக், சிதையம்மாள் பாலிடெக்னிக், ஆக மூன்று பாலிடெக்னிக்குகளை அந்த டிரஸ்ட் போகஸ், போஜுர், அது இருக்க வேண்டிய அடிப்படையில் இல்லை என்பதுதான் என்னுடைய வாதம். அதை அமைச்சரவர்களுக்கும் தெரியப்படுத்தினேன். போன சட்டசபைக் கூட்டத் தொடரிலே நினைவுபடுத்தி, சபைக் குறிப்பிலே அது ரெக்கார்ட் ஆகியிருக்கிறது.

**திரு. இரா. முத்தையா**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே விவாதிக்கப்படுவது பல்கலைக் கழகம் பற்றிய சட்ட முன்வடிவு. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பாலிடெக்னிக்குகளைப் பற்றி இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். பாலிடெக்னிக்குகள் இந்தப் பல்கலைக் கழக வரையறைக்குள்ளே வராது. அதுவும், இந்தச் சட்ட முன்வடிவிலே பேசுகின்றபொழுது சொல்வது தேவையா என்பதை தாங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: சட்ட முன்வடிவை ஒட்டியே பேச வேண்டும். பல்கலைக் கழகத்தைப் பற்றிப் பேசலாம்; பாலிடெக்னிக்குகளைப் பற்றி இந்த பில்லிலே பேசுவது சரியாக இருக்காது.

**திரு. அ. ரகுமான்கான்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, செல்ப் பைனான்சிங் இன்ஸ்ட்டிடியூஷன் சம்பந்தமாகச் சொல்லுகின்றபொழுது இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குப் பல என்ஜினியரிங் கல்லூரிகளுக்கு அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது. ஏறக்குறைய 17 கல்லூரிகள் என்று கருதுகிறேன். இந்த 17 கல்லூரிகளில் இன்றைக்கு பாலிடெக்னிக்காக இருந்தாலும், என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும், பார்மசியாக இருந்தாலும், டிப்ளமோவாக இருந்தாலும், இவ்வளவு ரூபாய் கொடுத்தால்தான்—5,000 ரூபாய், 10,000 ரூபாய், 15,000 ரூபாய் என்று டொனேஷன் கொடுத்தால்தான் படிக்க முடியும்; இடம் கிடைக்கும் என்ற துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது. ஏழை மக்களாலே அந்தக் கல்வியைப் பெற முடியாது.

136371

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 19

இருக்கிறது. விலை போட்டு வாங்கவா முடியும் கல்வி என்று பாவேந்தர் பாடினார். ஆனால் இன்றைக்கு விலை போட்டால் தான் வாங்க முடியும் என்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதிலே இன்னொரு வேடிக்கை என்னவென்றால், 50 பர்சென்ட் இட ஒதுக்கீடு அவர்களுக்கு; அவர்கள் இஷ்டம்போல், வாணிகம்போல பேரம் பேசி இன்றைக்கு அந்த நிறுவனங்களின் மூலம் கல்விக் கண் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு கொள்ளையடிக்கின்ற சூழ்நிலையை இந்தச் சர்க்கார் கட்டுப்படுத்த வேண்டும்; அதை ஒரு முடிவிற்குக் கொண்டு வர வேண்டும் என்பதை மாணவ சமுதாயத்தின் சார்பாக இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதிலே ஒரேயொரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். நீங்கள்—சர்க்கார் அனுமதி கொடுத்ததன் காரணமாக இவ்வளவு முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்பதற்கு ஒரு சின்ன உதாரணம். சென்னை உயர் நீதிமன்றத்திலே நீதிபதிகள் கொடுத்த தீர்ப்பிலேயிருந்து நான் கோடிட்டுக் காட்டாவிட்டாலும் நீங்கள் படித்திருக்கக் கூடும். தஞ்சை மாவட்டத்திலே வல்லம் புதூரில் ஒரு என்ஜினியரிங் கல்லூரி 1984 இல் துவங்கப்பட்டது. 90 மாணவர்கள் படித்துக் கொண்டிருக்கிறார்கள். இதிலே என்ன வேடிக்கை என்றால், அவர்கள் இப்பொழுது பரிட்சை எழுத வேண்டும்; ஆனால் பரிட்சை எழுத முடியாது. ஏன் எழுத முடியாது? இன்றைக்கு யூனிவர்சிட்டி அஃபிலியேஷன்—அங்கீகாரம் பாரதிதாசன் பல்கலைக் கழகம் அங்கீகாரம் வழங்கவில்லை.

(நண்பகல் 12-00)

அங்கீகாரம் ஏன் வழங்கவில்லை, அங்கே பயிலக்கூடிய இன்ஜினியரிங் கல்லூரி மாணவர்கள் பயிலுவதற்கான வசதிகள் இல்லை. இட வசதிகள், சோதனைக் கூடங்கள் இவையெல்லாம் சரியாக இல்லை என்று சொல்லி கலெஜியேட் எஜுகேஷன் டைரக்டர் மூலம் இதைப் பரிசீலித்து அவர்களே அங்கீகாரம் தர முடியாது என்று சொல்லி நீதி மன்றத்தில் வழக்கு போட்டு நீதிபதி அந்த இன்ஸ்பெக்ஷன் ரிப்போர்ட்டைக் கோர்ட்டுக்குக் கொண்டு வா என்று சொல்கின்ற நிலைமை இருக்கின்றது.



1985 மார்ச் 19] [திரு. அ. ரகுமான்கான்]

நான் கேட்கிறேன், அந்தத் தஞ்சையிலே இருக்கக்கூடிய வல்லம்புதூர் இன்ஜினியரிங் கல்லூரிக்கு அனுமதி கொடுக்கின்ற போது இந்த வசதிகள் எல்லாம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியாதா? பல கல்லூரிகளுக்கு இவ்வாறு அனுமதி கொடுக்கின்றபோது இந்த நிலைமைகள் எல்லாம் உங்களுக்குத் தெரியாதா? இப்படிப்பட்ட நிலைமை காரணமாக இன்றைக்கு யாருடைய தலையெழுத்தோடு நீங்கள் விளையாடுகிறீர்கள்? 90 மாணவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தங்கள் வாயைக் கட்டி, வயிற்றைக் கட்டி பிள்ளைகளை கல்லூரிக்கு அனுப்பி மகன் பட்டதாரியாக வருவான், இன்ஜினியராக வருவான் என்று எண்ணிக் கொண்டிருக்கிற நிலையில் இந்தப் பிரிவின் காரணமாக அந்த இன்ஜினியரிங் கல்லூரியில் பயிலுகின்ற 90 மாணவர்களும் பரீட்சை எழுத வேண்டிய நேரத்தில் பரீட்சை எழுத முடியாத நிலை ஏற்பட்டிருப்பதற்கு யார் பொறுப்பு என்பதை இந்த நேரத்தில் நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக்கூடிய கல்வி அமைப்பின் படி கோவை மருத்துவக் கல்லூரி 17 ஆண்டுக் காலமாக கோயம்புத்தூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தைப் பற்றி வேண்டுமென்றே குறை சொல்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் உங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். இன்டியன் மெடிக்கல் கவுன்சில் அதற்குரிய அங்கீகாரத்தை ரத்து செய்யப் போகிறோம் என்ற முடிவுக்கு வந்து தமிழகத்தைச் சேர்ந்த சில உறுப்பினர்களின் முயற்சி காரணமாக தப்பித்தோம் பிழைத்தோம் என்ற நிலை இருக்கின்றது. ஆனால் இன்றைக்கு—இது கல்வியில் வருகின்றது—இருக்கக்கூடிய அமைச்சர் திரு. ஹன்டே அவர்கள் பயப்பட வேண்டாம், அஞ்ச வேண்டாம் என்று ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். போதுமான அளவுக்கு சாதனங்கள். . . . .

[1985 மார்ச் 19

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நீங்களே சொல்கிறீர்கள், அதற்கு வேறு அமைச்சர் என்று. அப்படியிருக்கும்போது ஏன் வேறு பிரச்சினைகளை இங்கே பேச வேண்டும்? 20 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மட்டும் பேசி சீக்கிரம் முடித்துவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எஜுகேஷன் என்று சொல்லுகின்ற அமைப்பைப் பொறுத்தவரையில் குறிப்பாக மருத்துவக் கல்லூரிக்கு என்று ஒரு அமைச்சர் தனியாக இருந்தாலும் கூட பாரதியார் பல்கலைக் கழகத்தில் இந்த மருத்துவக் கல்லூரி இணைக்கப் பட்டிருக்கின்றது. தாங்கள் சட்டம் படித்தவர்கள். எனவே தாங்கள் அறிவீர்கள். பாரதியார் பல்கலைக் கழகத்தில் கோவை மருத்துவக் கல்லூரி இணைக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே நான் சொல்வது இந்தச் சட்டத்திலே வருகின்றது.

**திரு. இரா. முத்தையா**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்ட முன்வடிவு பல்கலைக் கழகத்தினுடைய செனட், சிண்டிகேட் உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பற்றி வருகின்றது. அப்படிப்பட்ட பிரச்சினை பற்றித்தான் இதிலே வருகின்றது. ஆனால் இவர் அஃபிலியேஷன் மற்றும் எல்லா வகையான விவகாரங்களுக்கும் போய்க் கொண்டிருக்கிறார். மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்றவற்றிற்கெல்லாம் போய்க் கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மாத்திரம் பேச வேண்டும். மற்ற பிரச்சினைகளை எல்லாம் இப்போது பேச வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்**: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னொன்றையும் இங்கே சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இருக்கக் கூடிய பாரதியார் பல்கலைக் கழகத்தில் தமிழுக்கு என்று ஒரு துறை இருக்கின்றதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அங்கே



1985 மார்ச் 19] [திரு. அ. ரகுமான்கான்]

தமிழுக்கென்று ஒரு துறை இல்லாத சூழ்நிலை இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். நான் சொல்லியது தவறு என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னால் நான் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். அந்த நிலைமை இருப்பது சரியா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இங்கே இருக்கக்கூடிய இந்தப் பல்கலைக் கழகத்திலே உள்ள முக்கியமான ஒன்றை உங்கள் மூலமாக நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். நம்முடைய சட்டக் கல்லூரி மாணவர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஒரு கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். அதாவது இன்ஜினியரிங் கல்லூரியினைப் பொறுத்தவரையில் அவர்கள் வெற்றி பெற்றாலும் தோல்வியடைந்தாலும் அவர்கள் படிக்கின்ற காலக் கெடு முடிந்துவிட்டாலும் பிறகும் தொடர்ந்து இரு என்று சொல்லுகின்ற நிலைமை இருக்கின்றது. மெடிக்கல் காலேஜிலேயும் அதே போன்ற நிலைமை இருக்கின்றது. முன்பு நாங்கள் எல்லாம் சட்டக் கல்லூரியில் படிக்கின்றபோது எஃப். எல் என்று ஒரு பிரிவு இருந்தது. அப்போது இரண்டாண்டுகள்தான். எஃப். எல்.லே ஃபெயில் ஆகிவிட்டால் பிறகு அதை முடித்துக் கொண்டுதான் பி.எல்.-க்கு வர முடியும் என்ற நிலைமை இடைக் காலத்தில் இருந்தது. ஆனால் இப்போது பழையபடியும் அந்த நிலையை நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். நான் கேட்க விரும்புகிறேன், அந்த 5 ஆண்டுகளும் தொடர்ச்சியாக அவர்களை அனுமதிக்க வேண்டும்.

**திரு. துரை கோவிந்தராசன்**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பல்கலைக் கழகத்தினுடைய செனட், சிண்டிகேட் பற்றிய சட்ட முன்வடிவிலே பேசாமல் மொத்தமாக மாணவர்கள் கல்லூரியில் சேர்க்கப்படுவது பற்றியெல்லாம் வரிசையாக, திரு. முத்தையா அவர்கள் எடுத்துச் சொல்லியதற்குப் பிறகும் மீண்டும், நேரத்தை எடுத்துக் கொண்டு பேசி வருகிறார். வேறு விவகாரங்களை எல்லாம்

பேசுகிறார். எனவே அவர் இந்த பில்லை ஒட்டிப் பேச வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு விவகாரங்கள் பற்றிப் பேசினால் பதில் சொல்ல வாய்ப்பில்லை. எனவே இந்த பில்லை ஒட்டி மட்டும் பேசி முடிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்தைப் பொறுத்தவரையிலும் அதோடு தொடர்புடைய கருத்துக்களைப் பொறுத்தவரையிலும் எப்படி இருந்தால் நல்லது என்பது போன்ற கருத்துக்களை மட்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பது நல்லது. அவர்கள் கூறிய மற்ற, மற்ற கருத்துக்களைக் கூற வேண்டாம், கூறக் கூடாது என்று நான் கூறவில்லை. அதற்கான வாய்ப்புகள் அடுத்தடுத்து தொடர்ந்து வர இருக்கின்றன; துணை மானியக் கோரிக்கை வர இருக்கிறது; அதற்குப் பிறகு வரவு-செலவுத் திட்டத்தினுடைய முழு விவாதம் வர இருக்கிறது; கல்வி மானியக் கோரிக்கை என்று தனியாகவே வர இருக்கிறது. இன்னும் 3, 4 வாய்ப்புகள் தொடர்ந்து இருப்பதன் காரணமாக, அதிலே மாண்புமிகு உறுப்பினர் விரிவாகவும் பேசலாம், விளக்கமாகவும் பேசலாம். இப்பொழுது இந்தச் சட்டத் திருத்தத்தைப் பற்றி மட்டும் பேசினால் மற்ற உறுப்பினர்களும் பேசி, வேறு இரண்டு சட்டங்களும்—திருத்தங்களும்—இங்கே கொண்டு வர வேண்டியிருப்பதன் காரணமாக, குறிப்பிட்ட காலத்திற்குள் இன்றைக்கு முடிக்க வாய்ப்பு ஏற்படும். இதற்கு மாண்புமிகு உறுப்பினர் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் நம்முடைய அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால், இதே சட்டமன்றத்திலே மானியம் கல்வி சம்பந்தமாக வருகிற பொழுது தனியாக அந்த மானியத்திலே கலந்து கொண்டு







விவாதிப்பது என்பது வேறு. ஒரு பல்கலைக் கழகம்—அந்தப் பல்கலைக் கழகத்தினுடைய ஆளுகைக்கு, நிர்வாகத்திற்கு உட்பட்ட கல்லூரிகள் என்று வருகின்றபொழுது, கோவை மருத்துவக் கல்லூரி, பாரதியார் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு உட்பட்டு வருகிறது. பல்கலைக் கழகத்திலே எக்ஸ்-அபிஷியோ மெம்பர்ஸ் இருக்கிறார்கள். பல்கலைக் கழகத்திலே இருக்கிற அந்த எக்ஸ்-அபிஷியோ மெம்பர்ஸ் ஒவ்வொரு துறையிலும் இருப்பவர்களாக இருக்கிறார்கள். மருத்துவத் துறையிலே இருப்பவர் இருக்கிறார்; உங்களுக்குத் தெரியும் ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள். பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள் துறைகளுடைய டைரக்டர்கள் நிர்வாகப் பொறுப்பிலே இருக்கிறார்கள். அதுபோல், டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் நிர்வாகப் பொறுப்பிலே எக்ஸ்-அபிஷியோ மெம்பராக இருக்கிறார். ஆகவே, பல்கலைக் கழக நிர்வாகப் பொறுப்பிலே, டைரக்டர் ஆப் டெக்னிக்கல் எஜுகேஷன் இருப்பதன் காரணத்தாலே, பல்கலைக் கழகம் சம்பந்தமான விவாதங்கள் வருகின்ற காரணத்தாலே, இதுபோன்ற கருத்துக்களைச் சொல்வதன் மூலம், இந்த அவையிலே, இந்தத் தவறுகள் களைவதற்கு, மக்கள் சார்பாக, மாணவர்கள் சார்பாக, எடுத்து வைப்பதன் மூலமாக, குறைகள் களையப்படக் கூடும் என்ற நல்ல நம்பிக்கையிலேதான் இந்த நேரத்தை நான் பயன்படுத்துகிறேனே தவிர, அறியாமையினால் அல்ல, விவரம் தெரியாமையினால் அல்ல என்று துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டு, இதற்கு மேலும் நீடிப்பது நல்லது அல்ல, பிறகு பார்ப்போம் என்று சொல்லி, முடித்துக் கொள்கிறேன்.

** திரு. கு. ரமணி:* மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டங்கள் ஏற்கனவே இந்த அவையில் பெரும் அளவுக்கு விவாதம் செய்யப்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் நான் என்னுடைய கருத்துக்களை, விளக்கமாக, முடிந்த அளவுக்கு, விரிவாக, எடுத்துச் சொல்லியிருக்கிறேன். மறுபடியும் இந்தச் சட்டத்தைப் பிரேரேபித்து—அப்பொழுதே நிறைவேற்றப்பட முடியாததனால்—நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் இப்பொழுது இந்தச் சட்டம் இங்கே

வந்திருக்கிறது. அடிப்படையான கொள்கைகளைப் பற்றி பேசினால் நிச்சயமாகச் சில வித்தியாசங்கள் வரத்தான் செய்யும். இங்கே பேசும்பொழுது அந்த விவரங்கள் வந்திருக்கின்றன. நான் இப்பொழுது அவற்றிற்குள் எல்லாம் செல்லவில்லை. நமக்குச் சந்தர்ப்பம் வரப்போகிறது. கல்வித் துறையைப் பற்றி விவாதிக்க வேண்டிய வேறு சந்தர்ப்பம் இருப்பதால், அந்தச் சந்தர்ப்பத்திலே அதை முழுவதும் வைத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த யூனிவர்சிட்டி அட்டானமியை—அவர்களுக்கு இருக்கும்படியான தன்னாட்சி உரிமையை எந்த அளவுக்கு அவர்கள் கையாள வேண்டும், அரசாங்கம் அதற்குப் பக்கத்திலேகூட எட்டிப் பார்க்க முடியாத அளவுக்கு பார்ப்பார்களானால், சுதந்திரம், கல்வி சம்பந்தப்பட்ட வரையில் எல்லாவற்றுக்கும் அவர்கள் கையாள்வதுதான் வழிமுறை என்பதற்கு உண்மையான சாராம்சம் என்ன? What is the essence of it? என்பதை இங்கே பேசிக் கொண்டிருக்கிறோம். இன்றைக்கு அந்தப் பேச்சுக்கு நான் வரவில்லை. அதைப் பின்னால் பேச வேண்டியிருக்கிறது. ஏனென்றால், கல்வி என்பது இன்றைக்கு எங்களுக்குப் படுவது வர்த்தக சரக்காகத்தான் போய்க் கொண்டிருக்கிறது. அந்த நிலை மாற வேண்டும். அனைவரும் கல்வியைக் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பிருக்க வேண்டும். அதிலே வசதியற்றவர்கள், பிற்பட்டவர்கள், ஏழை மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள், பொருளாதாரத் துறையிலே பின்தங்கி இருக்கக்கூடியவர்கள், இந்தச் சமுதாயத்தினுடைய ஒட்டு மொத்த கல்வி அறிவு சேமிப்பு களஞ்சியத்திலிருந்து கிடைத்து அவர்கள் கல்வி கற்றுக்கொள்ள வேண்டும்.

(பிற்பகல் 12-10)

அது முடிய வேண்டும். அதற்கு இஷ்டம்போல் பணம் செல வழித்துதான், செல்வாக்கை பயன்படுத்தினால்தான் அல்லது பெரிய பணக்கார வர்க்கத்தை சேர்ந்தவர்கள் இருக்கிறார்களே அவர்களுடைய நிழலில் நின்றால்தான் அந்தக் காரியத்தைச் செய்ய முடியுமென்ற நிலைக்கு நம்முடைய கல்வி வந்துவிடக் கூடாது என்பது நம்முடைய கருத்து. அவற்றைப் பற்றிய விவாதங்களை நாம் பின்னாலே வைத்துக்கொள்ள வேண்டியிருக் கிறது.





இப்போது பல்கலைக் கழகத்தினுடைய அமைப்புகள் குறித்த விவரங்கள் இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டு அதுபற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே இந்தச் சட்ட முன்வடிவு வந்தபோது இதனுடைய அமைப்புகள் குறித்து என்ன சொல்லி இருக்கிறார்கள்? நான் போன கூட்டத்தில் இதுபற்றி தெளிவாக எடுத்துச்சொல்லி, ஜனநாயக முறைப்படி இந்த பாரதியார், பாரதிதாசன் யூனிவர்சிட்டிகளின் அமைப்புகள் இருக்க வேண்டும். அது போதிய அளவிற்கு இல்லையென்று நாங்கள் சொல்லி, அமைச்சர் அவர்களும் அதிகப்படியான ஜனநாயகத் தன்மை நடைமுறையாகக் கூடிய முறையில் நடவடிக்கைகள் வேண்டுமென்பதை ஒப்புக் கொண்டார்கள். ஆனால் சில கஷ்டங்கள் காரணமாக இந்தச் சட்டத்தை பாஸ் பண்ணவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது என்பதை அவர்கள் தெரிவித்தார்கள். ஏற்கனவே இருக்கிற சட்டத்திலே 21 பேர்களைக் கொண்ட அதனுடைய சிண்டிகேட்டிலே அதனுடைய அமைப்பு எப்படி இருந்தது?

Education Secretary.
Director of Collegiate Education.
Director of Technical Education.
Director of Medical Education.

ஆகிய இந்த நான்கு பேர்களும் 'எக்ஸ்-அபிஷியோ' மெம்பர்களாக அதிலே இருப்பார்கள். அவர்களுடைய உத்யோகம் மற்ற தேவைகளை உத்தேசித்து அவர்கள் 'எக்ஸ்-அபிஷியோ' மெம்பர் களாக இருப்பார்கள்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

ஆறு பேர்களை செனட்டிலிருந்து அவர்களாகவே தேர்ந்தெடுப் பார்கள். அடுத்து இரண்டு பேர்களை பிரின்சிபால்கள், இணைக் கப்பட்ட கல்லூரிகளிலிருந்து, அவர்களுக்குள்ளாகவே அவர்கள் இரண்டு பேர்களை தேர்ந்தெடுப்பார்கள். அடுத்து யூனிவர்சிட்டி புரபசர்ஸ், அவர்களிலிருந்து அவர்கள் இரண்டு பேரை தேர்ந் தெடுப்பார்கள். அதற்கு பிறகு ஆசிரியர்கள், மேலே சொல்லி யிருக்கக் கூடிய பிரின்சிபால்கள் மற்றவர்கள் இல்லாமல், ஆசிரியர்கள் தங்களுக்குள்ளே இரண்டு பேர்களை தேர்ந்தெடுப் பார்கள். அப்படி ஆறு பேர்கள் செனட்டிலிருந்தும் இரண்டு, இரண்டு மெம்பர்களாக மூன்று பிரிவிலேயும் தேர்ந்தெடுப்பார்கள். ஆக 12 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்.

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 19

அதற்கு மேலே நாமினேடட் மெம்பர்கள் என்று நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களாக மூன்று பேர்களை சான்சிலர் அவர்கள் மத்தியிலே இருந்து தேர்ந்தெடுப்பார்கள். செனட்டி யூனிவர்சிட்டி ரீடர்களிலிருந்து துணை வேந்தர் ஒருவரை நியமிப்பார். அடுத்து யூனிவர்சிட்டி லெக்சர்களிலிருந்து துணைவேந்தர் இன்னொருவரை நியமிப்பார். அப்படியானால் மூன்று பிளஸ் 2; ஐந்து பேர்கள் வந்து சேர்கிறார்கள். ஓட்டு மொத்தமாக அந்த அமைப்பு எப்படி இருக்கிறது? 21 மெம்பர்களைக் கொண்ட அந்த அமைப்பிலே 12 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாக வருகிறார்கள். பாக்கி எக்ஸ்-அபிஷியோ நான்கு பேர்கள்; நாமினேடட் மெம்பர்கள் 5 பேர்கள்; ஆக 9 பேர்கள் இருப்பார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட 12 பேர்கள், எக்ஸ்-அபிஷியோ மற்றும் நாமினேடட் மெம்பர்ஸ் 9 பேர்களும் சேர்ந்து 21 பேர்களைக் கொண்ட அமைப்பு என்று இருந்தது.

இப்போது புதிய திருத்தத்தின்படி இந்தச் சட்டம் எப்படி அமல் ஆகிறது? என்ன வகை செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இரண்டு மெம்பர்களை காலேஜ் பிரின்சிபால்கள் தேர்ந்தெடுப்பார்கள். அடுத்து இரண்டு மெம்பர்களை ஆசிரியர்கள் அவர்கள், (வேந்தர் அவர்கள்) நியமிப்பார்கள். அடுத்தப்படியாக லிருந்து ஆறு பேர்கள் தேர்ந்தெடுக்கப்படுவது என்பது எப்படி கைவிடப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்க வேண்டும். அப்படி 2 பிளஸ் 2 என்றால் 4 மெம்பர்கள். அடுத்து யூனிவர்சிட்டியில் இருக்கிற பல்வேறு டிபார்ட்மெண்டுகள்; அதிலே இருக்கிற ஒருவர், யூனிவர்சிட்டியின் 10 டிபார்ட்மெண்ட்களுக்கு ஒரு யூனிவர்சிட்டி புரபசர், அவரை நியமனம் செய்வார்கள். ஒரு மெம்பர் மேற்கண்ட எந்தப் பிரிவிலேயும் வராதவரை செனட் தேர்ந்தெடுக்கும். அதற்கு அடுத்து மூன்று மெம்பர்களை சான்சிலர் நியமனம் செய்வார்கள்.

அடுத்தபடியாக ஒரு யூனிவர்சிட்டி ரீடரை துணைவேந்தர் நியமனம் செய்வார், மற்றொரு யூனிவர்சிட்டி லெக்சரரை துணை வேந்தர் நியமனம் செய்வார். இப்படிப் பார்க்கிறபோது ஓட்டு மொத்தமாக 21 என்கிற எண்ணிக்கை 15 ஆக வரும். நான் சொல்வதில் ஏதாவது வித்தியாசம் இருந்தால் அமைச்சர் அவர்கள் விளக்கலாம்.



1985 மார்ச் 19] [திரு. கு. ரமணி]

இந்த 15 பேர்களில் தேர்ந்தெடுக்கப்படுபவர் 5 பேர்கள்தான். 10 பேர்கள் எக்ஸ்-அஃபிஷியோ மெம்பர்கள், மற்றும் அவர்கள் நாமினேட் செய்யப்படக்கூடியவர்கள். அப்படியானால் நியமன உறுப்பினர்களின் டாமினேஷன் தான் அங்கே இருக்கும். அப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டால் யூனிவர்சிட்டி நிர்வாகம் ஜனநாயக முறைப்படி எப்படி நடக்கும்? இதிலே ஒரு அடிப்படை நிலைமை மாற்றம் ஏற்படுகிறதா இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் நமக்கு விளக்க வேண்டும். எப்படி இருந்தாலும் எண்ணிக்கை எவ்வளவு இருந்தாலும் பெருவாரியான உறுப்பினர்கள், நாமினேட்டட் மெம்பர்ஸ்தான். தேர்ந்தெடுக்கப்படக்கூடிய பிரதிநிதிகள் அவர்களைவிட குறைவு. இப்படி இருந்தால் ஒரு சீரான அமைப்பாக செயல்பட முடியாது என்பது எங்களுடைய கருத்து. இன்றைக்கு இருக்கிற அமைப்பிலே ஓரளவுக்கு ஜனநாயக நடைமுறை கடைபிடிக்கப்பட்டாலும் இனிமேல் யூனிவர்சிட்டியில் இந்த நடவடிக்கை இல்லாமல் போய்விடும். இன்றைக்கே கூட அந்தவகையில் பல நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. எடுத்துக் காட்டாக பாரதியார் பல்கலைக் கழகத்தைப் பற்றி ஏற்கெனவே பேசும்போது தெரிவித்திருக்கிறேன்.

இன்றைக்கு அங்கே ஒரு பெரிய பிரச்சனை ஜனங்கள் மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் மத்தியிலும் அதிருப்தி இருந்துகொண்டிருக்கிறது. அதே துணை வேந்தர் அங்கே தொடர்ந்து இருக்கிறார். அவரைத் தொடர்ந்து அங்கே வைத்துக்கொள்ள சான்ஸலருக்கும் அரசாங்கத்திற்கும் உரிமை இருக்கலாம்; அது வேறு விஷயம். ஆனால் மக்கள் மத்தியிலே இருக்கிற உணர்வுகளை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏற்கெனவே நடந்திருக்கக்கூடிய விஷயங்களைக் கூறும்போது நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். அந்த யூனிவர்சிட்டியிலே பல முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன. ஒன்றை மட்டும் சொல்கிறேன். ஏழு லட்சம் ரூபாயில் ஒரு கம்பியூட்டரை வாங்கினார்கள். அதற்கு டெண்டர் கொடுக்காமல் ஒரு குறிப்பிட்ட கம்பெனியில் நேரடியாக வாங்கி யிருக்கிறார்கள். 10 சதவீதம் கமிஷன் கொடுத்தாலே அதற்கு எவ்வளவு வரும்? இதற்காகத் தானே ஒவ்வொரு கம்பெனியும் போட்டி போட்டுக்கொண்டிருக்

கிறது. யார் சிபாரிசை வாங்கி, எப்படி சப்ளை செய்யலாம் என்பதுதானே அவர்களுடைய எண்ணம். இப்படிப்பட்ட பல்வேறு குறைபாடுகளினால் மக்கள் மத்தியிலே, ஆசிரியர்கள் மத்தியிலே பெரும் அதிருப்தி இருந்துகொண்டிருக்கிறது. ஏனென்றால் அவர்களுக்கு அங்கே என்ன நடக்கிறது என்பது தெரியும்.

அதேமாதிரி அந்த யூனிவர்சிட்டியினுடைய ஊழியர்களை எம்பிளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலம் வரவழைத்து, தேர்வு செய்ய வேண்டும் என்று இருக்கிறது. அப்படி வரும்போது தகுதி உள்ளவர்கள் நியமிக்கப்படுவார்கள். அந்த முறையை கையாளாமல் நேரடியாகவே பலரை நியமனம் செய்திருக்கிறார்கள். அதனால் அங்கே பெரிய பிரச்சனைகள் ஏற்பட்டு, தகராறு வந்திருக்கிறது. ஊழியர்கள் நியமன முறையிலும் தவறு நடக்கிறது. வேலை தேடித்தரும் ஸ்தாபனத்திலிருந்து பெயர் பட்டியல் வாங்காமல், தங்களிஷ்டப்படி வெளியிலிருந்து நியமித்தது சரியாக இல்லை. இப்படிப்பட்ட காரியங்களினால் பல ஊழல்கள் நடைபெறுகின்றன. அதனால் ஜனங்கள் மத்தியிலேயும் டீச்சர்ஸ் மத்தியிலேயும் பெரும் மனக் குறை இருக்கிறது.

இப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் எடுத்துச் சொல்வதற்காக ஆசிரியர்கள் ஒரு குழு அமைத்து, பெரிய மெம்மராண்டம் தயாரித்து, ஆளுநரை நேரடியாகச் சந்தித்து, பேசி, அந்த துணைவேந்தர் நியமனம்பற்றி தங்கள் கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். யூனிவர்சிட்டியின் நடவடிக்கைகளில் எவ்வளவு குறைபாடு இருக்கிறது, தவறு ஏற்பட்டிருக்கிறது, ஊழியர்கள் நியமனத்தில் எப்படிப்பட்ட தவறு நடக்கிறது என்பதை எல்லாம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

நம்முடைய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும்போது ஒரு விஷயத்தைச் சுட்டிக்காட்டினார்கள். இந்த யூனிவர்சிட்டியோடு இணைக்கப்பட்டிருக்கிற எஞ்சினியரிங் கல்லூரிகள் பற்றிச் சொன்னார்கள். பல எஞ்சினியரிங் கல்லூரிகள் இன்றைக்கு தனியார் கையிலே இருக்கின்றன. அந்தக் கல்லூரிகளிலே என்ன நடக்கிறது என்பது அரசாங்கத்திற்குத் தெரியும். நானும் பல சந்தர்ப்பங்களிலே சொல்லியிருக்





கிறேன். பணப்பலம் படைத்தவர்கள், செல்வாக்குப் படைத்தவர்கள் தங்கள் பிடிப்பிலே அந்தக் கல்லூரிகளை வைத்துக்கொண்டு அந்தக் கல்விக் கூடங்களை வர்த்தகத் தொழிற்சாலைகளாக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். செல்வாக்கு மிக்கவர்கள் தான் இதைச் செய்ய முடியும்.

பல கோடிக்கணக்கான ரூபாயை அரசாங்கம் இதிலே முடக்க இயலவில்லை என்று சொல்லி தனியாருக்கு உரிமை வழங்குவதாகச் சொல்கிறார்கள். அப்படியானால், கல்வி நிறுவனம் இனிமேல் தனியார் துறைக்கு மாறிக்கொண்டிருக்குமானால், நம்முடைய கல்வியின் தரம் என்னவாகும்? தனியார் துறையி

(பிற்பகல் 12-20)

னுடைய பேசிக் பிரின்சிபிள்ஸ், கோட்பாடுகள் என்ன என்பது நமக்குத் தெரியாதா? காம்பெடிசன்தான். இன்றைக்கு இந்த நாட்டிலே நடக்கக்கூடிய நெருக்கடியினுடைய, பண்டமென்டல், அஸ்திவாரமாகத்தான் இது கல்விக்கழகங்களிலேயும் வருகிறது. கல்வியும் அப்படிப்பட்ட வர்த்தகச் சர்க்காக ஆகி வருகிறது. அப்படிப்பட்ட பல கல்லூரிகள் இன்றைக்கு தோன்றிக் கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம், அந்தப் பாரதியார் யூனிவர்சிடி, தன்னுடைய நேரடியான பிடிப்பில் இல்லாமல். சர்க்கார் பிடிப்பில் இருந்தால், இப்படிப்பட்ட காரியங்களை சாதிப்பதற்கு கஷ்டங்கள் இருக்கின்றன என்று தெரியக்கூடியவர்கள், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் பின்பக்கத்தில் இருந்து எடுத்துக் கொள்கிறார்கள். அது 'சம்திங் லைக் பேக் சீட் டிரைவிங்' அவர்கள் அப்படி நடத்துகிறார்கள். இன்றைக்கு இதைப்பற்றி விரிவாக நான் இப்போது பேசவில்லை. பட்ஜெட்டிலே பேசும்போது சொல்கிறேன்.

கோயம்புத்தூரில் உள்ள மில் முதலாளிகள் சிலர் ஒரு குரூப் இப்போது பாரதியார் பல்கலைக்கழகத்தின் மீது தங்களுடைய பிடிப்பை இன்றைக்கு செலுத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனக்குத் தெரியும். இது எப்படி கல்வியினுடைய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும். கல்விக்காக கொடை வள்ளலாக இருந்தால்

[திரு. கு. ரமணி] [1985 மார்ச் 19

கல்வியை வளர்க்க அரசாங்கத்திற்குப் பணம் தரலாமே. கோயம்புத்தூர் மெடிக்கல் காலேஜ் உருவாகிற நேரத்தில், 17 வருடங்களுக்கு முன்னாலே நான் பார்லியமென்டிலே 67 ஆம் வருடம் இருந்தபோது, அந்தக் காலேஜ் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டேன், பல மருத்துவ நிபுணர்களாக இருக்கக்கூடியவர்களும் மத்திய அரசாங்கத்திற்கு வேண்டுகோள்விட்டு, நானும் இதைப்பற்றி பாராளுமன்றத்திலே பேசினேன், அந்தக் காலத்திலே. அந்த மெடிக்கல் காலேஜைப் பற்றி மற்ற உறுப்பினர்கள் குறிப்பிடும்படி சொன்னார்கள். அந்தக் கல்லூரி இருக்கிறது 8 கி.மீ. தூரத்திலே. இங்கே நகரத்திலே அதனுடைய அட்டாச்ட் ஹாஸ்பிடல், மருத்துவமனை இருக்கிறது. இதனால் என்னென்ன சங்கடங்கள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றி மெடிக்கல் மானியத்திலே பேசுகிறேன். அந்த அமைப்பு அங்கே கொண்டு போய் ஏற்படுத்துவதற்கு இருக்கிற காரணங்கள் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்கிற போதுதான், அதற்கு ஒரு சிலர் பெரிய செல்வாக்கு செலுத்தியிருக்கிறார்கள், அங்கே இருக்கக்கூடிய பெரிய மனிதர்கள், பெரிய மில் முதலாளிகள் உட்பட என்று தெரிந்தது. 23 லட்சம் ரூபாய் நன்கொடை அளிக்கிறோம் என்று அந்தக் காலத்திலே இருந்த அரசாங்கத்திற்கு வாக்குறுதி கொடுத்தார்கள். இந்த அரசாங்கத்திற்கு அல்ல. அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை. 25 லட்ச ரூபாய் நன்கொடை கொடுக்கிறேன், இங்கே மெடிக்கல் காலேஜ் கட்டவேண்டும் என்று அன்றைக்குச் சொல்லியும், இந்த அரசாங்கத்தால் அந்த நன்கொடையை வாங்க முடியவில்லை, பணம் கிடைக்கவில்லை. நன்கொடை என்று அவர்கள் அறிவித்து விட்ட பிறகு, அது சர்க்கார் சொத்துதானே? அதை ஏன் நீங்கள் கேட்டு வாங்கக்கூடாது. இதே மன்றத்திலே நான் கேள்வி கேட்டு, அதற்கு அன்றைக்கு இருந்த அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். ரெக்கார்டிலே படிக்கலாம். அவர்கள் 5 லட்சம் மட்டும் கொடுத்து, 20 லட்ச ரூபாய் பணத்தைக் கொடுக்கவில்லை. நான் எதற்கு சொல்கிறேன் என்றால் பணக்காரர்களுடைய பிடிப்பு இந்த மாதிரியாக சர்க்காரால் நிர்வகிக்கக்கூடிய யுனிவர்சிடியிலே அந்த அளவிற்கு செயலாக்கப்படுகிறது என்றால், அவர்களுடைய தன்னாட்சி உரிமையை எந்த அளவிற்கு வளர்த்துக்கொண்டு நினைத்த



1985 மார்ச் 19] [திரு. கு. ரமணி]

இடத்திற்குப் போய்ச் சேருகிறார்கள் என்பதை கவனமாக நாம் கவனித்துக்கொண்டு வரவில்லை என்றால், பல சங்கடங்கள் வரும். ஆகவே நான் இதிலே அதிகமாக போகவிரும்பவில்லை. இந்த அமைப்புகளைப் பொறுத்தவரையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் பெருவாரியாக இருக்க வேண்டும். எக்ஸ்-அபிசியோ மெம்பர்கள், மற்றும் நியமனம் செய்பவர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும். அப்போதுதான் பல காரியங்களிலே அல்லது விவாதங்களிலே, பிரச்சனைகளிலே, கொள்கைகளை நிர்ணயம் செய்வதிலே, அல்லது அந்த யுனிவர்சிட்டியினுடைய கல்வி, கலாச்சாரம், வளர்ச்சியிலே எடுக்கப்படும் படியான முடிவுகளை, மாற்றங்களை நிச்சயமாக கொண்டு வருவதற்கு அது பயன்படும். ஒரு சாதாரண ஆரம்ப மாற்றமாக இருந்தாலும் கூட, அப்படி இருக்க வேண்டும். ஆனால் யு.ஜி.சி. என்ன நிபந்தனையை விதித்து இருக்கிறதோ என்னவோ நமக்குத் தெரியாது. இப்படி எல்லாம் ஜனநாயக முறைப்படி இருக்கக்கூடாது என்று யு.ஜி.சி. கண்டிசன் ஏதாவது இருக்கிறதா? நீங்கள் இப்படி எல்லாம் சட்டத்தை அமைத்து வைத்தால்தான் நாங்கள் கிராண்ட் கொடுப்போம், இல்லாவிட்டால் கொடுக்க மாட்டோம் என்று சொன்னால், மத்திய சர்க்கார் செய்வது உண்மையிலேயே தவறு. இப்படிப்பட்ட அநாவசியமான செல்வாக்குகள் உள்ளே புகுந்து பல தவறுகள் நடைபெறுவதற்கு அது ஏதுவாக அமையும். அப்படியானால், என்ன நிர்ப்பந்தமோ தெரியவில்லை, இந்த அரசாங்கத்திற்கு. அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் அன்றைக்கே சொன்னார்கள் இங்கே பேசும்போது. இன்றைக்கும் அவர் தெளிவாகச் சொல்லட்டும், என்ன நிர்ப்பந்தம் என்று. யாரிடமிருந்து அந்த நிர்ப்பந்தம் வருகிறது. வெளியிலிருந்தா உள்புறத்திலேயிருந்தா? ஏன் இந்த நிலைமை? ஏன் இப்படி வருகிறது என்று அறிய முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட குழு என்றால், யாரை வைத்து தேர்ந்தெடுக்கிறீர்கள்? அங்கே டீச்சிங் ஸ்டாஃப் இருக்கிறார்கள். ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஏன் மாணவர்களுக்குக் கூட அதிலே பிரதிநிதித்துவம் கொடுக்கக் கூடாது? செய்யலாமே.

ஒரு யூனிவர்சிட்டி பல்வேறு பிரிவுகளை வைத்து ஆராய்ச்சி நடத்துகிறது. அதற்கு தகுதியான, தேவையான திறமையான நபர்களை மட்டும் செலக்ட் செய்து நியமனம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும். அந்த தகுதியுடனேயே அந்தக் காரியங்கள் நடத்தப்படுகிறதா என்பதைப்பற்றி நாம் பரிசீலித்தாக வேண்டும். எப்படி எல்லாம் நியமனங்கள் நடந்திருக்கின்றன என்பது நம் எல்லோருக்கும் தெரியும். ஆகவே, ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அதிகப்படுத்தி வரும்படியான ஒரு நிலையில் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்திருக்க வேண்டும். அது இல்லை. அதைத்தான் அன்றைக்கும் எடுத்துச் சொன்னேன். இன்றைக்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு, மாண்புமிகு அவைத் தலைவர் மூலமாக கொண்டு வரவிரும்புகிறேன். அந்த முறையிலே இந்தச் சட்டத்திருத்தத்தைக் கொண்டு வந்து வைத்திருந்தால், நாங்கள் அதை நேரிடையாக வரவேற்போம். அப்படி ஒரு முறைக்குச் செல்வதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் தமிழ் பல்கலைக் கழகச் சட்டமுன்வடிவின்மீது மட்டும் ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் வைக்க விழைகிறேன்.

இன்று நீதித்துறையிலும், நிர்வாகத் துறையிலும், போதனா மொழித் துறையிலும் தமிழ் வளர்ச்சிப் பெறுவதற்கும், விஞ்ஞான சொற்களையும், மருத்துவச் சொற்களையும் தமிழ் மொழியிலே கொண்டு வருவதற்கும் தக்க அளவிற்கு உதவி செய்யக் கூடிய வகையில் நம்முடைய தமிழ் பல்கலைக் கழகத்தினுடைய செயல்பாடுகளும், நடைமுறைகளும் அமையக் கூடிய முறையில், இந்தச் சட்டத் திருத்தம் அமையவேண்டும் என்ற கருத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது இருக்கக்கூடிய நம்முடைய தமிழ் பல்கலைக் கழகத்தில் உள்ள சில குறைபாடுகளையும் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.



குறிப்பாக் தஞ்சையிலே அமையப் பெற்றிருக்கக் கூடிய அந்த தமிழ் பல்கலைக் கழகத்திலே ஆசிரியர்கள் நிரந்தரமாக நியமிக்கப்படுவதில்லை. ஒவ்வொரு துறையின் தலைவர்களாக இருப்பவர்கள்தான் நிரந்தரமானவர்களாக வைக்கப்பட்டிருக்கிறார்களே தவிர, அதற்கு அடுத்தபடியாக உள்ள விரிவுரையாளர்கள் பூராவும் காண்டிராக்ட் அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் தான் நடத்தப்படுகிறார்கள். அது மாற்றப்பட வேண்டும். அனைத்துப் பல்கலைக் கழகங்களிலேயும் என்னென்ன முறையிலே ஆசிரியர்கள் நிரந்தரமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்களோ, அதே முறையிலே தமிழ் பல்கலைக் கழகத்திற்கும் கொண்டு வர வேண்டும்.

அடுத்தபடியாக அதிலே பணியாற்றக் கூடிய ஊழியர்களைப் பொறுத்த மட்டில் அதுவும் தற்காலிகமாகத்தான் அமையப் பெற்றிருக்கிறது. குறிப்பாக வருவாய்த் துறையிலே இருந்து டெபுடேஷனிலே செல்பவர்கள் நிரந்தர ஊழியர்களாக, நிரந்தர ஊழியர்களுக்குரிய எல்லாச் சலுகைகளையும், ஊதியத்தையும் பெறுகிறார்கள். ஆனால் பல்கலைக் கழகம் நேரிடையாக நியமிப்பவர்கள் அதே வேலையைச் செய்தாலும், அவர்கள் காண்டிராக்ட் ஊழியர்கள் என்ற முறையில்தான் பணியாற்றக் கூடிய நிலை இருக்கிறது. அந்த முறையிலேயும் மற்ற பல்கலைக் கழகங்களில் இருப்பதைப் போல் மாற்றம் செய்ய வேண்டும். அத்தோடு, வருவாய்த் துறையிலே இருந்து வரக்கூடிய ஊழியர்களுக்கு, அரசு நிரந்தர ஊழியர்கள் என்ற வகையில் என்னென்ன சலுகைகளும், ஊதியமும் கிடைக்கிறதோ அதே வகையில் பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்படும் ஊழியர்களுக்கும் நிரந்தரமாக்கி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

அடுத்தபடியாக தமிழ் பல்கலைக் கழகம் புத்தகங்களை வெளியிடுகிறது. தமிழை ஆதரித்து அதனை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு, தமிழ் மொழி மேலும் மேலும் வளம் பெறத்தக்க முறையிலே ஆராய்ச்சி செய்யப்பட்டு புத்தகங்கள் வெளியிடப்படுவதாகச் சொல்லப்படுகிறது. குறிப்பாக ஒன்றிரண்டை கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வர

[திரு. கோ. வீரய்யன்] [1985 மார்ச் 19

(பிற்பகல் 12-30)

விரும்புகிறேன். நன்னூல் என்னும் ஒரு புத்தகத்தை தமிழ் பல்கலைக் கழகம் அச்சிட்டு வெளியிட்டிருக்கிறது. ஆனால் வெளியிலே விற்கக்கூடிய புத்தகத்தின் விலை ரூ. 14. தமிழ் பல்கலைக் கழகம் வெளியிடுகின்ற புத்தகத்தின் விலை ரூ. 64. தமிழ் பல்கலைக் கழகத்தில் மட்டும் ஒரு புத்தகத்திற்கு ரூ. 50 என்று அதிகப்படியான விலை தீர்மானிக்கப்படுகிறது. இது ஒரு புத்தகத்திற்கு மட்டும் தான். இதே போலத்தான் பல லட்சக் கணக்கான ரூபாய் அந்த கழகத்தில் இருக்கும் அரசு அச்சகம் பெறுகிறது. அது வெளியிடும் புத்தகங்களின் விலை, வெளி விலையை விட மலிவாகவும், குறைவாகவும் இருக்க வேண்டியது அவசியம். ஆனால் வெளி விலையைவிட கூடுதலாக ஒரு புத்தகத்திற்கு ரூ. 50 என்று விற்கிறது.

அடுத்தபடியாக ஆராய்ச்சிக்கு சில ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. கட்டுரைகள் தயாரிப்பதற்கு மிகப் பெரிய அளவிற்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. குறிப்பாக யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேராசிரியர் திரு. சிவதம்பி 6 மாத காலம் இங்கே தங்கியிருந்தபோது அவருக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. அவர் ஆராய்ச்சி செய்து, இலக்கிய வழியிலே வரலாறு என்ற ஆராய்ச்சி கட்டுரையை படித்து அரங்கேற்றினார். அந்தக் கட்டுரை புத்தகமாக வெளியிடப்படாமல் வைக்கப்பட்டிருக்கிறது. அது மட்டும் அல்ல.

தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு சென்று, அங்கே தமிழருடைய வாழ்க்கை நிலையை, தமிழ் மொழியினுடைய வளர்ச்சி எந்த அளவிற்கு இருக்கிறது என்பதை கண்டறிந்து வந்த ஒரு பேராசிரியர் ஆராய்ச்சி கட்டுரையையும் நம்முடைய தமிழ் பல்கலைக் கழகத்திலே சமர்ப்பித்தார். அதுவும் இன்னும் புத்தக வடிவம் பெறாமல் இருக்கிறது. இப்படி ஆராய்ச்சிக்காக செலவு செய்யப்பட்டு, அதிலே உருவாக்கப்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் எல்லாம் கட்டுரைகளாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஒரு புத்தக வடிவமாக தமிழ் மக்களுடைய கவனத்திற்கு வரக்கூடிய முறையிலே இல்லை.



1985 மார்ச் 19] [திரு. கோ. வீரய்யன்]

அடுத்தபடியாக இப்பொழுது தமிழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்களே இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாணவர்களை சேர்ப்பது என்ற கொள்கையே இல்லை என்று அறிகின்றேன். நாங்கள் ஆரம்பத்திலிருந்து மாணவர்களை சேர்க்கவேண்டுமென்று கோரவில்லை. எம்.ஏ. படித்ததற்கு பிறகு ஆராய்ச்சிக்காக வரக்கூடிய மாணவர்களுக்கு அந்தத் தமிழ் பல்கலைக் கழகத்திலே படிப்பதற்கு, ஆராய்ச்சியிலே ஈடுபடுவதற்கு வழி இல்லை. எனவே மாணவர்களை சேர்க்கக்கூடிய ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு முறை விருது அளிக்கப்படுகிறது. அந்த விருதினுடைய மதிப்பு ரூ. 1 இலட்சம். அந்த விருது வழங்கும்போது, நடப்பு காலத்தில் இருக்கக்கூடிய இலக்கியங்களுக்கு கொடுக்காமல், 1935 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு நூலுக்கு சென்ற ஆண்டு பரிசு வழங்கப்பட்டிருக்கிறது. எதிர்காலத்தில், நடப்பு காலத்தில் இருக்கக்கூடிய இலக்கியங்களுக்கு அந்த பரிசுகளை அளித்து, இன்றைய எழுத்தாளர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் ஊக்கப்படுத்தி முன்னுக்கு வருவதற்கான முறையிலே, தமிழ் பல்கலைக் கழகம் செயல்பாடுகளை திருத்தியமைக்கக்கூடிய முறையிலே, இந்தச் சட்டத்தை அமைச்சர் அவர்கள் சீர்படுத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, பாரதியார், பாரதிதாசன், தமிழ் பல்கலைக் கழகங்கள் பற்றிய திருத்தச் சட்ட முன்வடிவுகள் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.

இதில் குறிப்பாக, பல்கலைக் கழகங்களை ஜனநாயகப்படுத்த வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படியென்றால் எந்த விதத்திலே ஜனநாயகப்படுத்துவது? தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு ஜனநாயகப்படுத்த வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னார்கள். நான் அரசின் சார்பிலே சொல்லிக்கொள்

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

கிறேன். அதைவிட ஒரு படி மேலே சென்று சொல்கிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெரும்பாலும் ஆசிரியர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தைத்தான் நாம் ஏற்றுக் கொண்டு அந்த வழியிலே தான் புதிய பல்கலைக் கழகங்களிலே, ஆசிரியர்களுக்கு பிரதிநிதித்துவம் தர முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறோம். தமிழக அரசினுடைய கொள்கை என்பது உயர் கல்வி நிலையங்களில், குறிப்பாக பல்கலைக் கழகங்களில் ஆசிரியர்களுடைய ஆதிக்கம் தான் இருக்க வேண்டுமே தவிர இன்றைக்கு எந்த சக்தியினுடைய ஆதிக்கமும் இருக்கக்கூடாது என்பதைத்தான் நாம் தெளிவாக பார்க்கிறோம். பழைய பல்கலைக் கழகச் சட்டங்களோடு இந்த புதிய ' சட்டங்களை ஒப்பிட்டுப் பார்த்து ஒரு ஆய்வு செய்வீர்களானால் இந்த அரசு எந்த வழியிலே சென்று கொண்டிருக்கிறது என்பதை நன்கு உணர்ந்துகொள்ள முடியும். இதைக் குறிப்பாக தன்னாட்சி நிறுவனம் என்று சொல்கிறபோது, உயர் கல்வி நிறுவனமாக, பல்கலைக்கழகமாக, அரசின் தலையீடு இருந்தாலும், வேறு தனிப் பட்ட சக்தியோ அல்லது நபருடைய ஆதிக்கமோ இருந்தாலும், சுதந்திரமான கல்வி வளர்ச்சி, சுதந்திரமான அறிவு வளர்ச்சி இருக்காது என்ற அடிப்படையிலே தான் பல்கலைக் கழகங்களுக்கு தன்னாட்சி உரிமைகள் தரப்படவேண்டுமென்ற கருத்தை நாம் பேசி வருகிறோம், சொல்லி வருகிறோம். இதற்கு முன்னாலே இருந்த சட்டங்கள் எந்த அடிப்படையிலே எப்படி இருந்தாலும், தமிழக அரசின் சார்பில் 1977-க்குப் பிறகு மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் இயங்குகிற இந்த அரசு ஜனநாயகப்படுத்துவதிலே அந்த தன்னாட்சி உரிமையை பாதுகாப்பதிலே படிப்படியாக நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை ஒவ்வொரு கட்டத்திலேயும் நாங்கள் எடுத்துக்கூறி வருகிறோம். அதிலே எங்களுக்கு நாணயமான உணர்வுகள், நல்ல ஈடுபாடு இருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

அடுத்து ஒன்றை நான் இங்கே கூறவிரும்புகிறேன். பொதுவாக பல்கலைக் கழகங்கள் இந்தியாவிலிருந்து செயல்படுகின்றன. பல்வேறு பல்கலைக் கழகங்கள் எப்படியெல்லாம் செயல்படுகின்றன என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியாத ஒன்றல்ல. ஒருவர் கொலை செய்யப்பட்டார், ஒரு துணைவேந்தர் கேரோ செய்யப்பட்டார். வட மாநிலங்களில் துணைவேந்தர் பதவி என்று சொன்னால் தேவையில்லை என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஏதோ தமிழ்நாட்டில் சிலர் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன் என்று சொல்லுகின்ற நிலைமையில், இந்தப் பொறுப்பினுடைய அந்தஸ்தும், தகுதியும் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக் கழகத் தலைமையில் இயங்கிக் கொண்டு இருக்கின்றன. குறிப்பாக கல்லூரிகள். இந்தக் கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் என்று வருகின்றபோது, இவைகள் எப்படி இருக்க வேண்டுமென்பதைப் பற்றி இதற்கு முன்னால் இருந்த அரசு அல்ல, சுதந்திரம் பெற்ற கடந்த 36 ஆண்டுகளாகவே ஆய்வு செய்யப்படவில்லை. நாம் தொடர்ந்து ஆய்வும் செய்யவில்லை. அவற்றை சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற அளவுக்கு திருத்தி அமைக்க ஒரு ஏற்பாடு செய்யவில்லை. இன்னும் சொல்லப் போனால், இவைகளைப் பற்றி பேசுவதற்கும், ஆராய்வதற்கும் கூட, சட்டமே இல்லை என்பதை நான் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்தியாவில் பல்கலைக் கழகங்களை ஆய்வு செய்வதற்கும், அவைகளைப் பற்றி மறு மதிப்பீடு செய்வதற்கும், தகுந்த யோசனைகளைச் சொல்வதற்கும், மாறுதல்களைக் கொண்டு வருவதற்கும், தகுதி வாய்ந்த ஒரு நிறுவனம் தேவை என்ற ஒரு கருத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

மத்திய மாநில அரசுகளின், பல்கலைக் கழக மானியக் குழு ஆகியவற்றின் கீழ் இந்த நிறுவனங்களைக் கொண்டு வருவது என்பது அவற்றைக் காப்பாற்றுவதற்கான முதல் முயற்சியாக, நல்ல முயற்சியாக இது அமையும். அடுத்ததாக பொதுவாக பல்கலைக் கழகங்களில் அரசினுடைய தலையீடு இருக்கக் கூடாது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நடைமுறையில் பார்க்கிறபோது ஒவ்வொரு பல்கலைக் கழகத்திலும், பெரும்பாலும் வடக்கே இருக்கிற பல்கலைக் கழகங்களில் எல்லாம் 'லா அண்டு ஆர்டர்' சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்படுகின்ற நிலைமையில் அரசுத் தலையிட வேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அரசு அதைப் பற்றி கவலைப்பட வேண்டிய கட்டாயம் உருவாக்கப்பட்டு வருகிறது. ஆகப் பல்கலைக் கழகங்களில், சட்டம், ஒழுங்கு, பிரச்சினைகளில், இதுபோன்று, கல்வி வளர்ச்சிக்கு அப்பாற்பட்டு, அறிவு வளர்ச்சிக்கு அப்பாற்பட்டு, நிலைமைகள் ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் தான், அரசு பணத்தை வரியாக வாங்கி, பல்கலைக் கழகங்கள் பயன்பெறும் வகையில் அந்தப் பணத்தை ஒதுக்குகின்றோம். அந்தப் பணம் ஓரள விற்கு பல்கலைக் கழகங்களுக்கு பயன்படுகிறது என்ற நிலைமை இருந்தால், நாம் பேசாமல் இருக்கலாம். ஆனால் அதற்கு மாறாக வீணாகின்ற நிலைமை இருந்தால், அரசு கவலைப் படாமல் இருக்க முடியாது. ஏன்? மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் கவலைப்படாமல் இருக்கமுடியாது. அந்த அடிப்படையிலே தான் நாம் இவைகளைப் பார்க்கிறோம். ஆகவே பல்கலைக் கழகங்கள் என்பது அறிவு மையங்களாக, அரசு மையங்களாக இருக்க வேண்டும். அதே நேரத்தில் அந்தப் பல்கலைக் கழகங்கள் எல்லாம், கல்வி நிறுவனங்களை தலைமை தாங்கி நடத்திச் செல்லவும் வேண்டும்.

அந்தப் பல்கலைக் கழகங்களில் நடைபெறுகின்ற ஆய்வுகள், சமுதாயத்தை சீர்படுத்த வேண்டியவைகளாக, அந்த சமுதாயப் பிரச்னைகளுக்குத் தீர்வு காணக் கூடியவைகளாக அமைந்து, அரசுக்கும், மக்களுக்கும், சமுதாயத்திற்கும் பயன்படுகின்ற ஒரு நிலைமையில், ஒரு மாற்றம் ஏற்படுமேயானால், அத்தகைய



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 12-40)

மாற்றத்தைத்தான் தமிழ்நாடு அரசு விரும்புகிறது என்பதை நான் இங்கே குறிப்பாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே அந்த லட்சியத்தை நோக்கி அந்த நோக்கத்தை நிறைவேற்ற அந்தப் பல்கலைக் கழகச் சட்டங்களிலே என்ன மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோமோ அதற்கேற்ப மாற்றங் களைச் செய்கிறோம். நான் உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். இதற்கு முன்னாலே பல்கலைக் கழகங்களிலே ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது. சென்னைப் பல்கலைக் கழகத்திலே அங்கே இருக்கின்ற ஆசிரியர்களுக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் கிடையாது. அதைப்போலவே தான் எந்த ஒரு பல்கலைக் கழகத்திலேயும் அங்கே பணியாற்று கின்ற ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் கிடையாது.

ஆனால் இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் அவர்களுக்கு முக்கியமான இடம் தரப்பட வேண்டும் என்ற கருத்தோடு ஆசிரியர்களுக்கு இடமே இல்லை என்பது வருத்தத்திற்குரியதாக இருக்கிறது, தேர்தல் என்ற பெயரால் யார் யாரோ வந்து அங்கே இடம் பிடித்துக் கொள்கிறார்கள், அது மட்டுமல்ல, அவர்கள் தொடர்ந்து அங்கே நீடித்து இருக்கக்கூடிய வகையிலேதான் அந்தத் தேர்தலும் அமைந்திருக்கிறது. இரண்டு முறைக்கு மேல் அப்படி வரக்கூடாது என்று நாம் சொல்வதற்குக் காரணம் தொடர்ந்து சில பேர்கள் அவர்களே இருக்கக்கூடிய நிலைமை வருமானால் தேர்தலும் நடந்து அதற்குப் பிறகும் அவர்களுடைய ஆசாபாசங்களுக்கிடையே நிலைமைகள் இருக்க வேண்டிய சூழ் நிலை இருக்கிறபோது அது ஒரு பல்கலைக் கழகமாக, அறிவு மையமாக சமுதாயத்திற்குப் பயன்படவேண்டுமென்ற நோக்கம் நிறைவேறாத நிலைமை ஏற்பட்டுவிடும் என்பதால்தான் இரண்டு தடவைகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்பதையும் கொண்டு வந்து தமிழகத்திலே உள்ள பல்கலைக் கழகங்களிலே உள்ள ஆசிரியர்களுக்கும், கல்லூரி ஆசிரியர்களுக்கும் இடம் கொடுக்க வேண்டுமென்பதையும் கொண்டுவர முயற்சியை மேற்கொண் டிருக்கிறோம்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

நாம் ஏதோ பல்கலைக் கழகங்களுக்கு மட்டும் இரண்டு முறை என்று கொண்டுவரவில்லை, நாம் நிறைவேற்றியிருக்கிற கூட்டுறவுச் சட்டத்திலேயும் அது இருக்கிறது என்று கருது கிறேன். கூட்டுறவுச் சங்கத்திலே ஒருவர் தலைவராக வந்தால் அதற்குப் பிறகு அவரே தான் தொடர்ந்து தலைவராக இருப்பார் என்ற நிலைமை தமிழ்நாட்டிலே பல சங்கங்களிலே ஏற்பட்டதை நாம் பார்த்து இருக்கிறோம். தனி நபர் ஆதிக்கம் இருக்கக் கூடாது என்ற முறையிலே தான் கூட்டுறவுச் சட்டத்திலே இரண்டு முறைகளுக்கு மேலாக வரக்கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து இந்த மன்றத்திலே நிறைவேற்றி அவைகளுக்குத் தேர்தல் நடைபெற இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தனி நபர் ஆதிக்கம் கூடாது என்பதில் அரசு எவ்வளவு அழுத்தமாக இருக்கிறதோ அதே அளவுக்கு உறுப்பினர்களும் இருக்கவேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன், விரும்புகிறேன். அந்த அடிப்படையிலே அடுத்த பிரச்னை வருகிறது. மதிப்பிற் குரிய ரகுமான்கான் அவர்கள் பேசியபோது பல்கலைக் கழக மானியக் குழுத் தலைவர் திருமதி டாக்டர் மாதுரி ஆர். ஷா அவர்கள் கோவையிலே சொன்ன ஒரு கருத்து என்று சொன்னார்கள். அவர்கள் இந்த மசோதாவைப் பற்றிச் சொல்லவில்லை. திரு. ரகுமான்கான் அவர்கள் தவறாக எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இப்படிப்பட்ட ஒரு மசோதா வரவேண்டுமென்றுதான் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பட்ட ஒரு மசோதா வராமல் இருக்குமேயானால் அந்த நிலைமையிலே சில தவறுகள் ஏற்படும் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். இணை வேந்தருக்கு அதிக அதிகாரங்கள் இருக்கின்றன, அரசு தலையிடக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று சொல்லி நாங்கள் அதை எல்லாம் விவாதிப்பதற்குப் பிறகு தான் பல்கலைக் கழக மானியக் குழுவின் நிதியுதவி பல்கலைக் கழகங்களுக்கு வராமல் நின்று விடக்கூடாது என்ற காரணத்தினால் நாம் இந்தத் திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறோம்.



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

இந்தத் திருத்தங்களைக் கொண்டுவருவதன் மூலமாக டாக்டர் மாதுரி ஆர். ஷா அவர்கள் சொல்லியபடி பல்கலைக் கழக மானியக் குழு என்ன எதிர்பார்க்கிறதோ அந்தத் திருத்தங்கள் தான் இவை என்பதையும் இதற்குப் பிறகு நாம் இந்த ஆண்டே கூட பணத்தைப் பெறுவதற்கு முயற்சியை மேற்கொள்ளலாம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக மத்தியிலே ஒரு கட்சி ஆளுகிறது. மாநிலங்களிலே வேறு கட்சிகள் ஆளுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இங்கே நாம் ஆண்டுகொண்டிருக்கிறோம். கர்நாடகம், ஆந்திரா, வெஸ்ட் பெங்கால், சிக்கிம் போன்ற மாநிலங்களிலே வேறு கட்சிகள் ஆண்டுகொண்டு இருக்கின்றன. ஒரு பல்கலைக் கழகத்தினுடைய துணைவேந்தர், சிண்டிகேட் உறுப்பினர்கள், செனட் உறுப்பினர் இவர்களை நியமிக்கின்ற அதிகாரங்களைப் பற்றிய பிரச்சினைகள் தொடர்பாக இவை வந்திருக்கின்றன. இணைவேந்தர் நியமிக்கலாமா, வேந்தர் நியமிக்கலாமா என்ற பிரச்சினையில் பல்கலைக் கழக மானியக் குழு இணை வேந்த ருக்கு அதிகமான அதிகாரங்கள் இருக்குமானால் சர்க்கார் தலையீடு வரும் என்று சொல்லி அதைப் பெரிய பிரச்சினையாக நாம் ஆக்காமல் அதை ஏற்றுக்கொண்டு திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆனால் அரசினுடைய கருத்தாக இப்போது நான் பேசிய பேச்சின் அடிப்படையில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பல்கலைக்கழகத்தின் விவகாரங்களில் இப்போது வேந்தர் என்ற முறையில் கவர்னர் ஒரு நடவடிக்கை எடுக்கலாம். அல்லது இணைவேந்தர் என்ற முறையில் கல்வி அமைச்சர் அரசின் சார்பில் ஒரு முயற்சியை மேற்கொள்ளலாம். இந்த இரண்டின் அடிப்படையில்தான் நாம் இப்போது பேசிக் கொண்டு இருக்கிறோம்.

ஆனால் ஒரு பல்கலைக்கழகத்தில் ஒரு வேந்தருடைய அதிகாரம் இருக்க வேண்டுமா? இணை வேந்தர் அதிகாரம் இருக்க வேண்டுமா? என்று பார்க்கிறபோது வேந்தர் என்பவர் ஒரு தனி நபராக மத்திய அரசால் நியமிக்கப்படுபவர். மத்திய அரசினுடைய தலையீடு இருக்கிறதா? இல்லையா? என்பது ஒன்று, கவர்னர் தலையீடு இருக்கிறதா? இல்லையா? என்பது ஒன்று, மாநில அரசினுடைய சார்பாக கல்வி அமைச்

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

சருடைய தலையீடு இருக்கிறதா? இல்லையா? என்பது ஒன்று. இந்த மூன்றை வைத்துப் பார்க்கிறபோது ஒரு மாநிலத்தில் இயங்குகிற பல்கலைக் கழகத்தில் இந்த மூன்று நிலைகளிலேயும் மாநில அரசினுடைய ஆதிக்கம் சிறந்தது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காக மாநில அரசினுடைய ஆதிக்கம் இருக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இந்த மூன்றையும் விட சிறந்த ஒன்று பல்கலைக்கழக நிர்வாகத்தில் ஆசிரியர்களுடைய ஆதிக்கம் இருக்க வேண்டும் என்பது தான். பேராசிரியர்களின் ஆதிக்கம் அல்லது பேராசிரியர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்ப ஒரு பல்கலைக்கழகம் நடக்க வேண்டும் என்பது தான் சிறந்த கொள்கையே தவிர, இதில் வேந்தரா, இணை வேந்தரா அல்லது மத்திய அரசா என்பது அல்ல. ஆனால் அந்த நிலையை நீக்க நாம் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு செல்ல வேண்டும்.

இறைக்கு அப்படிப்பட்ட நிலைமையை கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வரக்கூடிய திருத்தமாகத்தான் பல்கலைக் கழக சட்ட முன்வடிவுகள் கடந்த 7 ஆண்டு காலமாக ஒவ்வொன்றாக வந்து கொண்டிருக்கிறது என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவே இன்றைக்கு நாங்கள் வருவதற்கு முன்னால் இருந்த நிலைமை ஆசிரியர்களுக்கும், பல்கலைக்கழக துறையில் உள்ள பேராசிரியர்களுக்கும் இல்லாது இருந்த நிலைமைகள் இந்த 7 ஆண்டு காலத்தில் நாங்கள் கொஞ்சம் கொஞ்சமாக கொண்டு வந்திருக்கிறோம்.

மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் பல்கலைக் கழகத் துறை தலைவர்களை துணை வேந்தர் அவர்களே நியமிக்கிறார்கள் என்று சொன்னார்கள். துணை வேந்தர் நியமிக்கிறார் என்று அது இருக்கிறதே தவிர அவர்கள் இஷ்டப்படி நியமிக்க முடியாது என்பதை நான் இங்கே குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சீனியாரிட்டி பிரகாரம், பணி மூப்பு பிரகாரம் அவர்களை வரிசைப்படுத்தி போடுகிறோம். இப்போது [illegible]



1985 மார்ச் 19]

போடவேண்டும் என்றால் யார் பணி மூப்பில் அதிகமாக இருக்கிறாரோ அவரைத் தான் போட வேண்டுமே தவிர, துணை வேந்தர் விரும்பியவரை போட முடியாது. அதற்கு அடுத்த வாய்ப்பு அதற்கு அடுத்தவராக இருப்பவருக்குத் தான் தர வேண்டுமே தவிர, இவர் விரும்பியவருக்கு போட முடியாது. ஆகவே துணைவேந்தர் நியமிக்கலாம் என்பது ஒரு சடங்குதானே தவிர உண்மையில் பிரதிநிதித்துவம் என்பது ஆசிரியர்கள் பணி மூப்பு முறையில் தரப்படுகிறது.

**திரு. கு. ரமணி:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற விளக்கத்தை நான் புரிந்துகொள்ளுகிறேன். ஆனால் நான் சொன்னது அங்கே ஊழியர்களை நியமிக்கின்ற காலத்தில் எம்பிளாய்மெண்டு எக்சேன்சிலிருந்து அவர்களுடைய பெயர் பட்டியலை வாங்கி நியமனம் செய்யாமல், சொந்தமான நியமனம் செய்யக்கூடிய நிலைமையும், டெண்டர் கொடுத்து பொருள்கள் வாங்குகின்ற நிலை இல்லாமல் நேரடி பர்சேஸ் ஆகிய இந்த இரண்டு விஷயங்களை நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் இந்த பல்கலைக்கழகத்தினுடைய தன்னாட்சி உரிமைபற்றி விளக்கம் தந்துகொண்டு இருக்கிறேன். அதேபோல் ரீடர், லெக்சரர் என்று வருகிறபோது அதிலும் சீனியாரிட்டி பிரகாரம் நியமனம் செய்ய வேண்டும் என்ற கருத்தை வைத்து தான் இந்த சட்ட முன்வடிவு இருக்கிறது. ஆகவே இதற்கு முன்னால் இருந்த சட்ட முன்வடிவைக் காட்டிலும் இப்போது இந்த ஆட்சியில் கொண்டு வரப்பட்டு இருக்கிற, சட்ட முன்வடிவு என்பது நாம் எல்லோரும் விரும்புகிற, ஜனநாயகப்படுத்துகிற கொள்கைக்கும், நாம் எல்லோரும் விரும்புகிற மிகுதியையும் பல்கலைக் கழகத்திற்கு தருகின்ற முயற்சிக்கும் படிப்படியாக ஆதரவு தரக்கூடிய வகையில் அந்த முயற்சி இருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 19

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தவறான தகவலை தந்து விடக்கூடாது என்பதற்காக உங்கள் மூலம் மாண்புமிகு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இங்கே பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் திருமதி டாக்டர் மாதிரி ஷா அவர்கள் விமர்சனமாக, பேச்சாக இந்த பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழகங்களைப் பற்றித்தான்.

" . . . .The University Grants Commission has advised the Tamil Nadu Government to amend the Bharathiar and Bharathidasan Universities Acts by ordinances, if necessary, to restore full autonomy of the two Universities . . . ."

என்று பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக ஒரு முழுமையான சுயாட்சி அங்கே இருக்க வேண்டும் என்ற கருத்தை வெளியிட்டுவிட்டு தேவைப்பட்டால் ஒரு ஆர்டினன்ஸ் மூலம் அந்த சட்டமே கொண்டு வரலாம் என்று சொல்லிவிட்டு அது சம்பந்தமாக சொல்லும்போது சொல்வதை மீண்டும் நினைவுப்படுத்த விரும்புகிறேன்.

" . . . . .She stated that the Acts of the two Universities gave wide powers to the Pro-Chancellor . . . . . ". புரோ சான்சலர் என்பது தங்களைக் குறிப்பது.

" . . . . which the U.G.C. felt, would erode the autonomy of the Universities." பல்கலைக்கழகத்தினுடைய தன்னாட்சி பாதிக்கும்.

(பிற்பகல் 12-50)

புரோசான்சலராகிய உங்களிடத்திலே கல்வியமைச்சரிடத்திலே, அரசாங்கத்தினிடத்திலே அதிகாரங்கள் அதிகமாகக் குவிக்கப் பட்டால், பாரதியார், பாரதிதாசன் பல்கலைக்கழகங்களினுடைய சட்ட ஷரத்துக்கள் அந்த மாதிரி அதிகாரக் குவிப்பைத்தான் காட்டுகிறது. எனவே, சுயாட்சி வேண்டுமானால் இது வேறுமாதிரியாக சிந்திக்கப்பட வேண்டுமென்ற கருத்தைத்தான் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.



1985 மார்ச் 19]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அதைச் சுட்டிக்காட்டித்தான் நான் இங்கே பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்கலைக் கழகத் தலைவர் மாதுரி ஆர். ஷா அவர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்கள் கோவையிலே பேசியது அல்ல, என்னிடத்திலே நேரிலேயே பேசியிருக்கிறார்கள், நானும் அவர்களிடத்திலே பேசியிருக்கின்றேன். அவர்கள் சொன்ன திருத்தங்கள் தான் இவை. அவர்கள் குறிப்பிடுகின்ற சட்டம் என்பது இதற்கு முன்னாலே இருக்கிற, இப்பொழுது இருக்கிற சட்டம். அவர்கள் கொண்டு வர வேண்டுமென்ற திருத்தங்கள்தான் இப்பொழுது அவையின் முன்னாலே இருக்கின்ற திருத்தங்கள். ஆகவே, அதைத்தான் நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

ஆனால், நான் தெரிந்துகொள்ள வேண்டுமென்று விரும்புவது, இப்பொழுது நாம் அதை ஏற்றுக்கொள்ளப் போகிறோம் என்றாலும், புரோசான்சலர் இணைவேந்தர் அவர்களுக்குத் தரப்படுகின்ற அதிகாரம் ஒரு பல்கலைக்கழகத்தினுடைய சுயாட்சித் தன்மையைப் பாதிக்கும் என்று சொல்லுகின்ற நேரத்தில், அதே அதிகாரம் வேந்தருக்குப் போகுமேயானால் பாதிக்காது என்று சொல்லுகின்ற அந்த நிலைமை தவறு. அந்த அதிகாரம் எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்கு வர வேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திச் சொல்லுகின்றேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மரியாதைக்குரிய அந்த கமிஷனுடைய தலைவர் அவர்கள் ஒரு இணைவேந்தர்—அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் போகக்கூடாது என்று சொல்லிவிட்டு, ஆனால் அதே நேரத்திலே கவர்னருக்கு அந்த அதிகாரம் போவதற்கான திருத்தங்கள் வருவது, வேலூர் சிறையிலே இருக்கக்கூடிய கைதியை மத்திய சிறைச்சாலைக்கு மாற்றுவதைப்போன்ற நிலைமைதான். இப்பொழுது சிறைதான் மாறியிருக்கிறதே தவிர, கைதிதான். எனவே, அதிகாரம் இன்றைக்கு இல்லை என்பதுதான் நிலைமை; தன்னாட்சி இல்லை என்பதுதான் நிலைமை.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர
வர்களே, இப்பொழுது பல்கலைக்கழக மானியக் குழு எத்தகைய
திருத்தங்களை விரும்பியிருக்கிறதோ அந்தத் திருத்தங்களைக்
கொண்டுவந்து நிறைவேற்றி, பல்கலைக்கழக மானியக் குழுவின்
நிதியைப் பெறுவதற்கு முயற்சி செய்கின்றோம். ஆனால், ஒரு
பல்கலைக் கழகம் முழுமையான தன்னாட்சி உருப்பெறுவதற்கு
என்ன செய்ய வேண்டுமோ அதை நாம் தேசிய அளவில்
நடைபெறுகின்ற கூட்டங்களிலே பேசி, மற்ற கல்வி அமைச்சர்கள்
அல்லது மத்திய கல்வி அமைச்சருக்கு இந்த நிலைமைகளை
விளக்கிக் காட்டி, நாம் பொதுவான ஒரு கருத்தை உருவாக்கினால்
தான் நாம் எதிர்பார்க்கின்ற அளவிற்குப் பேராசிரியர்கள், கல்வி
நிபுணர்கள், ஆசிரியப் பெருமக்களுடைய செல்வாக்கின் கீழே
நடைபெறக்கூடிய ஒன்றாக இது வரும்.

இன்னொன்று, இந்த நிதி உதவி இல்லாத நிறுவனங்களைப்
பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்
குறிப்பிட்டார்கள். இப்பொழுது கல்வியை வியாபார
மாக்கி மக்களிடத்திலேயிருந்து கொள்ளையடிக்க வேண்டு
மென்ற நோக்கத்தோடு அதை நாம் செய்யவில்லை. ஆனால்
தொழிற்கல்வி என்பது நல்ல முறையிலே வளர்ந்தாலொழிய
ஒரு மாநிலத்தில் தொழிலும் வளராது; பொருளாதார
மேம்பாடும் அடைய முடியாது. குறிப்பாக, நம்முடைய
ஐந்தாண்டுத் திட்டங்களை நீங்கள் பார்த்தீர்களேயானால்,
ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப்போல இரண்டு மடங்கு
ஆறாவது ஐந்தாண்டுத் திட்டம் இருக்கும். ஆறாவது
ஐந்தாண்டுத் திட்டத்தைப்போல ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம்
இரண்டு மடங்கு இருக்கிறது. இப்படி முதல் திட்டத்திற்கும்
இரண்டாவது திட்டத்திற்கும் இடையில் பார்த்தால், இரண்டு
மடங்காக நாம் உருவாக்கிக்கொண்டு வருகிறோம். ஆனால்
அதிலே ஒரு சாதாரண நிலையிலே இருந்து பார்ப்பவர்கள்கூட,
ஒரு ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் தேவையான மனித சக்தி,
அதுவும் பயிற்சி தரப்பட்ட மனித சக்தி, வளப்படுத்தப்பட்ட
மனித சக்தி அடுத்த இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு
இரண்டு மடங்கு தேவை என்று சொன்னால், ஒத்துக்கொள்ளத்
தான் செய்வார்கள். அதற்கேற்ப முயற்சிகளிலே நாம் ஈடுபட்டாக
வேண்டும்.



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

அப்படிப் பார்க்கின்றபொழுது கடந்த 15 ஆண்டுக் காலத்தில்
தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் ஒரு பொறியியல் கல்லூரி
ஆரம்பித்தோமே அதுதான் நாம் செய்திருக்கின்ற பெரிய
தொழிற்கல்வி முயற்சி. அதைப்போலவே, கிருஷ்ணகிரியிலே ஒரு
தொழிற்கல்வி முயற்சி. அதைப்போலவே, கிருஷ்ணகிரியிலே ஒரு
பாலிடெக்னிக், ஊட்டியிலே ஒரு பாலிடெக்னிக் என்று மூன்றே
மூன்று பாலிடெக்னிக்குகளைத்தான் ஆரம்பித்திருக்கிறோம்.

ஆகவே, ஒருபுறம் நாம் ஐந்தாண்டுத் திட்டங்களினுடைய
மதிப்பீடுகளையெல்லாம் அதிகப்படுத்திக் கொண்டு, அதற்கேற்ப
இந்த பயிற்சி பெற்றவர்களை நாம் தயாரிக்கவில்லை என்றால்
இந்தத் திட்ட மதிப்பீட்டில் வெற்றி பெறுவது பாதிக்கப்படும்
என்பது மட்டுமல்ல, நாம் ஒரு கொள்கையைச் சொல்லிக்கொண்டு,
ஒரு மாநிலத்தினுடைய வளர்ச்சியைக் கழுத்தைப் பிடித்து
நெறித்துக் கொண்டிருப்பதைப்போல நாம் பேசுவது
கேட்பதற்கு நல்ல மேற்போக்காக இருக்கலாமே தவிர அனுபவ
ரீதியாக பார்க்கின்றபொழுது இது மாநில வளர்ச்சிக்கு
உகந்ததாக இல்லை. ஆகவேதான் இப்பொழுது சொந்தமாகப்
பணம் போட்டு நடத்துகிறவர்களுக்கு நாம் அனுமதி தருகின்ற
முயற்சியில் பல நிறுவனங்கள் வந்திருக்கின்றன. அவர்களே
ஆசிரியர்களுக்குச் சம்பளம் தருகிறார்கள்; அவர்களே கட்டிடம்
கட்டுகிறார்கள்; அவர்களே வேண்டிய நிலங்களை வாங்கிக்
கொள்கிறார்கள்; அதற்கேற்ப அந்த மாணவர்களைச் சேர்ப்பதில்
50 சதவீதம் அரசினுடைய பட்டியலிலேயிருந்துதான் சேர்க்க
வேண்டும்; மீதி 50 சதவீதம் பேர்களை அவர்களுக்கு வேண்டிய
வர்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று நாம் சொன்னோம்.
அதிலே தவறுகள் நடக்கின்றன என்பதுதான் இப்போது
பிரச்சினை. அதைத் தடுப்பதற்கு என்ன வழி என்பதை நாம்
ஆராய்ந்து தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால்
இந்த நேரத்திலே ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.
கேரளாவிலே இதுபோன்ற பிரச்சினை வந்து அவர்கள் ஒரு
கமிட்டி இதற்கென அமைத்து அந்தக் கமிட்டி அறிக்கை தந்ததாக
டெல்லியிலே இருந்து வருகின்ற பத்திரிகையிலே ஜனவரி
ஒன்றாம் தேதி இதழில் ஒரு செய்தி போட்டிருந்தார்கள். அதில்
அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் ஒன்று அரசாங்கம்

[திரு. சே. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

ஆரம்பிக்க வேண்டும்; அரசாங்கம கல்வி நிறுவனங்களை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் ஆரம்பிக்க இயலவில்லை என்ற நேரத்தில் நமக்கு வாக்களித்த மக்கள் அதை அனுபவித்துதான் தீரவேண்டும் என்று சொல்கிற சூழ்நிலை இருக்க வேண்டியதில்லை. ஆகவே கமிட்டி என்ன சொல்கிறது என்றால் அரசாலே ஆரம்பிக்க முடியவில்லை என்று சொன்னால் இப்படி தனிப்பட்டவர்கள் ஆரம்பிப்பார் களேயானால் அதைத் தடுப்பது நியாயம் இல்லை என்று அந்த பிள்ளைக் கமிட்டி அறிவித்திருக்கின்றது. டெக்னிக்கல் எஜு கேஷன் ஆல் இண்டியா கவுன்சிலும் இதைப்பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். எப்படிப் பார்த்தாலும் ஒரு கல்லூரி நடத்துகின்ற ஒருவர் செய்கின்ற செலவுக்கு ஏற்ப அந்த சம்ப ளத்தை வாங்குவது வரைக்கும் நியாயமாக ஏற்றுக்கொள்ளலாம், அதற்குமேல் வாங்கினால் அது தவறு என்ற நிலைமைக்கு அந்த அகில இந்திய குழுவும் வந்திருக்கின்றது.

ஆனால் இப்போது நாம் அப்படிக்கூட ஒப்புக்கொள்ள வில்லை. 50 சதவீதம் மாணவர்களிடத்திலிருந்து வசூலிப்பதைப் பொறுத்தவரையில் எய்டட் இன்ஸ்டிடியூஷனிலே வாங்கப்படும் குறைந்த அளவுச் சம்பளம் அளவுக்குத்தான் அதாவது அரசின் நிதியுதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்கள் என்ன வாங்குகிறதோ அந்த குறைந்த அளவுச் சம்பளத்தைத் தான் வாங்கவேண்டும் என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதைத்தான் அவர்களும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் சம்ப ளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்ற நிலைமை வந்துகொண் டிருக்கிறது. எனவே எப்படியும் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நாம் முயற்சிக்கலாம். இதனால் ஏற்படுகின்ற நன்மை மக்க ளுக்குக் கிடைக்கட்டும், அதேநேரத்தில் அதனால் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தீர்வுகளைக் காண முடியும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1985 மார்ச் 19] (திரு. அ. ரகுமான்கான்)

**திரு. அ. ரகுமான்கான்:** மாற்றுத்தலைவர் அவர்களே, செல்ஃப் ஃபைனான்சிங் இன்ஸ்டிட்யூஷன், அதாவது சுயநிதியுதவியில் இன்ஜினியரிங் கல்லூரிகளையும் பாலிடெக்னிக்குகளையும், நடத்துகின்ற கொள்கைக்கு விரோதமாக நான் சொல்லவில்லை. ஆனால் ஏழை எளிய மாணவர்களுக்கும், எளிய குடும்பத்தில் பிறந்தவர்களுக்கும் ஒரு இன்ஜினியரிங் கல்லூரியில் அல்லது ஃபார்மஸியில் பாலிடெக்னிக்கில் சேரவேண்டும் என்றால் அல்லது சேரவேண்டும் என்றால் 20 ஆயிரம், 15 ஆயிரம் கொடுத்தால்தான் ஆகும் என்ற சொல்கிறபோது அவர்களால் அந்த வாய்ப்பைப் பெற முடியவில்லை. உள்ளே நுழைய முடியவில்லை. ஆனால் அதேநேரத்தில் வசதி படைத்தவர்கள் பெற்றுவிடுகிறார்கள். ஆனால் நீங்கள் சொல்கிற சமாதானம், ஜஸ்டிஃபிகேஷன் என்னவென்று கேட்டால் அவர்கள் பண முதலீடு செய்கிறார்கள் என்றும் ஆசிரியர் செலவுகள், கட்டடம், மற்ற எஸ்டாபிளிஷ் மெண்ட் செலவுகள் போன்றவற்றை எல்லாம் சந்திக்க வேண்டி யிருப்பதாலும் அவர்களுக்கு ஒரு தொகை தேவைப்படுகின்றது அல்லவா, அதை அவர்களிடமிருந்து தானே வாங்கவேண்டும் என்று சொல்லி அதை நியாயப்படுத்துகிறீர்கள். அப்படி நியாயப்படுத்துகின்றபோது, ஏழை எளிய மக்கள் பாதிக்கப் படுகின்றபோது

There is discrimination on the basis of 'haves and have-nots'.

அப்படி என்றால் பொருளாதாரம் இல்லாத காரணத்தால் கல்வி வாய்ப்பில்லை என்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கமே பொறுப்பாகின்றது. வேண்டுமானால் அரசாங்கம் ஒன்றைச் சொல்லலாம். இன்றைக்கு செல்ஃப் பைனான்சிங் இன்ஸ்டிட்யூஷன்களைப் பொறுத்தவரையிலே அரசாங்கமே ஒரு தொகையை மானியமாக தனியார் கல்லூரிக்குக் கொடுப்பதுபோல் கொடுக்கலாம் அல்லது அதுகுறித்து என்ன செய்யலாம் என்றால் இம்மீடியட்டாக ஒரு உத்தரவு போடவேண்டும். ஏற்கெனவே உத்தரவு போட்டிருக்கிறீர்கள், அது பலன் இல்லை. இன்றைக்குப் பெரும்பான்மையானவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். அது ஒரு வியாபாரமாகவே நடக்கின்றது. இதைத் தடுப்பதற்கு உடனடி யாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நன்கொடை என்ற பெயரால் அடிக்கப்படுகின்ற கொள்ளைக்கு அரசாங்கம் ஒரு முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 19

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்தக் கல்லூரிகளை நிறுத்துவதில் ஒன்றும் கஷ்டம் இல்லை. நாம் நினைத்தால் அடுத்த ஆண்டிலிருந்து கல்லூரியை நடைபெறாமல் செய்துவிட முடியும். ஆனால் அது எந்த விதத்திலும் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்யாது. நாம் 50 சதவீதம் தரவேண்டும் என்று சொல்கிறோமே அதிலே ஏழை மாணவர்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மீதி 50 சதவீதத்தைப் பொறுத்த வரையில் நிறைய பணம் வாங்கினார்கள் என்கின்றபோது இந்த அரசு அதை ஏற்கவில்லை. நான் ஏற்கெனவே கூறியதுபோல் எதிர்காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக இந்த கிராண்ட் வந்து அந்த எண்ணிக்கையைக் குறைப்போம் என்று சொல்லியிருக் கிறோம். அதனை எந்தவிதத்திலும் குறைக்க இருக்கிறோம். அதில் வருகின்ற இன்னொரு பிரச்சினை பற்றிச் சொல்ல விரும்புகிறேன்.

கல்வியின் தரத்தைப் பொறுத்தவரையில் பாலிடெக்னிக்கு களைப் பொறுத்தவரையில் தொழில் இயக்குநர் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை இன்ஸ்பெக்ஷன் செய்து அல்லது 6 மாதத்திற்கு ஒரு முறை அதைப் பார்த்து கல்வியினுடைய தரம் கீழே போய்விடாமல் பார்த்துக்கொள்கின்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தஞ்சை இன்ஜினியரிங் கல்லூரியைப் பொறுத்தவரையிலும்கூட அரசின் சார்பில் அல்லது தனியார்கள் கல்லூரிகள் ஆரம்பிப்பார்களானால் அவர்கள் என்னென்ன செய்யவேண்டும் என்று கண்டிஷன் போடுகிறோம். என்டோமென்ட் கட்டவேண்டும்; 50 அல்லது 60 ஏக்கர் இடம் இருக்க வேண்டும்; கட்டடம் இருக்கவேண்டும்: என்னவெல்லாம் கண்டிஷன் போடுகிறோம். இப்படி எதுவும் இல்லாமல் அதை ஆரம்பிக்க முடியாது.



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

(பிற்பகல் 1-00)

ஆனால் அப்படி அதைப் பூர்த்தி செய்து வருகின்றபொழுது நான் உங்களுக்குத்தான் தருவேன், உங்களுக்குத் தரமாட்டேன் என்ற நிலைமையில் நாங்கள் வைக்காமல், அப்படிப் பூர்த்தி செய்கின்ற வர்களுக்கு ஒரு நியாயமான முறையிலே, நாங்கள் விருப்பு வெறுப்பு இல்லாமல் இருக்கிறோம் என்ற முறையிலே இந்த அனுமதியைத் தருகிறோம். இப்பொழுது அவர்கள் அதற்கு மாறாகக் கல்வித் தரம் குறைகின்ற விதத்தில் நடத்திக் கொண்டிருப்பார்களானால் பல்கலைக்கழகம் என்றைக்கு வேண்டுமானாலும் அந்த அனுமதியை மறுக்கலாம். அந்த அடிப்படையிலே இந்தத்தஞ்சாவூர் பொறியியல் கல்லூரியைப் பொறுத்த மட்டில் பல்கலைக் கழகம் அவர்கள் சரியாக நடத்தமாட்டார்கள் என்று கருதி அது பல்கலைக் கழக நோக்கில் இருந்தாலும் அவர்கள் உயர் நீதிமன்றத்திற்குப் போய் உத்தரவு வாங்கி இப்பொழுது பல்கலைக் கழகமும் அனுமதி தந்திருக்கிறது. ஆகவே, மாணவர்கள் பாதிக்கப்படவில்லை.

சட்டக்கல்லூரியைப் பொறுத்தமட்டில் 5 ஆண்டுச் சட்டக் கல்லூரி வேண்டுமென்று அகில இந்திய பார் கவுன்சில் சொன்ன கருத்தை நம்முடைய தமிழ்நாடு தான் ஏற்றுக்கொண்டு சென்ற ஆண்டு நாங்கள் துவக்கியிருக்கிறோம். அதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய நீதிபதி திரு. கோகுலகிருஷ்ணன் போன்றவர் களையெல்லாம் வைத்து, பாடத் திட்டங்களையெல்லாம், அந்த வழிமுறைகளை எல்லாம் உருவாக்கித்தர குழு அமைத்து, அவர்களுடைய கருத்துப்படி, பார் கவுன்சிலின் கருத்துப்படி 5 ஆண்டு சட்டக்கல்வி நடந்து கொண்டு வருகிறது. அதிலே ஏதாவது ஒரு திருத்தம் செய்ய வேண்டுமென்றாலும் அவர்கள் தான் செய்யவேண்டுமே தவிர, நாம் செய்யக்கூடாது. நாம் இந்த மாணவர்களுடைய கோரிக்கையை அவர்களுக்கு அனுப்பலாம். அதற்குமேல் செய்வதற்கு அதிகாரமும் கிடையாது. செய்ய முயற்சித்தாலும் அதுதான் தலையீடு; அரசின் தலையீடாக மாறிவிடும். ஆகவே, மாணவர்களுடைய கோரிக்கையை நாம் தெரியப்படுத்துகின்ற ஒரு காரியத்தைச் செய்து இருக்கிறோம்.

(திரு. செ. அரங்கநாயகம்) [1985 மார்ச் 19

அதைப்போல பல்கலைக்கழகங்களிலே நியமனங்கள் செய்தால் எம்ப்ளாயிமெண்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் செய்ய வேண்டு மென்கிற ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறோம். அதோடுகூட பாரதியார் பல்கலைக்கழகத்தில் நாம் நிலம் எடுத்திருக்கிறோம். அந்த நிலம் யார், யார் தந்தார்களோ, அவர்கள் வீட்டுக் குழந்தைகள் ஒருவருக்கு வேலை தரலாம் என்ற ஒரு உத்தரவாத வேலையே தவிர, மீதி யாருக்குத் தந்தாலும் எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் தர வேண்டுமென்ற ஒரு உத்தரவைப் போட்டிருக்கிறோம். அது பேராசிரியர்களுக்கும் பொருந்து கின்ற அளவுக்கு இன்றைக்கு அந்த உத்தரவு போயிருக்கிறது. ஆகவே, எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்ச் மூலமாகத்தான் அவர்கள் இனி ஆட்களை எடுக்க வேண்டும்.

இப்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கிற நம்முடைய தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப்பற்றி ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே கலைக் களஞ்சியத்தை இப்பொழுது தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். பேர் அகராதி ஒன்றைத் தயாரித்துக் கொண்டு வருகிறார்கள். இவைகளை 3 ஆண்டுகளில் முடிக்கவேண்டுமென்ற கருத்தோடு செய்து வருகிறார்கள்.

இன்னொன்று, கம்ப்யூட்டரைப் பயன்படுத்தி ஒரு மொழியி லிருந்து இன்னொரு மொழிக்கு மொழி மாற்றம் செய்கின்ற ஒரு முயற்சியில் அவர்கள் தாங்களாகவே ஈடுபட்டிருக்கிறார்கள். இப்பொழுது ரஷிய மொழியிலே இருந்து, அந்த கம்ப்யூட்டர், தமிழ் மொழிக்கு மொழி பெயர்க்கின்ற அந்த புரோகிராமை, சிஸ்டத்தை, அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது ஒரு முக்கியமான முயற்சி.

அதைப்போலவே தமிழ் இசைத் துறையில் புதிய இராகங் களைக் கொண்டு வர முடியும் என்ற நம்பிக்கையில் அது ஒரு முயற்சியை எடுத்துக் கொண்டு வருகிறது.

கிராமியக் கலைகளுக்கு ஊக்கம் தருகின்ற வகையிலே ஒரு முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு மொழியின் அடிப்படையிலே ஒரு பல்கலைக்கழகம் ஆரம்பித்தால் அது மொழி வெறியாக மாறி அதுபோன்ற நிலையிலேதான் காரியங் களை நடத்திக் கொண்டிருப்பார்கள் என்ற நினைப்பிற்கு மாறாக



1985 மார்ச் 19] [திரு. செ. அரங்கநாயகம்]

இலக்கியங்களைப் பற்றியும் மற்றவற்றைப் பற்றியும் ஆராய முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக இன்றைக்குத் தமிழ்ப் பல்கலைக்கழகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்குப் பல்வேறு வகையிலே ஆதரவு தந்து கொண்டிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில் இந்தியாவிலேயே ஒரு எடுத்துக்காட்டுப் பல்கலைக் கழகமாக, மாதிரிப் பல்கலைக் கழகமாக அமையும்.

மாணவர்கள் இல்லையென்று சொன்னார்கள். நாமேதான் மாணவர்களுக்கு என்றில்லாமல் பல்கலைக்கழகம் ஒரு ஆராய்ச்சி மையமாக இருக்க வேண்டுமென்ற கருத்தின் அடிப் படையில் அந்தப் பல்கலைக் கழகம் நடைபெறுகிறது; கொடைக்கானலில் அமைக்கப்பட்ட அன்னை தெரசா பல்கலைக்கழகமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு வித்தியாசத்தை இங்கே நான் குறிப்பிட வேண்டும். இப்பொழுது வடக்கே இருக்கிற கல்லூரிகளில் எம்.ஏ., எம்.எஸ்.ஸி. கிடையாது. பல்கலைக்கழகங்களில்தான் உண்டு. ஆனால், தமிழ்நாட்டில், கல்லூரிகளிலேயே எம்.ஏ., எம்.எஸ்.ஸி., கொண்டு வந்து விட்டோம்; எம்.பில்.கூட இருக்கிறது; பி.எச்.டி. கூட இருக்கிறது. இங்கே இருக்கிற கல்லூரிகள்தான் எதிர் காலத்தில் வளர்ந்து பல்கலைக்கழகங்களாக ஆகவேண்டுமென்ற அந்த அளவிலே நாம் கல்லூரிகளை வளர்த்துக் கொண்டிருக் கிறோம். பல்கலைக்கழகங்கள் இந்தக் கல்லூரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தலைமை தாங்குகிற அந்த [illegible] இருக்க வேண்டுமென்ற காரணத்தால், அதோடு மட்டு மல்லாமல், எதை நாம் முக்கியமாகக் கருதுகிறோமோ, அதையே வலியுறுத்திச் சொல்வதன் மூலமாக, தமிழ்நாட்டிற்கு மட்டு மல்லாமல், இந்தியா முழுவதற்குமேகூட அந்த உயர் கல்வித் துறையில் ஒரு எடுத்துக் காட்டாக இருக்க முடியும் என்று கருதித் தான் நாம் வேண்டுமென்றேதான் மாணவர்களைத் தவிர்த்திருக் கிறோம். ஆனால், ஆராய்ச்சி மாணவர்களை அங்கே சேர்த்து அந்த மாணவர்கள் வந்துகொண்டுதானிருக்கிறார்கள். மற்ற பல்கலைக் கழகங்களிலேயும் வரத்தான் செய்வார்கள்.

[1985 மார்ச் 19

தமிழ்நாட்டுப் பல்கலைக் கழகங்களைப் பொறுத்தமட்டில் இந்தத் திருத்தங்கள் பல்கலைக்கழக குழுவினுடைய யோசனை யின்படி கொண்டு வரப்படுகிற திருத்தங்கள் என்று சொல்லி, இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு நன்றியைத் தெரிவித்து, நான் இங்கே பதில் சொல்லியிருந்தாலும் சொல்லாவிட்டாலும் அவை எல்லாம் கவனத்திலே எடுத்துக் கொள்ளப்பட்டு அவர் களுடைய கருத்துக்கள் பயன்படுத்திக் கொள்ளப்படும் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை ஏகமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு தலைவர் அவர் களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே நான் கேட்டுக் கொண்ட இரண்டு விபரங்களைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவற்றிற்கு விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "பினான்ஷியல் ஆபீசரைப்" பற்றி சொன்னார்கள். இதற்கு முன்னாலே இருந்தது அரசே நியமிக்கலாம் என்பது. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற திருத்தம், அரசு மூன்று பேரை தரலாம். அதிலே ஒருவரை சிண்டிகேட் நியமிக்கலாம் என்பது. ஆகவே சிண்டிகேட்டிற்கு கொஞ்சம் அதிகமான மரியாதை தரக்கூடிய விதத்திலே இந்தத் திருத்தம் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் அதனை ஆதரிப் பார்கள் என்று நம்புகிறேன். "காஸ்ட் அக்கவுண்டன்ட்" போடுவதை குறித்து பின்னாலே யோசிக்கலாம்.

**பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம் (திருத்த) சட்டமுன்வடிவு, 1985.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக் கழகம், பாரதி தாசன் பல்கலைக்கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."



1985 மார்ச் 19]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 29 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(பிற்பகல் 1-10)

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1985 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகம், பாரதி தாசன் பல்கலைக்கழகம் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு 1985**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி :

"1985 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 12/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1985)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது பல உறுப்பினர்கள் கலந்து கொள்ள விருக்கிறார்கள். அதனால் விவாதம் முடிய அதிக நேரம் ஆகும். ஆகையால் இந்தச் சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதற்கு ஒத்துக்கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

இரண்டாவதாக, நான் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். என்ன திருத்தம் வருகிறதோ அந்தப் பிரிவை மட்டும் தான் இந்தச் சட்டத்திலே கொடுத்திருக்கிறார்கள். அதாவது ஜஸ்ட் எக்ஸ்டன்ஷன். அதே நேரத்தில் இந்த பச்சையப்ப அறக்கட்டளையில் இருக்கிற சொத்துக்கள், நிர்வாகம், நிர்வாக உறுப்பினர்கள் போன்ற தகவல்களையும் எங்களுக்குத் தந்தால்

---

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 14-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





தான் நாங்கள் படித்து, விவரங்களைத் தெரிந்துகொண்டு எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல முடியும். இப்போது அந்த விவரங்கள் தரப்படவில்லை. This August Assembly has been placed in the dark எனவே, இன்று இரவுக்குள் 'சைக்குளோஸ்டைல்' செய்து அந்த விவரங்களை எங்களுக்குத் தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த மாதிரி திருத்தச் சட்டங்களில் 'அமென்ட்மென்ட்ஸ்' பிரிவுகளைத்தான் தருவார்கள். திருத்தச் சட்டத்தில் எல்லா விவரங்களையும் எப்படி எதிர் பார்க்க முடியும்?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொண்டு விவரங்களைத் தர அரசு முயற்சி செய்யும்.

**திரு. அ. ரகுமான்கான்:** தலைவரவர்களே, உங்களுக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் ஒரு சட்டவழக்கறிஞர். நீங்களும் நானும் ஒன்றாக பணியாற்றியிருக்கிறோம். அந்த நிர்வாகம் பற்றிய விவரங்களை எல்லாம் தெரிந்துகொண்டால்தான் அமன்ட்மென்ட்ஸ் பற்றி தெளிவான கருத்தைச் சொல்ல முடியும். விவரங்களைத் தர முயற்சி செய்கிறோம் என்று சொன்னார்கள், மகிழ்ச்சி. எனவே, இந்த மசோதா மீதான விவாதத்தை நாளைக்கு வைத்துக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ச்மணி:** தலைவரவர்களே, பலர் பங்குகொள்ள வேண்டியிருப்பதால் விவாதத்தை நாளைக்கே வைத்துக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (20—3—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-12 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

110. அன்னூர், புஞ்சைப்புளியம்பட்டி மற்றும் அவினாசியைச் சேர்ந்த சில கிராமங்களை அறிவிக்கப்பட்ட அங்காடிப் பகுதிகளிலிருந்து நீக்கம் செய்வது குறித்து வேளாண்மைத் துறையின் 18—1—1985 ஆம் நாளிட்ட 56 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண் விளை பொருள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

111. தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் படிவத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 5—1—1985 ஆம் நாளிட்ட 28 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடுசட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

112. வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 6—10—1982-ம் நாளிட்ட II(2)/CT & RE/260/82 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 30—1—1985-ம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பெற்ற அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]

113. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுப் பணியாளர் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து பணியாளரமைப்பு [நிர்வாகச் சீர்திருத்த பணியாளரமைப்பு—(எம்)] துறையின் 27—12—1984 ஆம் நாளிட்ட 1278 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]







114. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு கழகத்தின் 1983-84 ஆம் ஆண்டிற்கான இருபத்தி ஆறாம் ஆண்டறிக்கை [(1962 ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு கழகங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.)]

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5,
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District)
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P N Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagchi & Company, 286, R.B. Gandhi Street, Calcutta-11.

© Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

24/86

வெளியீடு 18-11-1985 Issued 18—11—1985

2825

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMIL NADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, மார்ச் 20, 1985 - தொகுதி III எண் 2

Wednesday the 20th March 1985 - Volume III No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George, Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்  Price Rs. 3-50 pais.

## உள்ளடக்கம்

(30—10—1985.)


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள்: | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 145–160 |
| 2. அறிவிப்புகள்— | |
| (அ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் கைது செய்யப்பெற்றது. | 160–161 |
| (ஆ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் விடுதலை செய்யப்பெற்றது. | 175 |
| (இ) இறுதித் துணை நிதி அறிக்கை, 1984-85—வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல். | 178 |
| (ஈ) பேரவை அலுவல்கள் | 269–271 |
| 3. கவன ஈர்ப்புகள்— | |
| (அ) திருவில்லிபுத்தூர் தொகுதியில் அம்மை நோய் கண்டுள்ளது. | 161–165 |
| (ஆ) இந்திய மருத்துவக் கழகம் கோவை மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய இருப்பதாகக் கூறப்படுவது. | 165–175 |
| 4. இறுதித் துணை நிதி அறிக்கை, 1984-85 அளித்தல். | 175–178 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985. | 178–179 |
| (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985—விவாதம் தொடர்ச்சி. | 179–223 |

பக்கங்கள்.

(இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1985. 224-243

(ஈ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985. 271-272

(உ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 242-269

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1985, மார்ச் 20, புதன்கிழமை

பங்குனி 7, ரக்தாட்சி—திருவள்ளுவர் ஆண்டு-2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்"

ஒப்புரவாகிய நற்பண்பு உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அது ஊரின் நடுவே உள்ள பயன் மிகுந்த மரம் பழங்கள் பழுத்தாற் போன்றது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**மணலி கோத்தாரி ஆலையில் குளோரின் வாயு கசிவு.**

8—வினா எண் 305. (திரு. சா. துரைசாமி, திரு. கி. கிருஷ்ண மூர்த்தி, திரு. கு. ரமணி), திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மணலியில் உள்ள கோத்தாரி இரசாயன ஆலையில் குளோரின் வாயு கசிவு ஏற்பட்டதால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் எத்தனை பேர்?

(ஆ) தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) சென்னை மணலி ஸ்ரீராம் பைபர்ஸ் லிமிடெட் தொழிற்சாலையைச் சேர்ந்த 7 தொழிலாளர்கள் 26—2—1985 அன்று மாலை 7.00 மணி அளவில்

குளோரின் வாயு கசிவினால் பாதிக்கப்பட்டு உடனடியாக ஸ்டான்லி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். அதில் 3 பேர் சிகிச்சைக்குப்பின் உடனே வெளியே அனுப்பட்டனர். மீதி 4 பேர் சிகிச்சைக்குப்பின் மறுநாள் அனுப்பப்பட்டனர்.

(ஆ) மணலியில் 26—2—1985 அன்று மாலை 7.00 மணி அளவில் ஏற்பட்ட குளோரின் வாயு கசிவைப்பற்றி பெறப்பட்ட அறிக்கையின் பேரில் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர் மற்றும் பிராந்திய துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர் 27—2—1985 அன்றும் 28—2—1985 அன்றும் கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட், மணலி என்ற தொழிற்சாலைக்குச் சென்று விவரமாக புலனாய்வு செய்து அரசிற்கு அறிக்கை சமர்ப்பித்தனர். அறிக்கையின்படி கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் லிமிடெட் என்ற தொழிற்சாலையில் குளோரின் வாயு உற்பத்திப் பிரிவில் குளோரின் வாயு வெளியேற்றம் சம்பந்தமாக சில பாதுகாப்பு வழிமுறைகள் சரிவரப் பின்பற்றப்படவில்லை. எனவே சில பாதுகாப்பு வழிமுறைகளை கடைப்பிடிக்கக் கோரி தொழிற்சாலையை மூட உத்தரவு இடப்பட்டது, தற்பொழுது மேற்படி கோத்தாரி தொழிற்சாலையின் நிர்வாகம், பாதுகாப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக தலைமை தொழிற்சாலை ஆய்வாளரின் யோசனைகளைக் கடைப்பிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. பாதுகாப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி தொழிற்சாலையைத் திறக்க அரசு அனுமதி அளிக்கலாமென்று 16—3—1985 தேதியிட்ட கடிதத்தில் அரசு தலைமை தொழிற்சாலை ஆய்வாளருக்கு அறிவுரை வழங்கியுள்ளது.

**திரு. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளோரின் வாய்வுக் கசிவால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படுமா? ஆலையைத் திறப்பது எப்போது? இதுபோன்ற பல்வேறு தொழிற்சாலைகளில் பாதுகாப்பு இல்லாத தன்மைகளால் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு முக்கியமான ஆபத்து ஏற்படுகின்ற தொழிற்சாலைகளில் எல்லாம் பாதுகாப்பு நடைவடிக்கைகள் மேற்கொள்ள அரசு ஒரு கமிட்டி அமைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைத் திறக்கலாம்
என்று 16 ஆம் தேதி அரசு அனுமதி அளித்துள்ளது. அவர்கள்
கடந்த இரண்டு நாட்களாக தக்க ஏற்பாடுகளைச் செய்து, இன்று
காலை 10 மணி முதல் தொழிற்சாலை துவங்கப்பட்டுள்ளது.

அடுத்து போபாலில் நடந்த அந்தத் துயர நிகழ்ச்சியை ஒட்டி
இன்றைக்கு இரசாயனத் தொழிற்சாலைகளில் மிகுந்த கவனத்
தோடு பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்க அரசு முனைந்து
வருகிறது. அந்த வகையில், மணலி, தூத்துக்குடி, மேட்டூர்
ஆகிய இடங்களில் இதுபோன்று உள்ள இரசாயனத் தொழிற்
சாலைகளைக் கவனிக்கவும், அறிவுரை வழங்கவும் விழிப்புக்
குழுக்களை அரசு ஏற்கனவே அமைக்க முடிவு செய்து, அது
நடைபெற்று வருகிறது.

**திரு. கி. கிருஷ்ணமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே,
கடந்த 26—2—1985 அன்று மணலியில் நடந்த இந்த குளோரின்
வாயுக் கசிவினால் பொதுமக்கள் எவரேனும் பாதிக்கப்பட்டு இருக்
கிறார்களா? அவர்களுக்கு ஏதாவது நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டு
இருக்கிறதா? மேட்டூரில் இதுபோன்ற ஒரு விஷ வாயுக் கசிவினால்
பொதுமக்கள் பாதிக்கப்பட்டதாக கடந்த மாதம் பத்திரிகையிலே
செய்தி வந்தது. அதுபற்றி அரசுக்கு ஏதேனும் தெரியுமா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மணலியில் எந்தப் பொது மக்களும்
பாதிக்கப்படவில்லை. மேட்டூர் சம்பந்தமாக எந்தத் தகவலும்
அரசுக்கு வரவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மணலியில் உள்ள கோத்தாரி இரசாயன ஆலை இன்று
முதல் திறக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
உரைக்கும்போது சொன்னார்கள். இதேபோன்ற தொழிற்
சாலைகள் அமெரிக்காவிலும் இருக்கின்றன. அங்கேயும் இதே
போன்ற விபத்துக்கள் நடந்திருப்பதாகச் சொல்கிறார்கள்.
அங்கேயும் ஆலை மூடிக் கிடக்கிறது. அதுமட்டும் அல்லாமல்
கோத்தாரி இரசாயன ஆலைக்குப் பக்கத்தில் உரத் தொழிற்சாலை

இருக்கிறது, நைலான் கயிறு தயாரிக்கும் தொழிற்சாலை இருக்கிறது. அந்த நைலான் கயிறு தொழிற்சாலையில்தான் தீ பற்றி இப்படிப்பட்ட விபத்துக்கள் நடக்க காரணமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் மேற்கொண்டு நல்லமுறையில் எல்லாத் தொழிற்சாலைகளும் இருக்கின்றனவா என்று ஆய்வு செய்யாமல் எப்படி மறுபடியும் திறக்க அனுமதி கொடுத்தார்கள்? அந்த உரத் தொழிற்சாலையையாவது மூடிவிட வேண்டும்; கோத்தாரி தொழிற்சாலையையாவது மூடிவிட வேண்டும்; நைலான் கயிறு தொழிற்சாலையையாவது மூடிவிட வேண்டும். (மணியடிக்கப் பெற்றது) மேலும் விபத்துக்கள் நடக்காமல் இருப்பதைத் தடுப்பதற்காகத்தான் சொல்கிறேன், தலைவர் அவர்களே, ஆகையினால் மேலும் விபத்துக்கள் வாராமல் தடுப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது? இன்னும் நல்லமுறையில் அவைகளை ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இது போன்ற இரசாயனத் தொழிற்சாலைகளிலே விபத்துக்கள் ஏற்பட்டு விடக் கூடாது, அதன் காரணமாக பொது மக்களின் நலன் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற காரணத்தால், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்னையிலே கூட அவர்களாக நேரிடையாக உத்தரவிட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்தத் தொழிற்சாலையினுடைய நிர்வாகத்திற்கு எழுதுகிற நேரத்தில், அவர்கள் ஆலையைத் திறந்து இரண்டு நாட்களுக்காவது இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் என்று சொல்லக் கூடிய அலுவலக தலைமை அதிகாரிகள், இன்றைக்கும் நாளைக்கும் அங்கேயே இருந்து தொழிற்சாலை சரியாக வேலை செய்கிறதா என்று பார்த்து தனக்கு நேரிடையாக ஒரு அறிக்கையை அனுப்புகிற விதத்தில் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்திருப்பதோடு, அந்த அதிகாரிகளுக்கும் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையில் அவர்களே மிகக் கவனம் செலுத்தி, இது போன்ற விபத்துக்கள் தொழிற்சாலைகளில் நடக்கக் கூடாது என்று அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



**திரு. கு. ராமணி:** தலைவர் அவர்களே, போபாலில் நடந்திருக்கும்படியான பயங்கர நிலைமை, உலகத்தில் அந்தக் கம்பெனியின் சொந்தக்காரர்கள் வைத்திருக்கிற எல்லா நிறுவனங்களிலும் நடந்திருக்கிறது. அமெரிக்காவில் கூட நடைபெற்றிருக்கிறது என்று அமெரிக்க அரசாங்கமும் சொல்லியிருக்கிறது. இந்திய அரசாங்கமும் சொல்லியிருக்கிறது. இப்படிப்பட்ட இரசாயனங்கள் உபயோகப்படுத்தப்படும் தொழிற்சாலையில் எக்ஸ்டிராடினரி பாதுகாப்பு இருக்க வேண்டும். நமது பேக்டரி இன்ஸ்பெக்டரேட் என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதைத்தான் கேட்க வேண்டியிருக்கிறது. இதுமாதிரி இருக்கக்கூடிய தொழிற்சாலைகளில்தான் இந்த பேக்டரி இன்ஸ்பெக்டரேட்டின் கண்காணிப்பு அதிகமாக இருப்பதோடு, பீரியாடிகல் செக் அப், ஸ்பெஷல் செக் அப் போன்றவைகளை இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் நடத்தியிருக்கிறதா?

இந்த ஸ்ரீ ராம் பைபர் தொழிற்சாலை (குறுக்கிடு) கோத்தாரிக்கு சொந்தமானதுதான். இதுவும், பைபர் உற்பத்தி பண்ணக்கூடிய தொழிற்சாலை, மணலியில் இருக்கிறது. அதேமாதிரி சிறுமுகையில் இருக்கிறது. இன்னும் பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவைகளுக்கென்று பாதுகாப்பு இருக்கிறது என்பதற்கு ஒரே உத்திரவாதம் பேக்டரி இன்ஸ்பெக்டரேட்தான். அவர்கள் இந்த விஷயத்தில் தோல்வி அடைந்திருக்கிறார்கள்; தவறு செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட இடத்தில் அவர்களுடைய கண்காணிப்புச் செல்லவில்லை என்பது உண்மை. ஆகையினால் இனிமேற்கொண்டு இதுபோன்ற விபத்துக்கள் வராமல் தடுக்க, அந்த பேக்டரி இன்ஸ்பெக்டரேட் கவனம் செலுத்த என்ன நடவடிக்கையை மேற்கொள்ள அமைச்சர் உத்தரவு தரப்போகிறார் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், கண்காணிக்கக்கூடிய தொழிற்சாலை ஆய்வாளர்கள் எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கிறார்கள்; எடுத்துக் கொண்டு வருகிறார்கள், இனியும் எடுப்பார்கள்.

[1985 மார்ச் 20

குறிப்பாக இதே தொழிற்சாலையில் 4—2—1985 அன்று
பிராந்திய துணைத் தலைமை தொழிற்சாலை ஆய்வாளர்,
இன்பீல்டு டிவைஸஸ் சரியாக இருக்கிறதா; அனுமதிக்கப்பட்ட
வகையில் இருக்கிறதா என்று ஆய்வதற்காகச் சென்ற நேரத்தில்
சில பாதுகாப்பு முறைகள் திருப்திகரமாக இல்லை என்பதைக்
கண்டு ஆராய்ந்திருக்கிறார்கள். கண்டு ஆராயப்பட்டவைகள் வாய்
மொழியாகவும், எழுத்துபூர்வமாகவும் நிர்வாகத்தினருக்குச்
சொல்லப்பட்டு; ஒரு காரணம் கோரும் அறிக்கையும் அனுப்பப்
பட்டிருக்கிறது. எனினும் நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க
வில்லை. எனவே நிர்வாகத்தின் மீது சட்டபூர்வ நடவடிக்கை
எடுப்பது பற்றிய ஆலோசனை துணை தலைமை தொழிற்சாலை
ஆய்வாளரின் பரிசீலனையில் இருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்
படும்.

(முற்பகல் 9-10)

**திரு. உ. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவர் அவர்களே,
அண்மையில் போபாலில் நடந்த விபத்து, இப்போது மணலியில்
நடந்த விபத்து இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, ஜன
நெருக்கடி அற்ற, இடத்தில்தான் இதுபோன்ற ஆபத்தான
தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும். எனவே இப்போதுள்ள
தொழிற்சாலைகளை வேறு பாதுகாப்பான இடத்தில் அமைப்
பதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபடுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர்
அவர்களே, நிச்சயமாக ஈடுபடும். அதே நேரத்தில் அரசு
இன்றைக்கு ஒரு கருத்துருவை மனதிலே கொண்டிருக்கிறது.
அண்மையில் 18—3—1985 இந்து பத்திரிகை ஒரு ஆலோசனை
சொல்லியிருக்கிறது.

"...... While there used be no conflict between economic
growth and environmental quality, it is necessary that develop-
mental and other industrial projects are subjected to expert
assessments before they are cleared. A vigilant citizenry has
a part to play in pollution control, but the primary res-
ponsibility rests with the planners and the policy makers in
the Government ......"

என்ற இந்த ஆலோசனையை மனதிலே வைத்து ஆக்கபூர்வமாக
அரசு செயல்படும்.



1985 மார்ச் 20]

**திரு. சா. துரைசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பாதிக்
கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பு எந்த வகையில்
எவ்வளவு என்றும், அப்படிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு
ஏதாவது நிரந்தரமான பாதிப்பு ஏற்பட்டால் அந்த ஆலை
நிர்வாகம் உதவி செய்கின்ற வகையில் நடவடிக்கை எடுக்குமா?
இந்த இடையிலே ஏற்பட்ட பாதிப்புக்கு நிவாரணத் தொகையை
வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர்
அவர்களே, தொழிலாளர்களுடைய நலனைப் பேணி எல்லா உரிய
சட்டபூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த
குளோரின் வாய்வு கசிவு ஏற்பட்ட காரணத்தினால் மணலியில்
எந்தப் பொதுமக்களும் பாதிக்கப்படவில்லை என்ற தகவல்
இங்கே அமைச்சர் பெருமகனார் அவர்களால் தரப்பட்டது.
ஆனால் நான் அந்தத் தொகுதியை, சென்ற முறை பிரதி
நிதித்துவம் கொண்டவனாக இங்கே இருந்த காரணத்தினால்,
இந்த கோத்தாரி ஆலையிலிருந்து இப்போது வெளியே வந்து
கொண்டிருக்கின்ற அந்த புகையிலே நச்சு கலந்திருக்கிறது.
ஸ்லோ கில்லிங் பாய்சன்—மெல்லனை கொல்லும் பொல்லா வாய்வு
என்று நாள்தோறும் வந்துகொண்டிருக்கின்ற ஒரு கசிவு
நிறுத்தப்படுவதனால் மட்டுமே தொழிற்சாலையைத் திறப்பது
என்பது நல்லதல்ல. பொது மக்களுக்கு ஆஸ்துமா வந்துகொண்
டிருக்கிறது. ட்ரீட்மெண்ட் ப்ளான்ட் என்று சொல்லுகின்ற
வகையில் நச்சுப் புகை வெளியே வராத அளவிற்கும் தடுக்கப்பட
இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரிஅனந்த
னுடைய ஆலோசனை ஏற்புடைத்தது, ஆலோசனைக்குரியது,
தொடர் நடவடிக்கை எடுக்கக்கூடியது என்ற வகையில்
இன்றைக்கு மத்திய அரசு இதனைச் சிந்தித்து, மாநில
அரசுகளுக்கு இதிலே துரிதமாக நடவடிக்கை எடுக்க
கருத்துக்களையும், யோசனைகளையும் செய்து அனுப்பியிருக்
கிறது. அந்த யோசனைகளின் அடிப்படையில் இன்றைக்கு

[1985 மார்ச் 20

டாக்டர் சாந்தப்பா தலைமையில் ஒரு சிறப்பு பொறுப்புப் பிரிவு
ஒன்றினை அமைத்து, பல்வேறு இரசாயன மாற்றம் ஆபத்தான
தொழிற்சாலைகளில் கடைபிடிக்கப்படும்போது பாதுகாப்பு
நடவடிக்கை குறித்து ஆய்வு செய்து மூன்று மாத கால அளவில்
அறிக்கை பெற்று அந்தப் பரிந்துரையின் அடிப்படையில்
நடவடிக்கை மேற்கொள்வது என்ற கருத்துரு அரசின் பரிசீல
னையில் இருக்கிறது. அப்போது திரு. குமரி அனந்தன் தெரி
வித்த கருத்துக்கள் எல்லாம் கவனத்திலே கொள்ளப்படும்.

**திருமதி பா. வளர்மதி:** குளோரின் வாயு கசிவினால் ஏற்படும்
அபாயம் சென்னை மாநகரத்தில் பல்வேறு தொழிற்சாலைகளில்
இருப்பதால், பால்வள நிறுவனங்களில் சோதனைகளை மேற்
கொள்கின்ற தொழிலாளர் நல அமைச்சர் அந்தத் தொழிற்சாலை
களிலும் சோதனை நடத்தி, முறைப்படி நடக்காத தொழிற்சாலை
களுக்கு லைசன்சை ரத்து செய்வதற்கு முன்வருவார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர்
அவர்களே, அதற்கு உரிய அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த
கைய தகவல்கள் இருந்தால் நிச்சயமாக நடவடிக்கையை மேற்
கொள்வார்கள்.

**திரு. கு. ரமணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்
அவர்கள் நமக்கு பதில் கொடுக்கும்போது, அந்தக் கம்பெனியைத்
திறப்பதற்கு உத்திரவுகள் கொடுக்கலாம் என்று இன்ஸ்பெக்டர்
அவர்களுக்கு சொல்லப்பட்டதாக இங்கே கூறினார்கள். இவ்வளவு
பெரிய அபாயம் நடந்துள்ளது. அந்தத் தவறு இனிமேலாவது
ஏற்படாது என்பதற்கு என்ன உத்திரவாதம் கொடுத்திருக்கிறது?
அங்கே நடந்திருக்கும்படியான அந்த லீக்கேஜ், — அந்த ஒரு
குறிப்பிட்ட இடத்தில் மட்டும் அல்ல — அந்த பிளான்ட்டி
லிருந்து அந்த கெமிக்கல்ஸ் முழுவதும் ப்ராசஸ் பண்ணக்கூடிய
பிளான்ட்டிற்கு மாற்றும்போது எந்தவிதத்திலும் கசிவுகளை
ஏற்படுத்தாது, அது போய் சேருகின்ற இடம் வரைக்கும் கசிவு
களை ஏற்படுத்தாது என்கிறமாதிரி பரிசீலனை நடத்தி அரசுக்கு



1985 மார்ச் 20]

ரிப்போர்ட் ஏதாவது வந்திருக்கிறதா? அதன் பேரில் அரசுக்கு திருப்தி ஏற்பட்டுத்தான் இந்தக் காரியத்தை செய்திருக்கிறதா? இல்லையென்றால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் இங்கே தெரிவித்தது போல் 26—2—1985 அன்று இந்த நிகழ்ச்சி ஏற்பட்டது. உடனடியாக தொழிற்சாலையினுடைய ஆய்வாளர் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறார். அவர் ஒரு அறிக்கையை அரசுக்கு அளித்திருக்கிறார். அந்த அறிக்கையிலே அவர் பல விவரங்களைச் சொல்லியிருக்கிறார். அந்த அறிக்கையின்படி அந்தத் தொழிற்சாலையினுடைய நிர்வாகம் தவறி இருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக அந்தத் தொழிற்சாலையின் குளோரின் வாயுக் கசிவைத் தடுப்பதற்கான தடுப்புக் கருவி செம்மையான முறையிலே செயல்படாததன் காரணமாக, குளோரின் வாயு கசிந்து காற்றோடு கலந்திருக்கிறது என்ற குறை ஏற்பட்டது. அந்தக் குறையைத் தீர்ப்பதற்கான ஏற்பாட்டைச் செய்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதைச் செய்திருக்கிறார்களா என்று பார்ப்பதற்கு மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவரின் ஆணைப்படி, இன்று காலை 10 மணிக்கு தலைமை ஃபேக்டரி இன்ஸ்பெக்டர் அவர்கள் செல்கிறார்கள். இன்றும், நாளையும் சரியாகச் செய்கிறார்களா என்று பார்ப்பதற்கு தலைமை இன்ஸ்பெக்டர் 48 மணி நேரம் அங்கிருந்து அது சரியாக இருக்கிறதா இல்லையா என்று பார்த்து, மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை அனுப்பியிருக்கிறார்கள். அவ்வாறு எச்சரிக்கையான நடவடிக்கையெல்லாம் இந்த அரசு எடுத்து வருகிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் விஷ வாயுக் கசிவு ஏற்பட இடமிருக்கக் கூடாது என்று அரசு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பிக்குமா? இந்தத்

[1985 மார்ச் 20

தொழிற்சாலையில் உள்ள தொழிலாளர்கள் தங்களது உயிரைப் பணயம் வைத்து அங்கே வேலை பார்க்கிறார்கள். அப்படி பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 1 இலட்சத்தை நஷ்ட ஈடாக அளிப்பதற்கான கண்டிப்பான உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தகவலை அளிக்க விரும்புகிறேன். குளோரின் வாயு என்பது இன்றைக்கு அந்தத் தொழிற்சாலையில் சோடா ஆஷ் தயாரிக்கிறார்கள். அதனுடைய பை-ப்ராடெக்ட், அதாவது உபபொருள், அந்த உபபொருளின் விஷத் தன்மையை கட்டுப்படுத்துகின்ற கருவிகள் சரியாக இல்லாத காரணத்தால், தற்காலிகமாக அங்கே சிரமம் ஏற்பட்டு, பிறகு அந்தக் கருவி சீர்செய்யப்பட்டிருக்கிறது. எனவே அந்தக் குளோரின் வாயு பாதிப்பிலிருந்து மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்திலும், அதே சமயத்தில் ஈரோடு நகரையொட்டியுள்ள பள்ளிப்பாளையம் சேஷசாயி காகிதத் தொழிற்சாலையிலிருந்து திறந்து விடப்படும் கழிவு வெளியே வந்து, ஈரோடு மக்களையும், சுற்றுப்புறத்திலே இருக்கின்ற மக்களையும் பெரும் பாதிப்புக்கு உள்ளாக்குகிறது. இதனால் மூச்சுத் திணறல், ஆஸ்துமா போன்ற நோய்கள் உண்டாகின்றன. இந்த நோய்களைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு உறுப்பினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் அளிக்கப்படும்.



1985 மார்ச் 20]

## தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய், எரிவாயு கண்டுபிடிப்பு.

குறுகிய கால வினா எண் 3 (*) வினா எண் 749 : **திரு. ஆ. கா. அ. அப்துல் சமத், திரு. இரா. தாமரைக்கனி, திரு. எல்ல. இராச மாணிக்கம் :** மாண்புமிகு தொழிற் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதி தீரத்தில் கோவில் களப்பால் என்ற இடத்தில் தரமான எண்ணெயும், காஸும் கிடைத்திருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(ஆ) இது மைய அரசின் சம்பந்தப்பட்ட பொருளாகும். இது பற்றிய விவரங்கள் மாநில அரசிடம் இல்லை.

**திரு. ஆ. கா. அ. அப்துல் சமத் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவில் களப்பால் என்ற இடத்தில் தரமான காஸ், எண்ணெய் கிடைக்கின்ற செய்தி, தமிழ்நாட்டிற்கு மட்டு மல்லாமல் இந்தியாவிற்கே கிடைக்கின்ற ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். இந்தச் செய்தி பத்திரிகைகளில் வெளிவந்து 2 வாரங்களுக்கு மேல் ஆகிவிட்டன. இடையிடையே இப்படிப் பட்ட செய்திகள் வருகின்றன. ஏற்கனவே காரைக்கால் பகுதியில் திரவியலும், தஞ்சை மாவட்டத்தில் திட்டச்சேரி என்ற இடத் திலும், இன்னும் சில பல பகுதிகளிலே எண்ணெய் கிடைக்கின்ற தகவல்கள் வந்து, அது தொடர்பாக தகவல்கள் இல்லாமல், மறைக் கப்படுகின்றனவோ அல்லது போதுமான தகவல், அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நம்முடைய மாநில அரசுக்குக் கிடைக்கவில்லையோ தெரியவில்லை. முக்கியமாக தமிழகத்தி னுடைய பொருளாதாரத்தையே மாற்றி அமைக்கக்கூடிய இந்த சிறப்பான தகவல் பற்றி மேலும் தகவல்களை ஆராய்ந்து, இது வரையில் எத்தனை இடங்களில் தமிழகத்தில் எண்ணெய்

கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று ஆய்வாளர் களால் கண்டுபிடிக்கப்பட்டது என்ற முழு விவரங்களைத் தருவதோடு, உலகத்திலே அது போல் நிபுணர்களைக் கொண்ட பல நாடுகள் இருக்கின்றன. அந்த நிபுணர்களின் உதவியைக் கோரி, தமிழகத்திலே எண்ணெய் வளம் எங்கெங்கு இருக்கின்றன என்று வாய்ப்புகளைக் கண்டுபிடிக்கக்கூடிய ஒரு தூண்டுகோலாக மத்திய அரசுக்கு இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து நாளிதழ்களில் செய்தி வந்தது. வந்தவுடனே நம்முடைய புவியியல் சுரங்கத் துறை நிபுணர்களை அந்தப் பகுதிக்கு அனுப்பியிருக்கிறது. மத்திய அரசிடமிருந்து முழுத் தகவல் இன்னும் நமக்குக் கிடைக்கவில்லை. கர்னல் வாகி என்பவர் அந்த மத்திய அரசினுடைய எண்ணெய் இயற்கை வாயு கழகத்தின் தலைவராக இருக்கிறார்கள், ஆய்விற்குப் பின் வாயுவும், சன்ன ாக எண்ணெயும் கண்டு பிடித்திருப்பதாக அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரி நதி தீரத்திலும் நாகப்பட்டணம், வேதாரண்யம், அரியலூர் ஆகிய பகுதிகளிலே பெட்ரோல் ஊற்றுக்கள் இருப்பதாக பெட்ரோல் ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடித்து இருப்பதாக பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அது சம்பந்தமாக நம்முடைய அரசின் அமைச்சர் மத்திய அரசினுடைய பெட்ரோல் அமைச்சரிடத்திலே பேசியிருக்கி றார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர் களே, தஞ்சாவூர், இராமநாதபுரம் மாவட்டங்களில் கடலோரப் பகுதிகளிலே பூராவும் எண்ணெய் வளம் இருப்பதாகக் கண்டு பிடித்து இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவுகள் இப்போது நிறைவேறிக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்



மத்திய அரசுக்கு இது சம்பந்தமாக கடிதப் போக்குவரத்து துவங்க இருக்கிறார்கள். அதற்கான விளக்கங்கள் கிடைத்த பிறகு அது இந்தச் சபைக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எல்ல. இராசமாணிக்கம்:** தலைவர் அவர்களே, இந்தத் தரமான எண்ணெய் மற்ற மாநிலங்களிலே கிடைக்கிறதா? அதனுடைய முழுத் தகவலையும் மத்திய அரசிடமிருந்து விரைவில் பெற்றுத் தர ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே கிடைப்பதைப் பற்றிய தகவலே இன்னும் கிடைக்கவில்லை. மற்ற மாநிலங்களிலே என்ன கிடைக்கிறது என்று எனக்குத் தெரியாது.

**திரு. சா. ஞானசுந்தரம்:** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள கோயில் களப்பால் என்ற இடத்தில் தரமுள்ள எண்ணெய் கிடைப்பதாக ஏற்கெனவே இந்த சட்டமன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். தஞ்சை விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டது. அந்த எண்ணெயைக் கண்டு பிடித்து அந்த மாவட்டம் வளம் பெறச் செய்வதற்கான முயற்சி களை தமிழக அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இது மத்திய அரசின் கையிலே உள்ள பிரச்சினை. தஞ்சாவூரிலிருந்து 36-வது கல்லில் உள்ள கோயில் களப்பால் என்ற இடத்தில் அது கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. இப்போது புதுச்சேரியிலும் தரங்கம்பாடியிலும் இராமநாதபுரம் கடலோரங்களிலேயும் பாக் ஜலசந்தியிலும் எண்ணெய் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாக எரிவாயுக் குழுத் தலைவர் வாகி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பகுதிகளிலே ஆராய்ச்சி செய்வார்கள் என்று நம்புகிறேன். எண்ணெய் கிடைக்காவிட்டாலும் வாயு கிடைத்தாலும்கூட தமிழகத்திலே பல்வேறு வகையிலே அது உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1985 மார்ச் 20

**திரு. ஆர். ரெங்கசாமி:** தலைவர் அவர்களே, இந்த எண்ணெயைக் கண்டுபிடிப்பதற்கு ஓ.என்.ஜி.சி.யின் கம்பெனி இருக்கிறது. அந்தக் கம்பெனியின் ரீஜனல் ஆபிஸ் இங்கே சென்னையிலே இருக்கிறது. அந்த ஆபீஸை மாற்ற வேண்டுமென்று ஆந்திர மாநிலத்திற்குக் கொண்டு போக வேண்டும் என்று அரசாங்கம் முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆந்திர மாநில முதலமைச்சர் என்.டி.ஆர். அவர்கள் இந்த ஆபீஸ் அங்கே வந்தால் அதற்கான இடத்தையும் பில்டிங்கையும் தருவதாக பிராமிஸ் பண்ணியிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆபீஸுக்கு தேவையான பில்டிங், நிலம் போன்றவற்றை நமது அரசிடம் கேட்டிருக்கிறார்கள், கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அவற்றை உடனே கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இதுவரையில் அந்த அலுவலகம் சென்னையில் இருந்து மாற்றப் படுவதாகச் செய்தி இல்லை. அதன் கிளை அலுவலகம் திருச்சியிலே இருக்கிறது, அதுவும் மாற்றப்படுவதாக எந்தத் தகவலும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வி. தங்கவேலு:** தலைவர் அவர்களே, இந்த தரமான எண்ணெயும் காஸும், தஞ்சாவூர் மாவட்டத்திலே குறிப்பாக காவிரி நதி தீரத்திலே கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படிக் கிடைக்கக்கூடிய இடங்கள் இந்து சமய அறநிலையங்கள் துறைக்கு உள்பட்ட இடங்களாக இருப்பதால் அந்த எண்ணெயையும் காஸையும் எடுப்பதற்கு அவர்கள் அனுமதிக்க முடியாது என்று சொல்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஊக்கம் தந்து ஆராய்ச்சி செய்யவும் தஞ்சாவூர் மாவட்டத்திலே எத்தனை இடங்களிலே எண்ணெய் காஸ் கிடைப்பதாக கண்டுபிடித்து இருக்கிறார்கள் என்பதை தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்து அறநிலையத் துறை அதைத் தடுப்பதாக எந்தவிதமான தகவலும் அரசுக்கு இதுவரையில் கிடையாது. தஞ்சைத் தரணியில் பலயிடங்களில் அவர்கள் ஆராய்ச்சிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் ஆராய்ச்சிகள் நடத்துவதாக தலைவர் கர்னல் வாங்கி அவர்கள் தெரிவித்திருக்



1985 மார்ச் 20]

கிறார்கள். அதற்கு எந்தவிதமான தடையும் எந்த அரசுத் துறை மூலமாகவும் இல்லை. அதற்காக ஆவன செய்ய இந்த அரசு என்றைக்கும் காத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இதற்கு முன்னால் வேதாரண்யத்திற்கு அருகாமையில் எண்ணெய் கண்டு எடுத்து ஒரு நாளைக்கு 1,500 பீப்பாய் எடுப்பதாகச் சொல்லப்பட்டது. அது நின்று விட்டது. தஞ்சை மாவட்டத்தில் மூன்று ஆண்டுக் காலம் சர்வே செய்து கோவில் களப்பால் ஒரு சின்ன நகரமாக அமைக்கப்பட்டு ஆராய்ச்சி செய்யப்பட்டு எண்ணெய் இருப்பதாக அறிந்ததற்குப் பிறகு அந்த இடங்கள் பூராவையும் காலி செய்து கொண்டிருப்பதால் ஏதோ அதை கைவிட்டு விட்டுப் போவதாக ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது, தஞ்சை மாவட்ட மக்களிடையே. எனவே, மத்திய அரசை வற்புறுத்தி அந்த இடத்தைக் காலி செய்யாமல் மீண்டும் ஆராய்ச்சி செய்து தஞ்சை மாவட்டத்தில் எண்ணெய் எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல் மத்திய அரசோடு நம் மாநில அரசு, புரட்சித் தலைவர் அவர்கள் கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட எண்ணங்கள் மத்திய அரசுக்கு இருக்குமானால் மீண்டும் மத்திய அரசில் இருக்கிற அமைச்சர்களைச் சந்தித்து எப்படியாவது தொடர்ந்து இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ள, எண்ணெய் அல்லது எரிவாயுவாவது கண்டுபிடிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. துரை கோவிந்தராசன்:** தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நீண்ட காலமாக இப்படி எண்ணெய் கண்டு பிடிப்பதற்காக பல்வேறுயிடங்களில் ஆழ் குழாய்கள் இறக்கப் பட்டு, எண்ணெய் இருக்கிறது என்று பல்வேறுயிடங்களில் அந்தக் குழாய்கள் எல்லாம் இறக்கப்பட்டு எண்ணெய் இல்லை என்று சொல்கிற நிலையில் சிலயிடங்களில் அதை மூடிவிட்டுச்

சென்று விடுகிறார்கள். எண்ணெய் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, அந்தக் குழாய்கள் மூலம் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்வதற்கு பயன் அளிக்கிற வகையில் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு நம் அமைச்சரவை அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, எரிவாயு கமிஷன் எண்ணெய் கண்டுபிடிக்க இருக்கிறதே தவிர தண்ணீர் எடுத்துக் கொடுப்பதற்கு அமைக்கப்பட்ட நிறுவனம் அல்ல. தண்ணீர் கொடுப்பதற்காக தமிழ் நாட்டில் அதற்காக ஒரு தனி வாரியம் இருக்கிறது. அந்த வாரியம் அந்த வேலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (2) அறிவிப்புகள்

### (அ) உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் கைது செய்யப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கன்னியாகுமரி மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதை பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"I have the honour to inform you that I have found it in my duty in the exercise of the powers under Section 151 CRPC to direct Thiru D. Kumaradhas, M.L.A. (Janatha), Killiyoor Constituency to be detained for having led 13 Members of Janatha Party near the Railway Station, Kuzhithurai, to picket the Jayanthi Janatha Express train demanding a boarding point at Kuzhithurai and on the signs of committing such cognizable offence committed by them and in order to prevent such occur-





rence Thiru D. Kumaradhas M.L.A. and 13 others were taken into custody by the Inspector of Police, Vilavancode at 12.15 hours to-day (19-3-1985) and a case in Kuzhithurai P.S. CR. No. 89/95 under Section 151 CRPC was registered. Situation calm."

(முற்பகல் 9-30)

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா கட்சி சட்டமன்ற உறுப்பினர் கைது செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக, அவர் கைது செய்தவுடனே பேரவைத் தலைவராகிய உங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அவர் நேற்று காலை கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆனால், இதுவரைக்கும் இந்தச் சபையில் அதற்கான தகவல் . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று வந்த செய்தியை இங்கே சொன்னேன். நேற்றிரவு தொலைபேசி மூலம் அவர் விடுதலை செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதிகாரபூர்வமாக வராததால், அதை முதலில் சொல்லவில்லை.

## 3. கவன ஈர்ப்புகள்.

### (அ) திருவில்லிப்புத்தூர் தொகுதியில் அம்மை நோய் கண்டுள்ளது.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திருவில்லிபுத்தூர் தொகுதியில் சமீபத்தில் 'பெரியம்மை' மற்றும் 'சிறியம்மை' கண்டு ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 மார்ச் 20

**அறிக்கை.**

பெரியம்மை (Small pox) நோய் இந்தியாவிலிருந்து
ஒழிக்கப்பட்டுவிட்டது என்று ஏற்கனவே உலக சுகாதார நிறு
வனம் (World Health Organisation) அறிவித்துள்ளது.
எனவே அந்த நோய் எவருக்கும் தோன்ற வாய்ப்பு இல்லை.

திருவில்லிப்புத்தூர் பகுதியில் கீழ்க்கண்ட ஊர்களில்
சின்னம்மை (Chicken pox) எனப்படும் நோய் கண்டுள்ளதாக
காமராஜர் மாவட்ட சுகாதார அலுவலர் அவர்கள் தெரிவித்
துள்ளார்கள்.

| ஊர் | பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை |
| --- | --- |
| 1. ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட கிராமங்கள் | 41 |
| 2. திருவில்லிப்புத்தூர் நகர் | 20 |
| 3. இராஜபாளையம் நகர் | 14 |

அம் மாவட்டத்தில் தட்டம்மை (Measles) எனப்படும்
நோயால் எவரும் பாதிக்கப்படவில்லை என்று மாவட்ட சுகாதார
அலுவலர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சின்னம்மை (Chickan pox) நோய்க்கு தடுப்பு மருந்து
(vaccine) ஏதும் இல்லை என்று பொது சுகாதாரம்
மற்றும் தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் அவர்கள் கூறியுள்
ளார்கள். மக்கள் தங்களையும் தங்களுடைய இல்லத்தையும்
துப்பரவாக வைத்துக் கொள்வது இந்நோய் பெருமளவில் பரவு
வதைத் தடுக்கும். பொது சுகாதார அலுவலர்கள் நிலைமையை
கண்காணித்து கொண்டு இருக்கிறார்கள் என்று கூறிக்கொள்
கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே,
அவையின் முன்னால் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் முழு
விவரம் கொடுக்கப்படவில்லை. அங்கே ஆயிரக்கணக்கான
பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று கவன ஈர்ப்புத்
தீர்மானத்தில் கொடுத்திருக்கிறேன். ஆனால் சம்பந்தப்பட்ட



1985 மார்ச் 20] [திரு. இரா. தாமரைக்கனி]

அதிகாரிகள் சுமார் 100 என்று கணக்கெடுத்து தகவல் கொடுத்
திருக்கிறார்கள். அது சரியல்ல. பெரிய அம்மை கண்டால்
சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உள்ளே நுழைந்து பார்க்க
அனுமதிப்பதில்லை. ஏனென்றால், தமிழகத்திலே ஒரு மரபு
அந்த அம்மை கண்ட வீட்டிற்குள் நுழையக் கூடாது என்ப
தாகும். எப்படி அதிகாரிகள் கணக்கெடுத்தார்கள் என்பது
தெரியவில்லை. நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுப்பதற்கு
முன்பாக அதிகாரிகள் அங்கே சிறிய அம்மை, பெரிய அம்மை
இருப்பதாக ஏதேனும் அரசுக்கு குறிப்புகள் கொடுத்திருக்
கிறார்களா? வீடுகளை சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டு
மென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே
சொல்லியிருக்கிறார்கள். வீடுகளை சுத்தமாகத்தான் வைத்
திருக்கிறார்கள். ஸ்ரீவில்லிப்புத்தூர் தொகுதியில் ஹெல்த் ஆபீசர்
இல்லை. தெருக்களையும், மற்ற கிராமப் பகுதிகளையும் சுத்த
மாக வைத்துக் கொள்வதற்கு போர்க்கால அடிப்படையில்
நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு
அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா? அங்கு குடிதண்ணீரில்
குளோரின் சரியான முறையில். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கேள்வியாகக் கேளுங்கள்.
மாண்புமிகு அமைச்சர்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெரிய அம்மை அதாவது ஸ்மால் பாக்சைப்
பொறுத்தவரையில் உலக சுகாதார நிறுவனம் நம் இந்திய
நாட்டிலே அந்த நோய்கிடையாது என்று சொல்லி பல ஆண்டுகள்
ஆகிவிட்டன. ஆகவே, நம் நாட்டில், தமிழகம் உட்பட ஸ்மால்
பாக்ஸ் நீக்கப்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக, சிக்கன் பாக்சைப்
பொறுத்தவரையில், அதிகாரிகள் தைரியமாக நுழைந்து அங்கே
இருக்கக்கூடிய வீட்டில் வருவதற்கு வாய்ப்பு தருகிறார்கள்.
ரெட்டியார்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு உட்பட்ட
கிராமங்களில் 41 பேர்களுக்கு இந்தமாதிரி நோய் கண்டிருக்
கிறது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகரத்தில் 20 பேர்களுக்கும், ராஜ
பாளையம் நகரத்தில் 14 பேர்களுக்கும் இந்த நோய் கண்டிருக்
கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அச்சப்படும் அள
விற்கு அந்த எண்ணிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன். அதுமட்டுமல்ல. இன்னொரு யோசனையும்

சொல்லியிருக்கிறார்கள். அங்கே ஹெல்த் ஆபீசரைப் பற்றிச்
சொன்னார்கள். அந்தப் பிரச்னை கவனிக்கப்படும் என்று நான்
அவருக்கு வாக்குறுதி தருகிறேன். அதுமட்டுமல்லாமல், அங்கே
இருக்கக்கூடிய அத்தனை இடங்களிலும் சுண்ணாம்பு போட
வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. லைம் வாஷ்
கொடுத்துவிட்டால், இந்த வியாதி வர அவசியம் இருக்காது.
அது நடைமுறைப்படுத்தப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி**: பேரவைத் தலைவர் அவர்களே,
உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்து விட்டதால், இந்த வியாதி
வராமல் போய்விட்டதா, தமிழ்நாட்டிற்கு வரவில்லையா,
இந்தியாவில் வரவில்லையா, ஸ்ரீவில்லிபுத்தூரில் வராமல் இருக்
கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இன்னொரு
பிரச்னை, கும்பகோணத்தில் ஒருவர் பாத்திரக்கடை வைத்திருக்
கிறார். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ள
பிரச்னையோடு நிறுத்திக் கொள்ளுங்கள்; உலகம் பூராவிலும்
உள்ள பிரச்னைகளைப் பற்றிப் பேச வேண்டாம்.

**திரு. இரா. தாமரைக்கனி**: பெரியம்மை, சிறியம்மை, ஸ்ரீவில்லி
புத்தூரில் அதிகமாக இருக்கின்றது. குடிதண்ணீல் சரியான
முறையில் குளோரின் கலக்கவில்லை என்று அங்குள்ள பொது
மக்கள் சொல்லுகிறார்கள். அங்கே ஆஸ்பத்திரியில் இருக்கக்
கூடிய அதிகாரிகள் பெரியம்மை, சிறியம்மை பற்றி சர்டிபிகேட்
மாதிரி பெரிய அதிகாரிகளும், ஹெல்த் செகரடரி உட்பட கொடுக்
கிறார்கள். ஆதலால், மறுபடியும் ஆய்வு செய்வதற்கு
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மூன்று வகையான அம்மைகள் இருக்
கின்றன. ஒன்று சுமால் பாக்ஸ், இரண்டு சிக்கன் பாக்ஸ், மூன்று
Measles சுமால் பாக்ஸைப் பொறுத்தவரை உலக சுகாதார
நிலையம் சொல்லியிருக்கிறது என்பதற்காக அல்ல. அது நம்மு
டைய நாட்டின் எல்லைக்குள் வரவில்லை. அதற்கு (incubation)
என்று இருக்கிறது. நம்முடைய நாட்டில் சுமால் பாக்ஸ் இல்லை.
அது இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுமானால் அது உலக செய்தி
யாக ஆகிவிடும். இல்லை என்பதை அவர்கள் திட்டவட்டமாக



சொல்லியிருக்கிறார்கள். சில பாக்ஸை பார்க்கின்ற நேரத்தில்
அது கண்ணுக்கு சுமால் பாக்ஸ மாதிரி தோன்றும்; அதனுடைய
சிரத்தை எடுத்து மைக்குரோஸ்கோப்பில் போட்டுப் பார்த்தால்
அது சுமால் பாக்ஸ் ஆக இருக்காது. திட்டவட்டமாக சொல்லி
யிருக்கிறார்கள், ஸ்மால் பாக்ஸ் இல்லை என்று. சிக்கன் பாக்ஸை
பற்றி நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். Measles -ஐப்
பொறுத்தவரையில் ஒரு நல்ல செய்தி; ரோட்டரி நிறுவனத்தின்
மூலமாக நாம் ஏறத்தாழ 2 கோடி ரூபாய் செலவிலே நம்முடைய
தமிழ்நாட்டில் மட்டும் அகில இந்தியாவில் ஒரே ஒரு மாநிலம்
முழுமையாக Anti-vaccine நாம் கொடுத்து இருக்கிறோம்.
அதற்காக ரோட்டரி நிறுவனம் உலக இண்டர்நேஷனல்
சொசைட்டி நம்மைப் பாராட்டி இருக்கிறது. அதற்காக 2 கோடி
ரூபாய் ரோட்டரி நிறுவனம் செலவழித்து இருக்கிறார்கள் என்ப
தையும் மகிழ்ச்சிகரமான செய்தியாக நான் சொல்லிக்கொள்ள
விரும்புகிறேன்.

**(ஆ) இந்திய மருத்துவக் கழகம் கோவை மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை ரத்து செய்ய இருப்பதாகக் கூறப்படுவது.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திருவாளர்கள் பொ. உத்திரா
பதி, கு. சுப்பராயன், மா. சின்னராசு மற்றும் ஆ. நடராசன் ஆகி
யோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்
துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்
துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

* **திரு. கு. சுப்பராயன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "இந்திய மருத்துவக் கவுன்சில், இரண்டு மாத
காலத்தில் கோவை மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை
ரத்து செய்வதாக அறிவித்துள்ளது குறித்த" அவசரப் பொது
முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்
வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே**: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை
வைக்கிறேன்.

**அறிக்கை.**

கோவை மருத்துவக் கல்லூரி 1966 ஆம் ஆண்டு துவங்கப்
பட்டது. இக்கல்லூரி எம்.பி., பி.எஸ். பட்டப் படிப்பை நடத்து
வதற்கு இந்திய மருத்துவக் கழகம் தற்காலிக அங்கீகாரம்

[டாக்டர் எச். வி. ஹண்டே] [1985 மார்ச் 20

வழங்கியது. முதன் முறையாக பட்டம் பெறும் பட்டதாரிகள் வெளிவரும் வரையிலும் மற்றும் எல்லா வசதிகளும் கல்லூரியில் செய்து முடிக்கும் வரையிலும் இந்திய மருத்துவக் கழகம் வழக்கமாக ஆய்வு செய்வது என்பது நடைமுறையில் உள்ளது. அதன் பின்பு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையோ அல்லது புதிய பிரிவுகள் துவங்கப்படும்போது ஆய்வு மேற்கொள்ளப்படும். கோவை மருத்துவக் கல்லூரி 1981 ஆம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது. பாரதியார் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்ட பின்பு இக்கல்லூரி பாரதியார் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டது. வழக்கப்படி இந்திய மருத்துவக் கழகம் 1982-ம் ஆண்டு அதனுடைய நிலையான ஆய்வாளரை ஆய்வுக்காக கோவை மருத்துவக் கல்லூரிக்கு அனுப்பியது. அவ்வறிக்கையில் சில குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆலோசனைகளையும் மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் உள்ள வசதிகளை மேம்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைகளும் இடம் பெற்றிருந்தன. தெரிவிக்கப்பட்ட குறைபாடுகளில் பெரும்பாலானவற்றை நிவர்த்தி செய்து, வசதிகளை மேம்படுத்துவது சம்பந்தமான ஆலோசனைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1. படுக்கை வசதி 500-ல் இருந்து 951 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

2. குழந்தையியல் துறை, விபத்து மற்றும் அவசரகால உதவி, தொழு நோயாளிகள் மற்றும் ரிகன்ஸ்ட்ரக்டிவ் சர்ஜரி பகுதிகளுக்காக தனியான வார்டுகள் கட்டப்பட்டுள்ளன.

3. கார்டியாலஜி, நெப்ராலஜி, பிளாஸ்டிக் சர்ஜரி, பீடியாட்ரிக் சர்ஜரி, நியூரோ சர்ஜரி மற்றும் பிசியோதெரபி ஆகிய பிரிவுகளில் புதிய சிறப்புப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

4. டிப்ளமோ இன் பார்மசி புதிதாக துவங்கப்பட்டுள்ளது.

5. செவிலியர் பள்ளி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6. செவிலியர் தங்குவதற்காக 45 லட்ச ரூபாய் செலவில் புதிய விடுதிக்காக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.



1985 மார்ச் 20] [டாக்டர் எச். வி. ஹண்டே]

7. மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் இம்மருத்துவக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் இம் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாணவ மாணவிகள் தங்கியிருப்பதற்காக கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன.

8. பிரி-கிளினிகல் மற்றும் பாரா கிளினிகல் பாடங்கள் பயிற்றுவிப்பதற்கான கட்டிடங்கள் கட்டப்பட்டு அனைத்து துறைகளும் அங்கு செயல்படுகின்றன.

9. ஆலோசனைக்கேற்ப நூலகத்துக்கு கூடுதலான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. ரேடியாலஜி துறைக்கு கூடுதலான உபகரணங்கள் வழங்கப்பட்டு நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

11. கல்லூரி வளாகத்தினுள்ளே மாணவ மற்றும் மாணவிகளுக்கான விடுதி கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மாணவ மாணவிகள் அவைகளில் தங்கியுள்ளனர்.

12. மருத்துவக் கல்லூரிக்கும் மருத்துவமனைக்கும் சென்று வருவதற்கு மாணவர்களுக்கு தற்போது இரண்டு பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் தங்களுக்குக் கூடுதலாக ஒரு பேருந்து வேண்டும் என்று கோரியுள்ளனர். கூடுதலாக ஒரு பேருந்தைப் பெறுவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வழக்கமாக இந்திய மருத்துவக் கழகம் அதனுடைய ஆய்வு அறிக்கையை சம்பந்தப்பட்ட பல்கலைக் கழகத்துக்கே அனுப்பும். மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவக் கல்வி இயக்குநரையும் அரசையும் கலந்து இந்திய மருத்துவக் கழக ஆய்வாளர் தெரிவித்துள்ள ஆலோசனைகளின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அடங்கிய அறிக்கையைச் சம்பந்தப்பட்ட பல்கலைக் கழக பதிவாளருக்கு அனுப்பி வைப்பார். குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டது பற்றிய அறிக்கையை பதிவாளர் இந்திய மருத்துவக் கழகத்துக்கு அனுப்பி வைப்பார். இவ் வழக்கப்படி அறிக்கை தயாரிக்கப்பட்டு பாரதியார் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டு, இந்திய மருத்துவ கழகத்திற்கு இக்குறை நீக்கியது பற்றிய அறிக்கையை அனுப்பும்படி பல்கலைக்

கழகம் கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்திய மருத்துவக் கழகத்துக்கு இவ்வறிக்கையை அனுப்பும் முன்பு ஒரு குழுவை அமைத்து, கோவை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளில் செய்யப்பட்டிருக்கும் வசதிகளைக் கண்டறிந்து அதன் பின்பு அறிக்கையை அனுப்பலாம் எனப் பாரதியார் பல்கலைக் கழகம் எண்ணியது. பல்கலைக் கழகத்தால் அமைக்கப்பட்ட குழுவில் உள்ள வல்லுநர்கள் மருத்துவ கல்லூரியில் உள்ள வசதிகளை ஆய்வு செய்தனர். இச்செய்தி மிகைப்படுத்தப்பட்டுச் சில பத்திரிகைகளில் வெளியிடப்பட்டுள்ளது. இச்செய்தி பொது மக்கள் மற்றும் மாணவர் மத்தியில் தேவையற்ற சந்தேகத்தை உண்டாக்கிவிட்டது. மருத்துவக் கல்லூரி அனுப்பிய அறிக்கையை பல்கலைக் கழகம், தான் அமைத்த குழுவின் அறிக்கையுடன் இந்திய மருத்துவக் கழகத்திற்கு அனுப்பிய பின்புதான் இந்திய மருத்துவக் கழகம் இன்னொரு ஆய்வு தேவையா இல்லையா என்பது பற்றி முடிவு செய்யும்.

எனவே, இந்திய மருத்துவக் கழகம் இரண்டு மாத காலத்தில் கோவை மருத்துவக் கல்லூரியின் அங்கீகாரத்தை ரத்து செய்வதாக அறிவித்துள்ளது என்று கூறுவது முற்றிலும் சரியல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில், ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு விடையளிக்கிற முழுமையான விவரம் விபர அறிக்கையில் இல்லை என்பது என்னுடைய கருத்து ஆகும்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு தீர்மானத்தில் "என்னுடைய கருத்து ஆகும்" என்று சொல்வதற்கு வாய்ப்பு இல்லை.

It is only with the intention of eliciting more information you are requested to put a question. It is only a suggestion from an elder brother to a younger brother.

**திரு. கு. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1982 ஆம் ஆண்டு இந்திய மருத்துவக் கழகம் ஒரு முறை ஆய்வு செய்து, சில குறிப்பான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி ஆக்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி குறையை நிவர்த்தி





செய்ய வேண்டும் என்ற ஆலோசனையையும் சொல்லியிருக்கிறது. ஆனால் கடந்த 3 ஆண்டு காலமாக அவைகள் நிவர்த்திக்கப்படவில்லை என்ற காரணத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் மிக முக்கியமான விஷயம் சி.எம்.சி. மருத்துவமனைக்கு இருக்கக்கூடிய அந்தத் தகுதியை இழக்க வைப்பதற்காக கோவையில் இருக்கக் கூடிய தனியார் மருத்துவ மனையின் மிக முக்கியமான நபர்கள் பல்வேறு பின்னணியோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அங்கீகாரத்தை ரத்து செய்ய வேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. குறிப்பாக கான்பிடேன்சியல் ரிப்போர்ட் என்று சொல்லப்படுகிற அந்த அறிக்கை பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதற்கு யார் காரணம்? பல்கலைக் கழகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியது பத்திரிகைக்குக் கொடுக்கப்பட்டதற்கு யார் காரணம் என்பதை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பாக பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியாக கேட்க வேண்டும்.

**திரு. கு. சுப்பராயன்:** தற்போது படுக்கைகள் 951 இருப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் மருத்துவ கவுன்சில் சொல்லியிருப்பது ஆயிரம் படுக்கைகள் தேவை என்பது ஆகும். அந்த ஆயிரம் படுக்கைகள் அங்கே தற்போது இல்லை என்று ஒப்புக் கொள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல் மிக முக்கியமான அறுவை சிகிச்சைக்கு உரிய கருவிகள் அங்கே இல்லை. அதே போல் மிக முக்கியமானது பேராசிரியர்களின் பதவிகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

(முற்பகல் 9-40)

அவற்றை நிறைவேற்றுவதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் அமைச்சரவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு விஷயங்களை இணைத்து மாண்புமிகு உறுப்பினரவர்கள் பேசியிருக்கிறார்கள். இரண்டுக்கும் பதில் அளிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். முதலாவதாக, சில தனியார் மருத்துவர்கள் சாமர்த்தியமாக இப்படியொரு சூழ்ச்சியைச் செய்கிறார்கள் என்று கேள்வியாக இல்லாமல் ஒரு கருத்தாகச் சொன்னார்கள். நான் அதைக் கேள்வியாக ஏற்றுக்கொண்டு பதில் சொல்கிறேன். அதைப்பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் அதில் உண்மை இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். சிலபேர், இந்த மருத்துவக் கல்லூரி வளர்ந்துவிடக் கூடாது. நல்ல வகையில் வரக்கூடாது என்ற கருத்தில் இருக்கலாம். அது சகஜம். இயற்கையாக competition between Public and Private Sectors ஆக இருக்கலாம். அப்படி உள்ள நிலைமையில் ஒரு பப்ளிக் ஹாஸ்பிடலுக்கும், பிரைவேட் ஹாஸ்பிடலுக்கும் உள்ள நிலைமைகள் என்ற வகையில் இருக்கலாம். எனவே, அதிலே நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லக்கூடிய கருத்து ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய கருத்து. என்ன நிலைமை என்றால், இந்த மருத்துவக் கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

பிறகு பாரதியார் பல்கலைக் கழகம் ஏற்படுத்தப்பட்ட பின்பு, அதற்கு மாற்றுகின்ற நேரத்தில், பாரதியார் பல்கலைக் கழகத்திலே மிகவும் எச்சரிக்கையாக, ஒரு குழுவை அனுப்பி அங்கே என்னென்ன குறைகள் இருக்கின்றன என்பதைத் தெரிந்து கொண்டால் நமக்கு நல்லது என்று கருதிய நேரத்தில் அதை நானும் வரவேற்றேன். ஏனென்றால், A sort of internal audit சொல்வதைவிட நாமே ஒரு கடுமையான முறையில், ஸ்ட்ரிக்டாக இருந்து பார்த்தால் இன்னும் நல்ல முறையில் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு நிர்வாகத்திற்கு வாய்ப்பிருக்கும். ஆகவே செய்யுங்கள் என்று சொன்னேன். அப்படிச் செய்கின்றபொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதுமாதிரி, ஒருவர் சொல்லி, அதற்கு பப்ளிசிட்டி கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதையும் கவனித்துக்கொண்டிருக்கிறோம். எப்படிச் சொல்லப்பட்டது என்பதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக ஏற்கனவே நாம் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறோம் என்ற செய்தியைக் கேட்டவுடனே மாண்புமிகு உறுப்பினரவர்கள் மனநிறைவு அடைவார்கள் என்று கருதுகிறேன்.





அடுத்து, இந்தப் படுக்கைகளைப்பற்றிச் சொன்னார்கள். படுக்கை வசதி 500-ல் இருந்து 951 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இன்னும் 15 நாட்களுக்குள்ளே படுக்கைகள் வர இருக்கின்றன, 1000 படுக்கைகள் வந்துவிடும் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருக்கும். எனவே, அதிலே பெரிய பிரச்னை இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் சொல்கிறேன். Medical Council of India -வைப் பொறுத்தவரைக்கும், அந்தப் பிரச்னையைப் பொறுத்தவரைக்கும் 951 on paper ஆனால் உண்மையாகவே பார்த்தால் 1200 படுக்கைகள், 1300 படுக்கைகள் இருக்கின்றன. ஆகவே, இதை ஒரு பெரிய பிரச்னையாகக் கருதத் தேவையில்லை என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கருவிகளைப் பற்றிச் சொன்னார்கள். எல்லாக் கருவிகளும் இருக்கின்றன. எனவே, அதில் எந்தவிதமான பிரச்னையும் இல்லை. என்னென்ன கேட்டிருக்கிறார்கள் என்று இங்கே நான் குறிப்பிட்டிருக்கிறேன். இன்னும் தீவிரமாக நாம் சில பணிகளைச் செய்து, அவர்கள் நம்மிடம் திட்டவட்டமாக என்னென்ன செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்களோ அதைவிட அதிகமாகச் செய்தால் பிரச்னைகள் இருக்காது என்ற வகையில் நாம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை என்பது கோவையிலுள்ள பத்து இலட்சம் மக்களுக்கு மட்டுமல்லாமல், திருப்பூர், உடுமலைப்பேட்டை, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி ஆகிய நகர மக்களுக்கும் பயன்படுகின்ற ஒரே மருத்துவமனையாக இருக்கிறது. மற்ற நகரங்களில் உள்ள மருத்துவமனைகள் முழு அளவிற்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றக்கூடிய எல்லா வசதிகளையும் பெற்றிருக்கவில்லை என்பது ஒருபுறம் இருக்கிறது. ஆகவே, பெருகி வருகின்ற மக்கள் தொகைக்கு ஏற்ப, கோவை மருத்துவக் கல்லூரி 1966 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட பிறகு, தேவையான வசதிகள் அரசால் வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா? அதோடு, இந்த இந்திய

[திரு. மா. சின்னராசு] [1985 மார்ச் 20

மருத்துவக் கழகம் 1982-ம் ஆண்டில் கொடுத்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகள் இன்னும் நிவர்த்தி செய்யப் படாமல் இருக்கிறது. சென்னை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்படுவதைப்போல, திட்டங்களுக்கும் மற்ற வசதிகளுக்கும் கோவை மருத்துவக் கல்லூரிக்கும் நிதி உதவி தொடர்ந்து கொடுக்கப்பட்டு, அந்தக் குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப் போல, நிறைய நிதியை இதற்காகச் செலவு செய்ய வேண்டுமென்ற அந்தக் கருத்து நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்து. 1982-ம் ஆண்டு சுட்டிக் காட்டப்பட்ட அந்தப் பிரச்னைகளைப் பொறுத்தவரையில் என்னென்ன குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என்று சொல்ல வேண்டுமென்றால் உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன்.

நர்சஸ் குவார்ட்டர்ஸ் தேவை என்று கருதினார்கள். நர்சஸ் குவார்ட்டர்ஸ் எந்த அளவிற்குத் தேவை என்று கருதினார்களோ அதைவிட இரண்டு மடங்கு, 45 இலட்ச ரூபாய் செலவில் கட்டப் பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் திறக்கப்பட இருக்கின்றது. அதாவது எம்.சி.ஐ. சொன்னதை விட இரண்டு மடங்கு பெரிய அளவுக்கு நர்ஸ் குவார்டர்ஸ் துவக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. அது என்னவென்றால் ரோம் ஸ்கீம் அதாவது Reorientation of Medical Education ஏறத்தாழ 110 மருத்துவக் கல்லூரிகள் இருக்கக்கூடிய இந்த நாட்டிலே 10 மருத்துவக் கல்லூரிகளில்தான் இதைச் செய்கிறார்கள். டாக்டர் சின்னா என்ற ஒரு தலைவர் இருக்கிறார். அவர் இருக்கக்கூடிய பீகார் மாநிலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியில் கூட இதைச் செய்யவில்லை. ரோம் ஸ்கீம் என்பது ஒரு மருத்துவக் கல்லூரியானது அங்கே இருக்கக்கூடிய மூன்று சுகாதார நிலையங்களை எடுத்துக்கொண்டு அந்த சுகாதார



1985 மார்ச் 20] [டாக்டர் எச். வி. ஹண்டே]

நிலையங்களுக்கும் மருத்துவக் கல்லூரிக்கும் தொடர்பை ஏற்படுத்தி அந்தச் சுகாதார நிலையங்களில் கூடுதலாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்பதாகும். அதை நாம் நடைமுறைப்படுத்தி இருக்கிறோம்.

மேலும் அவர் சொன்ன ஒன்றை நாம் நடைமுறைப்படுத்த வில்லை. டீன் எப்படி இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். டீன் என்பவர் ஒரு ப்ரஃபஸராக இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். இரண்டாண்டுகளுக்கு முன்பு நான் செக்ரட்டேரியட்டில் நல்வாழ்வுத்துறைச் செயலாளரையும் மற்றும் எல்லோரையும் கூப்பிட்டு நிர்வாகத்தில் அனுபவம் இருக்கக்கூடிய ஒரு டீ.எம்.ஓ. போஸ்ட் கிராஜுவேட் க்வாலிஃபிக்கேஷனோடு இருந்தால் அவர்களை நாம் கொண்டு வந்து டீனாக அமர்த்தி அதன் மூலமாக நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த முடியும். ஏனென்றால் டீனுக்கு நிர்வாக அனுபவம் மிகவும் தேவையான ஒன்றாகும். ஒரு ப்ரஃபஸரைப் போட்டுவிட்டால் நிர்வாக அனுபவம் இருக்காது. எனவே நிர்வாக அனுபவம் பெற்றிருக்கக் கூடிய போஸ்ட் கிராஜுவேஷன் படித்திருக்கக்கூடிய ஒருவரை அமர்த்தலாம் என்ற வகையில் எம்.எஸ். படித்த ஒருவரை நாம் போட்டிருக்கிறோம். இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறோம். I still strongly believe that an Administrative Officer is more important than just a Post-graduate Professor. என்பது என்னுடைய கருத்து. ஆகவே இந்த விஷயத்தில் கடிதங்கள் எழுதிக் கொண்டிருக்கிறோம். ஆனால் திட்டவட்டமான வகையில் போஸ்ட் கிராஜுவேட் ப்ரஃபஸர் போதும் என்று சொல்லிவிட்டால் அதையும் செய்வதற்கு நாம் தயாராக இருக்கிறோம்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏராளமான விளக்கங்களைச் சொன்னார்கள். அந்த மருத்துவ மனையில் போதிய வசதிகள் இல்லை என்பதையும், அங்கே நோயாளிகளுக்குத் தேவையான இரத்தம், பேண்டேஜ் துணி, க்ளுக்கோஸ் ஸ்டாண்ட், மருந்துகள் ஆகியவை இல்லாத நிலைமையில் இருக்கின்றது என்பதையும் அமைச்சர் அவர்கள்

[திரு. ஆ. நடராசன்]

[1985 மார்ச் 20

அறிவார்களா ? அதைப்போல ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அந்த
மருத்துவமனையில் விரிவாக்கத்திற்காகக் கட்டப்பட்ட அந்தக்
கட்டடம் முடிக்கப்படாமல் இருப்பதை அமைச்சர் அவர்கள்
அறிவார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் பவர் கட்
ஏற்பட்ட நிலையில் ஜெனரேட்டர் இல்லாததன் காரணத்தால்
ஒரு மருத்துவர் இறக்கக்கூடிய சூழ்நிலையே ஏற்பட்டிருக்கின்றது
என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர்
அவர்களே, நானும் அதுபற்றி பத்திரிகையில் படித்தேன்.
உடனடியாக அதிகாரிகளைக் கூப்பிட்டுக் கேட்டேன். அதுபற்றிட
ஒரு குறிப்பினைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். பொதுவாக
நாம் ஏற்கெனவே நல்லவகையில் காரியங்களைச் செய்து
கொண்டிருக்கிறோம். என்னென்ன செய்யப்பட்டிருக்கின்றன
என்று கேட்டார்கள். Construction of a Pharma Ward—The
Government have sanctioned an amount of Rs. 10 lakhs in G.O. Ms.
No. 900 for the construction of accident-*cum*emergency ward அதே
மாதிரியாக "necessary proposals for building, staff, furniture have
been sent by the D. M. E. in his letter dated . . 1984' அதற்கும்
அரசாங்கம் அனுமதி கொடுக்க இருக்கின்றது. அதே மாதிரியாக
பி. ஜி. க்வார்ட்டர்ஸ் ஐந்து இலட்சம் ரூபாயிலே கேட்டிருக்கிறார்
கள். அதற்கும் அனுமதி கொடுக்க இருக்கிறோம். அதேமாதிரி
யாக இரண்டு ப்ளோர்ஸ் இருக்கக்கூடிய ஓ. பி. டிப்பார்ட்மெண்ட்
Necessary Plans and Estimates forthe construction of two floors for
the existing O.P. Block have been forwarded to the Chief Engineer
எதற்காகச் சொல்கிறேன் என்றால் எல்லாவற்றையும் நாம் பார்க்
கின்றபோது ஏராளமான நிதி செலவு செய்தால்தான் செய்ய
முடியும். எவ்வளவு வேகமாகச் செய்ய முடியுமோ அவ்வளவு
வேகமாகச் செய்து கொண்டு வருகிறோம். அதில் எந்தவிதமான
பாதிப்பும் இல்லை. எனவே மாணவர்களுக்கும் அச்சம் தேவை
யில்லை. கோவை மருத்துவக் கல்லூரி அகில இந்தியாவிலேயே



1985 மார்ச் 20] [டாக்டர் எச். வி. ஹண்டே]

அற்புதமான கல்லூரியாகத் தொடர்ந்து இயங்கும். எந்தவிதமான அச்சமும் மாணவர்களுக்கும் தேவையில்லை; மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### உறுப்பினர் டாக்டர் தே. குமாரதாஸ் விடுதலை செய்யப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கன்னியாகுமரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் :

"Refer my crash message in DTO 191245 dated 19th March
1985 regarding the arrest of Thiru D. Kumaradhas, M.L.A.
(Janatha) Killiyoor Constituency along with 13 Janatha Party
Members under section 151 CRPC while attempting to picket
the Jayanthi Janatha Express at Kuzhithurai Railway Station
demanding Boarding point at Kuzhithurai Railway Station for
Jayanthi Janatha Express. The M.L.A. and 13 others were
released at 16.30 hours today 19th March 1985. Situation
calm."

(முற்பகல் 9-50)

## 4. இறுதித் துணை நிதி அறிக்கை, 1984-85 அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே,

1984-85 ஆம் ஆண்டிற்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். 1984-85 ஆம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், எதிர் பார்க்கப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் சேர்க்க, அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. எனினும்

மாநில அரசின் பொறுப்பு நாள்தோறும் அதிகரித்து வருவதால் இத் துணை மதிப்பீடுகளைத் தற்போது அவைமுன் வைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்வதும் அவர்கள் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காண்பதும் அரசின் பொறுப்பாகும். அதன் பயனாக பல புதிய திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டியுள்ளது. மற்றும் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்டுவரும் திட்டங்களுக்கான செலவையும் அதிகரிக்க வேண்டியுள்ளது. இந்த மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 976.12 கோடியில் ரூ. 336.77 கோடி வருவாய்க் கணக்கிலும் ரூ. 639.35 கோடி மூலதன, கடன் கணக்கிலும் வருகின்றன. இருப்பினும், வழிவகை முன்பணங்கள், மிகைப்பற்று ஆகியவற்றை இந்திய ரிசர்வ் வங்கிக்கு அவ்வப்போது திருப்பிச் செலுத்தும்போது, நடைமுறைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக மட்டுமே கடன் கணக்கில் ரூ. 530 கோடி காட்டப்படுகிறது. துணை மதிப்பீடுகள் மூலம் கோரப்பட்டுள்ள கூடுதல் தொகை குறித்த விவரங்களும் அதற்கான காரணங்களும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அறிக்கையில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒரு சில முக்கியமான இனங்கள் பற்றி மட்டும் ஈண்டு குறிப்பிட விழைகிறேன்.

1984-85 ஆம் ஆண்டில், இம் மாநிலத்தில் இயற்கைச் சீற்றங்களினால் பெருஞ்சேதம் ஏற்படவில்லையென்றாலும், கடந்த ஆண்டின் இறுதியில் கடும் மழையினாலும் வெள்ளத்தினாலும் 1984-85 ஆம் ஆண்டின் புயலினாலும் பாதிக்கப்பட்ட பகுதிகள் சில இருந்தன. 1984 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் துயர் தணிப்புப் பணிகளை அரசு மேற்கொண்டது. இவ்வகையிலான செலவின் உச்சவரம்பை மத்திய அரசு, ரூ. 18.76 கோடியாக நிர்ணயித்துள்ளது. 31—3—1985-க்கு முன்னர், மாநில அரசு, இத்தொகை முழுவதையும் துயர் தணிப்புப் பணிகளுக்காகச் செலவிட இயலும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு, வேளாண்மைத் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. வேளாண்மைத் துறையில் நவீன முறைகளையும் இடு பொருள்களையும் பயன்படுத்துவதை மேலும் ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நுகர்பொருள்





வாணிபக் கழகத்திற்கு நேரடியாக நெல் வழங்கும் உழவர்களுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 15 உற்பத்தி ஊக்கத் தொகை அளிப்பது என்று அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக துணை மதிப்பீட்டில் ரூ. 14 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. பயிர்-தாவர பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு அதிகரித்துள்ளது. இதற்காகத் துணை மதிப்பீட்டில் ரூ. 4.35 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் அரசுப் பணியாளர்களுக்கு ஒன்பது முறை அகவிலைப்படி வீதங்களை அரசு உயர்த்தியுள்ளது. மேலும், மாதம் ரூ. 350-ம் அதற்கு மேலும் அடிப்படை ஊதியம் பெறும் அரசுப் பணியாளர்களுக்கு ரூ. 300 என்ற வீதத்திலும் ரூ. 350-க்குக் குறைவாக அடிப்படை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கு ரூ. 200 என்ற வீதத்திலும் ஒட்டுமொத்த நிவாரணத் தொகையை அரசு வழங்கியுள்ளது. இதற்கான மொத்தச் செலவு தோராயமாக ரூ. 90 கோடியாகும். எனினும், அதன் ஒரு பகுதி அந்தந்த மானிய மீதத்திலிருந்து ஈடு செய்யப்படுகிறது. எஞ்சிய தொகை இறுதித் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை 'சம்பளங்கள்' என்பதன்கீழ் கூடுதல் நிதி தேவைப்படுவதற்கான காரணங்களாகும்.

சிறு உழவர்களுக்கு இலவசமாக மின்சாரம் வழங்கவும் ஏனைய உழவர்களுக்கு பரித் திறன் ஒன்றுக்கு ரூ. 75 என்ற சலுகை வீதத்தில் மின்சாரம் வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக மின்வாரியத்திற்கு ஏற்படக் கூடிய இழப்பு பெருமளவிற்கு இருந்த போதிலும், இப்போதைக்கு இந்த இழப்பை ஓரளவிற்குச் சரிக்கட்ட ரூ. 10 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம், கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தைத் தடையின்றி செயல்படுத்த அரசு அச் சங்கத்திற்கு ரூ. 2.25 கோடி வழிவகை முன்பணங்கள் வழங்க அனுமதி வழங்கியுள்ளது.

தொழில் வளர்ச்சியை மேம்படுத்தவேண்டுமென்பதில் அரசு அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. அதற்கேற்ப தமிழ்நாடு பத்திரிக்கைத் தாள்-காகித நிறுவனம் கரும்புச் சக்கையிலிருந்து

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1985 மார்ச் 20

காகிதத்தை வணிக முறையில் உற்பத்தி செய்வதற்காக அந் நிறுவனத்திற்கு ரூ. 13.5 கோடி வழிவகை முன்பணம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகைத் துணை மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்தத் துணை மதிப்பீட்டில் கேட்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கங்கள் தொடர்பான சில முக்கிய திட்டங்களை மட்டுமே நான் இங்கு கோடிட்டுக் காட்டியுள்ளேன். மக்களின் பெருகி வரும் தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் நிறைவு செய்யவே இக்கூடுதல் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது என்பது மேற்குறிப்பிட்டுள்ள திட்டங்களிலிருந்து தெளிவாகும். இதில் உள்ள அனைத்து இனங்களுக்கும் ஒப்புதல் அளித்து, அவற்றிற்குத் தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்கி இம் மாநில அரசு வளர்ச்சிப் பணியில் மேலும் முன்னேற்றம் அடைய அனுமதியளிக்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

### 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி).

### (இ) இறுதித் துணை நிதி அறிக்கை, 1984-85—வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1984-85 ஆம் ஆண்டு இறுதித் துணை நிதி மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்புவோர் இப்பேரவையின் 216-வது விதியின்படி 21—3—1985 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

### 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1985 ஆம் ஆண்டு சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."



1985 மார்ச் 20] [டாக்டர் கா. காளிமுத்து]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

### (ஆ) பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985 — விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1985 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடி (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1985) சட்ட முன்வடிவின் மீதான விவாதத்தைத் தொடரலாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்**: தலைவரவர்களே, நான் ஒரு நிராகரிப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: இந்தச் சட்ட முன்வடிவு நேற்றே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது. அப்போது நீங்கள் இல்லாததால் உங்களுடைய தீர்மானம் முன்மொழியப்படவில்லை. இன்றைக்கு விவாதம்தான் நடைபெறுகிறது. எனவே, இன்றைக்கு நீங்கள் உங்கள் தீர்மானத்தை முன்மொழிய முடியாது. நேற்று 'மூவ்' பண்ணி விவாதம் ஆரம்பிக்கப்பட்டபோது திரு. ரகுமான்கான் அவர்கள் சில விவரங்கள் வேண்டுமென்று கேட்டார்கள். அதனால்தான் நேற்று விவாதம் நடைபெறவில்லை. (குறுக்கீடு) இப்போது விவாதத்தைத் தொடரலாம் என்று தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்களே தவிர மூவ் பண்ணவில்லை.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பச்சையப்பன் அறக்கட்டளை வரலாற்று சிறப்புமிக்க ஒரு அறக்கட்டளை. இந்த அறக்கட்டளைக்கு இப்போது கொண்டுவரப் பட்டிருக்கிற மசோதா மீண்டும் மீண்டும்

அதிகாரிகளுடைய குழுவை வைத்து இந்த அறக்கட்டளையை நிர்வகிக்க வேண்டுமென்று மசோதாவிலே இருக்கிறது. இந்த அறக்கட்டளையை நிறுவியவர்கள் எந்தக் குறிக்கோள்களுக்காக நிறுவினார்களோ, அந்தக் குறிக்கோள்களைத் தோற்கடிக்கும் வகையில் ஆண்டுதோறும் இப்படிப்பட்ட எக்ஸ்டென்ஷன் மசோதாவைக் கொண்டுவருவதை நான் ஆட்சேபிக்கிறேன். ஏனென்றால் இந்த அறக்கட்டளைக்கு நம்முடைய உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு ஸ்கீம் இருக்கிறது. அந்த ஸ்கீம் விதிகள் பிரகாரம் இந்த அறக்கட்டளை நடக்க வேண்டும். அப்படி இந்த அறக்கட்டளை சரிவர நடக்கவில்லை என்பதற்காக அதிகாரிகள் குழு போடப்பட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற 'ஸ்டேட்மென்ட்ஸ் ஆஃப் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்'-ல் பல நல்ல காரியங்களை செய்ய விரும்புவதாகக் கூறியிருக்கிறார்கள். இதை நான் வரவேற்கிறேன்.

(முற்பகல் 10-00)

பச்சையப்பனுடைய அறக்கட்டளையினுடைய லையபலிட்டிஸ், கடன்களை இப்போது இந்த அதிகாரிகள் குழுவால் திருப்பிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதான நடவடிக்கைகளை நான் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

அதேநேரத்தில் புதிய கட்டிடங்கள் கட்டப்பட இன்றைக்கு கந்தசாமி நாயுடு கல்லூரியிலே, ஹவுசிங் போர்டு இடத்தை வாங்குவதற்கு, அந்த அதிகாரிகள் குழு வந்த பிறகு, 5 லட்சத்திற்கு மேல் பணத்தைச் செலுத்தி, மீதி பணத்தை 10 ஆண்டுகளுக்குள்ளாக செலுத்துவதாக ஒரு ஏற்பாடு செய்யப் பட்டு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதையும் நான் வரவேற்கிறேன். அப்படியே சிதம்பரத்திலே இருக்கிற அந்த திருக்கோயிலுக்கு கட்டளைகள் செய்ய வேண்டும் என்ற விதிகளும் இந்த பச்சையப்பனுடைய அறக்கட்டளையில் இருக்கிறது. அங்கே தேரை ஓட்ட, தேர்ச் சக்கரங்கள் செய்வதற்குக் கூட அந்த அதிகாரிகள் குழு வந்த பிறகு ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

இப்படிப்பட்ட நல்ல சில காரியங்களைச் செய்தாலும் இந்த அறக்கட்டளைக்கு அதிகாரிகள் குழு வைத்து மேன்மேலும் நடத்துவது என்பது உகந்தது அல்ல என்பதுதான் என்னுடைய கருத்து. இன்றைக்கு 1981-ஆம் ஆண்டு அதிகாரிகள் குழுவால்



எடுத்துக்கொண்ட இந்த அறக்கட்டளையினுடைய நிர்வாகத்தை மீண்டும் மீண்டும் வருடாவருடம் எக்ஸ்டென்சன் செய்யப்படுவதை நான் ஆட்சேபிக்கிறேன். இன்றைக்குக் கூட அந்த ஸ்கீமில் தவறு இருக்கிறது, புதியதாக ஒரு ஸ்கீம் தீட்டவேண்டும் என்று உயர்நீதிமன்றத்திலே மனு செய்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அப்படியானால் அந்த பழைய ஸ்கீம் என்ன? எந்த வகையிலே, எந்த விதத்திலே மாற்றம் செய்யவேண்டும் என்று அந்த அதிகாரிகள் கேட்டது, அதனுடைய விபரங்கள் இந்த அவை முன் வைக்கப்படவில்லை. அதிகாரிகளுடைய விம்சிகல் ஆட்டிட்யூட் என்று சொல்வார்களே, அந்த எண்ணங்களுக்கு உட்பட்டு, இந்த ஸ்கீம் மாற்றப்படுவதற்காக அந்த மனுச் செய்யப் பட்டு இருக்கிறதா? அறக்கட்டளையினுடைய திட்டம், நோக்கம், கோரிக்கைகளை வைத்து நிறைவேற்றுவதற்காக இந்த திட்டம் செய்யப்படவில்லை. ஏன் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில் அதிகாரிகள் அவர்களுடைய எண்ணங்களுக்கு ஏற்றவாறு, அந்த அறக்கட்டளைகளை மாற்றக் கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். நல்ல எண்ணங்களை எல்லாம் அந்த ஸ்கீமிலே போட்டு. அவைகள் மதிக்கப்பட வேண்டும். அப்போது தான் நல்ல நல்ல காரியங்களைச் செயல்படுத்த முடியும். எண்ணங்கள் ஈடேறும். அந்த நிலையிலே இன்றைக்கு உயர்நீதிமன்றத்திலே கொடுக்கப்பட்டு இருக்கிற அதிகாரிகள் குழுவினுடைய மனு எப்போதுதான் கொடுக்கப் பட்டு இருக்கிறது. அது முடிவு பெறுவதற்கு எத்தனை வருடங்கள் பிடிக்கும். தற்போது ஒரு வருடம் விஸ்தரிப்பு கேட்டிருக்கிறார்கள். அதற்குள் அந்த மனு மீது தீர்ப்பு அளிக்கப்படுமா? அல்லது பழைய ஸ்கீமே தொடர்ந்து நடத்தப்படுமா என்பது எல்லாம் சந்தேகத்திற்குரிய விஷயம்.

எனவே இந்த மசோதாவில் கொடுக்கப்பட்டு இருக்கின்ற திட்டங்களைப் பார்க்கிறபோது, மீண்டும் அந்த அதிகாரிகள் குழு வைத்துதான் நடத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கிறதே தவிர, இன்றைக்கு இந்த அறக்கட்டளையினுடைய நிர்வாகம் மீண்டும், அந்த ஸ்கீமில் இருக்கிற விதத்திலே, அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்படும் என்ற உத்திரவாதமும் இல்லை. எனவே இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதிகாரிகள் குழுவை வைத்து நடத்துவதில் பல சங்கடங்கள், சீர்கேடுகள் இருக்கின்றன

[திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா] [1985 மார்ச் 20

என்று சொல்லுகிறார்கள். எனவே அந்த அறக்கட்டளையின்
எண்ணங்களுக்கு ஏற்ப, நிர்வாகம் நடத்தப்பட, மீண்டும்
அந்த அறக்கட்டளையின் கையிலே நிர்வாகத்தை ஒப்படைக்க
ஒரு தேதி குறிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
இப்போது கொடுக்கின்ற விஸ்தரிப்பு கடைசி விஸ்தரிப்பாக இருக்க
வேண்டும். மீண்டும் அடுத்த வருடம் இந்த விஸ்தரிப்புக்
கொடுக்கக் கூடாது என்று கூறிக்கொண்டு, எனக்கு இங்கே
பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்
கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு மன்றத்தினுடைய துணைத்
தலைவர் அவர்களே, பச்சையப்பன் கல்லூரியினுடைய அறக்
கட்டளை நிர்வாகம் சரியாக அதனுடைய பணிகளை நிறைவேற்ற
வில்லை என்ற குற்றச்சாட்டின் பெயரால் அரசாங்கமே ஒரு குழு
அமைத்து அந்த நிர்வாகத்தை ஏற்றுக் கொள்வதற்காக இந்த
அவையிலே எற்கெனவே சட்டம் கொண்டு வந்திருக்கிறது.
1980 ஆம் ஆண்டு பச்சையப்பன் கல்லூரியின் அறக்கட்டளையி
னுடைய பொறுப்புக் குழுவின் நிர்வாகப் பொறுப்பை, ஒரு குழு
போடுவதின் மூலமாக இந்த அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்
கிறது. அப்பொழுது அந்தச் சட்டத்தை இந்த மாமன்றத்திலே
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்தபோது அமைச்சர்
அவர்களும் உறுதியளித்தார்கள்; சட்டத்திலும் என்ன சொல்லப்
பட்டிருந்தது என்றால், இரண்டாண்டுகளுக்கு தான் இந்தக் குழு
செயல்படும் என்று சொல்லப்பட்டு, அதற்குப் பிறகு முறைப்படி
தேர்தல் நடைபெற்று அந்த நிர்வாகம் அந்தப் பச்சையப்பன்
அறக்கட்டளை குழுவின் நிர்வாகத்திற்கே மாற்றப்படும் என்ற
உறுதி மொழியும் அளிக்கப்பட்டது.

இரண்டாண்டுகளுக்குத்தான் அரசாங்கத்தாலே நியமிக்கப்
பெற்ற அந்த நிர்வாகக் குழுவின் பதவிக் காலம் இருக்கும் என்று
சொல்லப்பட்டது. ஆனால் மீண்டும், பழையபடியே ஒரு சட்டம்
கொண்டு வரப்பட்டு, கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு புதியக்
கட்டிடம் கட்டுவதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டிருக்
கிறது:



1985 மார்ச் 20] [திரு. அ. ரகுமான்கான்]

ஸ்டீரிம் லைனிங் ஆப் அட்மினிஸ்டிரேஷன் என்ற வகையில்
நிர்வாகத்தை ஒழுங்கு படுத்த வேண்டியிருக்கிறது. எனவே
பச்சையப்பன் அறக் கட்டளையினுடைய குழுவிற்கு தேர்தல்
நடத்துகிற காரியத்தை நிறுத்திவிட்டு, அரசாங்கம் நியமித்
திருக்கிற குழுவே அந்தக் காரியத்தை ஆற்ற வேண்டும் என்று
சொல்லி, அந்தக் குழுவிற்கு இந்தப் பணிகளைச் செய்வதற்கான
கால நீட்டிப்பு வேண்டும் என்று சொல்லி ஒட்டு மொத்தமாக
4 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்பட்டது.

துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாகக்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்; கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு
கட்டிடம் கட்ட வேண்டியது இன்றியமையாததுதான். அது
பச்சையப்பன் அறக்கட்டளையின் கீழ் வருகிறது என்பதும்
சரிதான். ஆனால் அந்தக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு
அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர்களான
ஐ.ஏ.எஸ். அதிகாரிகளால் மட்டும் தான் முடியுமா? நான் கேட்க
விரும்புகிறேன். அறக்கட்டளையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட
நிர்வாகக் குழுவினால் அதைச் செய்ய முடியாதா?

ஒரு பிளான் போடுவதோ அல்லது அதற்கு நகராட்சியிலே
அனுமதி வாங்குவதோ, குடிசை மாற்று வாரியத்தின் மூலம்
இடத்தைப் பெற்று அது சம்பந்தமாக பேச்சு வார்த்தையை
நடத்துவதோ தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினால் செய்ய
முடியாத காரியங்களா? அல்லது அரசாங்கத்தினுடைய குழுதான்
அதைச் செய்ய வேண்டுமா? ஆனாலும் இப்படிப்பட்ட வேடிக்
கையான ஒரு காரணத்தைச்சொல்லி அரசாங்கத்தினுடைய
நிர்வாகக் குழுவினுடைய பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டும்
என்று ஒரு மசோதாவை இங்கே கொண்டு வந்து சட்டமாக
ஆக்கினார்கள். 4 ஆண்டுக்காலமும் ஆகிவிட்டது. அரசாங்கத்
தினுடைய நிர்வாகக் குழு இன்றைக்கும் பச்சையப்பனுடைய
அறக்கட்டளையினுடைய நிர்வாகத்தை பரிபாலித்துக் கொண்டு
வருகிறது. அதற்கு மீண்டும் ஒரு ஆண்டு பதவி நீட்டிப்பு
வேண்டும் என்பதற்காக அமைச்சர் அவர்கள் இந்த மசோதாவைக்
கொண்டு வந்திருக்கிறார்கள். நான் சார்ந்திருக்கிற திராவிட
முன்னேற்றக் கழகத்தின் சார்பாக அதை வன்மையாகக்
கண்டிக்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 20

காரணம் பச்சையப்பன் அவர்கள் கொடை வள்ளல். தன்னுடைய சொத்துக்கள் எல்லாம் ஏழை எளிய மக்களின் கல்விக் கண்ணைத் திறப்பதற்கு பயன்பட வேண்டும் என்பதற்காக இன்னும் சொல்லப் போனால் மற்றும் பல சமூக நன்மைகளுக் காகவும் இந்தச் சொத்துக்களை பயன்படுத்த வேண்டும் என்று ஒரு அறக்கட்டளையை நிறுவி, அதை தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்கள் நிர்வகித்து வரவேண்டும் என்று சட்டரீதியாக பாதுகாப்புச் செய்தார்கள். துரதிருஷ்டவசமாக இன்றைக்கு அந்த அறங்காவலர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை. தேர்தல் நடத்த வேண்டிய அவசியமே இல்லை என்று கருதுகிறீர்களா? ஜனநாயக விளக்கின் வெளிச்சத்தை அங்கே பார்க்க முடியாத சூழ்நிலை இருப்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கம் பஞ்சாயத்து யூனியனுக்குத்தான் தேர்தலை நடத்தவில்லை ; ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் தான் தேர்தலை நடத்தவில்லை ; நகராட்சிகளுக்கும், மாநகராட்சி களுக்கும் தான் தேர்தலை நடத்தவில்லை; அது போலவே கூட்டுறவுத் துறை அங்காடிகளுக்கும், வேளாண் விளைபொருள் அங்காடிகள் கமிட்டிக்கும் தான் தேர்தலை நடத்தவில்லை. தேர்தல், ஒரு பொதுச் சொத்து; தேர்தலை நடத்து வதற்கு எந்த விதமான தடையோ, பிரச்னைகளோ இல்லாது இருக்கக் கூடிய ஒரு பொதுச் சொத்தின் நிர்வாகத்திற்கு தேர்தலை நடத்தாமல் காலம் கடத்திக் கொண்டே வந்து, அரசாங்கத்தினுடைய கைப்பாவைகளாக இருக்கக் கூடிய அதிகாரிகளை வைத்து, உங்கள் கட்டளைகளுக்கு நீப் படிகிற அதிகாரிகளை வைத்து, நீங்கள் ஆட்டி வைக்கும்படியாக உங்கள் அதிகாரத்திற்கு உட்பட்டு, உங்கள் மேற்பார்வையில் இருக்கக் கூடிய அதிகாரிகளை வைத்துக் கொண்டு, கோடிக்கணக்கான சொத்துக்களை தவறாகப் பயன்படுத்தும் வகையில் கால நீட்டிப்புக் கேட்பது ஜனநாயகத்திற்கே அவமானமாகும் என்று வன்மையாகக் கண்டிக்கிறேன்.

அடுத்து இன்னொரு குற்றச்சாட்டு. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அரசாங்கத்தின் சார்பாக ஒரு அறிக்கை இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அதற்காக நன்றி. நேற்றையதினம் இந்த மசோதாவை சட்டசபையிலே அறிமுகப்



1985 மார்ச் 20] [திரு. அ. ரகுமான்கான்]

படுத்தி வைக்கின்ற நேரத்தில், பச்சையப்பன் கல்லூரிக்கு அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்ட அந்தக் குழுவினுடைய பதவிக் தான் கொடுக்கப்பெற்றது. அப்போது நான், அப்படி கொடுப்பது தவறு. பச்சையப்பன் டிரஸ்டுக்கு உட்பட்ட கல்லூரிகள் என்னென்ன, எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன. நிர்வாகக் குழு பொறுப்பிலே வந்ததற்குப் பிறகு என்னென்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன, ஏற்கெனவே என்னென்ன தவறுகள் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களையும் மொத்தமாக அடங்கிய அறிக்கையைத் தரவேண்டும் என்று கேட்டேன்.

(முற்பகல் 10-10)

இல்லையென்றால் இந்த அவை இருட்டிலே இருந்து கொண்டு வெளிச்சத்தை காணமுடியாமல், இந்த மசோதாவிலும் பேச முடியாது என்று வேண்டுகோள் விடுத்தேன். நம்முடைய சபாநாயகர் அவர்களும் ஏற்றுக்கொண்டு, நம்முடைய அமைச்சர் அவர்களும் இந்த சட்டத்திலே அறிக்கை வைததிருக்கிறார்கள். இதிலே வைத்திருக்கக்கூடிய அறிக்கை, நிர்வாகம் பொறுப்பு ஏற்ற பிறகு, முந்தைய நிர்வாகம் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் செய்திருக்கக்கூடிய தவறுகளின் காரணமாக இது தேர்ந்துவிட்டது. நாங்கள் புதிய பொறுப்புக்கு வந்ததற்குப் பிறகு இன்னின்ன காரியங்கள் எல்லாம் செய்து இருக்கிறோம் என்று பெருமையோடு இந்த அறிவிக்கையிலே பல செய்திகள் சொல்லப்பட்டிருக்கிறது. அதே நோக்திலே உங்கள் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த புதியதாக வந்திருக் கக்கூடிய, இந்த நிர்வாக பொறுப்பில் இருக்கக்கூடிய அரசாங்கத் தினுடைய அதிகாரிகளாலோ, போடப்பட்டிருக்கக்கூடிய இந்த நிர்வாகக் குழுவினாலோ செய்யப்பட்ட சில பணிகளை நீங்கள் சொல்லாமல் விட்டு இருக்கிறீர்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன்.

பச்சையப்பன் கல்லூரியிலே, முன்னாள் முதல்வராக திரு. மா. கி. தசரதன் அவர்கள் இருந்தார்கள். அவர்கள் அண்ணாவின் நண்பர். அவர்கள் அண்ணாவிற்கு மிக நெருக்கமானவர்கள். தமிழ்த் துறை தலைவராக இருந்தவர். அவர்கள் மரணம் அடைந்து விட்டார்கள். அரசாங்க ஊழியராக இறந்துவிட்டால் ரூ. 10,000 கொடுக்க வேண்டுமென்ற சட்டத்தின் அடிப்படையில், இன்றைக்கு அவர்களுக்கு அது வழங்கப்

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 20

பட்டிருக்கிறதா என்று கேட்டால், பச்சையப்பன் கல்லூரி முதல்வருக்கே இன்னும் அந்தத் தொகை வந்து சேரவில்லை என்ற தகவல் எனக்கு வந்திருக்கிறது.

அதைப்போலவே இன்றைக்கு இருக்கக்கூடிய பச்சையப்பன் கல்லூரியிலே பல லட்ச ரூபாய் செலவில் வாங்கப்பட்ட பேருந்து எதற்காவது பயன்படுகிறதா என்று கேட்டால், மூன்று ஆண்டு காலமாக பயன்படுத்தப்படாமல் அது பாழ்பட்டு போய் இருக்கிறது என்று சொன்னால் நான் கேட்க விரும்புகிறேன். மூன்று இலட்ச ரூபாய் செலவில் நீங்கள் பேருந்து வாங்கியது பயன்படுத்தாமல் அப்படியே இருக்கட்டும் என்ற நோக்கத்தோடு வாங்கினீர்களா, இந்தச் செய்தியை நீங்கள் கொடுத்திருக்கக்கூடிய அறிக்கையில் எடுத்து சொல்லியிருக்கிறீர்களா என்றால் இல்லை. ஆக நான் கேட்க விரும்புவது, புதியதாக பொறுப்பு ஏற்று இருக்கக்கூடிய உங்களால் நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய குழுவின் அதிகாரிகள், இந்த இலட்ச ரூபாய் செலவிலே வாங்கப்பட்ட பேருந்தை சரியாக சீர்படுத்தி இயங்குவதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்று நீங்கள் சொல்ல வேண்டும். அறிக்கையிலேயும் இது தெரிவிக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் மாணவர்களிடமிருந்து 'காலேஜ் மேகஸைன்' ஆண்டு மலர் போடப்போகின்றோம் என்று சொல்லி, சுமார் ரூ. 40,000 வசூலிக்கப்பட்டிருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இதுவரை ஆண்டு மலர் வழங்கப்பட வில்லை. அப்படியானால் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அந்தத் தொகை வசூலிக்கப்பட்டது உண்மையா? மலர் போடப் படுவதாக சொல்லப்பட்டது உண்மையா? அப்படியானால் ஏன் போடவில்லை? அந்தத் தொகை என்னவாயிற்று? அந்த வசூலில் ஏதாவது தவறு நடந்திருக்கிறதா? அல்லது எனக்கு சொல்லப் பட்ட செய்தி தவறானதா? இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே சொல்ல வேண்டும்.

அதைப்போலவே இன்னொன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்கு இந்த கல்லூரியிலே போடப்படுகின்ற உத்திரவுகள் வேடிக்கையான உத்திரவுகளாக இருந்துகொண்டிருக்கின்றன.



1985 மார்ச் 20] [திரு. அ. ரகுமான்கான்]

உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், அந்தக் கல்லூரியிலே முக்கிய பொறுப்பிலே பதவி ஏற்பதற்காக ஒருவர் அனுமதிக்கப் பட்டு, அவருக்கு ஒரு உத்திரவு போட்டார்கள். அந்த உத்திரவின் படி அவர் பேராசிரியராக நியமிக்கப்பெற்றும்கூட அவருக்கு சம்பளம் தரப்படவில்லை. இந்தத் தகவலும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மார்ச் மாதம், ஓராண்டிற்கு முன்பாக பேராசிரியர் ஒருவர் பச்சையப்பன் கல்லூரியிலே நியமிக்கப்பெற்றார். அவருக்கு மார்ச் மாதத்திலிருந்து சம்பளம் தரப்படவில்லை. ஜூலையிலேயிருந்து அவருக்கு சமபளம் தரும்படி ஒரு வேடிக்கையான ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. அந்த ஆர்டர் படியும் அவருக்கு சம்பளம் தரப்படவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அத்தோடு இன்னொன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்பு கிறேன். முக்கியமாக இந்த பச்சையப்பன் அறக்கட்டளை பற்றி, அரசாங்கத்தாலே நியமிக்கப்பட்டிருக்கக் கூடிய இந்தக் குழுவினைப் பற்றி ஒரு முக்கியமான தகவலைச் சொல்கிறேன். இன்றைக்கு உங்களுடைய நிர்வாகத்திலே இருக்கக்கூடிய ஒரு குழு கூட சரியாகச் செயல்படவில்லை என்பதற்கான உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு பச்சையப்பன் கல்லூரியில் பல துறைகளில் வேகன்சீஸ் இருக்கின்றன. ஆனால் அவை நிரப்பப்படவில்லை என்று தகவல் கிடைத்திருக்கிறது. ஆசிரியர் களுக்கு பிராவிடென்ட் பண்ட். இன்னும் அந்தத்திட்டம் செயல் படுகிறதா என்று கேட்டால், செயல்படவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்போது புதியதாக பொறுப்புக்கு வந்திருக்கக் கூடிய அரசாங்கத்தினுடைய கமிட்டி பல நல்ல காரியங்களைச் செய்தது. இன்னும் சொல்லப் போனால், கடன்களையெல்லாம் திருப்பி வாங்கி, குறைந்த வாடகைகளை அதிகமாக்கி, அவ்வப்போது வருமானத்தைப் பெருக்கியிருக்கிறது என்ற தகவல்கள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கந்தசாமி நாயுடு கல்லூரி அது போன்று பச்சையப்பன் கல்லூரி என்றும் கருதுகிறேன். இன்னும் அந்தக் கல்லூரிகளுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் மானியம் கிடைக்கவில்லை. அதற்கான முயற்சிகள் செய்து கொண்டிருப்பதாகவும், பல்கலைக் கழகத்தோடு தொடர்பு கொண்டிருப்பதாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 20

அதற்கு என்ன தடை, அதற்கு ஏன் இவ்வளவு காலதாமதம் என்ற விவரங்களைத் தெரிந்துகொண்டு, மானியக் குழுவின் அந்த தொகையை இந்தக் கல்லூரிகள் பெறுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பழைய நிர்வாகத்திலே இருப்பவர்கள் தவறு செய்திருக்கிறார்கள். ஆகவே தான் இந்தப் புதிய குழு போடப்பட்டிருக்கிறது என்று நீங்கள் சொன்னீர்கள். அப்படியானால், உங்களைப் பார்த்து பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். துணை சபாநாயகரின் அனுமதியோடு, இன்றைக்கு பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி அறிக்கை சபையிலே வைக்கப்பட்டிருக்கிறது. கல்வித் துறையாகட்டும், மின்சாரத் துறையாகட்டும், விவசாயத்துறையாகட்டும், ஹெல்த் துறையாகட்டும், எஜுகேஷன் துறையாகட்டும், தொழிற்துறையாகட்டும், இந்த பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி, அரசாங்கம் செய்த தவறுகளை எல்லாம், தப்புகளையெல்லாம், முறைகேடுகளையெல்லாம், பண நட்டத்தையெல்லாம் தொகுத்து, பல இடங்களில் சொல்கிறது. அப்படியானால், நான் கேட்கிறேன். அங்கே பச்சையப்பன் அறக்கட்டளையில், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் நிர்வாகப் பொறுப்புக்கு வருவார்களானால், ஏற்கனவே வந்தவர்கள் தவறு செய்து விட்டார்கள், ஊழல் செய்துவிட்டார்கள், ஒரு தவறான நிர்வாகத்தைத் தந்தார்கள், ஆகவே அரசாங்கத்தின் சார்பில் ஒரு குழுவை போட்டு விடுகிறோம் என்று சொல்கிறீர்களே, அந்தப் பொதுக் கணக்குக் குழு அரசாங்கத்தினுடைய துறைகள், அமைச்சர்கள் சார்பில் இருக்கக்கூடிய துறைகள் தப்பு செய்ததைக் கோடிட்டுக் காட்டுகிறபோது, உதாரணத்திற்குச் சொல்கிறேன். கல்வித் துறையை எடுத்துக்கொள்கிறேன், உங்களுடைய துறையிலே தவறு நடந்திருக்கிறது என்று பொதுக் கணக்குக் குழு அறிக்கை சமர்ப்பிக்குமேயானால், உங்களுடைய அதிகாரத்தை ஒரு குழுவிலே வைத்து, நீங்கள் அமைச்சர் பொறுப்பிலேயிருந்து விலகி, ஒரு குழுவே இந்த இலாகாவை கவனிக்க முடியுமென்ற முடிவிற்கு வருவீர்களா என்று கேட்க முடியும். இப்போது வந்திருப்பவர்கள் பழைய நிர்வாகத்தைப் பற்றி குறை சொன்னார்கள்.

இப்போது வந்திருப்பவர்கள் சரியாக இருக்கிறார்களா என்றால் கிடையாது. அதற்கான ஆதாரங்களை ஒவ்வொன்றாக இங்கே சொல்ல விரும்புகிறேன். துணை



1985 மார்ச் 20] [திரு. அ. ரகுமான்கான்]

சபாநாயகரின் அனுமதியோடு எனக்குக் கிடைத்திருக்கிற ஐந்து தகவல்களின் அடிப்படையில் சொல்ல விரும்புகிறேன். துணை சபாநாயகரின் அனுமதியோடு சொல்கிறேன்.

உதாரணமாக ஃபிளவர் பசாரில் ஒரு சொத்து இந்த அறக்கட்டளைக்கு இருக்கிறது. அந்த ஃபிளவர் பசாரில் இருக்கக் கூடிய அறக்கட்டளையானது, லேபர் யூனியன் தலைவராக இருக்கக் கூடியவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. அவருடைய பெயரைச் சொல்ல வேண்டுமானாலும், சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். அவர் ஆளுங்கட்சி சார்புடைய ஒருவர். அந்தச் சொத்தினுடைய இடத்தையும் சொல்கிறேன். எண். 12 பத்திரியன் தெரு. ஜார்ஜ் டவுன், மெட்ராஸ்-1. இது ஏறத்தாழ பல இலட்சம் ரூபாய் பெறுமான சொத்து, இதற்கு வாடகையாக ரூ. 3,500 தான் வாங்கப்படுகிறது. இது இல்லீகல் என்குரோச்மெண்ட். ஆளுங்கட்சியைச் சார்ந்த ஒரு தொழிற் சங்கத் தலைவர் இதை செய்திருக்கிறார்கள். அது குறித்து எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவரிடமிருந்து அந்த நிலத்தைப் பெறுவதற்கு எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏறத்தாழ இந்த நிமிஷம் வரைக்கும் ரூ. 2 இலட்சம் இந்த அறக்கட்டளைக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற தகவல் தரப்பட்டிருக்கிறது.

அடுத்து இன்னொன்றையும் நான் தெரிவிக்கவிரும்புகிறேன். முத்து என்பவர் * * என்று சொல்லப்படுகிறது. இன்றைக்கு அவருக்கும் இந்த அறக்கட்டளை சலுகை அளித்துக் கொண்டு வருகிறது.

(முற்பகல் 10-20)

உதாரணத்திற்குச் சொல்வதானால் 26, கௌடியா மட் ரோடு, இராயப்பேட்டை, சென்னை-14, அங்கே இருக்கக்கூடிய பச்சையப்பன் அறக்கட்டளைக்குச் சொந்தமான இடத்திலே அவர் வசித்துக் கொண்டிருக்கிறார். அவர் அந்தச் சொத்தை அபகரித்துக்கொண்டு வாடகை தராத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதற்கான ரென்ட் ஒழுங்காக வசூலிக்கப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை. * * * * இது குறித்து அமைச்சர்

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 20

அவர்கள் விளக்கத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். அவருடைய பெயர் எம். ஏ. முத்து என்று தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, வாடகைக்கு இருக்கிற ஒருவர் வாடகை தரவில்லை என்றால் அந்த வாடகையை ஏன் வசூலிக்கவில்லை என்று கேட்பது வேறு. ஆனால் அதோடு * * டெய்லர். அதனால் வாடகை வசூலிக்கவில்லை என்ற முடிவுக்கு திரு. ரகுமான்கான் அவர்கள் எப்படி வந்தார்கள்?

**திரு. அ. ரகுமான்கான்:** திரு. எம். ஏ. முத்து, * * பச்சை யப்பன் டிரஸ்டுக்குச் சொந்தமான இடத்திலே அவர் இருந்து வருகிறார். அதற்குரிய வாடகை வசூலிக்கப்படவில்லை * * என்பதால் நீங்கள் போட்டிருக்கிற அந்த நிர்வாகக் குழு சீர்திருத் தங்கள் செய்வதற்காக போடப்பட்ட அந்தக் குழு அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்காமல் இருக்கிறார்களோ என்ற முடிவுக்கு நான் வருகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர் களே, ஒருவர் வாடகைக்கு இருக்கிறார், அவரிடத்திலே வாடகை வசூலிக்க வேண்டும் என்று சொல்லுவதுதான் முறையே தவிர * * சொல்வது தவறான முறையாகும். * * வாடகை வசூலிக்காமல் இருக்கப் போவதும் இல்லை. * * என்ற காரணத்திற்காக அவரை காலி செய்யவேண்டுமென்ற முயற்சியில் நாங்கள் ஈடுபட மாட்டோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, வேலைக்கு இருக்கிறார் என்பதும் சரியல்ல. அவர் * * தையற்காரர் என்கிறார். தையற்காரர் என்பவரிடத்திலே பல பேர்கள் தங்களுடைய சட்டைகளை தைத்துக் கொள்ளலாம். ஆகவே அவருடைய தையற்காரர் என்று சொல்வதும் சரியல்ல, உறுப்பினர் அவர்கள் எப்படியாவது * * பழிசுமத்த வேண்டுமென்று ஆசைப்பட்டால் அதற்கு இதைப் பயன்படுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1985 மார்ச் 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாரிடமிருந்து வாடகை வசூலிக்கவில்லை என்று பெயரைச் சொல்லுங்கள். * * என்று சொன்னதை நீக்கிவிடலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அவர்கூட 1972 இல் வாடகைதாரராக வந்திருக்கிறார். அப்போது மாண்புமிகு கலைஞர் அவர்கள்தான் முதல்வராக இருந்தார்கள்.

**திரு. க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் ஒரு டெய்லராக இருப்பவருடைய செல்வாக்கிற்கு அடையாளமாக ஒரு கருத்தைச் சொன்னார். அந்தக் கருத்து இங்கே இடம் பெறத் தேவை யில்லை என்றால் தாராளமாக விட்டுவிடலாம். நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள், அவரைப்பற்றிய விவரத்தை, 1972 ஆம் ஆண்டிலேயே அந்த இடத்தை வாடகைக்கு ஏற்றுக் கொண்டார் என்று சொல்லியிருக்கிறார். அப்படியானால் எத்தனை ஆண்டு காலக வாடகை தாராமல் இருக்கிறார் என்ற விவரத்தை அவைக்கு தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, திரு. எம். ஏ. முத்து 1972 இல் நேரடி வாடகை தாரராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். 16—2—1972 இல் மாத வாடகை 50 ரூபாய் கொடுக்க அவர் சம்மதித்து இருந்தபோதிலும் அக்காலத்தில் இருந்த பச்சையப்பன் அறக்கட்டளை குழு வாடகையை 18 ஆக நிர்ணயித்து 1980 வரை உயர்த்தாமல் அனுமதித்து வந்திருக்கிறது. அரசு போட்ட குழு பொறுப் பேற்றதற்குப் பிறகு வாடகை 165 ரூபாயாக நிர்ணயித்து உத்திரவுகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் எம். ஏ. முத்து அலுவலகத்திலிருந்து செல்லும் கடிதங்களையும், உத்திரவு களையும் வாங்கிக் கொள்ளாமல் தவிர்த்து வருகிறார். அவர்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, இதிலிருந்தாவது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களது அரசு எவ்வளவு நேர்மையாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்வார்களா?

---

* * மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1985 மார்ச் 20

திரு. அ. ரகுமான்கான் : துணைத் தலைவர் அவர்களே, சூரிய நாராயணா பச்சையப்பன் டிரஸ்ட் ஆபீஸிலே அக்கவுண்ட்ஸ் கிளார்க்காக இருக்கிறார். அவர் அ.இ.அ.தி.மு.க. அரசு வந்ததற்குப்பிறகு நம்முடைய மதிப்பிற்குரிய மரியாதைக்குரிய அமைச்சர் ஹண்டே அவர்களுடைய பி.ஏ.-வாக அமர்த்தப்படுகிறார். அவர் டிரஸ்டிலே வேலை பார்த்துக் கொண்டிருந்த போது 1,500 ரூபாய் பெஸ்டிவல் அட்வான்ஸ், சைக்கிள் அட்வான்ஸ் வாங்கியிருக்கிறார். அதை கட்டவேண்டிய காலம் எல்லாம் கடந்துவிட்டது. இப்போது அமைச்சரிடத்திலே அவர் இல்லை. இந்துஸ்தான் மோட்டார் சர்வீஸுக்கு போய்விட்டார். இந்த விபரம் எல்லாம் டிரஸ்டிற்கும் தெரியும். அதையும் அறிக்கையிலே கொடுத்திருக்கிறார்கள். ரொம்பத் தூய்மையான அரசு ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொரு நிகழ்ச்சியை இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். அப்புகுட்டி முதலியார் என்ற ஒருவர் பச்சையப்பன் கல்லூரியில் பச்சையப்பன் டிரஸ்டில் தன்னுடைய சொத்தை இணைத்து இருக்கிறார், அது தர்ம காரியங்களுக்கு பயன்படுத்தப்படவேண்டும் என்பதற்காக. அவர்கள் தன்னுடைய ஜீவனத்திற்குப் பிறகு அதை டிரஸ்ட்டுக்கு சட்டபூர்வமாக மாற்றுகின்ற ஏற்பாடுகளை செய்து இருக்கிறார்கள். அவருக்கு எந்த விதமான வாரிசும் இல்லாமல் இறந்து விடுகிறார்கள். அவர் இறந்த பிறகு அவருடைய மனைவி உயிரோடு இருந்தபோது எழுதி வைத்த உயில் என்னுடைய ஜீவனத்திற்குப் பிறகு சொத்துக்கள் தர்ம காரியங்களுக்கு பயன்படவேண்டும் என்பதாகும். அப்புக்குட்டி முதலியார் மறைவிற்கு பிறகு அவருடைய மனைவி அந்த சொத்தை விற்கின்ற முயற்சியில் ஈடுபட்டார். அது 20 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட சொத்து.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் அன்றைக்கு நிர்வாகத்தில் இருந்தவர்கள் அது விற்பனை செய்யப்படக்கூடாது என்று நோட்டீஸ் எல்லாம் கொடுத்து பத்திரிகையில் வந்தது. இப்படி பத்திரிகையில் வந்த பிறகு கூட அந்த சொத்து 1980 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ஆம் தேதி விற்கப்பட்டு இருப்பதாகத் தெரிய வருகிறது. எந்த அடிப்படையில் இதை விற்பதற்கு இந்த நிர்வாகக் குழு முடிவு செய்தது? [illegible] காரியத்தை



1985 மார்ச் 20] [திரு. அ. ரகுமான்கான்]

செய்தார்கள் என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே ஊழல் செய்யாத அரசு என்று நம்முடைய அமைச்சர் பண்ருட்டியார் அவர்கள் சொல்லியிருப்பதற்காக நன்றி. ஆனால் தவறுகள் களையப்பட வேண்டும் என்பதற்காக நான் இவைகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் இன்றைக்கு இருக்கக்கூடிய தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கொண்ட குழு இருக்கிறது. அறங்காவலர்கள் கொண்ட நிர்வாகக் குழு இருந்தால் காரியங்களை சரியாக செய்யாது. ஆகவே அரசினுடைய அதிகாரிகளை கொண்ட குழுவின் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டும். காரணம் தூய்மையாக இருக்கும் என்று சொல்கிறீர்கள்.

ஆனால் அதேநேரத்தில் இன்னொரு சம்பவத்தையும் நான் சொல்ல விரும்புகிறேன். முருகேச நாடாரைப் பொறுத்தவரை சட்டவிரோதமாக மாதவரம் ஹைரோடு, பெரம்பூர் எண் 117 இதை என்குரோச் செய்து இருக்கிறார். அதைப்போலவே இன்னும் ஒன்றையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன், இன்றைக்கு சிந்தாதிரிப்பேட்டையில் என்னுடைய தொகுதியில் குறிப்பிட்ட இடம். அங்கே பல கடைகள் கட்டிவிடப்பட்டு இருக்கிறது. அந்த இன்றைக்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய உறவினருக்கு எந்தவிதமான நோட்டீசும் தெரிவிக்காமல், எந்தவிதமான அறிவிப்பும் இல்லாமல் அந்த இடம் அவருக்கு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்கு அவருடைய கண்ட்ரோலில் அது இருந்து கொண்டிருக்கிறது. அதையும் இந்த சபையில் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். சுவாமி பண்டாரம் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, நெம்பர் 1291, சென்னை-2, சண்முக சுந்தர முதலியார் எஸ்டேட், சண்முக சுந்தர முதலியார் அந்த எஸ்டேட்டை பச்சையப்பன் டிரஸ்ட்டுக்கு இணைத்து இருக்கிறார்கள். அது இப்போது இந்த டிரஸ்ட்டின் நிர்வாகத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. அதில் பல கடைகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவை வாடகைக்கு விடப்பட்டு இருக்கிறது. யாருக்கு வாடகைக்கு விட்டு இருக்கிறார்கள் தெரியுமா?

'I.A.S. Officer, Thiru Balasubramanian's brother-in-law. It was given without calling for tenders or without any public notification'.

[திரு. அ. ரகுமான்கான்] [1985 மார்ச் 20

எந்தவிதமான டெண்டரும் கால் பார் செய்யாமல் ஒரு ஐ.ஏ.எஸ். ஆபிஸரின் — அவர் எந்த விதத்தில் இவர்களுக்கு தேவையோ நமக்கு தெரியாது—பெயர் பாலசுப்பிரமணியன். அவருக்கு பல கடைகள் இருக்கக்கூடிய இடத்தை மொத்தமாக வாடகைக்கு கொடுத்து இருக்கிறார்கள். அதைப் பயன்படுத்தி அவர் இன்றைக்கு பல லாபம் சம்பாதித்துக் கொண்டு இருக்கிறார்கள். இதைப் பற்றி உங்கள் நிர்வாகக் குழு கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இதுபோன்ற குற்றங்களின் புராணங்கள் போய்க்கொண்டே இருக்கின்றன. எனவே நான் சொல்ல விரும்புகிறேன், ஆக இப்போது புதியதாக போட்டு இருக்கக்கூடிய நிர்வாகக் குழு சரியாக செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது என்று சொல்ல முடியாது. ஆளும் கட்சிக்கு அனுசரணையாக, தவறுகள் செய்வதற்கு துணையாக அமைச்சர் அவர்களால் ஆட்டி வைக்கப்படுகின்ற குழுவாக இது இருந்துகொண்டிருக்கிறது. எனவே பச்சையப்பன் அவர்கள் கனவு நனவாக வேண்டும் என்றால், உண்மையிலே செம்மையாக நிர்வாகம் நடைபெறவேண்டுமானால், அதிகாரிகள் ஒழுங்காக நிர்வாகம் செய்யவேண்டும். உங்களால் நியமிக்கப்பட்டவர் என்றும், அறங்காவலர்கள் முறை கெட்டவர்கள் என்றும் முடிவுக்கு வருவது சரியல்ல. எனவே ஜனநாயக தீபங்களை அணைக்காமல் வெளிச்சம் ஊட்டும் விதத்தில் இன்றைக்கு உடனடியாக தேர்தலுக்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டு, இந்த பதவி நீடிப்பை, உங்களால் ஏற்படுத்தப்பட்ட குழுவின் பதவி நீட்டிப்பிற்கான இந்த மசோதாவை நான் சார்ந்து இருக்கின்ற முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கடுமையாக எதிர்த்து அமைகிறேன்.

(முற்பகல் 10-30)

**திரு. வி. பி. சிந்தன்:** மாண்புமிகு துணை சபாநாயகரவர்களே, திருவாளர் பச்சையப்பன் அவர்கள் ஒரு மிகப்பெரிய நல்ல காரியத்தைச் செய்தார்கள். அவருடைய ஆவி — துணை சபாநாயகரவர்களே, நான் ஆவியில், கடவுளில் நம்பிக்கை உள்ளவன் அல்ல. இருந்தாலும் அவருடைய ஆவி கடந்த ஏழாண்டுக் காலமாகப் பத்திரிகைகளிலேயும், சென்னை நகரத்திலே நடைபெறுகின்ற பொதுக் கூட்டங்களிலேயும், இன்றைக்கு நம்முடைய மதிப்பிற்குரிய நண்பர், சட்டமன்ற உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இங்கே எடுத்துரைத்ததையும் கேட்டிருந்தால் இந்தச் சொத்துக்



1985 மார்ச் 20] [திரு. வி. பி. சிந்தன்]

களையெல்லாம் இப்படியொரு அறக்கட்டளையிலே நான் வைத்திருக்க வேண்டுமா என்றுதான் கண்ணீர் விட்டிருப்பார் என்று கருதுகிறேன்.

கோடிக்கணக்கான ரூபாய்கள் இந்த அறக்கட்டளைக்குச் சொந்தமாக இருக்கிறது. ஆறு கல்லூரிகள், ஏராளமான நஞ்சை நிலங்கள், கட்டிடங்கள், இன்னும் கல்யாண மண்டபங்கள், இன்னும் பல்வேறு முறைகளிலே உள்ள கட்டிடங்கள் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. ஆனால் அவற்றை நிர்வகிக்கக்கூடிய அந்த நிறுவனங்களை நடத்துகின்றவர்கள் முறையாகச் செயல்படவில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

இந்தப் பிரச்னையில், பச்சையப்பன் கட்டிடத்தைப் பார்த்தேனே தவிர, அதனுடைய நிறுவனங்களில் நிர்வாகத்தைப்பற்றி எனக்கு எதுவும் தெரியாமல் இருந்தது. ஆனால் நான்கு மாத காலமாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று பச்சையப்பன் கல்லூரியில் உண்ணாவிரதம், கந்தசாமி நாயுடு கல்லூரியில் ஊர்வலமும் வேலை நிறுத்தமும் என்று நகரத்திலுள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் இந்த இயக்கத்தை ஆதரித்தபொழுதுதான் என்னைப்போன்றவர்கள் அந்தப் பக்கம் சென்று சற்று நெருங்கிப் பார்க்க, சில உண்மைகளைப் புரிந்து கொள்ள வாய்ப்பு பெற்றோம். அந்த இயக்கம் முழுமையையும் நாங்கள் ஆதரித்தோம்.

காரணம், யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் — ஐந்தாவது கமிஷன் கொடுத்த பணத்தை அன்றைய நிர்வாகம் விஞ்ஞானக் கருவிகளை வாங்குவதற்குப் பதிலாக, நிர்ப்பந்தத்தின் காரணமாக ஆசிரியர்களுடைய சம்பளத்தைக் கொடுப்பதற்குப் பயன்படுத்தி அதையொட்டி, யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அந்தக் கல்லூரிக்குக் கொடுக்கும் பணத்தை நிறுத்தி விட்டார்கள். ஆசிரியர்கள் கிளர்ச்சி செய்தபொழுது சம்பளம் கொடுத்தார்கள், ஆனால் யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷன் கொடுத்த பணத்தை எடுத்துக் கொடுத்தபிறகு யூனிவர்சிட்டி கிராண்ட்ஸ் கமிஷன் அந்தக் கல்லூரியைப் பொறுத்தவரையில் ஒரு கரும்புள்ளியை வைத்து, இதற்கு எந்த உதவியும் கொடுக்க முடியாது என்ற நிலைமைக்குத் தள்ளி வைத்துவிட்டார்கள். அதற்குப்பிறகு எட்டு ஆண்டுகளாக அந்தக் கணக்கைப் பற்றி எந்த ஆடிட்டும் நடத்தப்

[திரு. வி. பி. சிந்தன்] [1985 மார்ச் 20

படவில்லை. எட்டு ஆண்டுகளாக ஆடிட் நடத்தாமல் ஒரு டிரஸ்டினுடைய — அதுவும் கோடிக்கணக்கான ரூபாய்க்குச் சொந்தமாக உள்ள ஒரு டிரஸ்டினுடைய நிலைமையே இப்படி யென்றால், நாம் என்ன செய்வது?

தமிழகத்திலே இத்தகைய வருந்தத்தக்க நிலையைப் பார்க் இன்ற பொழுது, மடங்கள், கோயில்கள், கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களை யார் யாரோ சூறையாடிக்கொண்டிருக் கிறார்கள். இந்து மதத்தின் அறநிலையங்களையெல்லாம் காப்பாற்ற, அது தெய்வீக மதம் ஆயிற்றே, இந்தியாவினுடைய தனிப்பெரும் உரிமை பெற்ற மதம் ஆயிற்றே, ஆகவே, அதற்கு அரசியல் சட்டத்திலே இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. அங்கேயும் பெருச்சாளிகள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். மாறி மாறி கொள்ளையடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த டிரஸ்டின் நிலைமைகளைப் பொறுத்தவரையில், இத்தகைய முறைகேடுகளைக் களைய, இத்தகைய இலஞ்ச லாவண்யம் நிறைந்த ஒரு டிரஸ்டைக் கலைத்ததில் என்னைப் போன்றவர்கள் மகிழ்ச்சியடைகிறோம்; நான் சார்ந்திருக்கின்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சி அடைகிறது. ஆனால் அதற்கு மாற்று என்ன?

நான் விவரங்களுக்குள் போக விரும்பவில்லை, இன்னும் பல உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கும் என்பதால். இரண் டாண்டுகள் அரசினுடைய ஒரு குழு இதை நிர்வகிக்க வேண்டு மென்று நீங்கள் தீர்மானம் நிறைவேற்றினீர்கள். பிறகு ஒரு ஆண்டு அதற்கு எக்ஸ்டென்ஷன் கொடுத்தீர்கள், அதற்குப் பிறகு மீண்டும் ஒரு ஆண்டு. இப்பொழுது மீண்டும் ஒரு ஆண்டு அதனுடைய காலத்தை நீட்ட வேண்டுமென்று நீங்கள் குறிப்பிட் டிருக்கிறீர்கள். இத்தகைய அவசரச் சட்டங்களை — ஆர்டி னென்ஸ்களை நியமன அதிகாரிகள் அதையெல்லாம் பயன்படுத்திக் கொண்டு இத்தகைய நிறுவனங்களைச் சரியாகப் பார்க்க முடியாது என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்போதுள்ள அதிகாரிகள் மிகச் சிறப்பாகப் பணியாற்று வதாக இங்கே ஒரு அறிக்கை வைக்கப்பட்டிருக்கின்றது. அதனுடைய மொத்தத்தையும் பரிசீலித்துப் பார்த்தேன். என்னுடைய அருமை நண்பர் திரு. ரகுமான்கான் அவர்கள்



1985 மார்ச் 20]

எடுத்துக் கூறிய பல்வேறு விஷயங்கள் பற்றியோ அல்லது மற்ற வற்றைப் பற்றியோ ஒரு பட்டிமன்றம் நடத்துவது மாதிரி இங்கே பேசுவதில் மட்டும் பிரச்சினை தீர்ந்துவிடாது. யாரோ சிலர் புனிதமானவர்கள் என்று சொல்லி அவர்களுடைய பெயரை இழுக்கவேண்டாம் என்று சொல்லி அரசு தப்பித்துக்கொள்ளவும் முடியாது. இந்த நான்காண்டுகளில் . . . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புனிதமானவர்கள் என்று சொல்லி தப்பித்துக் கொள்ள அரசு விரும்பவில்லை. குறைபாடுகள் இருந்தால் அவற்றைச் சுட்டிக் காட்டினால் அதைப் பொறுத்த வரையில் பதில் சொல்ல என்றைக்கும் தயாராக இருக்கிறோம். குற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டு இந்த, இந்த வகையில் நடைபெற் றிருக்கின்றன என்று சொன்னால் அவற்றைச் சீர்திருத்தவும் நாங்கள் தயார். தப்பித்துக் கொள்கின்ற பழக்கம் எங்களுக்கு இல்லை என்பதை மட்டும் இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : தப்பித்துக்கொண்ட இடங்கள் எல்லாம் எவை என்பது எனக்கும் தெரியும். அவர்களுக்கும் தெரியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எந்தெந்த இடங்கள் என்று அவர்கள் சொல்லட்டும், நானும் பதில் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்ற பல சந்தர்ப்பங்களில் எனக்கு வாய்ப்பு கிடைக்கும் என்ற காரணத்தால் இப்போது நான் அந்த விவாதத்திற்குச் செல்ல வில்லை. எனவே குறித்துக் கொள்ள வேண்டும். நான் பிறகு அதைப்பற்றிப் பேசத்தான் போகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தச் சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

திரு. வி. பி. சிந்தன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து 5 அதிகாரிகளை மட்டும் வைத்து இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிடலாம் என்பது சரியல்ல. அமைச்சர் அவர்கள் பேசும்போது நான் கேட்கின்ற

[திரு. வி. பி. சிந்தன்] [1985 மார்ச் 20

கேள்விக்குப் பதில் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன். நான் ஓட்டுநரையோ அல்லது நெசவாளரையோ அல்லது குறைந்த வாடகைக்கு ஆக்கிரமித்துக் குடியிருக்கிறவர்களையோ இங்கே குறிப்பிட்டுக் கேட்கவில்லை. அரசினுடைய கொள்கை என்ன என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். இதைக் கேட்பதற்குக் காரணம் உண்டு.

ஒரு மோசமான கல்லூரி நாகர்கோவில் பயோனியர் குமார சாமி கல்லூரியாகும். அந்தக் கல்லூரியில் ஆசிரியர்கள் இந்தப் பிரச்சினைகளை முன் வைத்து அந்த நிர்வாகம் எப்படி மோசமாக நடந்து கொண்டிருக்கின்றது என்பதை எல்லாம் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து ஒரு பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். உண்ணாவிரதம், ஆர்ப்பாட்டங்கள், அந்தத் தேதியில் ஹர்த்தால் போன்றவை எல்லாம் நடைபெற்றன. அந்தக் கூட்டத்திலே கலந்து கொள்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகு அதனுடைய நிர்வாகத்தை அரசு ஏற்றது. நான்கு வருஷங்களா என்று நினைக்கிறேன். என்னுடைய ஞாபகத்திலிருந்து நான் சொல்கிறேன். நான்கு வருஷங்கள் வரையில் அரசு அதனைத் தன்னுடைய நிர்வாகத்தில் வைத்து இருந்தது. பிறகு அந்த நிர்வாகத்தினை பழைய கல்லூரி அதிபர்களுக்கே கொடுத்துவிட்டார்கள். எந்த அதிகாரிகள் மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டப்பட்டதோ அந்தக் கல்லூரி அதிபர்களிடத்திலே முறைகேடாகப் பல நடவடிக்கை களில் யார் ஈடுபட்டார்களோ அந்தக் கல்லூரி அதிபர்களையே வரவழைத்து — பட்டாடை போடப்படவில்லை என்று கருது கிறேன். அது ஒன்றுதான் குறை — அந்தப் பொறுப்பு அவர் களிடத்திலே ஒப்படைக்கப்பட்டது. அதே முறையில்தான் இந்தப் பிரச்சினையிலும் நீங்கள் செய்யப் போகிறீர்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மீண்டும் இதனை அவர் களிடமே ஒப்படைக்கப் போகிறீர்களா என்று கேட்க விரும்பு கிறேன்.

ஆனால், என்னைப் பொறுத்தவரையிலும் நான் அரசிருக் கின்ற கட்சியினைப் பொறுத்தவரையிலும் [illegible] பொறுப்பில் இருப்பதை [illegible] பட்ட [illegible] தேவை. அதிலே [illegible] அளிக்க வேண்டும், அதிலே மாணவர்களுடைய பிரதிநிதித்துவம்



1985 மார்ச் 20] [திரு. வி. பி. சிந்தன்]

இருக்க வேண்டும். ஜனநாயக முறையிலே அது நடைபெறு வதற்கு அரசினுடைய கண்காணிப்பு இருக்க வேண்டும். அந்த முறையில் இது நடக்குமா? அல்லது மீண்டும் நீண்ட விவாதத் திற்குப் பிறகு ஓராண்டு, ஓராண்டு என்று இந்தச் சட்டத்தை நீட்டித்துக்கொண்டே போய் பிறகு அவர்களுடைய கையிலேயே ஒப்படைக்கப்படுமா? எனவே இத்தகைய ட்ரஸ்ட்கள் சம்பந்த மாக அரசினுடைய கொள்கை என்ன என்பதைத் தெளிவாக அறிவிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.

இந்தச் சட்டம் ஒரு ஆண்டு என்று நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால் உண்மையிலேயே இது சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்ற நல்ல எண்ணம் உங்களுக்கு இருந்திருந்தால் நான்காண்டுகளாக இப்படி நீட்டித்துக் கொண்டே போக வேண்டிய அவசியமே இருக்காது. நான்காண்டுகள் என்பது ஒரு நீண்டகாலமாகும். ஒரு நிறுவனத்தைத் திருத்தி அமைப்ப தற்கு இடைக்காலத்தில் எடுத்த நடவடிக்கைக்கு நான்காண்டுகள் தேவையா? இப்போது மீண்டும் ஒரு ஆண்டு. நிச்சயமாக நான் சொல்கிறேன். மீண்டும் மீண்டும் இத்தகைய எக்ஸ்டென் ஷன்தான் நீங்கள் கேட்பீர்கள். உங்கள் மன நிலையைப் புரிந்து கொண்ட காரணத்தால் அவ்வாறு சொல்கிறேன். ஜனநாயக முறைகளில் உங்களுக்கு நம்பிக்கையில்லாத காரணத்தால்தான் நீங்கள் இத்தகைய காரியத்தைச் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதுமட்டு மல்ல. இத்தகைய நிர்வாகங்களைப் பற்றிப் பொதுமக்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகின்ற முறையில் பொதுமக்களும் இதிலே எல்லாம் அக்கறை உள்ளவர்கள். எனவே அவர்களுடைய கருத்துக்களையும் அறிவதற்குரிய வாய்ப்பினைக் கொடுக்க நீங்கள் மறுக்கிறீர்கள். எனவே பொதுமக்களின் கருத்துக்களை அறிகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10-40)

• திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பச்சையப்பன் பொறுப்புக் கழக நிர்வாகத்தை மேலும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்கின்ற முறை யிலே அனுமதி கோரப்படுகிறது. இதிலே நான் அரசின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற நிர்வாகக் குழுவின் அறிக்கையைப்

பொதுவாகப் படித்துப் பார்க்கிறபொழுது பொறுப்பெடுத்துக்
கொண்டிருக்கிற அதிகாரிகள் தங்கள் நிர்வாக முன்னேற்றங்கள்
பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், கோடிக் கணக்கான
ரூபாய் பெறுமான சொத்து பயன்படுத்தப்பட்டு வருகிற அந்த
அறக்கட்டளையில் இவர்கள் கொடுக்கிற அறிக்கை எந்த
அளவிற்கு முழுமையானது, இவற்றில் எந்த அளவிற்கு தணிக்கை
செய்யப்பட்டிருக்கிறது என்கிற விவரங்களை எல்லாம் பரிசீலிப்ப
தற்கான வாய்ப்பு தற்பொழுது இல்லை. ஆனாலும், பொதுவான
முறையில் பச்சையப்பன் அறக்கட்டளையில் நடைபெற்ற
பல்வேறு ஊழல்களைக் கணக்கிற் கொண்டு, அரசு தலையிட்ட
தைப் பொறுத்தவரையிலும் எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள்
ஆட்சேபிக்கவில்லை; அதை இந்தத் துறையில் நாங்கள்
வரவேற்கவும் செய்கிறோம். ஆனால், குறிப்பாக இந்த நேரத்தில்
நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புவது என்னவென்றால்,
எந்த ஒரு துறையிலேயும் தனியார் நிர்வாகத்தில் அப்பட்டமான
முறையில் தங்கள் சுய லாபத்தைப் பாதுகாத்துக் கொள்கிற
நிலைமையை மட்டுமேதான் அவர்கள் மேற்கொள்கிறார்கள். அது
தான் பச்சையப்பன் அறக்கட்டளையிலும் நடைபெற்றிருக்கிறது.
அரசு இந்த அறக்கட்டளையை மேற்கொண்டு பொறுப்புக் குழு
போட்டிருக்கிறது. இந்த அனுபவத்திலிருந்துகூட இந்தத்
தமிழ்நாட்டின் அரசின் துறையில் இருக்கிற சில முக்கியமான
துறைகளை தனியாருக்குக் கொடுக்கலாமா என்று ஆலோசித்துக்
கொண்டிருக்கிற விஷயங்கள் இவற்றிலிருந்தாவது கைவிடப்பட
வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். குறிப்
பாக, இந்த அறிக்கையிலே பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்
டிருக்கிறது. மாணவர்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கிறார்கள்
என்பது ஒன்று. எந்த அடிப்படையில் மாணவர்கள் ஒழுங்க
மைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதுபற்றிய விவரம் அறிக்கையில்
இல்லை. பூடகமான முறையில் சொல்லப்பட்டிருக்கிறது.
அதேமாதிரி ஆசிரியர்களுக்குச் சம்பளம் முறைமையாக வழங்கப்
பட்டு வருகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆசிரியர்
களுக்கு எந்த அடிப்படையில் சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது
என்ற விவரமும் தெரிவிக்கப்படவில்லை. மேலும் ஹாங்காங்
போன்ற நாடுகளில் உள்ள ஷாங்காய் போன்ற வங்கிகளில் இந்த
அறக்கட்டளையினுடைய பணம் போடப்பட்டிருப்பதாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. ஏன் இந்தியாவில் இருக்கிற





நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளில் போடப்படவில்லை?
அப்படி, இங்கே போடப்படாததற்கான காரணம் என்ன
என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

மேலும் எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் பலரும்
குறிப்பிட்டதைப் போல, பொதுவாக அந்த கருத்தைச்
சேர்ந்தவர்கள், அல்லது இந்தக் கருத்தைச் சேர்ந்தவர்கள்கூட
அதில் பொறுப்புக்கு வரலாம். ஆனால், எந்த ஒன்றிலும்
ஜனநாயகப் பண்பு மேலோங்க வேண்டும், ஜனநாயக முறையில்
தான் நிர்வாகம் தேர்வு செய்யப்பட வேண்டும்; தேர்ந்தெடுக்கப்
படுகிற உரிமை வழங்கப்பட வேண்டும். நமக்கு நடைமுறையில்
சட்டரீதியான ஷரத்துக்கள் வழங்கியிருக்கிற சந்துபொந்துகளைப்
பயன்படுத்தி, மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுப்பதற்கு
இலகுவான, வலுவான பிடியாக அதைப் பயன்படுத்திக்
கொள்வது சரியான ஜனநாயக வழிமுறையல்ல என்பதை நான்
குறிப்பாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் இந்த அமைப்பைப் பொறுத்தவரையிலும் அதை
ஜனநாயகப்படுத்துகிற காலத்திலே, மாணவர்களின், ஆசிரியர்
களின் கருத்துக்கள் கூர்ந்து கேட்கப்பட வேண்டும்.
ஆசிரியர்கள் மாணவர்கள் கருத்துக்கள் இவற்றிலே இணைக்கப்
படுகிறபொழுதுதான் அது முழுமையடையும்.

பொதுப்படையான முறையில் முன்னேற்றம் இருக்கிறது
என்பதை ஒத்துக்கொண்டாலும், அங்கீகரித்தாலும்கூட ஒரு
தேர்வு செய்யப்பட்ட அமைப்பு அதை நிர்வகிக்க அமைக்கப்
பட்டிருக்குமானால், இதைக் காட்டிலும் முன்னேற்றத்தை
நிச்சயம் உருவாக்கி இருக்க முடியும். ஆனால், கடந்த
காலத்தில் இருந்த அறக்கட்டளையில் அராஜகமான செயல்பாடு
களால் அறக்கட்டளையின் நிறைய சொத்துக்களைக் கபளீகரம்
செய்யும் போக்கு தொடர்ந்து இருந்து கொண்டிருந்த அவல
நிலையிலேயிருந்து இன்றைய பொறுப்புக் குழு நிலைகளைப்
பொருத்திப் பார்த்து மட்டுமே அளவுகோல் போடுவது சரியான
அளவுகோல் அல்ல. கடந்த காலத்திலே அவர்கள் மிகப் பெரிய
அளவில் ஊழல் புரிந்திருக்கிறார்கள்; அவற்றிற்கு மாற்று
வேண்டுமென்ற நிலையில் அரசு தலையிட்டு ஒரு பொறுப்புக்
குழுவை நியமித்தது. ஆனால் கடந்த காலத்தில் அளவற்ற

[திரு. கு. சுப்பராயன்] [1985 மார்ச் 20

ஊழல் செய்யப்பட்டிருந்ததால், நிகழ்காலத்தில் இந்தப்
பொறுப்புக் குழுவினுடைய நிர்வாகத்தை பெரும் முன்னேற்றமாக
மதிப்பீடு செய்ய முடியாது. அது சரியாக மதிப்பீடு செய்யப்பட
வேண்டுமானால் ஒரு தேர்வு செய்யப்பட்ட ஜனநாயக,
அமைப்பினால்தான் அவற்றை செய்ய முடியும். நான்
குறிப்பாக சொல்ல விரும்புவது தொடர்ந்து ஒரு ஜனநாயக
அமைப்பை பற்றிய ஞானம் புதிய தலைமுறைக்கு இல்லாமல்
செய்துவிடுகிற போக்கு இந்த அரசின் நடவடிக்கையில்
தென்படுகிறது. தேர்வு செய்வது தள்ளிப் போடப்பட்டே
வருகிறது. நான் வேதனையோடு குறிப்பிட விரும்புவது எந்த
ஒரு ஜனநாயக தேர்தல் முறையும் இந்த மாநில
அரசாங்கத்தினுடைய ஆட்சியில் அகதி முகாம்களில் தொடர்ந்து
அடைபட்டுக் கிடக்கிறது. விடுதலையே இல்லாமல் அடைபட்டுக்
கிடக்கிறது. இந்த முறை சரிதானா? யார் தேர்வு
செய்யப்படுவார்கள் என்பதல்ல பிரச்சினை. தேர்வு செய்யப்
பட்டவர்கள் தான் நிர்வாகத்தை நடத்த வேண்டும். நாங்கள்
தேர்வு செய்யப்பட்டுவிட முடியாது. இந்தச் சட்ட முன்வடிவை
எதிர்த்து சொல்கிறவர்கள் தேர்வு செய்யப்பட்டு விட முடியாது
என்றால் தேர்தலை வைப்பதற்கு என்ன கஷ்டம்? எனவே,
ஒரு ஆண்டு காலத்திற்குப் பின்னாலே மீண்டும் கால நீட்டிப்பு
கூடாது என்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக
தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே வாடகை பற்றியெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
அதிகபட்ச வருமானம் வாடகை உயர்த்தப்பட்டதால் தான்
வந்திருக்கிறது என்பது முக்கிய அம்சமாக குறிப்பிடப்
பட்டிருக்கிறது. இந்த வாடகை நிர்ணயிக்கப்படுவதிலே, விருப்பு
வெறுப்பு ஏற்பட்டு விடாதா? இங்கே மாண்புமிகு ரகுமான்கான்
அவர்கள் கூட சில கருத்துக்களை இதுபற்றி குறிப்பிட்டார்கள்.
ஆகவே யார் என்பது அல்ல: சம்பந்தப்பட்ட அதிகாரிகள்,
அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார்கள் என்று சொல்லவில்லை.
ஆனால் இந்த நாட்டிலே நடைபெறுகிற உண்மை என்ன என்றால்
அதிகாரத்தில் இருப்பவர்களை, அண்டி நிற்கிறவர்களை
கண்டாலே பலர் அஞ்சுகிறார்கள்.



1985 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்ட
அந்த நிகழ்வில், நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்தப்
பொறுப்புக் குழு அதிகாரத்தை எடுத்துக் கொண்டதற்குப் பிறகு
வாடகை உயர்த்தப்பட்டிருக்கிறது. அதிகாரத்தை தவறாக
பயன்படுத்தவில்லை என்பதைத்தான் நான் படித்துக்
காட்டினேன்.

**திரு. கு. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதற்கு நன்றி. ஆகவே
இத்தகைய பிரச்னைகள் ஏற்படுவதைத் தடுப்பதற்கு ஒரே வழி
தேர்வு செய்வது தான். ஆகவே நான் இந்த மாநில அரசைக்
கேட்டுக் கொள்வது இந்த ஒரு முறையோடு இதை நிறுத்தி
வைத்து, அடுத்து வருகிறபோது தேர்வு மூலம் புதிய அறக்
கட்டளை உருவாவதற்கான முயற்சியை மேற்கொள்ள
வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் கே. சௌரிராஜன்:** துணைத் தலைவர் அவர்களே,
இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற பச்சையப்பன் அறக்கட்டளையின்
நிர்வாக அறிக்கையை நேற்று படித்துப் பார்த்தேன். அதில்
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தர
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால்
ஒரு பொறுப்புக் கழகத்தை நடத்துகிற நேரத்தில் அது ஒரு
ட்ரஸ்ட் பிராப்பர்ட்டியாக இருப்பதால் பேலன்ஸ்ஷீட் கொடுப்பது
தான் முறையாக இருக்கும். ஆனால் இப்போது பேலன்ஸ் ஷீட்
கொடுக்காமல் இருக்கிறார்கள். நான் தாமதமாக வந்ததற்கு
மன்னிக்க வேண்டும். அந்த பேலன்ஸ் ஷீட் ஒன்றை
கொடுப்பார்களா என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர்
அவர்களே, இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளை மசோதாவின்
மீது உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச்
சொன்னார்கள். அதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளை என்பது பச்சையப்ப
முதலியார் எஸ்டேட் சம்பந்தப்பட்டது மாத்திரம் அல்ல.
அதைத் தவிர திரு. பொன்னம்பலம் பிள்ளை, விசாலாட்சி
அம்மாள் எஸ்டேட், திரு. கோவிந்த நாயக்கர் எஸ்டேட்,

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

திரு. செங்கல்வராய நாயக்கர் எஸ்டேட், ஓரத்தி ரங்கநாயகி அம்மாள் எஸ்டேட், ஸ்ரீ சண்முகசுந்தர முதலியார் எஸ்டேட், ராஜாத்தி அம்மாள் எஸ்டேட், தென்னங்குடி எஸ்டேட் என்று இப்படி ஏறக்குறைய 25 எஸ்டேட்டுகள் இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளையின் நிர்வாகத்தின் கீழ் வருகிறது. அவைகள் பெரும்பாலும் பச்சையப்பன் எஸ்டேட்டைப் பொறுத்தவரையில் மூன்று கல்லூரிகள், மூன்று மேல்நிலைப் பள்ளிகள், ஒரு உயர்நிலைப் பள்ளி, ஒரு ஆதாரப் பள்ளி என்று இருக்கிறது. மற்ற எஸ்டேட்டுகளும் பெரும்பாலும் கல்வி சம்பந்தப்பட்டதாக அந்த அறக்கட்டளைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த அறக்கட்டளை சார்பாக நடந்து வருகிற இந்தக் கல்வி நிறுவனங்கள் நடத்துவது தான் இந்த அறக்கட்டளையின் கீழ் இருக்கிற மிக முக்கியத்துவம் வாய்ந்த பொறுப்புகளாகும். அறக் கட்டளையிலிருந்து வருகிற வருமானத்தைக் கொண்டு இந்தக் கல்வி நிறுவனங்கள் முறையாக, சரியாக நடத்த வேண்டுமென்பது தான் இந்த அறக் கட்டளைக்கு இருக்கிற முக்கியமான கடமை. இப்போது இங்கே பேசப்பட்ட பல்வேறு கருத்துக்கள், குறிப்பாக எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்கள் பேசிய பல்வேறு கருத்துக்கள், அவர்கள் பேசுகிறபோது ஏதோ அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த அறக்கட்டளையை எடுத்துக் கொள்ளலாம் என்று தேடி தேடிப் பார்த்து கடைசியாக இந்தப் பச்சையப்பன் அறக்கட்டளையை எடுத்துக்கொள்ளலாம் என்று முடிவிற்கு வந்ததாக ஒரு உணர்வு பொதுமக்களுக்கு வரக்கூடுமென்று நான் அஞ்சுகிறேன். ஆகவே அப்படி நாங்கள் இந்த அறக்கட்டளையை

(முற்பகல் 10-50)

எடுக்கவில்லை. பொதுவாக, இந்த அறக்கட்டளையை எடுக்க வேண்டிய அவசியம் என் ஏற்பட்டதென்றால், பச்சையப்பன் கல்லூரி சரியாக நடக்கவில்லை. கந்தசாமி நாயுடு கல்லூரிக்கு வீட்டுவசதி வாரியத்திலிருந்து வாங்கப்பட்ட நிலத்திற்கு அவர்கள் கட்ட வேண்டிய தவணைத் தொகையைக் கட்டாததால் அங்கேயிருந்து காலி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பல்கலைக் கழகத்திற்குக் கட்ட வேண்டிய 'என்டோமென்ட்' தொகையைக் கட்டாத காரணத்தால் அவர்கள் நடத்திக் கொண்டு வந்த பல்வேறு பாடப் பிரிவுகளுக்கு வழங்கப்பட்ட அனுமதியைத்



1985 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

திரும்பப் பெறும் சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் கந்தசாமி நாயுடு கல்லூரியை நடத்த முடியாதோ என்ற நிலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்ட பிறகுதான் அரசு அதிலே தலையிட்டதே தவிர, நாங்களாகத் தலையிடவில்லை; நிர்வாகத்தை எடுக்கவில்லை.

ஆசிரியர்களும் மாணவர்களும் போராட்டம் நடத்தி, அதன் பிறகு எடுக்கப்பட்ட இந்த கல்லூரி நிர்வாகம் தொடர்ந்து அரசின் கையிலே இருக்க வேண்டுமென்றுதான் ஆசிரியர்களும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பழையபடி அதேமாதிரியான ஒரு நிர்வாகக் குழுவிலே இந்த நிர்வாகம் போய்ச் சேரக் கூடாது, சேராமல் இருப்பது நல்லது என்று ஆசிரியர்களும் மாணவர்களும் கருத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை இப்போது தெரிவிக்க விரும்புகிறேன். பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளை சம்பந்தமான இந்த விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிற இன்று பச்சையப்பன் அவர்கள் பிறந்த தினம் என்று என்னிடம் குறிப்பு தந்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்த பிறந்தநாள் தினத்தில் அந்த அறக்கட்டளையை செம்மையாக, சீராக நடத்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொள்ளலாம்.

இப்போது இருக்கிற ஒரு தீவிர போராட்டத்தின் அடிப் படையிலேதான் நாம் அந்த நிர்வாகத்தை எடுத்திருக்கிறோம். நிர்வாகத்தை எடுத்ததற்குப் பிறகு அங்கே சொல்லப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்கு முயற்சிகள் செய்கிறோம். அப்படி என்றால் அரசே அந்த நிர்வாகத்தை நிரந்தரமாக வைத்துக்கொள்ளப்போகிறதா அல்லது வேறு என்ன செய்யப் போகிறது? ஜனநாயக அடிப்படையிலே ஏதாவது மாற்றத்தைக் காணமுடியுமா என்ற கேள்விகள் எழுவது நியாயம். அரசைப் பொறுத்தவரையில் நாங்கள் நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இல்லை. நிர்வாகத்தைச் சீர்திருத்தி, அதை யாரிடம் தரவேண்டுமோ அவர்களிடம் தர அரசு தயாராக இருக்கிறது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

ஆனால், உயர்நீதி மன்றத்திலிருந்து தரப்பட்ட அந்த பழைய ஸ்கீம் கூடாது என்று சொல்லி, அதிலே தவறு நடைபெற மார்க்கம் இருக்கிறது, அதனால் அதை மாற்றியமைக்க வேண்டுமென்று வழக்கு மன்றத்திலே கேட்டிருக்கிறோம். அந்த வழக்கின் முடிவில், எப்படிப்பட்ட முடிவைத் தருகிறார்களோ அந்த அடிப்படையில், எந்த அடிப்படையில் நிர்வாகம் நடைபெற வேண்டுமென்று உயர்நீதிமன்றம் சொல்கிறதோ அந்த அடிப்படையில் நாம் புதிய திட்டத்தை அமுல்நடத்த இருக்கிறோம். அப்போது அரசு தன்னுடைய பொறுப்பிலிருந்து நிச்சயமாக விலகிக்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் அரசின் கொள்கை என்ன என்று கேட்டார்கள். இப்போது அவர்களுக்கு இது தெளிவாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நாகர்கோவில் கல்லூரி பற்றிச் சொன்னார்கள். அங்கே ஆசிரியர்கள் போராட்டம் நடைபெற்றதை ஒட்டி, நிர்வாகப் பொறுப்பை அரசு மேற்கொண்டது. ஆனால் அவர்கள் உயர் நீதிமன்றத்தில் வாதாடி, திரும்பப்பெற்றுக்கொண்டார்களே தவிர நாமாகத் தரவில்லை. நாமே வைத்துக்கொண்டாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறு என்றுதான் சொல்லார்கள்.

நாம் குறைந்த காலத்திற்கு நிர்வாகத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றுதான் சட்டம் இருக்கிறது. நிர்வாகத்தை எடுத்துக்கொண்ட பிறகு அதை சீர் செய்து அவர்கள் கேட்கிற போது கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் 'பிரைவேட் காலேஜஸ் ஆக்ட்' இருக்கிறது. ஆகையால் நிரந்தர மாக நாம் வைத்துக்கொள்ள முடியாது.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய பச்சையப்பன் கல்லூரி அறக்கட்டளை நல்ல முறையில் இயங்காததால், நிர்வாகக் குழுவில் தவறு நடைபெற்றது என்பதால் அரசாங்கம் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது, நிர்வாகத்தைச் சீர் செய்து, நீதிமன்றத் தீர்ப்பின்படி நிர்வாகத்தை மீண்டும் அந்த நிர்வாகக் குழுவிடம் ஒப்படைப் பதாகச் சொல்கிறார்கள். அப்படியானால் பழையபடி அவர்கள் தவறு செய்தால் மீண்டும் எடுத்துக்கொள்ளப்போகிறீர்களா?



1985 மார்ச் 20]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இப்போது மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் களுடைய மிக முக்கியமான கோரிக்கை நிர்வாகத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்பது. அதைத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவிடம் தர வேண்டும். அப்படி ஒரு குழுவை அமைக்கும்போது —பழைய குழு எப்படி இருக்கிறது என்றால், பழைய இந்து மாணவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 3 பேர்; சென்னை மாநகராட்சி இந்து கவுன்சிலர்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்கள் 2 பேர்; சென்னைப் பல்கலைக்கழக இந்து செனட் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் 2 பேர்; பச்சையப்பன் கல்லூரி கவுன்சில் உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் 1: மேற்கண்ட தேர்ந்தெடுக்கப் பட்ட உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் 1 என்று இருக்கிறது.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக வாக்காளர்கள் பட்டியல் அங்கே தயாரிக்கப்பட வேண்டும் அல்லவா? அந்த எலக்டரேட் பிரப்பரேசன் நடை பெற்றிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்த முறையை மாற்ற வேண்டும் என்பதுதான் அரசினுடைய இந்தப் பொறுப்புக் குழுவினுடைய நோக்கம். வேறு ஒரு முறையிலே இதனை அமைத்து, ஏன் இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைக் கூட பிரதிநிதிகளாகப் போட்டுச் செய்யலாம். அல்லது மேலவை உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் அவர்கள் சொன்னதைப்போல, ஆசிரியர்களுக்கும் பிரதிநிதித்துவம் தரலாம், மாணவர்களுக்கும் தரலாம். ஆகவே இதைப்பற்றி, இந்த ஸ்கீமைப் பற்றி விவாதம் நடக்கிறபோது, உயர்நீதி மன்றத்தில் கருத்துக்களைத் தெரிவிக்கலாம்.

Thiru A. RAHMANKHAN: Mr. Deputy Speaker, Sir, whether this point has been referred in the case which is pending before the High Court?

The Hon. Thiru C. ARANGANAYAGAM: Not yet.

[1985 மார்ச் 20

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அப்படியானால், தேர்தலை நடத்துகின்ற எண்ணம் உங்களுக்கு உண்மையிலே இருக்குமானால், அரசாங்க அதிகாரிகளைக் கொண்ட அந்தக் குழுவை கலைத்துவிட்டு, ஒரு சிறப்பான நிர்வாகம் செய்யக்கூடிய அறக்கட்டளைக்கு அறங்காவலர்கள் அடங்கிய குழுவைப் போடவேண்டும். உங்களுக்குத் தேர்தல் நடத்தவேண்டும் என்ற எண்ணம் இருக்குமானால் இதுவரைக்கும் அந்த முயற்சிகளை எடுக்காமல் இருந்ததற்கான மர்மம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே எந்தவிதமான மர்மமும் இல்லை. அந்த ஸ்கீம் போட வேண்டும் என்ற ஒரு வழக்கு இப்போது உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது. அதன் முடிவிலே அந்த ஸ்கீம் தயாராகி, வெளிவரும். இது உயர்நீதி மன்றத்தினுடைய உத்தரவாகும்.

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா: மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, பழைய அறக்கட்டளையினுடைய விதி முறைகளை எந்த முறையிலே மாற்றவேண்டும் என்று அதிகாரிகள் குழு விரும்புகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய பேச்சிலே ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். அதை யெல்லாம் கவனத்தில் கொண்டு, அந்தப் பொறுப்புக் குழு அதைத் தயாரிக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இப்போது நீதிமன்றத்திலே இருக்கக்கூடிய அந்த ஸ்கீம் தேர்தல் சம்பந்தமாக என்ன சொல்லப்பட்டிருக்கிறது? அல்லது வேறு என்ன திருத்தங்கள் அந்த ஸ்கீமிலே இருக்கிறது என்று சொன்னால் நல்லது.



1985 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பழைய முறைக்கு மாறாக அரசு அதிகாரிகளும், தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும் கொண்ட ஒரு குழுவை அமைக்கலாம் என்பது பொதுவாக இருந்து வருகிற ஒரு கருத்து. இப்போது ஆசிரியர்கள்—மாணவர்கள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் சொன்னார்கள். அதைப்பற்றி நாம் நிச்சயமாக பரிசீலிப்போம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் முழுமையாக பதில் சொன்ன பிறகு, உறுப்பினர்கள், பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனோ, அல்லது பாயின்ட் ஆப் ஆர்டரோ கொண்டு வரலாம். இதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, உறுப்பினர்கள், அமைச்சர் பேசும்போது குறுக்கிட வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்து அந்த விளக்கத்தின் மூலமாக உறுப்பினர்கள் மட்டு மல்லாமல், வெளியிலே உள்ள அனைத்து மக்களுக்கும் பயன்படு கின்ற வகையிலே, இந்த விவாதம் நடைபெறுகிறதே தவிர, இதிலே எந்தவிதமான அரசியல் உள்நோக்கமோ, அல்லது தனிப் பட்ட முறையிலான கோபதாபங்களோ கிடையாது. தெரிந்து கொள்ளவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த உரிமையும் நோக்கத்தையும் நான் மறுக்கவில்லை. ஆனால் அமைச்சர் அவர்கள் முழுமையாக பதில் சொன்ன பிறகு உறுப்பினர்கள் கேட்டால் நல்லது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் வெளியிலே இருப்பவர்களுக்கும் அது பயன்படும் என்று சொன்னார்கள். இன்றைக்கு பொறுப்புக் குழு எடுத்துக் கொண்டதற்குப் பிறகு என்ன செய்திருக்கிறார்கள் என்பதைப் பற்றி தெரிந்துகொள்கிற ஒரு ஆர்வத்தோடுதான் அவர்கள் இருப்பார்கள் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னாலே பல தவறுகள் விளைந்திருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, அதன் மூலமாக கல்லூரி மூடப்படக்கூடிய நிலைமையில் ஆசிரியர்களும்,

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

மாணவர்களும் போராட்டம் நடத்தி, அதற்குப் பிறகு, அரசு
அதிலே தலையிட்டு, அந்த நிர்வாகத்தை எடுத்துக்கொண்ட
நிலையிலேதான், இப்போது 4 ஆண்டுகளாக இந்த அரசால்
அமைக்கப்பட்ட பொறுப்புக் குழுவின் கையில் இருந்து வருகிறது.
அந்தப் பொறுப்புக் குழுவிலே, சட்டத் துறையிலேயிருந்து
ஒருவரும், கல்வித்துறையிலே இருந்து ஒருவரும், நிதித்துறையிலே
யிருந்து ஒருவரும் என்கிற முறையிலே அதிகாரிகளைப் போட்டு,
அது சிறந்த முறையிலே நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச்
செய்து, அவர்கள் பல்வேறு காரியங்களைச் செய்திருக்கிறார்கள்.
அதிலே அரசுக் குழு பதவியேற்ற பின்பு, பல்கலைக் கழக
பிணையத் தொகை பாக்கியிருந்தது ரூ. 10.54 லட்சம். அதைக்
கட்டி முடித்து மேலும் 3 லட்ச ரூபாய் செலவில் புதிய வகுப்புகள்
கட்டப்பட இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

(முற்பகல் 11-00)

பழைய நிர்வாகக் குழுவின் கடன் சுமை ரூ. 10.95 லட்சமாக
இருந்ததை திருப்பிக் கொடுத்துள்ளது, வட்டியுடன் சேர்த்து.
கல்விக் கூடங்கள் மற்றும் ஆய்வுக் கூடங்கள் மேம்பாடு, புஸ்த
கங்கள் மற்றும் கட்டுமானப் பணிகள் போன்றவற்றிற்காக அரசுக்
குழு 4 ஆண்டுகளில் இதுவரை செலவு செய்தத் தொகை ரூ. 35.82
லட்சம். தயவுசெய்து இதில் நீங்கள் கவனிக்க வேண்டிய ஒன்று.
ஆசிரியர்களுக்கு சம்பளம் தரப் பணம் இல்லாமல், பல்கலைக் கழக
மானியக் குழு வேறு ஒரு காரியத்திற்காகத் தந்த பணத்தை
திருப்பி, ஆசிரியர்களுக்கு சம்பளத்தை தந்து, அதனாலேயே
பல்கலைக் கழக மானியக் குழுவினால் பிளாக் லிஸ்ட் செய்யப்பட்ட
கல்லூரி பச்சையப்பன் கல்லூரி. அந்த நிலையிலே அரசினுடைய
பொறுப்புக் குழு அதன் நிர்வாகத்தை எடுத்துக் கொண்டது.
எடுத்து இவ்வளவு கடன்களையும் கட்டியிருக்கிறது என்பதை
தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கவனத்திலே வைத்துக்
கொள்ள வேண்டும்.

பழைய நிர்வாகக் குழு அண்ணா நகரில் கந்தசாமி நாயுடு
ஆடவர் கல்லூரிக்கு நிலத்தை கையகப்படுத்தி, எந்த நடவடிக்கை
யையும் 11 வருடங்களாக எடுக்கவில்லை. கல்லூரியை மூடிவிடும்
படியான மோசமான நிலைக்கு வந்தது. பக்கத்திலே உள்ள
தனியார் அறக்கட்டளையைச் சார்ந்த நிலத்தில் பாதியை வாங்கி



1985 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

வீட்டு வசதி வாரியத்திடம் பணம் கட்டி விட்டார்கள். பிறகு
அரசு குழு தான், வீட்டு வசதி வாரியச் செயலரிடமும், பல்வேறு
அமைச்சர்களிடமும் பேச்சு வார்த்தைகளை நடத்தி கல்லூரிக்குச்
சொந்தமான 6 ஏக்கர் நிலப்பரப்பு மனையை 7,500 ரூபாய்
விலைக்கு 1983-ல் விற்கும்படி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.
அதற்காக வீட்டு வசதி வாரியத்திற்கு 8.99 லட்சம் அரசு குழு
கட்டியுள்ளது. மீதி 10.46 லட்சத்தை 13 சதவீத வட்டியுடன்
10 ஆண்டு தவணைகளில் கட்டவும் உத்தரவு வழங்கப்பட்
டுள்ளது.

கட்டிடங்களின் வருமானம் அரசுக் குழு பதவி ஏற்ற போது
மிகவும் குறைவாக இருந்தது. வாடகை மிகவும் குறைந்த
நிலையில் இருந்ததை பேச்சு வார்த்தைகள் மூலம் அரசுக் குழு
தற்போது கணிசமாக உயர்த்தியுள்ளது. முன்பு வாடகை
வருமானம் 20 லட்சமாக இருந்தது தற்போது 34 லட்சமாக
உயர்ந்துள்ளது. வீட்டு வாடகை குடியிருப்பவர்களுக்கென்று
பாதுகாப்புச் சட்டம் இருக்கிற இந்தச் சூழ்நிலையில் நாம் இந்த
அளவுக்கு உயர்த்தி வருமானத்தை பெருக்கியிருக்கிறோம்.

கல்லூரிகள் பள்ளி நிறுவனங்கள் சரி செய்யப்பட்டு மாணவர்
களிடையே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் உயர்த்தியதுடன்
புதிய வகுப்புகளும் தொடங்கப்பட்டது. பச்சையப்பன் ஆடவர்,
மகளிர் கல்லூரிகளிலும், காஞ்சிபுரம் செல்லம்மாள் கல்லூரியிலும்,
சென்னை கந்தசாமி நாயுடு கல்லூரியிலும் பி.காம். வகுப்புகள்
ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடலூர் மகளிர் கல்லூரியில் எம்.ஏ.
வரலாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் தேர்வுகள்
நடந்தபோது மாணவர்களிடையே நிலவியிருந்த ஒழுங்கின்மை
களைக் களைந்து தேர்வுகளை சிறப்புற நடத்திய பெருமைகளை
செய்தித் தாள்களே இந்த ஆண்டு பாராட்டியது.

சென்னை அண்ணா சாலையில் அமைந்திருக்கும் பல மாடிக்
கட்டிடம் கட்ட முந்தைய நிர்வாகம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
யிடம் வாங்கிய கடன் தொகை 52 லட்சமாகும். அதில் 1980
டிசம்பர் நிலவரப்படி நிலுவையாக இருந்தத் தொகை 33.7 லட்ச
மாகும். அதில் அரசு நிர்வாகக் குழு பணியை மேற்கொண்டதில்
இருந்து ஜூன் 1984 வரை வட்டியோடு மூலதனத்தையும் சேர்த்து
68.41 லட்சம் கடன் திருப்பிக் கொடுக்கப்பட்டது. அக்கடன்
சுமையை முழுமையாக செலுத்துவதற்குரிய காலக் கெடு டிசம்பர்

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

1984-ல் முற்றுப்பெறும். எனினும் நிர்வாகக் குழுவின் முயற்சிகளினால், வாடகை போன்றவற்றை உயர்த்தியதன் மூலம் வருவாயை கணிசமான அளவுக்கு அதிகரித்து, அக்கடனை எதிர்பார்த்த தேதிக்கு ஆறு மாதங்கள் முன்னதாகவே 1984 ஜூன் மாதத்திலேயே முழுமையாகச் செலுத்தி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தியுள்ளது.

பச்சையப்பன் கல்லூரிக்கு சென்னை யு.ஜி.சி. கிராண்ட் 1 லட்சத்திற்கும் மேல் வழங்கப்பட்ட நிலையில் முறையாகச் செலுத்தப் படாததால் பச்சையப்பன் கல்லூரியையே 'பிளாக் லிஸ்ட்' பண்ணக் கூடிய சூழ்நிலை இருந்தது. அரசு குழு இதற்காக பணத்தைக் கட்டி மேலும் பல்கலைக் கழக மானியக் குழுவிடமிருந்து 6-வது திட்டத்திற்கான மானியத்தை பெற்று வருகிறது.

கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் கல்லூரி இயக்குநர் பிறப்பித்த விதிகளை பின்பற்றி, எவ்வித முறைகேடுகளும் நடைபெறாமல் நடவடிக்கை எடுத்துள்ளது. இப்பொழுது கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதிலே தவறுகள் ஏற்படுகிற காரணத்தால் தான் கல்லூரிகளிலே ஒழுங்கின்மை நிலவுவதற்கு காரணம் உண்டாகிறது. அதுதான் ஒழுங்கின்மைக்கு முக்கியக் காரணமாக இருந்துவந்தது. இப்பொழுது அரசு கல்லூரிகளிலே நாம் ஒரு முறையை வைத்திருக்கிறோம். இப்பொழுது விகிதாச்சார அடிப்படையிலும் மார்க்கின் அடிப்படையிலும், முறையாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்கிற வழிமுறைகளை நாம் வகுத்து வந்திருக்கிற காரணத்தால் அரசுக் கலைக் கல்லூரிகளில் அந்த முறை பின்பற்றப்பட்டு வருகிறது, எந்த விதமான குறுக்கீடு இல்லாமல் நடைபெற்று வருகிறது. இப்பொழுது இதே முறையில் பச்சையப்பன் கல்லூரிகளிலும் பின்பற்றப்படுவதால் சிபாரிசுக்கு இடம் இல்லாமல் நாம் செய்திருக்கிறோம் என்பதை இங்கே நான் குறிப்பாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, மிகவும் முக்கியமான ஒன்று. மேனேஜ்மெண்ட் கோட்டா என்று தனிப்பட்ட கல்லூரிகளுக்கு தனியாக இடம் இருக்கிறது. அது இந்த பொறுப்புக் குழுவிற்கும் இருக்கிறது. அதை இந்தப் பொறுப்புக் குழு, அதிலே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கும், கடைநிலை ஊழியர்களுக்கும் தருவதன் மூலமாக



1985 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

நிர்வாகத்தை மிகச் செம்மையாக நடத்திக் கொண்டு வருகிறார்கள். ஆசிரியர்களுக்கு பல ஆண்டுகளாக கொடுக்கப்படாதிருந்த ஊதிய உயர்வு தொகை அனைத்தும் 1—4—1980-க்கு முன் அரசு குழு நிர்வாக நிதியிலிருந்து கொடுக்கப்பட்டுள்ளது. சி.என். பாலிடெக்னிக்கில் மாணவர்கள் மற்றும் தொழிற் கல்வி மேம்பாட்டிற்கு 1983-84 ஆம் ஆண்டில் ரூ. 75,000 மூலதன செலவு செய்துள்ளது. இந்தப் பணிகள் அல்லாத இறை பணிகளுக்கும், ஒதுக்கப்பட்ட அறக்கட்டளை பணிகளுக்கும் அவ்வப்போது பணத்தை செலவு செய்து வருகிறது. இந்த ஆண்டு சிதம்பரம் புனித நடராஜர் ஆலயத்தின் தேர் சக்கரங்கள் ரூ. 1 இலட்சத்தில் புதுப்பிக்கப்பட்டு, புதுச் சக்கரங்களுடன் தேர் பவனி வரப்பட்டது.

அறக்கட்டளை ஊழியர்களுக்கு முதன் முறையாக ஓய்வு கால வயது அரசு ஊழியர்களைப்போல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பணிக்கொடை திட்டம் மற்றும் ஈட்டிய விடுப்பு, மருத்துவ விடுப்பு, அரசு ஊழியர்களைப் போல் வழங்கப்பட்டது. ஊதிய உயர்வுடன் கூடிய பணி மேம்பாடு திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. பணி நேரத்தில் இறந்து விட்டால் இறந்துவிட்ட ஊழியர்களின் குடும்ப நலத்தில் இந்த அரசு குழு தனி கவனம் செலுத்தி வருகிறது. இந்தக் குழு கடலூர் கல்லூரியை போல் அண்ணா நகர் கந்தசாமி ஆடவர் கல்லூரியில் ரூ. 6.5 இலட்சம் செலவில் கட்டிடம் கட்ட ஆரம்பித்து இன்னும் இரண்டு திங்களில் முடியும் தருவாயில் உள்ளது. பல அறக்கட்டளை கட்டிடங்களில் கணிசமான தொகை செலவழிக்கப்பட்டு பழுது பார்க்கப்பட்டு வருகிறது. அரசு குழு வாரம் ஒரு முறை கூடி நிர்வாகத்தை கவனித்து வருகிறது. 180 கூட்டங்கள் கூட்டப்பட்டு இருக்கின்றன.

ஹாங்காங் ஷாங்கியாங் வங்கியில் ரூ. 2.08 இலட்சம் முதலீடு செய்திருக்கிறது. முந்தைய நிர்வாகக் குழு இதே வங்கியில் முதலீடு செய்திருந்தது. சைட் ஷேர்ஸ் அறக்கட்டளைக்கு ஒதுக்க வேண்டும். இதன் நிமித்தம் இந்த முதலீடு செய்யப்பட்டது. இது லாபகரமான முதலீடு. ஆண்டுக்கு ரூ. 1 இலட்சம் டிவிடெண்ட் இதனால் கிடைக்கின்றது. அக்கவுண்ட்ஸ் ஆடிட் செய்யப்படவில்லை என்று சொல்வது தவறு. இந்தக் குழு வந்த பிறகு தான் தணிக்கை செய்யப்படாது இருந்த எட்டு

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

ஆண்டுக் கணக்குகள் சரிசெய்யப்பட்டு, சார்ட்டட் அக்கௌண்ட் டண்ட் மூலம் தணிக்கை செய்யப்பட்டு பச்சையப்பன் நினைவு நாள்—கடந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது 1981-82 வரை ஆகும். 6 வருஷ கணக்கை சரிசெய்யப்பட்டதோடு, இந்த ஆண்டு 1982-83 வரை தணிக்கை செய்யப்பட்டு — இன்று பச்சையப்பன் கல்லூரியிலே கொண்டாடப்பட இருக்கிறது. ஆகவே இந்தக் குழு 1982-83 வரை கணக்குகளை தணிக்கை செய்து, பச்சையப்பன் நினைவு நாளாக இன்று அது வைக்கப்படும். அரசு குழு பணியை மேற்கொண்ட பிறகு, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் ஆசிரியர்களை நியமனம் செய்து, வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்த நபர்களின் பெயர்களைப் பெற்று தகுந்த நபர்களை குழு கூட்டங்கள் மூலமாக தேர்ந்தெடுத்து வருகிறது. மேலும் வகுப்பு சுழற்சி முறையையும் முறையாக பின்பற்றி வருகிறது. இந்தக் குழு வருவதற்கு முன்னால், பொறுப்பு ஏற்றுக்கொள்வதற்கு முன்னால், பணி இடங்கள் இல்லாமலேயே கூட பல பேரை வேலையில் சேர்த்து இருக்கிறார்கள். அதுபோன்ற பிரச்னைக்கு இப்போது இடம் இல்லாமல் நாம் செய்திருக்கிறோம்.

மாகஸைன் தயாரிப்பதும் மற்றும் வெளியிடுவதும் கல்லூரி முதல்வர் அவர்களால் செயல்படுத்தப்படுவது. பச்சையப்பன் கல்லூரி மாணவர்களுக்கு மாகஸைனுக்காக 1983-84 ஆம் ஆண்டில் கல்லூரி அலுவலகம் வசூலித்தது. மாணவத் தலைவர், செயலாளர் ஆகியோருடைய புகைப்படங்கள் அவர்களுக்கு கிடைப்பதற்கு காலதாமதமானது. புகைப்படங்கள் பெறப்பட்டு மாகஸைன் அச்சிடப்பெற்று இருக்கின்றன. ஒரு வார காலத்திற்குள் இதனை கல்லூரி வெளியிடும்.

மதிப்பிற்குரிய நல்வாழ்வுத் துறை அமைச்சரிடம் பி.ஏ. வாக இருந்த திரு. சூரியநாராயணனைப் பற்றி சொன்னார்கள். நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ. 1,400 பணத்தை திரும்ப கட்டி விட்டார்கள். ஆகவே நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்வது தவறு.

மேலும் மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பல விஷயங்கள் சொன்னார்கள்.



1985 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

மாண்புமிகு ஆற்காடு வீராசாமி ஏதோ ஒரு வழக்கை
போட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்த வழக்கு தீர்ப்பில்
இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. அதிலே எதிர் மனு இந்த
குழுவால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அது விசாரணைக்கு
எடுக்கப்பட்டு உயர்நீதி மன்ற தீர்ப்பை பொறுத்து, மற்ற
விஷயங்களைப் பற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

பி. கே. வித்யாசாகர முதலியார் எஸ்டேட்டைச் சேர்ந்த,
சென்னை பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை நம்பர் 117 ஆம்
வீட்டில் முருகேச நாடார் என்பவர் சட்டவிரோதமாக
ஆக்கிரமித்துள்ளதாகவும் அவரை அப்புறப்படுத்த ஏற்கனவே
எடுக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கையை நிர்வாகக் குழு
தொடராமல் விட்டுவிட்டது என்பதும் உண்மைக்கு புறம்பான
செய்தியாகும். மேற்படி எஸ்டேட் 5—4—1974-ல் எடுக்கப்பட்டது
அதற்கு முன்பே திரு. முருகேசன் என்பவர் மேற்படி வீட்டில்
குடியிருந்து வருகிறார்.

(முற்பகல் 11-10)

ஆனால் அவர் வாடகை எதும் தருவதில்லை. 16—1—1975-ல்
வக்கீல் நோட்டீஸ் அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தும், அவரை
அப்புறப்படுத்த, முந்தைய அறங்காவல் குழு 1980 வரை தக்க
நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிட்டது.

மேற்படி நபருக்கு சட்டபூர்வ தாக்கீதுகள் 1—6—193
6—6—1981 மற்றும் 1—6—1982 ஆகிய தேதிகளில் அனுப்ப
பட்டுள்ளன

1982 மார்ச் மாதத்தில் திரு. முருகேசன் அவர்கள் அற
கட்டளையின் அனுமதியின்றி ஓர் ஓடு கட்டிடம் எழுப்பினா
7—4—1982 இல் இதைப்பற்றி சென்னை மாநகர் ஆணை
அவர்களுக்குத் தகுந்த நடவடிக்கை எடுக்க முறையிட
பட்டுள்ளது. மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்
வருகிறது.

அப்புக்குட்டி முதலியார் எனும் நபர் ரூ. 30 இலட்சத்திற்கும் மேற்பட்ட தன் சொத்தை பச்சையப்பன் அறநிலையத்திற்கு வைத்துள்ளதாகவும், அரசுக் குழு பொறுப்பேற்ற பிறகு உயில் எழுதி வைத்தவரின் மனைவி சொத்தை விற்றுவிட்டதாகவும் இதை திரும்ப பெற அரசுக் குழு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் கூறப்படுவது சரியில்லை.

சொத்தின் மதிப்பை உயர்த்தி சொல்லப்பட்டிருக்கிறது. காலம் சென்ற அப்புக்குட்டி முதலியார் இரு வீடுகளை (12, ஆயலூர் முத்தைய முதலி தெரு மற்றும் 10, வரத ஐயர் தெரு, சென்னை-1) தன் மகள் எல்லம்மாளுக்கும், மற்றொரு வீட்டை (36, கிருஷ்ணப்ப நாயக்கன் குளத் தெரு, சென்னை-1) தன் மனைவியின் சகோதரியின் மகள் இலக்குமிபாய் என்பவருக்கும் எழுதி வைத்தார்.

மேற்கூறிய இருவரும் தங்கள் வாழ்நாள் முழுவதும் அனுபவிக்கலாம் என்றும் தங்களுக்குப் பிறகு அவர்கள் ஆண், பெண் சந்ததிகள் சமமாக அனுபவிக்கலாம் என்றும், அவர்களுக்கு சந்ததிகள் இல்லாமற்போனால், அவர்கள்ஜீவிய காலத்திற்குப் பிறகு சொத்துக்கள் பச்சையப்பன் அறநிலையத்திற்குச் சேர வேண்டியது என்பவை உயிலின் நிபந்தனைகளாகும்.

திருமதி இலக்குமிபாய் திருமணமாகி குழந்தைகள் பெற்று இருக்கிறார். அந்த அம்மாளுக்குக் கிடைத்த வீட்டை (36, கிருஷ்ணப்ப நாயக்கன் தெரு, சென்னை-1) சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு திரு. ஏ. டி. வெங்கடேசன் என்ற நபருக்கு விற்றுவிட்டதாகத் தெரியவருகிறது.

திருமதி எல்லம்மாளுக்கு ஒதுக்கப்பட்ட இரு வீடுகளில், நம்பர் 12, ஆயலூர் முத்தைய முதலி தெரு வீட்டை 15—12—1965 ஆம் நாளிலேயே திருமதி எல்லம்மாள் விற்று விட்டார். அதாவது மேலே கூறப்பட்ட உயிலின் தகவல் பச்சையப்பன் அறநிலையத்திற்குக் கிடைக்கும் முன்பே விற்கப்பட்டதாகும். உயிலின் தகவல் பச்சையப்பன் அறநிலையத்திற்கு 21—5—1976-ல் தான் தெரிய வந்திருக்கிறது. மிஞ்சியுள்ள ஒரு வீடு அதாவது நம்பர் 10, வரதஐயர் தெரு விற்கப்படாமல் பழைய நிலையிலேயே இன்னும் இருக்கிறது.





இது விற்கப்படவில்லை. திருமதி எல்லம்மாள் அவர்கள் மேற்படி 10, வரத ஐயர் தெரு வீட்டை அனுபவித்து வருகிறார். மேற்படி வீடு அந்த அம்மாள் காலத்திற்குப் பிறகுதான் பச்சையப்பன் அறநிலையத்திற்கு சேரும் என்பதுதான் நிலை.

1962-ல் மேற்படி எல்லம்மாள் தன் வீட்டை விற்கப் போகிறார் என வதந்தி கிடைத்தபோது ஆங்கிலம் மற்றும் தமிழ் தினசரி பத்திரிகைகளில் ஓர் விளம்பரம் நிர்வாகக் குழுவினால் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. இதன்படி எல்லம்மாளுக்கு வீட்டை விற்க உரிமை இல்லை. அதனை வாங்கினால் செல்லாது என பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுபோல பச்சையப்பன் கல்லூரியில் முதல்வராக இருந்த காலத்தில் மரணமடைந்த திரு. மா. கி. தசரதன் அவர்களுக்கு அரசால் வழங்கப்படும் தொகையான ரூ. 10,000-த்தைப் பெறுவதற்கான கருத்துருக்கள் சென்னை மண்டலக் கல்லூரிக் கல்வித் துணை இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மா. கி. தசரதன் பணியிலிருந்த காலத்தில் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த காலத்திற்குரிய 'பேமிலி பெனிபிட் ஃபண்ட்' பணத்தை அவர் செலுத்தத் தவறி, பிறகு அதைக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதனால் தான் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. இப்போது அந்த ரூ. 10,000-த்தைப் பெற எல்லா வழிவகைகளும் செய்யப்படும், விரைவிலேயே வழங்கப்படும்.

பச்சையப்பன் அறக்கட்டளைச் சொத்துக்களின் தோராய மார்க்கெட் மதிப்பீடு :—

(1) சென்னை நகரில் உள்ள சொத்துக்கள் ரூ. 12.26 கோடி.

(2) மற்ற மாவட்டங்களில் உள்ள சொத்துக்கள் ரூ. 1.91 கோடி.

ஆக ரூ. 14.17 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் இந்த பச்சையப்பன் அறக்கட்டளையின்கீழ் இருந்து வருகிறது.

ஆகவே ஏற்கெனவே இருந்த அந்தக் குழுவின் நிர்வாகம் நடத்தப்பட முடியாமல் அதன் காரணத்தினால் அதன் கீழ் இயங்கி வருகின்ற கல்வி நிறுவனங்கள் யாவும் பாதிக்கப்படக் கூடிய நிலைமையிலே சம்பந்தப்பட்ட ஆசிரியர்களும் மாணவர்

களும் போராட்டம் நடத்தி அரசே அவற்றை ஏற்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதன் விளைவாகத்தான் பச்சையப்பன் அறக்கட்டளையையும் அதோடு சேர்ந்த கல்வி நிறுவனங்களையும் எடுத்து இருக்கிறோம். கடந்த 4 ஆண்டுக் காலத்திலே பொறுப்புக் குழுவின் நிர்வாகத்திற்குக் கீழ் வந்த பிறகு கடன்கள் எந்த அளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் படித்துக் காட்டினேன். வருமானம் எந்த அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டினேன். வாடகையும் மற்றவைகளும் வசூலிப்பது தொடர்பாக வழக்கு தொடரப்பட்டு எந்தவித தாட்சண்யமுமின்றி எப்படி செயல்பட்டு இருக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டினேன். அந்த பொறுப்புக் குழுவால் நிர்வாகம் எப்படி செம்மைப்படுத்தப் பட்டிருக்கிறது என்பதற்கு இதைவிட ஆதாரங்களை நான் காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

அதற்காக நிரந்தரமாக இப்போது இருக்கிற குழு இருக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இல்லை. ஒருவேளை ஆசிரியர்களும் மாணவர்களும் இது நீடிக்க வேண்டுமென்றும் திருப்பித் தராதீர்கள் என்றும் கேட்கிற நிலைமையில் தான் இருந்துகொண்டிருக்கிறார்களே தவிர மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொன்னதைப்போன்று அல்ல. அவர்களுக்கு அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இருக்கிறது. தவறுகள் சொல்லப்படுகிறது, அந்தத் தவறுகளைத் தீர்க்க வேண்டுமென்ற எண்ணத்தின். அடிப்படையிலே நடவடிக்கைகளை சுலபமாக எடுத்துக்கொள்ள வழி இருக்கிறது. காரணம் நம்முடைய அதிகாரத்தின் கீழ் கண்காணிப்பின் கீழ் அது இருந்து வருகிறது. பச்சையப்பன் அறக்கட்டளையைப் பொறுத்தவரை மிகப் பெரிய ஒரு கல்வி நிறுவனமாக வளர்ந்து இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை இருந்து இருக்கிறது. பச்சையப்பன் கல்லூரி என்றால் 2, 3 ஆண்டுகளுக்கு முன்னால் தவறான ஒரு அபிப்பிராயம் பொது மக்களிடம் இருந்து வந்தது. தேர்வுகள் சரியாக நடக்காது, மாணவர்களிடத்தில் ஒழுங்கு இன்மை என்ற குறைபாட்டை சொல்லி வந்தார்கள்.





ஆனால் இந்த 3 ஆண்டு காலத்தில் அந்த மாதிரியான நிலைமை இல்லை என்பதை பலரும் ஆச்சரியப்படத் தக்க அளவுக்கு பச்சையப்பன் கல்லூரி தன்னுடைய பெருமையை உயர்த்தி இருக்கிறது. இந்த அரசு பொறுப்புக் குழு கட்டுப்பாட்டில் வந்த பிறகு தான் அந்த நிலைமை இந்த கல்லூரிக்கு வந்திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதைப் போலவே கடலூருக்கு, கல்லூரிக்கு நான் சென்று இருந்தேன். அதிலே தேர்வின் முடிவுகளை சொல்லுகிற நேரத்தில் 94 சதவீதத்திற்கு மேல் எல்லா பாடங்களிலும் அந்த பெண்கள் தேர்வு பெற்று இருக்கிறார்கள். அதைப்போலவே செல்லம்மாள் கல்லூரி, கந்தசாமி கல்லூரியும் மக்கடமிக் என்று எடுத்துப் பார்க்கும்போது கல்வி ரீதியாக நல்ல முன்னேற்றத்தைக் காட்டி வருகிறார்கள். இப்போது சென்னை நகரில் உள்ள மிகச் சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக நம்முடைய பச்சையப்பன் கல்லூரி இருந்து வருகிறது. மேலும் வளர வேண்டும் இன்னும் பல பாடங்கள் துவக்கப்பட வேண்டும், அது தமிழ்நாட்டில் மிகச் சிறந்த கல்வி நிறுவனமாக வர வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருக்கிறது. ஆக அந்த அடிப்படையில் நாங்கள் இந்த பொறுப்புக் குழு ஆட்சி காலத்தை நீட்டித்து இருக்கிறோம். அதிலே தவறுக்கு இடம் இல்லாமல் ஓரளவுக்கு செய்து இருக்கிறோம் என்று கூட நான் இங்கே சொல்ல முடியும். ஆனால் எதிர்காலத்தில் நாம் நிரந்தரமாக வைத்துக்கொள்ளக் கூடிய எண்ணம் இல்லை என்ற அடிப்படையில் அதற்கு மாற்றம் செய்து அல்லது புதிய திட்டத்தை எப்படி அமைக்கலாம் என்பதை நம் இஷ்டப்படி செய்து கொள்ள முடியாது. அது உயர்நீதி மன்றத்தினுடைய அனுமதியோடு அவர்கள் தான் சொல்ல வேண்டும். அவர்களால் தீட்டப்பட்ட திட்டம் தான் பழைய திட்டம். ஆக இப்போது வந்திருக்கிற சூழ்நிலையை மனதில் வைத்து அதற்கு பிறகு ஏற்பட்ட அனுபவங்களை கருத்தில் வைத்துக் கொண்டு புதிய திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

அது எப்படி அமைந்தால் நல்லபடியாக இருக்கும் என்பதை நாம் கோர்ட்டில் சொல்லி கோர்ட் அனுமதியோடு அந்த புதிய திட்டத்தை நாம் உருவாக்கலாம். இங்கே இப்போது விவாதத்தில் ஓரிரு உறுப்பினர்கள் சொன்ன அந்த கருத்தை நிச்சயம் அரசு

[திரு. செ. அரங்கநாயகம்] [1986 மார்ச் 20

கவனத்தில் கொள்ளும். அந்தக் கருத்துக்களையும் உயர்நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வந்து இந்தியப் புதிய திட்டம் நல்லபடியாக வந்து, நிரந்தரமான ஒரு பரிகாரம் இந்த பச்சையப்பன் அறக்கட்டளைக்கு ஏற்பட அரசு மேற்கொள்ளும். பழைய திட்டப்படி கல்வியில் ஆர்வம் இல்லாமலேயும், பச்சையப்ப முதலியார் நோக்கத்தில் ஆர்வம் இல்லாமலேயும், அறக் கட்டளையில் பலர் சொந்த நலத்திற்காக பயன்படுத்துபவர்கள் நுழையாமல் இருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்ய வேண்டும் என்ற முயற்சியில் அரசு ஈடுபடும் என்ற வாக்குறுதியை நான் இங்கே தர விரும்புகிறேன்.

ஆகவே இப்போது நீட்டிக்க விரும்புகிறோம் என்றால் நாம் நீட்டிக்காமல் இருக்கலாம் என்ற நிலைமையில் இதை நீட்டிக்க விரும்பவில்லை. நீட்டிக்க வேண்டும் என்ற ஒரு சூழ்நிலையில் தான் இந்த மசோதாவை இங்கே கொண்டு வந்து இருக்கிறோம். உயர்நீதி மன்றத்தில் புதிய திட்டம் உருவாக்கப்பட்ட உடன் அந்தத் திட்டப்படி தேர்தல் நடத்தி அவர்கள் கையில் ஒப்படைக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். இதையே நிரந்தரமாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பது அல்ல என்ற அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர்களுடைய ஏகமனதான ஆதரவை நான் கோருகிறேன்.

(முற்பகல் 11-20)

டாக்டர் கே. சௌரிராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதத்தில் பங்கு கொண்ட உறுப்பினர்கள் மட்டும்தான் அமைச்சரிடம் கிளாரிபிகேஷன் கேட்கமுடியும். அவர்களும் புதிய பிரச்னை களை எழுப்ப முடியாது.

டாக்டர் கே. சௌரிராஜன்: என்னை முன்பே அனுமதித்து இருக்கிறீர்கள் சார். I want a small clarification. I want to know whether the Hon. Minister will place the Balance Sheet of the Trust before this House. 1982-83-ல் கொடுக்கப் பட்டதாகச் சொல்கிறார்கள். ஒரு அரசு நடத்துகிற இன்ஸ்டிடியூசன் இது.



1986 மார்ச் 20] [டாக்டர் கே. சௌரிராஜன்]

Even some Societies placed under the charge of I.A.S. Officers, furnish a Balance Sheet. Why not this Trust having more or loss 14 crores of property give a Balance Sheet. Am I not entitled to this information?

ஒரு சின்ன சொசைட்டி நடத்தினால் கூட ஒரு பேலன்ஸ் ஷீட் கொடுப்பார்கள். இதில் கொடுத்தார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் முன்பே படித்துக் காண்பித்தேன். 8 ஆண்டு களாக ஆடிட் செய்யாமல் இருந்ததை 6 ஆண்டுகளுக்கு ஆடிட் செய்து சென்ற தடவை வைத்தோம். இப்போது 1982—83 வரைக்கும் ஆடிட் செய்து பச்சையப்ப முதலியார் அவர்களுக்கு கம்மம்மரேஷன் டே நடக்கும்போது பச்சையப்பன் கல்லூரியில் படித்துக் காண்பிக்கப்படும் என்ற ஒரு செய்தியை நான் இங்கே சொன்னேன்.

THIRU G. ANANTHAKRISHNA: Mr. Deputy Speaker Sir, it is stand in the Objects and Reasons of the Bill that the Official Committee has filed an application in the High Court for changing the composition of the Board of Management, and for making necessary changes in the scheme governing the said Trust. The above Application is pending in the High Court. But the Hon. Minister has stated that the points made by the Members will be taken into consideration. But the Application has already been filed in the High Court. We want to know what are the changes sought to be made in the constitution of the management and in new Committee.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொன்னேன். உயர்நீதி மன்றத்தில் அனுமதித்த பிறகுதான் அந்தத் திட்டம் என்ன என்பதை நாம் சொல்ல முடியும். அதற்கு முன்னால் நம் கருத்துக்களைச் சொல்லலாம். அதை உயர்நீதிமன்றம் மாற்றலாம். நாம் பழைய திட்டத்தை மாற்ற வேண்டும் என்று சொல்கிறோம். அதில், வேறானவர்கள் உள்ளே நுழைந்து விடுவதற்கு இடம் அளிக் கின்ற காரணத்தால் சொல்கிறோம். புதிய கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் இப்போது சொன்னால் கூட அதை நாம் உயர்நீதி மன்றத்தில் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று சொல்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எப்படி

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

இருந்தால் நல்லது என்பதை என்னிடத்தில் எழுதிக் கொடுத்தால் கூட நான் அந்த குழுவினிடத்தில் தந்து அவை சிறந்த கருத்துக்களாக இருக்குமானால் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கலாம். இப்போது அது இறுதி நிலையில் இல்லை. உயர்நீதி மன்றம் கருத்துக்களைச் சொல்லும் விவாதத்தில் இருக்கின்ற நேரத்தில் நாம் நம்முடைய முடிவாக எதையும் சொல்வதற்கு இல்லை. புதிய சட்டம் அமைக்கும்போது பழையபடி உள்ள நிலைமைக்கு இடம் தராமல் இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய திட்டம்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் கேட்டதன் நோக்கம் இங்கே உயர்நீதிமன்றத்தில் போட்டு இருக்கக்கூடிய அந்த அப்ளிகேஷன் சப்ஜெக்ட் மேட்டர் கன்டென்ட்ஸ் என்ன?

What are the contents of the application which is pending before the High Court? That is the point raised by the Member.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. அந்த விவரம் என்னிடத்தில் இல்லை என்றாலும் கூட நான் சொல்ல விரும்புவது மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கருத்துக்களைச் சொல்கிறார்களோ அதை நாம் அங்கே சொல்லலாம். எனக்கு அதைப்பற்றி இறுதியான கருத்து எதுவும் இல்லை. கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் இங்கே தெளிவாகச் சொல்ல வேண்டும் என்றால் இப்படித்தான் திருத்தி அமைக்க வேண்டும் என்ற ஒரு கருத்து என்னிடத்தில் கிடையாது. நல்ல கருத்துக்கள் இருந்தால் அதன்படி செய்யலாம். பழைய முறையில் அங்கேயிருக்கின்ற இந்து உறுப்பினர்களுக்கு ஒரு தேர்தல். பல இடங்களில் இந்து உறுப்பினர்களுக்கு இடையில் ஒரு தேர்தல் நடத்தி அந்த உணர்வுகளை வளர்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை அந்த முறையில் இருக்கிறது. குறிப்பாக இங்கே சட்ட சபையில் ஒரு இந்து உறுப்பினரைத் தேர்ந்து எடுக்கலாம் என்று வைத்துக்கொண்டாலும், நல்லது தான். மேல்சபையில் அந்த பிரதிநிதித்துவம் தந்தால் அதுவும் நல்ல முறைதான். ஆசிரியர்கள், மாணவர்களுக்குத் தந்தால் அதையும் நாம் வரவேற்கிறோம். இவைகளை எல்லாம் நான் சொன்ன காரணத்தினாலே அவைகள் வந்து விடும் என்று சொல்வதற்கு இல்லை. இவற்றை நாம் உயர்நீதிமன்றத்தில் சொல்லி, அவர்கள் அவற்றை ஏற்றுக்



1985 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

கொண்டதற்குப் பிறகுதான் அந்தத் திட்டம் உருவாகும். ஆகவே உயர்நீதிமன்றத்தின் கையில்தான் முழுப் பொறுப்பும் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் ஸ்கீம் எல்லாம் எப்படி போடுவது என்பது பற்றி வழக்கறிஞர்களாக இருக்கும் நண்பர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். அட்வகேட் ஜெனரலிடம் பெட்டிஷன் போட்டு அவர்கள் மூலம் நடக்கும் காரியங்கள் இவை. ஆகவே இதை இறுதியாக இப்படித்தான் கொடுக்க வேண்டும் என்று சொல்வதற்கு அதிகாரம் நம்மிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985-ஆம் ஆண்டு சச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 4/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"1985 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 4/1985) நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1985 மார்ச் 20

**(இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு 1985.**

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :—

"ஆளுநர் அவர்களால் 30—1—1985-ஆம் தேதி அன்று பிறப் பிக்கப்பெற்ற 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/1985) இப் பேரவை நிராகரிக்கிறது".

**திரு. ம. ஆபிரகாம்:** நான் இதை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 13/1985)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பொன்னு ரங்கம் அவர்களுடைய தீர்மானமும், மாண்புமிகு கல்வியமைச்சர வர்களுடைய தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் துணைத் தலைவரவர் களே, இதுவொரு நல்ல சட்டம்; அருமையான சட்டம்; இதைப் போய் நான் எதிர்க்கிறேன். அதுதான் விநோதம். நாளைக்குப் பத்திரிகையில் என்ன போடுவார்கள் என்றால் இப்படி ஏழை களுக்குப் பயன்படக்கூடிய இந்தச் சட்டத்திற்கு தி.மு.க. எதிர்ப்பு என்று போடுவார்கள். இதில் உள்ள விஷயம் என்ன வென்றால், கூட்டுப்பொறுப்பின் காரணமாக மாண்புமிகு கல்வி யமைச்சரவர்கள் இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டு மென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் முதலிலே இன்ட் ரொட்யூஸ் செய்ததும் கல்வியமைச்சர்தான்; இப்பொழுது டிஸ்க ஷனுக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கோருவதும் கல்வி யமைச்சர்தான்.

---

@ 1985-ஆம் ஆண்டு மார்ச் 16-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1985 மார்ச் 20] [திரு. ப. பொன்னுரங்கம்]

But the Bill stands in the name of the Hon. Minister Thiru C. Ponnaiyan.

அண்மையில் சபாநாயகர் அவர்களேகூட ஒரு வேண்டுகோள் விட் டார்கள். சட்டமன்றம் நடத்தப்படுகின்ற அந்தக் காலகட்டத்தில் அமைச்சர்கள் அவசியம் வருகை தர வேண்டுமென்ற வேண்டு கோளை விடுத்தார்கள்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் வந்ததால்தான் இப்பொழுது விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. ப. பொன்னுரங்கம்:** துணைத் தலைவரவர்களே, அந்த சபாநாயகர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தார்கள். அந்த வேண்டுகோளையே மதிக்கவில்லையே. இன்ட்ரொட்யூஸ் செய்து இரண்டு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. இப்பொழுது பில் ஆய் வுக்கு வருகிறது என்றால் இப்பொழுதாவது அவர் வரலாம் இல்லையா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, ஒரு தவறான கருத்து ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவருக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால்தான், இப்பொழுது இதை நான் மொழிந்தேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** துணைத் தலைவரவர்களே, இது அந்த அமைச்சரின் பொறுப்பில் உள்ளது; அவருக்கு விவகாரம் தெரியும். இன்ட்ரொட்யூஸ் செய்யப்பட்டபொழுது பேசிய நேரத்தில், பில்லைப் படிக்காமல் சொல்கிறார் என்று சொன் னார்கள். அந்த அமைச்சராக இருந்திருந்தால் அப்படிச் சொல்லக்கூடிய பிரச்சினை வந்திருக்காது. நான் படித்துவிட்டுத் தான் பேசுகிறேன். இந்தச் சட்டம் நல்ல சட்டம்தான். மூலச் சட்டம், ஏழைகளுக்குப் பயன்பட வேண்டுமென்ற காரணத்தால் கொண்டு வரப்பட்ட சட்டம். இதிலே ஆறு மாதங்களுக்குக் கொண்டு வருவதற்குக் காரணம் என்னவென்றால், கிராமங்களிலே உள்ள மக்களுக்கெல்லாம் இந்தச் சட்டத்தின் தன்மை தெரியாது என்பதால்தான், மூலச் சட்டம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை சட்டமாக்கப்பட வேண்டும் என்று இருக்கின்ற காரணத்தால் ஆறு மாதத்திற்கு ஒரு முறை, ஆறு மாதத்திற்கு ஒரு முறை தான் ஆறு மாதத்திற்கு ஒரு முறை, ஆறு மாதத்திற்கு ஒருமுறை

(திரு. ப. பொன்னுரங்கம்) [1985 மார்ச் 20

கொண்டு வருகிறோம். இப்படி ஆறு மாதத்திற்கொருமுறை
கொண்டு வருவதற்கு அடிப்படைக் காரணம், கிராம மக்கள்
புரியாத மக்கள், அவர்களுக்கு இந்தச் சட்டத்தைப் பற்றித்
தெரியாது, எனவே அந்த மக்கள் பலனடைந்திருக்கமாட்டார்கள்.
ஆகவே, அவர்கள் பலன் பெற வேண்டுமென்பதற்காகத்தான்
இந்தச் சட்டம் ஆறு மாதத்திற்கு ஒரு முறை கொண்டுவரப்படு
கிறது. இது நல்ல சட்டம்.

(முற்பகல் 11-30)

ஆனால், இந்தச் சட்டம் கடைசியாக, 23—8—1984-ல் எக்ஸ்பயர்
ஆகிறது. ஆகவே, இந்தச் சட்டம் நடைமுறையில் இருந்தால்
தான், இந்தச் சட்டத்தைப்பற்றி விஷயம் தெரிந்தவர்கள்கூட,—
An application can be filed from 24th August 1984.
இந்தச் சட்டத்தைப்பற்றித் தெரிந்த ஒரு நபர், தாசில்தாரிடம்
அணுகி அப்ளிகேஷன் கொடுக்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.
அப்போது சொல்கிறார், 23-ஆம் தேதியோடு இது போய் விடு
கிறது; 24-ஆம் தேதியிலிருந்து சட்டம் இல்லை. ஆகவே அப்ளி
கேஷன் வாங்க நான் தயாராக இல்லை. எனக்கு அதற்கான
அதிகாரம் இல்லை என்று தாசில்தார் தாராளமாகச் சொல்வார்.
அப்படி என்றால் சட்டம் யாருக்குப் பயன்படுகின்றது? இந்தச்
சட்டத்தால் பான் ப்ரோக்கர்ஸ், மணி லெண்டர்ஸ் ஆகிய ஒருசிலர்
தான் பயன் பெறுகின்ற நிலைமை இருக்கின்றது. இப்படிப்பட்ட
அந்த நான்-இன்ஸ்டிட்யூஷன் என்று சொல்லப்படக்கூடிய அமைப்
புக்களைச் சேர்ந்தவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள், இந்தச்
சட்டம் எப்போது போகும் என்று. இந்தச் சட்டம் இல்லாத
நேரம் எப்போது வரும் என்று பார்த்து அந்த நேரத்தில்
ஏழைகள் அடமானம் வைத்திருக்கின்ற நகைகளையும், கடன்
பத்திரங்களையும் கோர்ட்டிலே ஒரு ரிட் ஃபைல் பண்ணுவதன்
மூலமாகக் கிளியர் பண்ணிக்கொண்டு அந்த நகைகளை ஏலம்
விட்டு விடுகிறார்கள்; அந்தக் கடன் பத்திரங்களை எல்லாம்
செல்லுபடியாக ஆக்கிக்கொள்கிறார்கள். ஆக இந்தச் சட்டம்
கொண்டுவரப்படுவதன் நோக்கம் . . .



1985 மார்ச் 20]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
களுடைய கவனத்திற்கு அப்படி ஏதாவது வந்திருக்கின்றது
என்றால் அதைத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, நான் ஏற்கெனவே இதே சட்டத்தின் மீது பேசும்போது . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் சொல்வது இந்த இடைக்காலத்தில்
யாராவது அப்படி கடனை வசூலித்திருந்தால் அதுபற்றிய
தகவலைத் தரும்படி நான் கேட்டுக்கொள்கிறேன். யாராவது
ஏலத்திற்கு அவ்வாறு நகைகளைக் கொண்டு வந்திருந்தால் அது
போன்ற நிகழ்ச்சிகள் நடந்திருந்தால் அதுபற்றி எழுதி அனுப்பு
மாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த விவரம் அவருக்கும் தெரியும். ரெட்ராஸ்பெக்டிவ்
எஃபக்ட் கொடுக்கிறார்கள். அதாவது 24—8—1984-லிருந்து
செல்லும் என்று . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்
கொடுப்பது என்பது வேறு. ஆனால் ஏதாவது நடந்திருக்கும்
என்பதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
வாதமாகும். அப்படி நடந்திருந்தால் அதை எங்கள் கவனத்
திற்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்தச் சட்டத்தில் கூட ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட்
கொடுத்திருக்கிறார்கள். அதாவது கண்டினுவேஷன். ஆனால்
சட்டம் போட்டது எப்போது? 30-1-1985 அன்று கவர்னருடைய
ஆர்டினன்ஸாக இந்தச் சட்டம் வந்திருக்கிறது. 24—8—1984-
லிருந்து 29—1—1985 வரையில் இந்தச் சட்டம் இல்லை. அப்படி
இல்லாத நேரத்தில் அந்த பான் ப்ரோக்கர்ஸ், மணி லெண்டர்ஸ்
இவர்கள் எல்லாம் பலன் பெறுகிறார்கள். நாம்தான் ரெட்ராஸ்
பெக்டிவ் எஃபக்ட் கொடுத்துவிட்டோமே இந்தச் சட்டத்தின்படி
என்று சொன்னாலும் கூட அதற்கும் அவர்கள் என்ன
சொல்கிறார்கள் என்றால் உதாரணமாக நானே ஒரு நகையை

[திரு. ப. பொன்னுரங்கம்] [1985 மார்ச் 20

அடமானம் வைத்துவிடுகிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள், 500 ரூபாய் கேட்கிறேன் 2,000 ரூபாய் மதிப்புள்ள நகைக்கு. ஆனால் இந்தச் சட்டம் இல்லாத காரணத்தால் பான் ப்ரோக்கர் அதை ஏலத்திற்கு விட்டுவிடுகிறார், அப்படி விட்டுவிட்டு இதுதான் தொகை என்று தான் விரும்புகின்ற ஒரு தொகையை நான் மீண்டும் இந்த ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் என்பதை பயன் படுத்திக்கொண்டு க்ளெய்ம் செய்து கேட்கின்றபோது அவர்கள் 800 ரூபாய் . . .

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் வலியுறுத்திக் கேட்பது எல்லாம் அப்படி ஏதாவது நடந்திருக்கின்றதா என்பதுதான். அந்த இடைக்காலத்தில் அப்படி ஏலம் விடப்பட்டிருந்தால் அதுபற்றித் தெரிவிக்கவேண்டும். அப்படி நடைபெறாமல் இருப்பதற்காகச் சில பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு எடுத்திருந்தது. ஆகவே அதையும் மீறி ஏதாவது நடந்திருக்கிறதா என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் அதைப்பற்றி அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அப்படி நடந்திருக் கின்றது என்ற விவரத்தை இங்கே சொல்லிக்கொண்டிருக் கிறார்கள். எனவே நாங்கள் எடுத்த பாதுகாப்பு நடவடிக்கை களையும் மீறி யாராவது அப்படி நடந்திருக்கிறார்களா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்கிறேன்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 மாதம் 11 நாட்கள் இடைவெளி விட்டு இதற்கு முன்பு ஒரு சட்டம் ஆர்டினன்ஸாக வந்தது. அதன்மீது நான் எதிர்ப்பு தெரிவித்தேன். இந்தக் கூட்டத்தில் அல்ல. போன கூட்டத்தில். என்னுடைய வீட்டிலேயே ஒரு வழக்கறிஞர் குடியிருக்கிறார். அவருடைய பெயர் நல்லப்பன். அவர் மெட்ராஸ் தாசில்தாரிடம் ஒரு அப்ளிக்கேஷனை எடுத்துக்கொண்டு போகிறார். அவ்வாறு ஒரு பார்ட்டியினுடைய அப்ளிக்கேஷனை எடுத்துக்கொண்டு போய் தாசில்தாரிடம் கொடுத்தால் அவர் அதை வாங்க மறுக்கிறார். அதற்கு என்ன காரணம் சொன்னார் தெரியுமா? இந்தச் சட்டம் முடிந்துவிட்டது. எனவே மூடிந்த



1985 மார்ச் 30] [திரு. ப. பொன்னுரங்கம்]

தேதிக்குப் பிறகு வருகிறீர்கள், மீண்டும் இந்தச் சட்டம் என்றைக்கு வந்தாலும், ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுத்து வந்தாலும் கூட அதை நான் பரிசீலிக்க முடியாது என்று தாசில்தார் அதை வாங்க மறுத்து இருக்கிறார்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் கீழேயா அப்படிச் சொன்னார்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** இதே சட்டத்தின் கீழேதான்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது ஒரு இடைவெளிக் காலத்தைச் சுட்டிக்காட்டி, அந்த இடைவெளிக்காலத்தில் இந்தச் சட்டத்தின் கீழே நடை பெற்ற ஏதாவது ஒரு நிகழ்வு இருக்குமேயானால் அதை அவர்கள் எழுதி அனுப்பலாம்.

**திரு. ப. பொன்னுரங்கம்:** ஏலம் போடுவதெல்லாம் நடக்கின்றது. இடைவெளி விடுகின்ற காரணத்தால், ஏற்கனவே அவ்வாறு இடைவெளிவிட்ட காரணத்தால் இந்தமாதிரி நடந்தது என்று சுட்டிக்காட்டப்பட்டு அது திருத்தப்படும் என்ற நம்பிக் கையோடு இருக்கின்ற நிலையில் ஆகஸ்டிலே அது இந்த சட்ட மன்றத்திலே கொண்டுவரப்பட்டதா? ஏதாவது எக்ஸ்ட்ரார்டினரி சர்க்கம்ஸ்டேன்ஸஸ் வந்ததா ஆகஸ்டிலே? எக்ஸ்டிரார்டினரி சர்கம்ஸ்டன்ஸ் எதனால் வந்தது? ஆகஸ்டில் எல்லோரும் நன்றாகத்தான் இருந்தோம். அதற்கு முன்னால் சட்டசபையைக் கூட கூட்டியிருந்தோம். ஆகஸ்ட் 21 ஆம் தேதியே ஒரு ஆர்டினன்ஸ் போட்டிருக்கலாமே? பலவற்றிற்கு அட்வான்சாகவே ஆர்டினன்ஸ் போடுகிறீர்கள்; இதற்கும் போட்டிருக்கலாம் அல்லவா? ஜனங்கள் மத்தியிலே சந்தேகம் வரும் இல்லையா? அதைக் கூட செய்யாமல் ஒரு ஆட்சி இருக்கிறது என்று வருத்தப்படுகிறேன், வேதனைப்படுகிறேன்.

Those who are living in the rural areas are not aware of this Act. இதுதான் நாங்கள் சொல்கிறோம், அவர்களுக்குத் தெரியாது என்று அரசுக்குத் தெரிந்தும் ஆர்டினன்ஸ் போடாமல், சட்டம்

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இல்லாமல் செய்திருக்கிற அந்த இடைவெளிக்காகத்தான் நான் நிராகரிப்புத் தீர்மானத்தைக் கொடுக்க வேண்டிய நிலைக்கு ஆட்பட்டேன். சாதாரண மக்கள்பால் அக்கறை உள்ளவன்; ஏழைகளின் பேரில் அக்கறை உள்ளவன். ஆனால், நிராகரிப்புத் தீர்மானம் கொடுக்க வைத்ததே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபொழுது நீங்கள் கையாண்ட முறைதான். அது சரியல்ல. தவறு நடைபெற ஏதுவாக இருக்கிறது. இன்னும் மக்கள் மத்தியிலே ஐயப்பாடு இருக்கிறது. யாருக்கு உதவியாக இருக்க இப்படிப்பட்ட இடைவெளி என்று மக்கள் சந்தேகப்படுகிறார்கள். ஏழைகளின்பால் நீலிக் கண்ணீர் விட்டுக் கொண்டு ஏற்கனவே சுட்டிக்காட்டியும் இதுபோன்ற இடைவெளி வைப்பது சரிதானா என்று கேட்க ஆசைப்படுகிறேன். தங்கள் இஷ்டப்பிரகாரம் செய்கிறார்கள். முதல் சட்டம் ஏழைகளுக்குப் பயன்பட்டது; இடைவெளிவந்தது யாருக்குப் பயன்படுவதாக இருக்கும். அதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன். ஆகவேதான் நிராகரிப்புத் தீர்மானத்தைக் கொடுத்து, அதில் பேசவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நான் ஆளானேன் என்று கூறி, அந்த இடைவெளியை எதிர்த்துதான் பேசுகிறேனே தவிர, இதை எதிர்த்து அல்ல என்பதைக் கூறி, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கட்சி ஏற்கனவே வரவேற்றிருக்கிறது. ஆனால், இப்பொழுது இந்தச் சட்டத்தில் மீண்டும் ஆறு மாதம் மனு கொடுக்கக்கூடிய காலக் கெடு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அதுவும் கிராமப்புறத்தில் இருக்கிற மக்கள் விவரம் அறியாத காரணத்தாலே மனு கொடுக்கவில்லையென்ற காரணத்தாலே, நீட்டிக்கப்படுகிறது என்ற விவ்ரங்களை எடுத்துச் சொன்னார்கள்.

இந்தச் சட்டத்திலே ரூ. 2,400-ம் அதற்குக்கீழ் வருமானம் உள்ளவர்கள்தான் இதிலே பயன் அடைய முடியும் என்று கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை அமுல் நடத்துகிறவர்கள் எல்லாம் தாசில்தார்கள். ஆனால் தாசில்தாருக்கு இருக்கிற வேலைகள் காரணமாக, இந்தச் சட்டத்தைப்பற்றி அவர்கள் சிந்திப்பதே கிடையாது. அதற்காகக் கொடுக்கப்படுகிற மனுக்களை ஆய்வு செய்து, முடிவு எடுப்பதிலே பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன.





அது மட்டுமல்ல, ரூ. 2,400 வருமானம் என்று சான்று அளிப்பவர்கள் இதே தாசில்தார்கள், வில்லேஜ் ஆபீசர்கள். இன்றைக்கு ரூ. 2,400-க்குக் கீழே என்று சான்றிதழ் வாங்கப் போகும்போது, ஏழை விவசாயிகளும், விவசாயத் தொழிலாளர் களும், சிறு விவசாயிகளும் வாங்க முடியாத ஒரு நிலைமை இருக்கிறது. குறிப்பாக, சிறு விவசாயிகள், 2, 2½ ஏக்கர் நிலம் வைத்திருந்தால், அவர்கள் சாகுபடி செய்யக்கூடிய நிலத்தையும் கணக்கிட்டு. அவர்களுக்கு ரூ. 2,400-க்கு கீழ் வருமானம் வருகிறது என்று சான்றிதழ் வழங்க மறுக்கிறார்கள். அதனால் மனு கொடுக்க முடியாத சூழ்நிலை வருகிறது. அதேபோல் சிறு விவசாயிகள் தங்களுடைய வீட்டில், தங்களுடைய வசதிக்காக ஏதாவது பகுதியை வாடகைக்கு விட்டால், அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு, ரூ. 2,400-க்கு மேல் வருமானம் வருவதாகச் சொல்லி அந்தச் சான்றிதழ் வழங்காத சூழ்நிலை இருக்கிறது.

(முற்பகல் 11-40)

இன்றைக்குக் கூலி வேலை செய்கிற விவசாயிகளை எடுத்துக் கொண்டால், ஆணும் பெண்ணும் சேர்ந்து, ரூ. 18 ஒரு நாளைக்குச் சம்பளம் பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதை 30 நாளைக்கு, ரூ. 540 என்று கணக்கிட்டு, ஆறு மாதத்திற்கு வேலை இருப்பதாகக் கணக்கிட்டால்கூட ரூ. 3,240 என்று சொல்லி, அது ரூ. 2,400-க்கு அதிகமான வருமானம் என்று சொல்லி, சான்றிதழ் வழங்க மறுக்கிறார்கள். கடன் கொடுத்த வர்கள், சான்றிதழ் பெறச் செல்பவர்கள் பெற முடியாத அளவுக்கு, சம்பந்தப்பட்டவர்களை நிர்பந்தித்து, அவர்களுக்கு அதிகமான வருமானம் வருகிறது என்று காரணம் காட்டி, மனு செய்ய முடியாத நிலைமையைச் சுட்டிக்காட்டத்தான் இந்தச் சட்டம் உள்ளது. உள்ளபடியே விவசாயத் தொழிலாளர்களுக்கு, நலிந்த மக்களுக்கு நல்லது செய்ய இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே இந்தச் சட்டத்திலே உள்ள குறைபாடுகளை நீக்கி நாம் நினைக்கும் வசதிகள் ஏழை விவசாயி களுக்கு, கிராமப்புற மக்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். விவசாயிகள் பட்டிருக்கிற கடனைத் தீர்ப்பதற்கான சூழ்நிலையை இந்தச் சட்டத்திலே உருவாக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

[1985 மார்ச் 20

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தத்தை நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சி சார்பாக வரவேற்கிறேன். இந்தச் சட்டத்தின்படி இப்போது பான்-புரோக்கர்ஸ்களிடம் நகையைத் திருப்பிக் கொடுக்கச் சொல்லி தாசில்தார் ஆணையிட்டால் அவர்கள் நகைகளைத் திருப்பிக் கொடுப்பதில்லை. அவர் எக்சிகியூட் பண்ண வேண்டுமென்று சட்டத்திலே விதிமுறைகள் இல்லாமல் இருக்கிறது. நான் வழக்குரைஞராக இருக்கிறேன். இதுபோன்று ஒரு மனுவை தாசில்தாருக்குக் கொடுத்தேன். தாசில்தார் மனுவைப் பெற்றுக்கொண்டு நகையைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று அதில் எழுதிக் கொடுத்தார்கள். ஆனால் நகையை வாங்கி வைத்திருந்தவர்கள் அதை வைத்து நகையைத் திருப்பி கொடுக்கவில்லை. கேட்டால் தாசில்தாருக்கு அதை என்போர்ஸ் பண்ணுவதற்கு அதிகாரம் இந்தச் சட்டத்திலே இல்லையென்று சொன்னார்கள். அதுதான் உண்மை. அவர்கள் என்னிடமே கேட்டார்கள், நீங்கள் வழக்கறிஞர் தானே, இதிலே எப்படி கொடுக்க முடியும் என்று. ஆகவே இந்தச் சட்டம் மக்களுக்குச் சரியான முறையிலே பயன்படுகிற வகையில் செய்ய வேண்டும். நகையைத் திருப்பிக் கொடுக்க தாசில்தார் ஆணையிட்டால் அதற்கான அதிகாரத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும். கோர்ட்டிலே ஒரு டிகிரி பாஸ் செய்தால் அதை எக்சிகியூட் பண்ணுவதற்கு கோர்ட் முன்சீப் அதிகாரம் கொடுக்கிறார்கள். அதேபோல தாசில்தாருக்கு அந்த ஆணையை எக்சிகியூட் பண்ணுவதற்கான அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும். அந்த புரவிஷன் இல்லாமல் இருக்கிறது. அதனைப் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். அதனை நானும் திருப்பிச் சொல்லி சபையின் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அத்தகைய நிலைமை வந்தால் அறிவியுங்கள் என்று சொன்னார்கள். இந்தச் சட்டத்தின் மூலமாக நிவாரணம் கிடைக்கச் செய்யும் வகையில் அதிகாரிகளை நியமனம் செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இந்த இடைக்



1985 மார்ச் 20] (திரு. மா. சுந்தரதாஸ்)

காலத்தில் பல்வேறு பான்-புரோக்கர்ஸ் நகைகளை விற்று விட்டார்கள். எனக்கு நன்றாகத் தெரியும். திருப்பி கேட்கிற போது 5,000 ரூபாய் நகையை 500 ரூபாய்க்கு விற்றுவிட்டோம் என்று ஒரு கள்ளக்கணக்கைச் சொல்கிறார்கள். இந்த நிலையைப் போக்குவதற்கு வழிசெய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்கள் அந்த அதிகாரிகளிடம் சென்று மனு கொடுத்தால் அவர்களுடைய குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

அதேபோல அரசு நிறுவனங்களுக்கு இந்தச் சட்டம் செல்லாது என்று இருப்பது சரியில்லை. ஏழை மக்கள் கடன்களை வாங்குகிறார்கள். கோவாப்பரேட்டிவ் சொசைட்டி, ஷெட்யூல்டு பேங்க் போன்றவைகளிலிருந்து கடன்களை அவர்கள் வாங்குகிறார்கள். ஷெட்யூல்டு பேங்கிலே வாங்குகிற வட்டி காம்பவுண்ட் இண்டரஸ்ட். அது நிச்சயமாக பான்-புரோக்கர்ஸ் வாங்குகிற வட்டியைவிட அதிகமாக இருக்கும். அத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதற்கு இந்தச் சட்டத்திலே வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால் அரசு நிறுவனங்களுக்கு, ஷெட்யூல்டு பேங்குகளுக்கு ஒரு சட்டமும், ஏழை நடுத்தர மக்கள் போன்றவர்களுக்கு ஒரு சட்டமும் இருப்பது சரியல்ல. ஆகவே ஏழை மக்கள் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால் அவர்கள் யாரிடம் வாங்கினாலும் ஒரே நிலைமையாக இருக்கவேண்டுமென்ற கருத்தை வலியுறுத்த விரும்புகிறேன். இப்போது இந்த இடைக்காலத்தில் நிறைய பான்-புரோக்கர்ஸ் ஆதாயங்களைத் தேடிக் கொண்டார்கள் என்பதுதான் உண்மை. ஏழை மக்களுக்கு உதவி செய்கிற வகையில் இந்தச் சட்டத்திலே இருக்கிற குறைபாடுகளை நீக்கி நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

* **திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டம் ஆரம்பத்தில் கொண்டு வரப்பட்டபோது நாங்கள் எல்லாம் பெரும் மகிழ்ச்சியோடு ஆதரித்தோம். காரணம் கிராமப்புறங்களில் வாழக்கூடிய சாதாரண மக்கள் திருமணங்கள் அல்லது மற்ற நிகழ்ச்சிகளுக்கு அல்லது வேலையில்லாத காலங்களில் வட்டிக்கடைக்காரர்களிடம் கொண்டுபோய் செப்புக் குடம், தோடு போன்ற பொருள்களை அடகு வைத்து, மூன்று, நான்கு மடங்கு அதற்கு வட்டி கட்ட வேண்டிய நிலை வந்து, திருப்ப முடியாத நிலை ஏற்பட்டது.

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 20

அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்களுக்கு இந்தச் சட்டத்தினால் பலன் ஏற்படும் என்று நாங்கள் நம்பினோம். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்றுதான் சட்டத்தைக் கொண்டுவந்தார்கள்.

மத்திய சர்க்கார் கூட இருபது அம்சத் திட்டத்தில் இதைச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் மகிழ்ச்சியோடு இதை வரவேற்று கிராம மக்களிடம் பிரச்சாரம் செய்தோம். உங்களுக்கு நன்மை வந்து இருக்கிறது. ஆனால் நடந்தது என்ன? இந்தச் சட்டம் வந்தபிறகு அதை அமுல்படுத்துகிறபோது, வருமானத்தை ஒரு அளவுகோலாக வைத்து, அதற்குக் கீழே கடன் பெற்றவர்களுக்கு எல்லாம் நிவாரணம் உண்டு, அப்படிப்பட்டவர்கள் தாசில்தாரிடம் மனு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். தாசில்தாரிடம் இலட்சக்கணக்கான மனுக்களைக் கொடுத்தார்கள். விசாரணை வைத்தார்கள். விசாரணை செய்கிறபோது, இருக்கிற கஷ்டம் என்னவென்றால், 2,500 ரூ. வருமானம் என்றால், ஒரு விவசாயத் தொழிலாளிக்குச் சர்க்காருடைய சட்டப்படி சம்பளம் ஒரு நாளைக்கு 10 ரூபாய். ஒரு குடும்பத்தில் ஏழு பேர் இருக்கிறார்கள் என்றால்—உதாரணத்திற்காகச் சொல்கிறேன்—உங்கள் குடும்பத்தில் இத்தனை பேர் இருக்கிறீர்கள்; அரசாங்க சட்டப்படி 320 நாளைக்கு இவ்வளவு வருமானம் வந்துவிடுகிறது, ஆகவே, உங்களுக்கு இந்தச் சட்டத்தின்படி நிவாரணம் கிடைக்காது என்று சொல்லிவிடுகிறார்கள். அதனால் அந்தச் சாதாரண மக்களுக்கு மேலும் மேலும் சுமை ஏற்பட்டு, எந்தப் பலனும் கிடைக்காமல் போய்விட்டது. செப்புக் குடம், தோடு, தட்டு போன்ற பொருள்களை அடகு வைத்தவர்கள், தங்களுக்குப் பலன் கிடைக்கும் என்று எதிர்பார்த்தவர்கள் ஏமாற்றமடைந்தார்கள். அந்தப் பொருள்கள் எல்லாம் ஏலத்தில் விற்கப்பட்டன; மக்களுக்குப் பலன் இல்லை. மாறாக ஏமாற்றம்தான் ஏற்பட்டது. இந்தச் சட்டத்தினால் இப்படிப்பட்ட நிலைதான் ஏழை எளிய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட பிரச்சனைகள் எல்லாம் வரும் என்ற எண்ணத்தில்தான் நாங்கள் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட போதே தனியாக இதற்குத் தாசில்தார்களைப் போடுங்கள் என்று சொன்னோம். சொத்து இல்லாத விவசாயியாக இருந்தால்



985 மார்ச் 20] [திரு. பொ. உத்திராபதி]

அவர்களை மேற்கொண்டு விசாரிக்க வேண்டியதில்லை, இந்த நிவாரணம் வழங்கப்பட வேண்டும். அந்த, அந்த ஊர்களிலே இருக்கிற கிராம அதிகாரிகள் அவர்களிடம் சர்டிபிகேட் கொடுத்தால் போதும். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் இன்ன பொருளை அடகு வைத்திருக்கிறார், இவருக்கு நிலம் இல்லை, இவர் பெயரில் பட்டா இல்லை; இவர் விவசாயத் தொழிலாளி என்று கிராம அதிகாரி சர்டிபிகேட் கொடுத்தால் அப்படிப் பட்டவர்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப்பட வேண்டும். அது அல்லாமல் வருமானத்திற்கு ஒரு வரம்பு வைத்து, அதை விசாரிக்க ஒரு தாசில்தாரைப் போட்டால் சட்டத்திலே இருக்கிற ஓட்டைகளைப் பயன்படுத்தி, சாதாரண மக்களுக்கு இந்தச் சட்டத்தின் மூலம் நியாயம் கிடைக்காமல் செய்துவிடுவார்கள். எதிர்காலத்திலாவது இப்படிப்பட்ட ஒரு நிலையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுவரையில் இப்படிப்பட்ட நிலை இல்லாத காரணத்தால் கிராமப்புற மக்களுக்கு, விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்தச் சட்டத்தினால் பலன் கிடைக்கவில்லை. இனிமேல் வருமான வரம்பு விதிக்காமல், உண்மையான விசாரணை நடத்துவதன் மூலம் அந்த மக்களுக்கு நன்மை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். நீங்கள் தாசில்தார் மட்டும் போட்டால் போதாது. இதுபற்றி நாங்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டு வருகிறோம். அதிகாரிகள் எப்படி நடந்துகொள்வார்கள் என்று சொல்ல முடியாது. சில அதிகாரிகள் நியாயமாக நடந்துகொள்வார்கள்; சிலர் தவறு செய்வார்கள். சில அதிகாரிகளை நகைக் கடைக்காரர் பார்த்து, கொஞ்சம் காலத்தைக் கடத்துங்கள், அதற்குள் நான் ஏதாவது செய்துகொள்கிறேன் என்று சொன்னால் அவர்களுக்குச் சாதகமாக காலம் கடத்திக்கொண்டிருப்பார்கள்.

இந்தக் குறையைப் போக்க மக்கள் குழுவை அமைக்க வேண்டும். எல்லா ஊர்களிலும் எல்லாக் கட்சிக்காரர்களும் இருப்பார்கள். எல்லாக் கட்சிக்காரர்களையும் கொண்ட ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுவுக்குத் தாசில்தார் அல்லது மற்ற அதிகாரி தலைவராக இருக்கலாம். அப்படி நியமிக்கப்பட்ட கமிட்டி விசாரணை செய்ய வேண்டும். அங்கே கடன்

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 20

கொடுத்தவர்தான் வருமான வரம்பை நிரூபிக்க வேண்டும். வருமான வரம்பைப்பற்றி அதிகாரிகள் முடிவு செய்ய வேண்டுமென்றால் அது இப்போது நடக்காது. அந்தக் கமிட்டியிலே கடன் கொடுத்தவர், கடன் பெற்றவர் இரண்டுபேரையும் ஒரே நேரத்தில் விசாரிக்க வேண்டும். அப்படியானால்தான் உண்மையான நிலவரம் தெரியவரும். நியாயமாக பலன் கிடைக்க வேண்டியவர்களுக்குப் பலன் கிடைக்கும். இந்தச் சட்டத்தின் பலன் அந்த மக்களுக்குப் போய்ச் சேரும். ஆகவே, இந்த அடிப்படையில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-50)

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தின் அடிப்படை நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இத்தகைய திருத்தங்களின் மூலம் உண்மையான பலன் கிடைக்குமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டிய அவசியத்திலே நாம் இருக்கிறோம். எந்த நோக்கமும் நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால் நோக்கம் நிறைவேறாமல், வெறும் சட்ட வடிவத்திலே இருப்பதால் யாருக்கும் பயன் இருக்காது. மதிப்பிற்குரிய உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 24—8—1984 அன்று சட்டமன்றம் இருந்திருக்கிறது. இதற்குக் கெடு வைக்காமல் இந்தச் சட்டத்தை அப்போதே கொண்டு வந்து நிறைவேற்றியிருந்தால் நிச்சயமாகப் பலன் இருந்திருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட கேட்டார்கள், இடைக்காலத்தில் ஏதேனும் சம்பவங்கள் நடந்திருக்கிறதா, அப்படி என்றால், என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள் என்று சொன்னார்.

என்னுடைய திருவண்ணாமலையில், கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் அடகு வைக்கப்பட்ட நகைகள் எல்லாம் ஏலம் போடப்பட்டு இருக்கின்றன. ராஜேந்திரன் என்ற நபர் அதை ஏலத்தில் விட்டு இருக்கிறார். இந்தச் சட்டத்தின் பலன் அந்த ஏழை மக்களுக்குக் கிடைக்கப்போகிறதா? நீங்கள் ரெட்ராஸ்பெக்டிவ் எஃபக்ட் கொடுக்கிறோம் என்று சொல்கிறீர்கள். ஆனால விற்றுவிட்ட நகைக்கு என்ன பரிகாரம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1985 மார்ச் 20] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

ஏலத்தில் விடப்பட்ட நகை 10 பவுன். அந்த நகையை ஏலத்தில் விட்டவர் ஒரு மார்வாடி. அதை ஏலத்தில் எடுத்தவரும் ஒரு மார்வாடி. ஆக இரண்டு போர்களும் சேர்ந்துகொண்டு பங்கு பிரித்துக் கொள்கிறார்கள். இப்போது கேட்டால், இந்தச் சட்டத்திற்கு ரெட்ராஸ்பெக்ட்டிவ் எஃபக்ட் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அப்படியே கொடுத்தால் என்ன பரிகாரம் கிடைக்கும். ஏழைகள் போய் கேட்டால், வித்தியாசமான அந்தத் தொகைதான் கிடைக்கும். பத்து பவுன் இன்றைக்கு மார்க்கெட்டிலே என்ன விலை போகும் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் அந்த 10 பவுன் நகையையும், 2 ஆயிரம் ரூபாய்க்கு அவர்கள் ஏலத்திற்கு விடுகிறார்கள். அந்த அளவிற்குத் தான் அவர்கள் கணக்கும் எழுதுகிறார்கள். இப்போது அந்த நகையை வைத்த ஏழை போய் கேட்டால், அவன் வைத்த தொகைக்கும் இப்போது விற்கப்பட்ட தொகைக்கும் உள்ள வித்தியாசம்தான், அதுவும் ஆயிரமோ, அல்லது 800 ரூபாயோ தான் கிடைக்கும். 15 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நகை திரும்பக் கிடைக்காது. எனவே இத்தகைய சட்டங்களை அரசு உரிய காலத்தில் கொண்டு வந்திருந்தால், அதனுடைய நோக்கம் நிறைவேறி இருக்கும்.

24—8—1984 முதல் 29—1—1985 வரை உள்ள இடைப்பட்ட காலத்திலே ஏற்பட்ட தவறுகளுக்கு அரசு என்ன பொறுப்பு ஏற்கப்போகிறது என்பது தெரியவில்லை. காரணம் காலம் கடந்து கொண்டு வந்திருப்பதுதான்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் தாசில்தார்களுக்கு உள்ள அதிகாரம் பற்றிச் சொன்னார்கள். நான் ஒரு வழக்கறிஞர் என்ற முறையிலே சொல்கிறேன். இந்த ஆட்சியிலே தீட்டப்பட்ட நல்ல திட்டங்கள் அனைத்தும் இந்த அதிகாரிகளால் தான் வீணாக்கப்படுகின்றன. தாசில்தார் பற்றி, வழக்கறிஞர் என்ற முறையிலே எனக்கு நன்றாகத் தெரியும். ஒருமுறை ஒரு நபருக்கு ஒரு தாசில்தார் 19 ஆயிரம் ரூபாய் சொத்து மதிப்பீடு என்று சான்றிதழ் தருகிறார். பிறகு அதே நபர், அதே வழக்கிலே மறுபடியும் தாசில்தாரை அணுகுகிறார். அவர் 26 ஆயிரம் ரூபாய் மதிப்பீடு செய்கிறார். எனவே இப்படிப்பட்ட வினோதமான சான்றிதழ்கள் எல்லாம் அரசாங்கத்தின் அலுவலர்களாலே

[திரு. ஏ. எஸ். ரவீந்திரன்] [1985 மார்ச் 20

வழங்கப்படுகின்றன. அவை வழக்கு மன்றத்திலே கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. இது எதைப்போல இருக்கிறது என்றால் குரங்கு கையிலே கொடுத்த ஆப்பம் கதையைப் போன்று இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எனவே நீங்கள் மக்கள் கமிட்டியை அல்லது பொறுப்பானவர்களை இன்றைக்கு நியமித்து, ஒரு அடிப்படையை வகுத்து அதன்படி சான்றிதழ்கள் வழங்கவேண்டும் என்று சொல்ல வேண்டுமே தவிர, இப்படிப்பட்ட தாசில்தார்கள் மூலமாக சான்றிதழ்கள் பெறலாம் என்றால், நிச்சயமாக அது தாசில்தார்களுக்குத்தான் பயனுடையதாக இருக்கும். எனக்குத் தெரிந்த கடன் நிவாரண தாசில்தார் ஒருவர் அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி ரிடையர் ஆனார். அவர், செப்டம்பர் மாதம் முதல் தேதியிலிருந்து அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி வரையில் கிட்டத்தட்ட 500 சான்றிதழ்கள் வழங்கி அவைகளைப் பைசல் செய்தார். அதற்குப் பிறகு வீடு கட்டினார். அதிகாரிகள் எல்லாம் வந்து விசாரித்தார்கள். அது வேறு விஷயம். நான் அதிலே போகவில்லை. ஆகவே தாசில்தார்கள் வழங்குகின்ற அந்தச் சான்றிதழ்கள் வழக்குமன்றத்திலே கேலிக்குரியதாக ஆக்கப்படுகின்றன.

அதேபோல் பான் புரோக்கர்ஸ் ஆக்ட்டையும் திருத்தம் செய்து கொண்டு வந்தால் நலமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏன் என்றால் இப்போது இருக்கிற சட்டத்தில் ஓர் ஆண்டுக் காலத்திற்கு மேலே போனால் அசையும் பொருள்களை விற்கலாம் என்று இருக்கிறது. அதேபோல் அசையாப் பொருள்களை அடகு வைத்தால் அதற்கு 12 ஆண்டுக்காலம் உண்டு. ஆனால் அதிலும் ஒரு ஆண்டு என்று வைத்திருக்கிற காரணத்தினால் அதைப் பயன்படுத்திக் கொண்டு, நிச்சயமாக பான் புரோக்கர்கள் தான் பயன் அடைவார்கள். எனவே நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல இந்தச் சட்டத்தின் நோக்கம் நல்ல நோக்கம் என்றாலும், வரவேற்கப்படவேண்டிய நல்ல நோக்கம் உடைய சட்டம் என்றாலும், ஏழை எளியவர்களுக்குப் பயன்படவேண்டும் என்று கொண்டு வரப்பட்ட சட்டம் என்றாலும், ஒரு ஆண்டு என்று வைத்த காரணத்தால் இது அவர்களுக்கு முழுமையான பலனைத் தருமா என்ற ஐயப்பாடு எழுகிறது. ஆகவே, இடைக்



1985 மார்ச் 20] [திரு. ஏ. எஸ். ரவீந்திரன்]

காலத்தில் ஏற்பட்ட கடன்தாரர்களுக்கும் இதைச் சேர்த்து தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு, அதற்கேற்றாற்போல பான் புரோக்கர்ஸ் ஆக்டையும் திருத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்**: தலைவர் அவர்களே, இப்பொழுது 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவைப் பேரவையில் 16—3—1985 ஆம் நாள் அறிமுகம் செய்தபோது, அப்பொழுதே மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட அவசரச் சட்டம் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது, இந்தச் சட்டம் 23-3-1984-லே முடிவு அடைந்து விட்டது, அந்த இடைப்பட்ட காலத்தில் வட்ட ஆட்சியருக்கு நிவாரணம் கோரி வரும் மனுக்களை பெறவோ, கடன் கொடுத்துப் பெறும் பொருள்களை விற்பனை செய்யவோ கடன் கொடுத்தவர்களுக்கு அதிகாரம் இல்லை என்று குறிப்பிட்டார்கள்.

அப்படிப்பட்ட ஒரு இடைவேளை இருப்பதைப் பற்றி இன்று இங்கே விவாதத்தில் பேசும்போது கூடக் குறிப்பிட்டார்கள். அவர்களுடைய சந்தேகம் எல்லாம் இந்த இடைப்பட்ட காலத்தில் அந்தக் கடன் வாங்கியவர்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற அடிப்படையில்தான் ஐயத்தை எழுப்பினார்கள். ஏன் இப்படிப்பட்ட இடைவெளி ஏற்பட நேர்ந்தது என்பதைப் பற்றி ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

23—8—1984-ல் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டத்தை மேற்கொண்டு 6 மாதகாலம் நீட்டிக்க அரசு முடிவு செய்து ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்க வேண்டி, குடியரசுத் தலைவரின் முன் அனுமதிக்காக கடிதம் இயற்றி 18—9—1984-ல் மத்திய அரசுக்கு அனுப்பியது. மத்திய அரசின் முன் அனுமதி வரும் முன், 8—10—1984-ல் சட்டமன்றக் கூட்டத் தொடர் கூடியதால் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட வாய்ப்பு இல்லாத வகையில், அரசின் முடிவைச் செயல்படுத்த, 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்ட முன்வடிவாக அக்டோபர் 10 ஆம் நாள், சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது. 15—10—1984-ல் சட்டசபைக் கூட்டத் தொடர் மறுதேதி அறிவிக்கப்பெறாமல் ஒத்திவைக்கப்பட்டது. 15—11—1984-ல் கலைக்கப்பட்டது

பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான நாளும் குறிப்பிடப்
பெற்றது. பொதுத் தேர்தல் நடைபெறவிருக்கிற காலத்தில்
மக்களுக்குச் சலுகைகள் செய்யலாகாது என்ற தேர்தல்
சட்டப்படி அப்போது அவசரச் சட்டம் பிறப்பிக்கப்படவில்லை.

தேர்தலுக்குப் பிறகு குடியரசுத் தலைவரின் அனுமதியுடன்
30—1—1985-ல் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.
23—8—1984-ல் தமிழ்நாடு கடன் நிவாரணச் சட்டம் முடிவு அடை
வதால், மேற்கொண்டு கடன் நிவாரணம் வேண்டி வரும் மனுக்
களைப் பெற்றுக் கொண்டு, ஆனால் அதில் இறுதி முடிவு எடுக்காத
வாறு அப்படியே வைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு
மந்தண அறிவுரை 25—9—1984-ல் வழங்கப்பட்டுள்ளது. அவசரச்
சட்டம் பிறப்பித்த பின்பு, தகுந்த விளக்கங்களோடு 25—8—1984
முதல் பெறப்பட்ட மனுக்கள் மீது நிவாரணம் அளிக்க ஆணை
பிறப்பித்து அறிவுரை 12—2—1985 அன்று வழங்கப்பட்டது.

1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை எதிர்த்து
சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்யப்
பட்டது. தீர்ப்பு வழங்கப்படவில்லை. 1982 ஆம் ஆண்டு கடன்
நிவாரணச் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 50/82)-ன்படி காலம்
கடந்து மீட்கப்படாத அடைமானப் பொருள்களை விற்க வேண்டு
மானால் தனி வட்டாட்சியரின் அனுமதி பெற்றுத்தான் விற்க
முடியும் என்ற நிலை இருக்கிறது. ஆகவே 23—8—1984 முதல்
30—1—1985 வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் ஏழை எளிய
வர்கள் பாதிக்காதவாறு பாதுகாக்கப்பட்டுள்ளது என்கிற
விவரத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்லமுத்து அவர்கள்
ஒன்றைத் தெரிவித்தார். ஆண்டு வருமானம் ரூ. 4,800-க்கு மேற்
பட்டு வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. அது விரைவாகச் செயல்
படுத்தப்படுமா என்று கேட்டார்கள். அதை விரைவாகச் செயல்
படுத்த தனி வட்டாட்சியர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர்
அந்தப் பொறுப்பை ஏற்றவுடன் மாண்புமிகு உறுப்பினர் விரும்
பியபடி காரியங்களைக் கவனிப்பார்.





இந்தக் கடன் நிவாரணச் சட்டம் ஏழை எளியவர்களைக் கடன்
சுமையிலிருந்து காப்பாற்றுவதற்கான நல்ல எண்ணத்தோடு
கொண்டு வரப்பட்டிருக்கக் கூடிய ஒரு சட்டமாகும். பொது
வாக இதற்கு ஆதரவு இருக்கிறது என்று பார்த்து மகிழ்ச்சி அடை
கிறேன். இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள்
ஏகமனதாக சட்டமாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: தலைவர் அவர்களே, சட்டத்தைப்
பொறுத்தவரை வரவேற்கிறேன். ஆனால் தாசில்தார் ஒருவருக்கு
மட்டுமே அந்த அதிகாரம் இருப்பதினால், அந்தப் பலன்கள்
கிடைக்கவில்லை . . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு வழக்கறிஞர்
உட்பட 5 பேர் கொண்ட ஆலோசனைக் குழு கடன்காரர்களுக்கு
உதவும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

(நண்பகல் 12-00)

திரு. ப. பொன்னுரங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே,
இப்போது நம்முடைய கல்வி அமைச்சர் தந்த இதே விளக்
கத்தைத்தான் போன முறையும் தந்தார்கள். பிரசிடெண்ட்டிட
மிருந்து அசண்ட் வரவில்லை. அதையேதான் அவர்கள் திரும்ப
எழுதி கொடுத்து இவர் படித்திருக்கிறார். இந்தச் சட்டத்
தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை உடனடி
யாகவோ அல்லது இன் அட்வான்சாக—முன்கூட்டியோ, பிரசி
டெண்டுக்கு அனுப்பி அந்தத் தேதியிலிருந்து வருகிற மாதிரி
என் செய்யக்கூடாது? முன்பே நமக்கு ஒரு பாடம் இருக்கிறது.
(குறுக்கீடு).

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாற்றுத் தலைவர்
அவர்களே, பொதுவாக அவசரச் சட்டம் கொண்டு வரக்கூடாது
என்பது நடைமுறையில் உள்ள ஒன்றாகும். அவசியம் காரண
மாக அவசரச் சட்டம் கொண்டு வருகிறோம். முறையாக சட்ட
மன்றத்திலே கொண்டுவரப்பட்டு சட்டமாக்கப்படும். அவசரச்
சட்டம் கொண்டு வந்ததற்கு அனுமதி கேட்கிறோம். அவசரச்
சட்டம் சட்டமன்றம் கூடுகின்றபோது கொண்டுவர முடியாது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1985 மார்ச் 20

சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவு அடைந்து விட்டதால் முழுவதுமாக வரவில்லை. அதன் காரணமாக, பல்வேறு சட்ட முன்வடிவுகள் இரண்டாவது முறையாக இந்தச் சட்டமன்றத்திலே விவாதிக்கப்படுகின்றன. இந்தச் சட்டமும், அன்றைய தினம் விவாதிக்கப்பட்ட நிலையில், இன்றைக்கு வந்திருக்கிறது. கூட்டத் தொடர் தள்ளிவைக்கப்பட்டது மட்டுமல்லாமல், சட்டமன்றமே கலைக்கப்பட்ட சூழ்நிலையில், நாம் அவசரச் சட்டம்தான் கொண்டுவர வேண்டும். அவசரச் சட்டம் கொண்டு வருவதற்கு முன் தேர்தல் தேதி அறிவித்துவிட்டார்கள். தேதி அறிவித்துவிட்ட நிலையில், மக்களுக்குச் சலுகை தருகின்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவருவது தேர்தல் சட்டத்திற்கும், தேர்தல் நடைமுறைக்கும் புறம்பானது என்ற காரணத்தினாலே அது கொண்டுவரப்படவில்லை. தேர்தல் முடிந்தவுடன் சட்டமன்றக் கூட்டத் தொடர் இப்போது ஆரம்பித்த சூழ்நிலையில் அவசரச் சட்டம், அவை முன்னால் சட்டமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு)

1984-ம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, அக்டோபர் 10 ஆம் நாள் சட்டப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டது. 15—10—1984-ல் சட்டப்பேரவை மறு தேதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டது. 15—11—1984-ல் சட்டப்பேரவை கலைக்கப்பட்டது. அக்டோபர் 10 ஆம் நாள் அறிமுகம் செய்யப்பட்டு இருக்கிறது.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாற்றுத் தலைவர் அவர்களே, ஆணை போட்டாலும், தாசில்தார் அதனைக் கொடுக்கமாட்டேன் என்கிறார். அதனால் அந்த ஆணையை நிறைவேற்றுவதற்கு ஏதாவது புரோசிஜர் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இப்போது சொல்லப்பட்ட கருத்துக்களை அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும். வேறு ஏதாவது புகார்கள் இருந்தால், எழுதித் தந்தால், அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு ப. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.



1985 மார்ச் 20]

**மாண்புமிகு மாற்றுத் தலைவர்:** (திரு. செ. செம்மலை) பேரவை முன்னுள்ள கேள்வி:—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (ஈ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1985.

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 20—11—1984 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 26/1984) இப்பேரவை நிராகரிக்கிறது".

தீர்மானம் முறைப்படி வழி மொழியப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 14/1985)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

(உ) வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

திரு. ப. பொன்னுரங்கம்: மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் அவர்களால் 27—11—1984 ஆம் தேதியன்று பிறப் பிக்கப்பெற்ற 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 29/1984) இப்பேரவை நிராகரிக்கிறது.

தீர்மானம் முறைப்படி வழிமொழியப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 15/1985)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

* 1985 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளன.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. செம்மலை): திரு. பொன்னுரங்கம் அவர்களின் தீர்மானங்களும், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்காக வைக்கப்படுகின்றன.

திரு. மா. மணிமாறன்: மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கின்ற இந்தத் திருத்தச் சட்டத்தில் நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய கருத்துக்களை முன் வைப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய திருத்தங்களில் ஆயுட் காலங்களை நீட்டிப்பதுதானே, இது சர்வசாதாரணமான சட்டம் என்றெல்லாம் எனக்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் வேறு சமயங்களில் பேசினார்கள். அதுவும் அலுவலர்களின் ஆயுட்காலத்தை நீட்டிப்பதற்காகவே இந்த மூன்று நாள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டது. அந்த வகையில் அதிகாரி களுடைய அதிகார வரம்பை அதிகமாக்குவதற்கு ஒரு சட்ட மன்றம் சட்டங்களைத் திருத்திக் கொண்டிருக்கிறது. ஜனநாயக நீதியிலே மக்களுடைய வாக்குகளைப் பெற்று, ஆட்சியில் அமர்ந் திருக்கின்ற நாம், தொடர்ந்து அதிகாரிகளுடைய ஆதிக்கத்தில், ஜனநாயக அமைப்புகள் இருப்பது சர்வசாதாரணமானதுதானா என்பதை அரசு பரிசீலிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதைப் பொறுத்தவரையில் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். சென்ற தடவையும் சட்டமன்றம் கலைக்கப் பட்ட காரணத்தினால் இந்தச் சட்டங்களை நிறைவேற்றுவது சாதாரணமான நிலைதான் என்று சொல்வார்கள். ஆளுங் கட்சித் தரப்பில் இருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் இது சர்வ சாதாரணமானதுதான். ஆனால் எதிர்க் கட்சியில் இருக்கக் கூடிய எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம் இது மிகவும் அசாதாரணமானதுதான். எனவே அவர்களுக்கு இது சாதாரண மாக இருக்கிறது. எங்களுக்கு இது அசாதாரண நிலையில் இருக்கிறது. எனவே சாதாரணமும், அசாதாரணமும் இரண்டும் சேர்ந்து இன்றைக்கு இப்படிப்பட்ட குளறுபடி செய்து

[திரு. மா. மணியாறன்] [1985 மார்ச் 20

கொண்டிருக்கிறது. எனவே இந்த நிலைமையைப் பொறுத்த வரையில் விவரம் அதிகமாகவே சொல்லியிருக்கிறார்கள். 1978 லிருந்து இன்றைக்கு வரை ஆயுட்காலத்தை நீட்டித்துக் கொண்டு வருவதற்கு, உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அல்லது பொறுப் பிலுள்ள அதிகாரிகளாக இருந்தாலும் சரி, ஏன் ஆயுட் காலத்தை நீட்டித்துக் கொண்டு வருகிறார்கள் என்ற காரணத்தைச் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால், விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். விவரங்கள் சேகரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது எத்தனை ஆண்டுக்காலமாக? ஏறத்தாழ 7, 8 ஆண்டுக்காலமாக விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருக் கிறார்கள். இன்றைக்கு வரை விவரங்கள் கிடைத்திருக்கின் றனவா என்பதை விவரம் தெரிந்தவர்கள்தான் சொல்லமுடியும். அவர்களுக்கு? ஆண்டுக்காலம் விவரங்களைச் சேகரிக்கத் தேவைப் படுகிறது. இப்போது விவரம் இல்லையென்று சொல்கிறீர்களா? விவரம் இல்லாமலும் இருக்கலாம். எனவே விவரம் தெரிந்தவர்கள் இருந்தாலும் கூட, விவரம் இல்லாமல் இருக்க வேண்டிய நிலையில் இப்படி நீட்டித்துக் கொண்டு வருகிறார்கள். எனவே இப்படி விவரம் தெரிந்தவர்கள்கூட விவரத்தைத் தேடுகின்ற நிலையில்தான் இன்றைக்கு அரசு நீட்டித்துக்கொண்டு வருகிறது. இப்படி நீட்டித்துக்கொண்டு வருவதன் காரணத்தினாலே ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அமைப்புகள் இன்றைக்கு சர்வாதிகார அமைப்புகளாக அரசியல் அதிகாரி களுடைய கையில் அகப்பட்டுக்கொண்டு, மக்களுடைய உணர்வு களை பிரிதிபலிக்க முடியாமல் இருக்கின்றன. அன்றாடம் ஏற்படும் தேவைகளின் சிக்கல்களைப் போக்குவதற்கு முடிய வில்லை. இப்படிப் பார்க்கின்ற நேரத்திலே, பல அரசு திட்டங் களை நிறைவேற்றுவதற்கு அரசு அதிகாரிகள் இன்றைக்குச் சங்கடமாக இருந்து கொண்டிருக்கிறார்கள்.

மார்க்கெட்டிங் கமிட்டிகளைப் பொறுத்தவரையில், அங்கே புஞ்சைத் தான்யங்களை, புஞ்சைப் பயிர்களை அதிகமாக வாங்கிக் கொண்டு வருகிறார்கள். அதுவும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நாங்கள் எல்லாம் நெல்லை இப்படி விற்கமுடியாது. அரசாங்கத்தினுடைய பாலிசியாகி விட்டது. எனவே அங்கே இருக்கின்ற புஞ்சை தான்யங்



1985 மார்ச் 20] [திரு. மா. மணிமாறன்]

களைத்தான் மார்க்கெட்டிங் கமிட்டிகளுக்கு விற்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்ற நேரத்தில், அங்கே கூட பேரங்கள் பேசு படுகின்றன. யார் வியாபாரிகளாக வருகிறார்கள் என்று சொன்னால், அந்தப் பஞ்சையை வாங்குவதற்கு வருகின்ற வியாபாரிகள் ஒட்டு மொத்தமாக வந்து சேர்ந்துவிடுகிறார்கள். அதைப்போல மத்திய அரசாங்க அதிகாரிகள்கூட வியாபாரி களுடன் சேர்ந்துகொண்டு, விலை ஏறாமல் தடுப்பதற்கு கண்ணும் கருத்துமாக ஆதரவாக இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த நிலையில் தொடர்ந்து தஞ்சை மாவட்டத்திலே வெள்ளம், வறட்சி எல்லாம் வந்து பாதிக்கப்பட்ட காரணத் தினாலே நெல்லுக்கு நியாயமான விலை விவசாயிகளுக்குக் கிடைக்காத நிலையில் 8 ஆண்டுக்காலமாக அவர்கள் கடன்களைக் கட்டமுடியாமல் நிலுவைகள் ஏற்பட்டு கூட்டுறவுக் கடன் போன்றவைகளைக் கட்டமுடியாமல் இருக்கின்ற நிலையிலே நெல்லுக்கு நியாயமான விலை பெற்றுத் தர முடியவில்லை என்பதை நீங்களே ஒப்புக் கொண்டு இருக்கிறீர்கள்.

(பிற்பகல் 12-10)

மத்திய அரசைக் கேட்டுக்கொண்டும் ஏற்றுக்கொள்ளாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது. உற்பத்திச் செலவு இன்றைய தினம் அதிகமாகிவிட்டதால் நெல்லுக்கு சரியான விலை கிடைக்கவில்லை என்பதை இங்கே கூறிக்கொண்டிருக்கிறீர்கள், நெல்லுக்குச் சரியான விலை கிடைக்கவில்லை என்பதைச் சொல்லிக் கொண்டிருக்கிறபோது பஞ்சும் பாதிக்கப்பட்டிருக் கிறது, புஞ்சை தானியங்கள்கூட மார்க்கெட்டிங் கமிட்டிக்கு வரக் கூடிய நேரத்திலே தடுக்கப்படுகிற நிலைதான் இருக்கிறது. காரணம் அங்கே இடவசதிகள் இல்லை. மார்க்கட்டிங் கமிட்டி களுக்கு எடுத்துச் செல்லுகிற பருத்தியை விற்கமுடியவில்லை. காரணம் வியாபாரிகள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து பேரம் பேசி குறைவான விலைக்கு ஏலம் கேட்கிறார்கள். குறைவான விலை என்பதால் பருத்தி ஏலம் போகவில்லை. அதனால் அங்கே கொண்டு போகப்பட்ட பஞ்சை சேமித்து வைக்கத்தான் வேண்டியிருக் கிறது. அப்படி சேமித்து வைக்க இடவசதிகள் இல்லை. வெளியேதான் அவைகளை வைக்கவேண்டியிருக்கிறது. அப்படி வைத்திருக்கிறபோது மழை பெய்து இரண்டொரு மழைத் துளிகள்,

[திரு. மா. மணிமாறன்] [1985 மார்ச் 20

பட்டுவிட்டால்கூட பஞ்சைக் கொடுத்த விவசாயிகளின் நிலை
பரிதாபகரமானதாக ஆகிவிடுகிறது. பஞ்சைப் பாதுகாப்பதற்
காக மார்க்கெட்டிங் கமிட்டியிலே இட வசதிகள் இல்லாமல் இருக்
கிறது. லேண்ட் அக்விசிஷன் செய்யப்படுவதில்லை. பூந்தோட்டம்
என்ற இடத்திலே லேண்ட் எடுத்து 2, 3 ஆண்டுகள் ஆகியும்
கட்டடம் கட்டப்படவில்லை. இதற்கெல்லாம் என்ன காரணம்
என்றால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லை
என்பதுதான். அதிகாரிகள் தான் அவைகளை ஆட்சி செய்து
கொண்டிருக்கிறார்கள் அதிகாரிகள் என்றால் அவர்களுக்குச்
சம்பளம் வந்தால் போதும், பென்ஷன், கிராஜுவட்டி போன்ற
வைகள் கிடைத்தால் போதும் அவர்களுக்கு வேறு என்ன வேலை?
அவர்களுக்கு இதைப்பற்றி எல்லாம் கவலை இல்லை. ஆனால்
மக்கள் கவலைப்படுகிறார்கள். மக்கள் எண்ணங்களிலே ஊடுரு
விக் கொண்டிருக்கிறவர்கள் கவலைப்படுகிறோம். அவர்களே
இன்றைக்கு அசட்டை செய்வதற்கு என்ன காரணம்? இன்றைக்கு
அதிகாரிகள் ஆட்சிதான் தமிழ்நாடு முழுவதும் இருந்துகொண்
டிருக்கிறது.

எனக்கு ஒரு சந்தேகம். தமிழ்நாடு அரசுக்கே ஒரு ஸ்பெஷல்
ஆபீசரை நியமித்து அவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்து
விடுவார்களோ என்று எனக்கு ஒரு பயம். ஆனால் விடமாட்
டார்கள், காரணம் அதிகாரம் இருக்கிறது, அதிகாரத்தைக்
கொடுத்துவிடமாட்டார்கள். ஆகவே இந்த அரசு ஸ்பெஷல்
ஆபீசரிடம் போகாது. அது போகாது என்கிறபோது இதை
ஏன் அவர்களிடம் ஒப்படைக்கிறார்கள் என்று தெரியவில்லை.
விவரங்கள் சேகரிக்க 7 ஆண்டுக் காலம் ஆகிறதா? 7 ஆண்டுக்
காலமாக விவரங்கள் சேகரிக்க முடியாத அரசு தொடர்ந்து
நீடிப்பது நியாயமா? இந்த விவரங்களையெல்லாம் உடனடி
யாகச் சேகரித்து எதிர்காலத்திலேயாவது இந்த அதிகாரிகளை
யெல்லாம் நீக்கி தேர்தலை நடத்தி மக்களாட்சி தன்மைகளை
உணர்ந்து ஜனநாயக அமைப்புகளை உருவாக்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி வணக்கம்.

திரு. வி. தங்கவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்
களே, இந்தத் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள்
சட்டத்தை இந்திய தேசியக் காங்கிரஸ் அமைப்பு சார்பாக
நாங்கள் முழுமனதாக வரவேற்கிறோம். அதே நேரத்திலே





1985 மார்ச் 20] [திரு. வி. தங்கவேலு]

இன்றைக்குத் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகளில்
நடக்கக்கூடிய சில குறைபாடுகளை நான் சுட்டிக்காட்ட விழை
கிறேன். இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த அளவிலே
இந்தியா விவசாயிகளை நம்பியிருக்கிறது, இந்திய நாடு விவசாயி
களுடைய நாடு என்று சொல்லப்படுகிறது. ஆனால் அதே
சமயத்தில்

'those who are producing the agricultural commodities
என்று சொல்வார்களே, உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப்
பொருட்களுக்கு நியாயமான விலை குறித்த நேரத்திலே கிடைக்
கிறதா என்பது வினாக் குறியாக இருக்கிறது.
Production of the consumable commodities or agricultural com-
modities must have reasonable prices

என்று சொல்வார்களே அந்த முறையில் உற்பத்தி செய்யப்படக்
கூடிய பொருட்களுக்கு குறித்த காலத்திலே நியாயமான விலை
கிடைக்கிறதா என்பது கேள்விக்குறி.

அப்படிப் பார்க்கிற நேரத்திலே தமிழ்நாடு வேளாண் விளை
பொருள் சந்தைகள் என்று சொல்லக்கூடிய ரெகுலேட்டிங்
மார்க்கெட் என்று சொல்லக்கூடிய அந்த கமிட்டியில் உற்பத்தி
செய்த பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்று
தான் கொண்டு செல்கிறார்கள். உதாரணமாக பஞ்சு போன்ற
பொருட்களும் புஞ்சைத் தானியங்களும் உற்பத்தி செய்யப்படு
வதற்கு முன்பாகவே அங்கே இருக்கக்கூடிய வியாபாரிகள் பணத்
தைக் கொடுத்துவிடுகிற காரணத்தினால் உற்பத்தி செய்தவர்
களுக்குப் பலன் போய்ச் சேரவில்லை. உதாரணத்திற்குச்
சொல்லவேண்டுமானால் கோவை மாவட்டத்திலே எடுத்துக்
கொள்வோமானால் பஞ்சு அதிகமாக உற்பத்தியாகிறது, பருத்தி
அதிகமாக உற்பத்தி செய்யக்கூடிய விவசாயப் பெருங்குடி
மக்களை வியாபாரிகள் — அவர்கள் பஞ்சு உற்பத்தி செய்வதற்கு
முன்பாகவே — பருத்தி செடியாக இருக்கிறபோதே வலியச்
சென்று கடன் தருகிறார்கள். வேண்டாம் என்று அவர்கள்
சொன்னாலும்கூட இதை வாங்கிக் கொள்ளுங்கள், எப்போது
உங்களிடம் பணம் பெறமுடியுமோ அப்போது பெற்றுக் கொள்
கிறோம் என்று வலியச் சென்று கடனைத் தந்துவிட்டு பருத்தி
விளைவதற்கு முன்பே அல்லது பருத்தி விளைந்த பின்பு பருத்தி

யைப் பெற்று மார்க்கெட்டிங் கமிட்டிக்குத் தருவதற்கு முன்பே உற்பத்தியாளர்கள் 1 ரூபாய்தான் லாபம் பெருகிறார்கள் என்றால் இண்டர்மீடியரீஸ் என்று சொல்லப்படுகிற அந்த வியாபாரிகள் கொண்டு இருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு மார்க்கெட்டிங் என்று சொல்லக்கூடிய வேளாண் விளைபொருள் சந்தையிலே இருக்கக்கூடிய அதிகாரிகளைப் பார்ப்போமானால் — அவர்களைத் தட்டிக் கேட்கக்கூடிய ஆட்கள் இல்லாத காரணத்தினால்—சட்டத்திட்டங்களை உற்பத்தியாளர்களுக்குச் சொல்வதை மறந்துவிட்டு எப்போது சென்று கேட்டாலும் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு என்ன விலை என்று சொல்வதற்குக்கூட முன்வராமல் சில இடங்களிலே அதிகாரிகளே வியாபாரிகளாக மாறக்கூடிய துர்பாக்கியமான நிலை உருவாகியிருக்கிறது. இந்தச் சட்டத் திருத்தம் உண்மையிலேயே தேவைதான். உற்பத்தி செய்யக் கூடிய பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவேண்டும், உரிய நேரத்திலே கிடைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. மா. சின்னராசு:** மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டு இருக்கிற வேளாண் விளைபொருள் அங்காடிகள் திருத்தச் சட்டத்தை ஆதரித்து ஒருசில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம் வேளாண்மை செய்து கொண்டிருக்கிற ஆயிரக்கணக்கான லட்சக்கணக்கான விவசாய மக்களுக்கு, தங்களுடைய விளைபொருட்களுக்குரிய விலையைப் பெற்றுத் தருகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிற வேளாண்மை விற்பனை அங்காடிகள் தொடர்ந்து மக்களுக்குரிய சேவையைச் செய்வதற்கு விற்பனை அங்காடிகளின் நிர்வாக அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுகிற வகையில், முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் வருகிற வரையில், ஆலோசனைக் குழுக்கள் என்ற முறையில் அந்தந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயிகளைக்





கொண்ட குழுக்களை அமைப்பது விவசாயப் பொருட்களுக்கு உரிய விலையைப் பெற்றுத் தருகிற முயற்சிக்கு உதவியாக இருக்கும் என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய ஆலோசனைக்காக வைக்கிறேன்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பருத்தியும் நாட்டுச் சர்க்கரையும் கரும்பு வெல்லமும் நிறைந்த அளவு மார்க்கட்டிங் கமிட்டியினுடைய எல்லைக்குள்ளே வராமல் விற்பனைக்குத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது. ஓரளவுக்குப் பருத்தியை ரெகுலேட்டிங் மார்க்கட்டிலே கொண்டுவந்திருந்தாலும் கரும்பு விளைபொருட்களான சர்க்கரையையும் வெல்லத்தையும் நாம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கொண்டு வர முடியவில்லை என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதற்கு அரசு எடுத்துக் கொண்ட தீவிர முயற்சி வணிகர்களுடைய ஒட்டுமொத்தமான எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருக்கிறது என்பதையும் அதை மீண்டும் பரிசீலனை செய்து பெரும் அளவு கோவை மாவட்டத்திலே கிணற்றுப் பாசனத்தை நம்பி இருக்கிற விவசாயிகளாக இருக்கிற காரணத்தினாலே அவர்கள் உற்பத்திசெய்கிற கரும்பைக் கொண்டு செல்வதற்கு சர்க்கரை ஆலை எதுவும் அருகாமையில் இல்லை. அவர்கள்

(பிற்பகல் 12-20)

நம்பியிருப்பது அங்கேயுள்ள மார்க்கெட்டைத்தான். அதுவும் தனியார் பொருள்களின் இலாபத்திற்குப் பயன்பட்டு வருவதால், மீண்டும் இந்தக் கரும்பு உற்பத்திப் பொருட்களுக்கான சர்க்கரை மார்க்கெட்டை, இந்த அங்காடிகளினுடைய எல்லைக்குள் கொண்டு வந்து முழுவதும் கரும்பு சர்க்கரை விளைபொருட்களை நம்முடைய ரெகுலேட்டட் மார்க்கெட்டிற்குள் கொண்டு வருகின்ற முயற்சிகளை மாண்புமிகு அமைச்சரவர்கள் எடுத்துக்கொள்வதைப்பற்றித் தீவிரமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விவசாயப் பொருட்களில் காய்கறிகளும், வாழையும் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அந்த அங்காடிகளைப் பொறுத்தவரையில் அவைகளைத் தங்களுடைய ஆதிக்கத்திற்குள் கொண்டு வரவில்லை. ஆகவே, அந்தப் பொருட்

களை உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு நிலையான விலையைப் பெற்றுத் தர முடியாமல், அவைகளை உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் பலயிடங்களில் அல்லலுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, காய்கறிகளையும், வாழையையும் நமது ரெகுலேட்டட மார்க்கெட்டிற்குள் உட்படுத்துகின்ற உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் பலயிடங்களில் மார்க்கெட் கமிட்டிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்கு அதனுடைய நிதியிலிருந்தும், அரசினுடைய நிதியிலிருந்தும் பணம் ஒதுக்கியும்கூட பல ஆண்டுகளாகியும் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. தொண்டாமுத்தூர் மார்க்கெட் கமிட்டி, காரமடை மார்க்கெட் கமிட்டிக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டிக் கொடுப்பதுபற்றி அரசின் பரிசிலனையில் கிட்டத்தட்ட பத்தாண்டுகளாக இருக்கிறது. அதற்கு வேண்டிய நிலத்தைக் கையகப்படுத்த முடியாமல், கட்டுமானப் பணிகளின் செலவு கூடிக் கொண்டே வருகிறது என்பதைப்பற்றி மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு ஏற்கனவே கொண்டு வந்திருக்கிறேன். அதில் உள்ள பிரச்னை என்னவென்றால், அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலைக்கு அந்த நிலச் சொந்தக்காரர்கள் கொடுப்பதற்கு முன் வருவதில்லை. மார்க்கெட் விலைக்கும், அரசாங்கம் நிர்ணயிக்கின்ற விலைக்கும் மிக அதிக வேறுபாடுகள் இருக்கின்றன. இப்படி நிலத்தைக் கையகப்படுத்த முடியாமல் இருக்கின்ற காரணத்தினால், கட்டுமானச் செலவு பல இலட்சக்கணக்கான ரூபாய் அளவிற்குக் அதிகரிக்கக் கூடிய நிலைமை இருக்கிறது. 20 அல்லது 25 இலட்சம் ரூபாய் செலவில் கட்டு. முடிக்கப்பட வேண்டிய அந்தக் கட்டிடங்கள் இன்றைக்குக் கிட்டத்தட்ட 50 அல்லது 70 இலட்சம் ரூபாய் அளவிற்குப் போகக் கூடிய நிலைமைகள் இருக்கின்றன. எனவே, கட்டுமானப் பணிகளின் செலவினத்தை அதிகரிக்கும் என்பதைக் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கட்டிடத்தைக் கட்டிக்கொடுத்து, விவசாயிகளின் தேவைகளை முழு அளவிற்கு நிறைவேற்றுகின்ற வகையில், அங்காடிகளைக் கட்டிக் கொடுப்பது தடைப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த இடர்ப்பாட்டை நீக்குகின்ற வகையில், ஓரளவிற்கு மார்க்கெட் கமிட்டிகள் நியாயமான விலை கொடுத்து, தொடர்ந்து எஸ்கலேஷன் என்று சொல்லக் கூடிய கட்டுமானச் செலவின் உயர்வைத் தடுக்கின்ற முறையில்





நில ஆர்ஜிதம் செய்து அல்லது நியாயமான விலைக்குப் பேசி மார்க்கெட் கமிட்டியே மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியோடு இப்படிப்பட்ட நிலங்களை எடுத்து கட்டுமானப் பணிகளை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, காய்கறி உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கும் இதனால் பயன் கிட்டுகின்ற அளவிற்கு இந்தச் சட்டத்தை உரிய திருத்தங்களோடு வருகின்ற காலங்களில் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமைச்சர் அவர்களுடைய தீர்மானத்தை வரவேற்று முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. கோ. வீரய்யன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை நேற்று முன்மொழியும்பொழுதே எங்களுடைய கட்சியின் சார்பில் எங்கள் கட்சியின் குழுத் தலைவராக மாண்புமிகு திரு. கே. ரமணி அவர்கள் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாகக் கடந்த மூன்று நாட்களாகவே நம்முடைய சட்டப்பேரவையின் முழு நேர வேலையும் ஆர்டினன்ஸ் முழுவதையும் ஆக்டாக மாற்றிக் கொண்டிருக்கக் கூடிய அந்த வேலைகளைத்தான் செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு மிகப் பெரிய நிலைமையாக மாறியிருக்கிறது. அதுவும் மக்களோடு, விவசாயிகளோடு ஜீவனாக உறவாடிக்கொண்டிருக்கக் கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும், வேளாண் விளைபொருள் சந்தைகளுக்கும், இதுபோன்ற அமைப்புகளுக்கெல்லாம் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்துக்கொண்டே இருக்கக் கூடிய அவசரச் சட்டங்களையெல்லாம் அசல் சட்டங்களாக மாற்ற வேண்டிய நிலைமையில், நம்முடைய சட்டப் பேரவை செய்ய வேண்டிய ஒரு சங்கடமான நிலையில் இருக்கிறது.

நான் இங்கே எடுத்துக்காட்ட விரும்புவது இவை எல்லாம் தனி அதிகாரிகளின் மூலமாக நடந்துகொண்டிருப்பது ஒரு ஆரோக்கியமானதாக இருக்காது என்பதுதான். குறிப்பாக இங்கே வைத்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவில் கோயம்புத்தூர் சந்தைக்குழுவினுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிக்கப்படவேண்டும் என்று வற்புறுத்தப்படுகின்றது.

[திரு. கோ. வீரய்யன்] [1985 மார்ச் 20

இன்னொன்று புதுக்கோட்டை பற்றிக் குறிப்பிடுகின்றது.
குறிப்பாக கோயம்புத்தூர் சந்தைக் குழு சரியாகச் செயல்பட
வில்லை என்ற காரணத்தை வைத்து 1977 ஆம் ஆண்டு மே மாதம்
11 ஆம் தேதி அது கலைக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டு
ஓராண்டு காலத்திற்கு மட்டும் என்று கூறப்பட்டது. ஆனால்
இப்போது வந்திருக்கக்கூடிய சட்டத் திருத்தத்தினை நாம்
பார்க்கும்போது இதனுடைய மூலச்சட்டத்தின் பிரிவு 24 (1)
என்பதையே ஓராண்டு என்று திருத்தி அதிலே மேலும், மேலும்
திருத்தங்கள் செய்து இன்றைக்கு எட்டாண்டுக் காலத்தை இது
எட்டியிருக்கின்றது.

அதேபோல்தான் புதுக்கோட்டையில் 1978 ஆம் ஆண்டு 33-வது
சட்டத்தின்கீழ் தனி அதிகாரிகளை நியமித்தீர்கள். அதுவும்
ஓராண்டு என்று ஆரம்பத்தில் சொல்லப்பட்டு இப்போது ஏழு
ஆண்டுக்காலத்திற்கு மேல் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே
நீட்டித்துக்கொண்டு போவதன் காரணத்தால், அதாவது தனி
அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டித்துக்கொண்டே
போவதால் விவசாயிகளுக்குப் பல்வேறுவிதமான சங்கடங்கள்
ஏற்படுகின்றன. அவர்கள் எண்ணற்ற கஷ்டங்களை அனுபவிக்
கிறார்கள். தனி அதிகாரிகளின் கையிலே அந்த நிர்வாக
அமைப்புகள் இருப்பதன் காரணத்தால்தான் அவர்கள் எல்லாம்
அவ்வாறு மிகவும் வேதனைப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.
விளைந்த பொருட்களை விற்பதற்குக் கொண்டு செல்லக்கூடிய
விவசாயிகள் அவமானப்படுத்தப்படுகிறார்கள், கேவலப்படுத்தப்
படுகிறார்கள் இந்த தனி அதிகாரிகளால். சேலம் மாவட்டத்திலே
சென்ற ஆண்டு 1,400 ரூபாய்க்கு விற்ற அந்த சுவின் பருத்தியின்
விலை இந்த ஆண்டு 900 ரூபாய்க்கு விற்கப்படக்கூடிய நிலைமை
இருக்கின்றது. இவ்வாறு அந்த சுவின் பருத்தியின் விலையில்
500 ரூபாய் இந்த ஆண்டு குறைந்திருக்கின்றது. இப்படிப்பட்ட
நிலைமையில் அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பு
அளிப்பதற்குப் பதிலாக வேறு ஒரு ஆலோசனை அவர்களுக்குக்
கூறப்படுகின்றது.

அதாவது சேலம் மாவட்டத்தில் ஆத்தூர் தொகுதியில் மிக
நீண்ட இழை தரக்கூடிய சுவின் பருத்திச் சாகுபடிக்கு ஏற்ற
இடமாக இருந்தாலும், இப்படி விலையில் பாதிப்பு ஏற்படுகின்ற
காரணத்தால் அதனை அங்கே சாகுபடி செய்ய வேண்டாம்



1985 மார்ச் 20] [திரு. கோ. வீரய்யன்]

என்ற ஆலோசனை விவசாயிகளுக்குக் கூறப்பட்டிருக்கின்றது
என்று கேள்விப்படுகிறேன். நம்முடைய மாநிலத்திலே பருத்தி
உற்பத்தி போதாது என்று சொல்லப்படுகின்ற நிலைமையில்
அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்துதான் ஈடுகட்ட
வேண்டிய நிலையில் இருந்தாலும் இங்கே உற்பத்தி செய்யப்பட்ட
சுவின் பருத்திக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்ற ஒரே
காரணத்திற்காக அதை உற்பத்தியே செய்யவேண்டாம் என்று
சொல்லி இருக்கிறார்கள். அதுபற்றி பத்திரிகையில் வந்திருப்பதை
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்திருப்பார்கள் என்று
நான் கருதுகிறேன்.

அதேபோல மதுரை, தேனி, போடி போன்ற பகுதிகளில்
உற்பத்தி செய்யப்பட்ட சுவின் பருத்திக்கும் உரிய விலை
கிடைக்காமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆனால்
விலையைக் குறைத்துவிட்டால் ஒரே நாளிலே விற்றுவிடும்.
ஆனால் நியாயமான விலை கிடைக்கவேண்டும் என்று
நினைத்தால் மிகவும் கஷ்டப்படவேண்டிய நிலைமைதான்
ஏற்படுகின்றது. இந்த மார்க்கெட்டிங் கமிட்டி சரியாக நடை
பெறாததன் காரணத்தால் கோவை, பெரியார் போன்ற மாவட்டங்
களில்கூட விவசாயிகள் எல்லாம் தனிப்பட்ட வியாபாரிகளை
நம்பிக்கொண்டிருக்கவேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. இந்த
மார்க்கெட்டிங் கமிட்டி இப்போது தனி அதிகாரிகளின்
பொறுப்பில் இருக்கின்ற காரணத்தால் மிக மோசமான நிலைமை
ஏற்படுகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரிந்
திருக்கும் என்று கருதுகிறேன். திண்டுக்கல்லிலே ஒரு
மார்க்கெட்டிங் கமிட்டி அலுவலகம் இருக்கின்றது. அந்த
நகரத்திற்கு அப்பால் கிட்டத்தட்ட, மூன்று, நான்கு கிலோ
மீட்டருக்கு வெளியே அது இருக்கின்றது. அதன் காரணத்தால்
அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் சரக்கை எடுத்துக்கொண்டு
போகவோ அங்கே வைத்து விற்கவோ எந்தவிதமான
பாதுகாப்பும் இடையாது. அப்படிப்பட்ட நிலைமையில் அந்த
மார்க்கெட்டிங் கமிட்டி அந்த விவசாயிகள் பொருட்களைக்
கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாத நிலைமையில்
இருக்கின்றது. அவர்களுக்கு பலவிதமான சங்கடங்கள்
ஏற்படுகின்றன. இன்னும் சொல்லப்போனால் அந்த மார்க்கெட்டிங்
கமிட்டியைப் பொறுத்தவரையில் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்

போனால் செஸ் கட்டவேண்டும். எனவே அந்த செஸ்ஸை வசூலிப்பதில்தான் மார்க்கெட்டிங் கமிட்டி சிரத்தை எடுத்துக் கொள்கின்றதே தவிர, விவசாயிகள் கொண்டு வந்திருக்கக்கூடிய பொருட்களை விற்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. இப்படிப் பட்ட துன்பங்களும் துயரங்களும் விவசாயிகளுக்கு ஏற்படுகிறது. இன்னும் சில இடங்களிலே இரவு 10 மணி, 11 மணிக்குப் பணம் பட்டுவாடா செய்து, இரவு நேரத்திலே அவர்கள் பணத்தோடு வீடு செல்லமுடியாத சூழ்நிலையில் அங்கேயே தங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. அப்பொழுது, விவசாயிகள் கேவலப்படுத்தப் பட்டு, பணத்தைப் பறிகொடுத்து போகக்கூடிய நிலைமைகள் எல்லாம் ஏற்படுகின்றன.

(பிற்பகல் 12-30)

ஆகவே, இப்படி மார்க்கெட்டிங் கமிட்டி விவசாயிகளுக்கு உதவி செய்வதற்குக் கட்டுப்படி விலை கொடுப்பதற்குப் பதிலாக, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பு இல்லாததனால், அந்த மார்க்கெட்டிங் கமிட்டியிடம் பணம் கையிருப்பு, அதிகமான முதலீடு கையிலே இருந்தாலுங்கூட, அந்தப் பணத்தை விவசாயி களுக்குக் கொடுத்து, சரக்கை வாங்கிவைத்துக் கொண்டு, பிறகு விற்று, அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்வதற்குக்கூட முடியாத நிலை இருக்கிறது. அப்படிச் செய்வது, விவசாயிகளுக்குச் சௌகரியம். எல்லா மார்க்கெட்டிங் கமிட்டியிலும் பணம் இல்லையென்றாலும் இருக்கக்கூடிய கமிட்டி, தன்னுடைய பணத்தில், சரக்கைக் கொள்முதல் செய்து வைத்துக் கொண்டு, மறுபடி அதை விற்பனை செய்து எடுத்துக் கொள்வதற்கு முடியும். இன்னும் சொல்லப் போனால், வியாபாரிகள் சேர்ந்து கூட்டு முடிவு எடுத்துக் கொண்டு இந்த விலைக்கு மேல் கேட்கக்கூடாது என்ற நிலை எடுத்து, விவசாயிகளை நிர்பந்தப்படுத்தும்போது, பல மைல்களிலிருந்து அங்கே சரக்கை எடுத்துக்கொண்டு வந்த விவசாயிகள் திருப்பி எடுத்துச் செல்ல முடியாத நிலையிலே கேட்ட விலைக்கு விற்றுச் செல்ல வேண்டிய தன்மையை விவசாயிகள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.





அதிலே, உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழு இருந்தால், அவர்களிடம் வற்புறுத்தி தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்கான நிலைமைகள் இருக்கும். அந்த நிலைமைகளுக்கு மாறாக, இப்படி ஏழு ஆண்டுகள், எட்டு ஆண்டுகள் நீடித்துக் கொண்டே போனால் விவசாயிகளுக்கு மேன்மேலும் துன்பத்திலே வெம்பியிருக்கக்கூடிய நிலைமையிலே, வெதும்பி இருக்கக்கூடிய நிலைமையிலே, அது அதிகரிக்கும். இப்பொழுதும்கூட இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கக்கூடிய இந்தச் சட்டம் 11—5—1985 அன்றோடு முடிகிறது.

இந்தச் சட்ட முன்வடிவினை நாம் பார்ப்போமானால் நிச்சயமாக வரப்போகின்ற மே மாதம் 11 ஆம் தேதியோடு ஒரு ஆண்டுக் காலம் முடிவடைகிற காரணத்தாலே, அதற்குப் பிறகு வேறு அவசரச் சட்டத்தைப் போட்டு, ஒன்பது ஆண்டுகளுக்குப் பதிலாக 10 ஆண்டுகள் என்று அறிவிக்கப்பட வேண்டிய நிலைமை வந்து, அடுத்த சட்டப் பேரவைக் கூட்டத்திலே அந்த அவசரச் சட்டத்தை, சட்டமாக மாற்றுவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களோ என்ற அச்சம் ஏற்படுகிறது. எனவேதான் இந்தச் சட்டம் 11—5—1985 முடிவதற்குள்ளாக தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்பைக் கொண்டு வர வேண்டும். இதிலே சொல்லப்படுகிற காரணம், சட்டம் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பது. அந்தச் சட்டம் தயாராகிற வரையிலே, நிறைவேற்றப்படுகிற வரையிலும் இது என்று சொல்லப்படுகிறது. இதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. இன்றைக்கு இருக்கக்கூடிய சட்டத்திலேயே ஒரு அமைப்பை ஏற்படுத்திக் கொண்டால், சட்டம் கொண்டு வருவதற்கு அந்த அமைப்பு, போர்ட் ஆப் டைரக்டர்ஸ் அல்லது நிர்வாகக் குழு இருந்து செயல்படுவது—ஒரு சட்டத்தை அரசு தயாரிப்பதற்கு எப்படி குறுக்கே நிற்கும், எப்படிச் சங்கடத்தை விளைவிக்கும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை, மற்றவர்களுக்கு என்னால் புரிய வைக்க முடியவில்லை. ஏனென்றால், அங்கே ஒரு போர்ட் இருந்தால், சட்டத்தைத் தயாரிக்க என்ன கங்கடத்தை ஏற்படுத்தும்? எனவே, போர்டை நீங்கள் ஏற்படுத்துங்கள். சட்டத்தை நீங்கள் சாவகாசமாக, பொறுமையாக, நிதானமாக, எல்லா அம்சங்களையும் பரிசீலித்து, தயாரித்து கொண்டு வாருங்கள். அதுவரையில், சட்டம் தயாரிக்கக்கூடிய காலம்

வரையில், தனி அதிகாரிகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமென்று கூறுவது நியாயமும் அல்ல, சரியும் அல்ல. எனவே, சட்டம் தயாரிப்பதற்கு போர்ட் குறுக்கே நிற்கும் என்று கூறுவதும் பொருத்தமானது அல்ல. எனவேதான் இந்தச் சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டு, குறிப்பாக, 11—5—1985 முடிவதற்குள்ளாக அந்த போர்டுகளை அமைத்துவிட்டு, சட்டம் தயாரிப்பதற்காக மீண்டும் அவசரச் சட்டம் பிறப்பிக்காமல், சட்டத்தை நீங்கள் தயாரிக்கலாம்; அதற்கு இது குறுக்கே நிற்க சாத்தியமே இல்லை என்று எங்கள் கட்சியின் சார்பிலே இந்தக் கருத்தைக் கூறி முடிக்கிறேன்.

* திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வேளாண்மை விளைபொருள் தனி அலுவலர் காலத்தை மீண்டும் ஓராண்டுக் காலத்திற்கு நீட்டிக்க வேண்டுமென்று கேட்டிருக்கக் கூடிய இந்தச் சட்ட முன்வடிவை நாங்கள் எதிர்க்காமல் இருக்க முடியாது. காரணம், இது தொடக்க காலத்திலே இருந்தே நீடித்துக் கொண்டே போவது என்பது ஒரு நிர்வாகத்தை வலிமைப்படுத்தாது. அது மேன்மேலும் சீர்குலைவான பாதையில் செல்லக்கூடிய ஒரு நிலைக்குத்தான் தள்ளப்படும் என்பதைத் தான் நான் அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர கடமைப்பட்டிருக்கிறேன். வேளாண்மைத் துறை என்பது நமது நாட்டில், குறிப்பாக நமது மாநிலத்தில் ஒரு முக்கியமான துறை. காரணம் நமது நாடும் விவசாயத்தை நம்பி வாழக் கூடிய நாடு; நமது மாநிலத்திலும் இருக்கக்கூடிய துறையில் ஒரு பெரிய நிர்வாகத்தை வைத்திருக்கக்கூடிய துறை, இந்த விவசாயத் துறை. அதிலும் விவசாயிகளுடைய பொருள் இன்றைக்குத் தனியார் கையில் சென்றால் அவர்கள் உற்பத்தி செலவுக்கான விலை கிடைக்காது. எனவே நமது வேளாண்மைத் துறை மூலமாக, மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக, சந்தை மூலமாக வாங்கலாம் என்ற நடவடிக்கையை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அது எந்த அளவிற்கு பயனளிக்கும் என்பதையும் பார்க்க வேண்டும். பருத்தியை எடுத்துக் கொண்டால் பருத்தியின் விலை குறைவு. விவசாயிகளிடமிருந்து அந்த பருத்தி வியாபாரிகளுக்குப் போய் முதலாளிகளிடம் [illegible] போகிறபோது





அதனுடைய விலை உயரும். ஆகவே முதலாளிகளைத்தான் பாதுகாக்கிறீர்களே தவிர உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கவில்லை. ஆகவே தேக்கம் இல்லாமல் பருத்தி முழுவதையும் கொள்முதல் செய்யவேண்டும். பருத்தி தேங்குகிறபோது விவசாயிகள் உடனே விற்கவேண்டும். அவர்களுக்கு பணம் உடனே கொடுக்க வேண்டும். அது இப்போது நடக்கிறதா என்று பார்த்தால் விவசாயிகள் அலைகிற நிலைதான் இருந்து வருகிறது. அந்த நிலையைப் போக்க வேண்டுமென்பது தான் எங்களுடைய கருத்து.

அடுத்து கரும்பை எடுத்துக்கொண்டால் கரும்பை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு மத்திய சர்க்காரும் கொடுக்க மறுக்கிறது, மாநில சர்க்காரும் குறைவாகத்தான் கொடுக்கிறது. தண்ணீர் இல்லாமல் கஷ்டப்பட்டு கரும்பை உற்பத்தி செய்த விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை மார்க்கெட்டிங் சொசைட்டிகளில் கொள்முதல் செய்ய முடியாது. இதனுடைய விளைவு என்னவாகிறது? கரும்பு சர்க்கரை ஆலைக்கு போனதும் சர்க்கரை விலை உயர்கிறது. ஆகவே இங்கேயும் முதலாளிகளைத்தான் பாதுகாக்கிறீர்கள். இந்த நிலையில் கரும்பு விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நெல்லை விட்டால் வேறு வழி இல்லை. மேலத்தஞ்சை வேதாரண்யம் பகுதியில் கடலை போடுகிறார்கள். போன வருடம் மழை பெய்தபோது கடலை, நெல் இரண்டும் பலனில்லாமல் போயிற்று. இந்த வருடம் கடலை போட்டிருக்கிறார்கள். பணப்பயிர் வேறு எதுவும் விவசாயிகளுக்கு கிடையாது. வேளாண்மைத் துறை மார்க்கெட்டிங் சொசைட்டிகள் மூலமாக கடலை முழுவதையும் வாங்க வேண்டும். இல்லையென்றால் நிலைமை என்னவென்றால் விவசாயிகள் தனியாருக்கு கொடுக்கிற நிலைமை ஏற்படும். அவர்கள் விவசாயிகளுக்கு கடலை போடுவதற்கு அட்வான்ஸ் பணம் கொடுக்கிறார்கள். கடலையை வாங்குகிறபோது அந்த வியாபாரிகள் இஷ்டத்திற்கு விலையைக் குறைத்து வாங்குகிறார்கள். விவசாயிகளுக்கும் வேறு வழியில்லாமல் போய் விடுகிறது. விவசாயிகள் கடலையை

[திரு. பொ. உத்திராபதி] [1985 மார்ச் 20

எடுக்கிறபோது அந்த வியாபாரிகள் சாக்கு, ஆட்களோடு வந்து நிற்கிறார்கள். பாதி விலைக்கு விவசாயிகள் கடலையை விற்க வேண்டிய கஷ்டநிலைக்கு ஆளாகிறார்கள். ஆகவே சர்க்காரே மார்க்கெட்டிங் சொசைட்டி மூலமாக அந்தக் கடலை முழுவதையும் கொள்முதல் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து மார்க்கெட்டிங் சொசைட்டிகளுக்கு கட்டிடங்கள் இருக்கின்றன. திருத்துறைப்பூண்டியிலே இருக்கிற மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு கட்டிடங்கள் இருக்கின்றன. அவை உபயோகப் படுத்தப்படாமல் இருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் குறுவை அறுக்கிறபோதுதான் மழை அதிகமாகப் பெய்யும். சிவில் சப்ளைஸ் துறை நெல்லை வாங்குகிறபோது நெல்லை வைக்க இடம் கொடுப்பதில்லை. நானே சம்பந்தப்பட்ட அதிகாரி களிடத்தில் கேட்டேன். ஒரு மாதத்திற்காவது நெல் வைக்க இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன். ஆனால் தனியார் வியாபாரி களிடத்தில் அந்த இடத்தைக் கொடுத்து மூட்டைக்கு நாலணா அல்லது 30 காசு என்று கமிஷன் அதிகாரிகள் பெற்றுக் கொள்கிறார்கள்.

ஆனால் அவர்கள் 10 பைசா என்று கணக்கிலே எழுதிக் கொண்டு அந்தத் தொகைக்கு ஒரு ரசீதைக் கொடுக்கிறார்கள். ஆகவே தனியார்களுக்கு அந்த அதிகாரிகள் சலுகை கொடுக்கிறார்கள். இனி எதிர்காலத்தில் சர்க்கார் கொள்முதல் பண்ணுகிற நெல்லை கொஞ்சகாலத்திற்கு பாதுகாப்பாக வைப்பதற்கு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளை அழைத்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்பு நாங்கள் கேட்டு அவர்கள் கொடுக்கவில்லை. வேளாண்மைத் துறை இயக்குநரிடம் சொல்லி, திருச்சிக்குப் போய் சிரமப்பட்டதற்கு பிறகு அவர்கள் கொடுத்தார்கள். அதே இடத்தை 20 நாட்களுக்கு முன்னால் கொடுத்திருந்தால் எவ்வளவு உதவியாக இருந்திருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே விவசாயிகளைப் பாதுகாக்கிற இதுபோன்ற நடவடிக்கைகளை நம்முடைய வேளாண்மைத் துறை எடுக்கவேண்டும். எதிர்காலத்தில் தஞ்சை ஜில்லாவில் உற்பத்திப் பொருட்களைப் பாதுகாப்பதற்கு, 5,000



1985 மார்ச் 20] [திரு. பொ. உத்திராபதி]

மூட்டை, 10,000 மூட்டைகளை வைப்பதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து வாடகை பெற்றுக் கொண்டாவது விசேஷ கவனம் செலுத்தி ஒரு ஏற்பாட்டைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

*** மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவுகள்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய எண்ணங்களை எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டில், விவசாயப் பெருமக்கள் பயன்படுத்துகின்ற, விளைபொருள்களை விளைவிக் கின்ற மண்ணை சோதனை செய்து தருவதிலிருந்து, அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய விளைபொருள்களுக்கு விலை பெற்று தருகின்றது வரையில் தொடர்பு கொண்டிருக்கிறது என்பதை இந்த அவை நன்கு அறியும்.

ஆனாலும் விவசாயப் பெருமக்கள் உற்பத்தி செய்து தருகின்ற அந்த விளைபொருட்களுக்கு, அந்த உற்பத்திச் செலவுக்கு ஏற்ற வகையில் அவர்கள் தருகின்ற உழைப்புக்கு ஏற்றவகையில் உரிய வகையில் விலை கிடைக்கவில்லை என்பது நீண்டகாலமாக நம்முடைய நெஞ்சத்தை வருத்திக்கொண்டிருக்கிறது என்பதிலே ஐயமில்லை. பெரும்பாலும் வேளாண் பெருங்குடி மக்களுடைய துயரங்களுக்கெல்லாம், துன்பங்களுக்கெல்லாம் அதுதான் மூல ஊற்று என்பதை நாம் நன்றாக அறிவோம்.

வேளாண் பெருங்குடி மக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது என்பது தமிழக அரசின் கையிலே இல்லை; வேளாண் விளைபொருள் குழு கையிலேயும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கருதுவதுபோல் நெல்லுக்கோ கரும்புக்கோ விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் நமக்குக் கிடையாது. ஆனால் வேளாண் விளைபொருள் உற்பத்திச் செலவை கவனத்திலே கொண்டு, விவசாயப் பெருங்குடி மக்கள்

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 மார்ச் 20

உற்சாகத்தை இழந்துவிடக்கூடாது என்பதற்காக நாம் ஓரளவு உதவி செய்யக்கூடிய நிலையிலேதான் இருக்கிறோம் என்பதை முதலிலே மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று பருத்திக்கு விலை நிர்ணயம் செய்வதும் பருத்தி கொள்முதல் செய்கிற இந்தியப் பருத்திக் கழகம்தான். இந்தக் கழகம்தான் கொள்முதல் செய்கின்ற முயற்சியை மேற்கொள்ள முடிகிறது. நம்மால் அந்த முயற்சியில் முழுமையாக ஈடுபட முடியவில்லை. காரணம் அதற்குரிய நிதி வசதியை வைத்துக்கொண்டு, தொடர்ந்து ஈடுபட வாய்ப்பு இல்லை.

அதைப்போன்று வேளாண் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கின்ற விளைபொருள்களை வாங்கி, முறையாகச் சேமித்து வைக்கும் அளவுக்கு நமக்கு கிட்டங்கி வசதி இல்லை. இந்த நிலையில் நமக்கு இருக்கிற குறைந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு எந்த அளவுக்கு விவசாயப் பெருமக்களுக்கு நன்மை செய்ய முடியுமோ, விலையை உரிய வகையிலே பெற்றுத்தர முடியுமோ அந்த அளவுக்கு இந்தத் துறை தொடர்ந்து முயற்சிகளைச் செய்துகொண்டிருக்கிறது, அவர்கள் நலனைக் கவனித்து வருகிறது.

மேலும், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்த கருத்து, தொடர்ந்து இப்படி தனி அதிகாரிகள் கையிலே வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு இருக்க வேண்டுமா, விவசாயப் பெருங்குடி மக்கள் பிரதிநிதிகளிடம் விடவேண்டாமா என்பது. நான் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த வேளாண் விளைபொருள்கள் அங்காடிகளில் உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் அந்தந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளும், அந்தந்தப் பகுதியில் இருக்கிற வர்த்தகர்களும்தான். அங்கம் வகிக்கின்ற அந்தப் பகுதியில் இருக்கிற வேளாண் விளைபொருள் விற்பனைக் குழு ஒன்றுக்கு, இலட்சக்கணக்கான வாக்காளர்கள் என்ற வகையில் அதைக் கணக்கிலே கொண்டு, இன்றைக்கு இருக்கிற சட்டத்தின்படி தேர்தலை நடத்துவது என்றால் ஓரளவுக்கு ஒரு பொதுத்தேர்தலைப்போல் நடத்த வேண்டியிருக்கிறது. ஒரு விற்பனைக் குழுவின் வருவாய் [illegible] ஒன்றுக்கு ஏறத்தாழ 10 இலட்சம் [illegible]



1985 மார்ச் 20] [டாக்டர் கா. காளிமுத்து]

என்றால், இப்படித் தேர்தலை நடத்துவது என்றால், அந்தத் தேர்தலுக்கு அந்தப் பொருளை அல்லது வருவாயை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டால், அந்த விற்பனைக் குழுவின் வளர்ச்சி குன்றி, முடங்கிவிடும் என்பதால் உரிய வகையிலே இதில் திருத்தம் செய்து, தகுதிவாய்ந்த பிரதிநிதிகளிடம் நிர்வாகத்தை விடவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அந்த முயற்சியைச் செயல்படுத்துகின்ற வகையில், முறையான ஒரு சட்ட அமைப்பைக் கொண்டுவந்து, முறைப்படி அந்த விற்பனைக் கூடங்களை இயங்கச் செய்ய வேண்டுமென்று எண்ணுகிறோம். அந்த வகையில் ஒரு முழுச் சட்டத்தை உருவாக்கி, விரைவாகச் செயல்படுத்தக்கூடிய சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரய்யன் அவர்கள் உடனடியாக அந்தக் குழுவை நியமித்துவிட்டு, அதற்குப் பின்னால் சட்டத் திருத்தம் கொண்டுவரலாமே என்று கூறினார்கள். கொண்டு வரப்பட வேண்டிய ஒரு சட்டம் என்பது 'அடிக்கடி கலைத்து விளையாடும் மணல் வீட்டைப்போல்' இருக்கக்கூடாது. ஆகையால் நாம் ஒரு சட்டத்தை உருவாக்கும்போது, சட்டத் துறை சில குறைகளைச் சுட்டிக்காட்டுகிறது. நம்முடைய விருப்பத்தின்படி சட்டத்தை உருவாக்கும்போது, நீதிமன்றத்திற்குப் போனால் இந்த எண்ணம், குறிக்கோள் நிற்குமா என்று வினா எழுப்புகிறது. அந்த வகையிலே இந்தத் துறை உருவாக்கிய சட்டம் சட்டத் துறைக்குப் போய், அவர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு பதில் அளித்துக்கொண்டிருப்பதால் இன்னும் முழுமை பெறவில்லை. கவனமாகப் பரிசீலனை செய்து, உரிய வகையில் வேளாண் விளைபொருள் விற்பனைக் குழுவை இயங்க வைக்கின்ற பணியை அரசு விரைவில் மேற்கொள்ளும் என்பதை மட்டும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தற்போது தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படிப்பட்ட சிக்கல்களுக்கு இடையிலும் ஆங்காங்கே கிடைக்கிற விளைபொருள்களுக்கு, எந்த அளவுக்கு விவசாயப் பெருமக்களுக்கு உரிய விலை இந்தக் குழுவின் மூலம் பெற்றுத் தரப்படுகிறது என்ற கேள்வியை எழுப்பினார்கள். சுவின் பருத்தியைப் பொறுத்தமட்டில் ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 மார்ச் 20

மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. அதற்குரிய மார்க்கெட் நிலவரத்தை ஒட்டித்தான் விவசாயப் பெருமக்களுக்கு விலை கிடைக்கிறது. இப்படிப்பட்ட சிக்கலைத் தவிர்க்க, 'சுவின்' பருத்தி உற்பத்தியை சில காலம் நிறுத்தி வைக்கலாம் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால் சில விளைபொருள்களைப் பொறுத்தவரையில் நம்முடைய மாநிலம் மட்டும் முடிவு செய்வதில்லை. அனைத்து இந்திய அளவிலே நாம் சில முடிவுகளைச் செய்ய வேண்டியது இருக்கிறது. இங்கே உற்பத்தி செய்யக்கூடிய அந்த 'சுவின்' போன்ற பருத்தி பம்பாய் போன்ற இடங்களில் இருக்கிற ஆலைகளுக்கு செல்லத்தக்க அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. அவர்கள் எப்படிப்பட்ட விலையைக் கொடுக்கப் போகிறார்கள் என்பதை எல்லாம் நாம் கணக்கில் எடுக்கவேண்டியது இருக்கிறது. ஆகவே இந்தச் சூழ்நிலைகளை எல்லாம் நாம் கணக்கிலே கொண்டுதான் இப்படிப்பட்ட சில எண்ணங்களை விவசாயப் பெருமக்களுக்கு மத்தியிலே வைக்கிறோம். ஆனால் இந்த விற்பனைக் குழுக்களுடைய மிக முக்கியமான நோக்கம், விவசாயிகள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களுக்கு நியாயமான விலையைப் பெற்றுத் தரவேண்டும் என்பதுதான். ஆகவே இந்தக் குழுக்களிலே அலுவலர்களாக செயல்படக்கூடியவர்கள், விவசாயப் பெருமக்களின் பக்கத்திலே நின்றுதான் எண்ணிப் பார்க்கவேண்டுமே தவிர, அவர்கள் வேறு வகையில் வர்த்தக சூதாட்டத்திலே விவசாயப் பெருமக்கள் பகடைக்காய்களாக மாறத்தக்க அளவிற்கு நிலைமைகளை ஏற்படுத்தி விடக்கூடாது என்பதில் மாறுபட்ட கருத்துக்கு இடம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் தங்கவேல் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல சில வணிகர்கள், வியாபாரப் பெருமக்கள், விவசாயிகள் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு முன்னாலே கூட சில கடன்களைத் தருகிறார்கள். விவசாயிகள் அவசரக் கடன் தேவைகளுக்காக அந்தக் கடனை வாங்குகிறார்கள். ஆகவே உற்பத்தி செய்து தரக்கூடிய அந்த விளைபொருள்களை அந்த வியாபாரிகளுக்கே, அவர்கள் விற்க வேண்டிய கட்டாயம், குறைந்த விலைக்கே விற்கவேண்டிய கட்டாயம் அவர்களுக்கு நேரிடுகிறது. அப்படிப்பட்ட காரணத்தால்தான், அதற்குரிய விலை கிடைக்காமல் போய்விடுகிறது என்பதை நாம் அறிவோம். ஆகவே விற்பனைக் குழுக்கள் ஒரு பக்கத்திலே இருந்தாலும்,



1985 மார்ச் 20] [டாக்டர் கா. காளிமுத்து]

அந்த விற்பனைக் குழுக்களுக்கும், இடையிலே இப்படிப்பட்ட சில கொடுக்கல் வாங்கல் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. அவைகளை நம்மாலே தடுக்க முடியாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. ஏன் என்றால், அது விவசாயியும், அந்த வியாபாரியும் தனிப்பட்ட முறையிலே செய்து கொள்ளக்கூடிய ஒரு ஒப்பந்தமாக மாறிவிடுகிறது. அதனால்தான் இந்த அரசைப் பொறுத்தவரையிலும், நாங்கள் நினைப்பது விவசாயி உற்பத்தி செய்து தரக்கூடிய எந்த விளைபொருளாக இருந்தாலும் அவைகள் அனைத்தும் முழுக்க முழுக்க விற்பனைக் குழுக்கள் மூலமாக நடைபெறவேண்டும் என்றும், எதிர்காலத்திலே அப்படிப்பட்ட நிலைமைகள் மலரவேண்டும் என்றுதான் நாங்கள் கருதுகிறோம். அதற்கு அந்தப் பொருளைச் சேமித்து வைக்கத் தக்க அளவிற்கு வசதிகள் வேண்டும். விவசாயி அவசரத் தேவைக்கு கடன் கேட்டால், அந்தக் கடனைக் கொடுக்கிற அளவிற்கு வங்கிகளுடைய கிளைக் கழகங்கள் ஆங்காங்கே இயங்க வேண்டும். ஆகவே விவசாயிகளுக்கு உரிய பல்வேறு வசதிகளும் செய்து தரப்பட்டாக வேண்டும். இதையெல்லாம் கருத்திலே கொண்டுதான் உலகவங்கியினுடைய உதவியைப் பெற்று, நாம் பெரிய அளவிலே கிராமப்புறங்களில் பல்வேறு வகையான திட்டங்களைத் தீட்டுவதற்கான முயற்சிகளை, அழுகும் பொருள்களை சேமித்து வைப்பதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

கட்டிடங்கள் கட்டுகின்ற நேரத்தில் அதிலே ஏற்படுகின்ற தாமதத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். அதற்கு அவர்கள் எதிர்பார்க்கக் கூடிய விலையை அரசால் கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே அதிலே தாமதம் ஏற்படுகிறது என்பதை நானும் மிக நன்றாக அறிவேன். மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் திண்டுக்கல்லிலே இருக்கிற விற்பனைக் குழு கட்டடத்தைப் பற்றிச் சொன்னார்கள். நீண்ட தூரத்திற்கு விவசாயிகள் போக முடியாது என்று அவர்கள் சொன்னார்கள். ஆகவே நகரத்திலே ஒரு இடம் வேண்டும் என்றால் அவர்கள் அதற்குரிய ஒரு விலையைக் கேட்டு, நாமும் அதைக் கொடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டு, அதிலே பல ஆண்டுக்காலம் தாமதம்

[டாக்டர் கா. காளிமுத்து] [1985 மார்ச் 20

ஆகிற அளவிற்கு நிலைமையிருக்கிறது. இருந்தாலும் அனைத்து சூழ்நிலைகளையும் கணக்கிலே கொண்டு உரிய வகையிலே அந்த விற்பனைக் குழுக்கள் முயற்சிகளை மேற்கொள்ளும். விரைவாக கட்டிடங்கள் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஆய்வுக்கு கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன்வடிவின் மீது நீங்கள் தெரிவித்து இருக்கிற அந்தக் கருத்துக்களை நான் நிச்சயமாக எண்ணிப் பார்க்கிறேன். நீங்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிற குறைபாடுகளை இந்தத் துறை நிச்சயமாக திருத்திக்கொள்வதற்கு முற்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். வெகு விரைவிலே இந்தச் சட்டத் திருத்தம் வந்து, அதன் மூலமாக உரிய விவசாயப் பெருமக்களும் வர்த்தகப் பெருமக்களும், அவர்களுடைய பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட குழு, அந்த விற்பனைக் குழுக்களை செயல்படுத்தத்தக்க அளவிற்கு நிலைமைகளை வெகு விரைவிலே ஏற்படுத்தவேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இருப்பினும் கூட இதிலே தாமதம் ஏற்பட்டால் அதைத் தவிர்க்கின்ற வகையிலே மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல அந்தந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு குழுவைக் கொண்டு ஒரு ஆலோசனைக் குழு வைத்து, இந்த விற்பனைக் குழுக்களுக்கு உதவி புரியத்தக்க அளவிலே இயங்க வைப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே வேண்டுமென்றே தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதிலே இந்த அரசுக்கு தனி இன்பம் இருப்பதைப் போல கருதிக்கொண்டு, நீடிக்கவில்லை என்பதையும், முறையான சட்டங்கள், ஒழுங்கான சட்டங்கள், வலிவான சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும் என்ற அந்த எண்ணத்தின் அடிப்படையிலேதான் கால நீட்டிப்பு கேட்கப்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டி, இந்தச் சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1985 மார்ச் 20]

**திரு. கோ. வீரய்யன்** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்போது நான் கேட்ட கேள்வி ஒன்றிற்குச் சரியாக பதில் அளிக்கவில்லை. இப்போது கொண்டு வரப்பட்டிருக்கிற சட்டத்திலே எட்டு ஆண்டுகள் என்பதற்குப் பதிலாக ஒன்பது ஆண்டுகள் என்று நீட்டிக்கப்பெற்றிருக்கிறது என்றாலும், அது வருகிற மே மாதம் 11 ஆம் தேதியோடு முடிவடைகிறது. அதற்குப் பிறகும் அவசரச் சட்டமோ கால நீட்டிப்போ கேட்காமல் அந்தக் குழு அமைக்கப் படுமா என்று கேட்டேன். அதற்கு விளக்கம் அளிக்கவில்லை. தயவுசெய்து அளிக்க வேண்டுகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து** : அதிலே நான் ஆரூடம் கணிக்க முடியாது. எவ்வளவு விரைவில் சட்டம் வந்து சேருமோ, அந்த அளவுக்குத்தான் கால நீட்டிப்பு அளிக்கப்படும்.

**வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு.**

திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 14/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 14/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985.**

திரு. ப. பொன்னுரங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாத தால் அவருடைய தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும் பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாகக் கருதப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 15/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற் றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைகள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 15/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 2. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### பேரவை அலுவல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டபடி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் :—

| | |
|---|---|
| 21—3—1985 (வியாழன்) முதல் 4—4—1985 (வியாழன்) முடிய | ஏற்கெனவே அறிவிக்கப்பட்டபடி. |
| 5—4—1985 (வெள்ளி) | தூய வெள்ளிக்கிழமை — விடுமுறை. |
| 6—4—1985 (சனி) | பேரவைக் கூட்டம் இல்லை. |
| 7—4—1985 (ஞாயிறு) | விடுமுறை. |
| 8—4—1985 (திங்கள்) | 1985–86 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 20— வேளாண்மை. மானியக் கோரிக்கை எண் 49— வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. |

[பேரவைத் தலைவர்] [1985 மார்ச் 20

| | |
|---|---|
| 9—4—1985 (செவ்வாய்) 10—4—1985 (புதன்) | எண். 17 கல்வி. |
| 11—4—1985 (வியாழன்) | எண். 18 மருத்துவம். |
| | எண். 19 பொதுச் சுகாதாரம். பேரவை காலை, மாலை இருவேளையும் கூடும். |
| 12—4—1985 (வெள்ளி) | எண். 29 தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும். |
| | பேரவை காலை, மாலை இரு வேளையும் கூடும். |
| 13—4—1985 (சனி) | தமிழ் ஆண்டுப் பிறப்பு—விடுமுறை. |
| 14—4—1985 (ஞாயிறு) | விடுமுறை. |
| 15—4—1985 | எண். 3 மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் : |
| | எண். 40 சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும். |
| | எண். 39 சாலைகளும் பாலங்களும், |
| | எண். 54 சாலைப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. |
| | எண். 53 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 16—4—1985 (செவ்வாய்) | எண். 5 முத்திரைத் தாள்கள் நிர்வாகம். |
| | எண். 6 பத்திரப் பதிவு. |
| | எண். 10 பால் வழங்கு திட்டங்கள். |
| | எண். 22 கால்நடை வளர்ப்பு. |

மற்ற மானியக் கோரிக்கைகள் என்றைக்கு எடுத்துக் கொள்ளப் பெறும் என்பது குறித்த அறிவிப்பு பின்னர் வரும்.



1985 மார்ச் 20] [பேரவைத் தலைவர்]

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21—3—1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

115. 1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்டத்தின் 17(1) பிரிவின் பொருட்டு குறிப்பிட்ட தேதியினை நிர்ணயிப்பது குறித்து தொழில்துறையில் 2—7—1984 ஆம் நாளிட்ட 761 ஆம் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1984 ஆம் ஆண்டு மதுரை சர்க்கரை நிறுவன (நிருவாகப் பணியை எடுத்துக் கொள்ளுதலும் மாற்றுதலும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1984) 33(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

116. தமிழ்நாடு 1978 ஆம் ஆண்டு முத்து—சங்கு குளித்தல் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வன-மீனளத் துறையின் 6—4—1984 ஆம் நாளிட்ட 450 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1897 ஆம் ஆண்டு இந்திய மீனைச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1897) 6(4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

117. கோயம்புத்தூர் மற்றும் குன்னூர் ஏல மையங்களில் விற்கப்படும் தேயிலைக்கு விதிக்கப்படும் வரியினை 6 சதவீதத்திலிருந்து 4 சதவீதமாக குறைப்பது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 12—12—1984 ஆம் நாளிட்ட 1337 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

118. 1982 ஆம் ஆண்டு மரக்கட்டை [இயக்கக் கட்டுப்பாடு] ஆணையில் திருத்தமொன்று செய்வது குறித்து வன-மீன்வளத் துறையின் 10—10—1984 ஆம் நாளிட்ட 1184 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1949 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் கட்டுப்பாடு, தேவைக் கோரிக்கைச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 29/1949) 2-வது பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).]

119. வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 9—6—1982 ஆம் நாளிட்ட II (1)/CTRE/77/82-ஆம் எண். அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 30—1—1985 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிகள் சட்டத்தின் 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

120. உதகமண்டலத்தில் உள்ள ஏரிப் பகுதியிலும் அதைச் சுற்றிலும் 3—3—1984 ஆம் தேதியன்று திரைப்படப்பிடிப்பில் கலந்துகொண்ட திரைப்படக் குழுவிற்கும் மக்கள் கூட்டமொன்றுக்கும் இடையே நிகழ்ந்த சம்பவம் பற்றி திரு. ஏ. எம். நஞ்சப்பன் அவர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட தனி நபர் குழுவின் அறிக்கை [1982 ஆம் ஆண்டு விசாரணைக் குழு சட்டத்தின் (மத்தியச் சட்டம் 60/1952) 3 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள் ஏதுவுமில்லை.

V211,31 N85
N85-3-1&2
186371